

சௌபர்ணிகா
கோட்டயம் புஷ்பநாத்
தமிழில்: சிவன்

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு – 2002

சென்னை மாவட்ட மைய நூலகம்
எழும்பூர், சென்னை 8.

© ஆசிரியருக்கு

விலை : ரூ. 65.00

35547
5305260

Laser Typeset : Veman Printers, Chennai - 34.
Printed : Sri Jai Ganesh Offset Printers, Chennai - 4.

V. Bro

## சில வார்த்தைகள்....

'தமிழன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் முதன் முதலாக ஒரு தொடர்கதை வெளியிடுவதென்று அதன் ஆசிரியர் குழு தீர்மானித்தபோது வெளியான நாவல் 'சௌபர்ணிகா'. பத்திரிகையில் இருபத்தேழு (ஜனவரி 15-21, 1997 முதல் ஜூலை 16, 1997) வாரங்கள் இடம் பெற்ற போது இதன் பெயர் 'நள்ளிரவு மல்லிகை'.

இந்தத் தருணத்தில் இந்தத் தொடர் வெளியாகக் காரணமாக இருந்த அன்புக்கு உரியவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். ஆசிரியர் சுதாங்கன், நண்பர் ஜி. கௌதம், ஓவியர் அரஸ், துணையாசிரியர் சிவா, வடிவமைப்பாளர் வேதா, தொடருக்கு வாரம் தோறும் வண்ணப்படங்கள் தீட்டிய மாருதி ஆகியோர் மறக்க முடியாதவர்கள்.

மலையாள மொழியில் வெளிவந்த 'சுனந்தா' வார இதழில் 'ருத்ரதாண்டவம்' என்ற பெயரில் வெளியான கோட்டயம் புஷ்பநாத்தின் நாவல்தான் தமிழ் சௌபர்ணிகா.

நாவல் முற்றுப் பெற்ற ஒரு சில வாரங்களுக்கு உள்ளாகவே சோழா கிரியேஷன்ஸ் இதை டெலிவிஷன் தொடராகவும் தயாரித்தனர். சன் டிவியில் 'திகில் நேரம்' என்ற பெயரில் வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு பத்தரை மணி முதல் பதினோரு மணி வரை

நாற்பத்தியிரண்டு வாரங்கள் வெளியானது. தொடரின் பெயரான 'சௌபர்ணிகா'வே புத்தகத்தின் தலைப்பாகவும் இடம் பெற்றுள்ளது.

தொடரைத் தயாரித்த திரு சோழா பொன்னுரங்கம், இயக்கிய மூர்த்தி, ரமேஷ் போன்றோரும் மேற் குறிப்பிட்ட அனைவருடன் என் நன்றிக்கு உரியவர்கள்.

வழக்கமாக கோட்டயம் புஷ்பநாத்தின் நாவல்களில் இடம் பெறும் அனைத்து அம்சங்களும் கொண்ட ஒரு நாவல் இது.

இந்த நாவலை மொழிபெயர்க்க அனுமதி அளித்த கோட்டயம் புஷ்பநாத், வெளியிடும் கலா நிலையம் ஸ்ரீநிவாசன், தமிழன் எக்ஸ்பிரஸ் வாசகர்கள், திகில் நேரம் பார்வையாளர்கள், அரசாங்க நூலகத் துறை, தனியார் நூலகங்கள் போன்றோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழமையுடன்
**சிவன்**

சென்னை-600 078
தொலைபேசி-4837681

# சௌபர்ணிகா

## 1

**அ**து இரவுப் பொழுது. ஸ்ரீகுமார் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணிபதினொன்றுக்கு மேலாகிவிட்டிருந்தது. ஏனோ அன்று தூக்கம் வராமல் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

கடந்த சில மாதங்களாகவே கல்லூரியின் லாபரெட்டரி அவரது சொந்தப் படுக்கையறை ஆகிவிட்டிருந்தது.

அங்கே கிடக்கும் உபகரணங்களை ஒருபுறமாக ஒதுக்கி வைத்துவிட்டு, அந்த இடத்தில் ஒரு கட்டில், டேபிள், நாற்காலி ஆகியவற்றைப் போட்டிருந்தார்.

இரவுச் சாப்பாட்டை முடித்த பிறகு ஊருக்குள் கொஞ்ச நேரம் 'வாக்' போய்விட்டுத் திரும்புவது அவர் வழக்கம். கேட்டில் நிற்கும் காவல்காரரிடம் கொஞ்சம் நேரம் பேசுவார். பிறகு, தனது படுக்கை போடப்பட்டிருக்கும் லாபரெட்டரி அறைக்குள் அடைக்கலம் ஆவார். இதுதான் ஸ்ரீகுமாரின் இரவு நேர நிகழ்ச்சி நிரல்.

நகரின் மிகப் பழமையான, புகழ்பெற்ற கல்லூரியின் உயிரியல் துறையின் சீனியர் லெக்சரர் ஸ்ரீகுமார். அவருடைய முழுப் பெயர் கே.ஜி. ஸ்ரீகுமாரன் நம்பூதிரி. மாணவர்களுக்கு

"ஸ்ரீகுமார் சார்", வடக்கு மலபாரை (கேரளத்தின் வட பகுதி) சேர்ந்த ஒரு கிராமத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய 'செறுவள்ளி மனை'யின் கடைசி வாரிசு.

ஒரு காலத்தில் அந்தக் கிராமத்தின் மொத்த நிர்வாகமுமே செறுவள்ளி மனையின் திருமேனிகளிடம்தான் இருந்தது.

பிற்காலத்தில் அந்தக் குடும்பத்தில், சிலர் மனம் போனபடி நடந்து கொண்டதால் அவர்களிடமிருந்த சொத்துகள் பிறரது கைகளுக்கு மாறிவிட்டன.

ஸ்ரீகுமாரை வளர்த்துப் படிக்க வைத்தது அவருடைய தாய்மாமன் கிருஷ்ணன் நம்பூதிரி.

கிருஷ்ணன் நம்பூதிரிக்கு புராணங்கள், இதிகாசங்கள் எல்லாம் தலைகீழ்ப் பாடம். தனக்குத் தெரிந்ததையெல்லாம் தனது மருமகனுக்கும் கற்பித்தார். அத்துடன் அந்தப் பரம்பரையின் பழைய அருமை பெருமைகளையும் நிறையவே சொல்லித் தந்திருந்தார்.

'டாங்... டாங்... டாங்...'

இரவின் அமைதியில் ஆபீஸ் அறையிலிருந்த பழங்காலச் சுவர்க்கடிகாரம் ஒலிப்பது தெளிவாகக் கேட்டது.

மணி பன்னிரண்டு...

தூக்கம் வராததால், திருத்த வேண்டிய விடைத்தாள்களை எடுத்துப் புரட்டினார்.

ஒருவிதமான அலுப்புத் தோன்றியது. வருடக் கணக்கில் இதைத்தானே செய்து கொண்டிருக்கிறார்? மேலாக இருந்த தாளைத் திருப்பினார். அதில் எலும்புக்கூடு ஒன்றின் படம் வரையப்பட்டு பாகங்களைக் குறித்திருந்தது. அவரையும் அறியாமல் அவரது கண்கள் இடதுபுறமிருந்த ஸ்டோர் ரூமின் பக்கம் திரும்பின.



லாபரெட்டரி அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் வெளிச்சம் அந்த அறையையும் மங்கலாகத் தழுவிக் கொண்டிருந்தது.

அறையின் கண்ணாடிப் பெட்டிக்குள் அந்த எலும்புக்கூடு தெளிவற்றுத் தெரிந்தது.

ஸ்ரீகுமார் அங்கு வேலைக்கு வந்து சேர்ந்த பிறகுதான் அந்த எலும்புக்கூட்டை வாங்கினார். ஒரு தடவை மாணவர்களுக்கு காட்டுவதற்காக அதை வெளியே எடுத்த போது தான், சாம்பல் படிந்தது போல் அதன் மீது பூஞ்சைக்காளான் படிந்திருந்தது தெரிந்தது.

அது அப்படியொன்றும் பழைய எலும்புக்கூடாகத் தெரியவில்லை. அதை ஸ்பிரிட் போட்டுச் சுத்தம் செய்தார் ஸ்ரீகுமார். அந்த நிகழ்ச்சி இப்போது ஏனோ நினைவுக்கு வந்தது.

'அந்த எலும்புக்கூடு யாருடையதோ?'

ஸ்ரீகுமாரின் கண்கள் மறுபடி ஆன்ஸர் பேப்பரின் மீது பதிந்தன. மண்டையோட்டுப் பகுதியில் 'டிக்' போட்ட போது தான் 'அது' கேட்டது -

ஒரு கலகல சத்தம்!

இரவின் நிசப்தத்தில், அந்தச் சத்தம் மிகவும் விகாரமாய் ஒலித்தது. எலும்புத் துண்டுகள் ஒன்றுடன் ஒன்று உரசியது போன்ற சத்தம்!

ஸ்ரீகுமாரின் காதுகள் கூர்மையடைந்தன.

அவர் உடல் ஒரு முறை நடுங்கியது. 'ஒருவேளை நமது மனப்பிரமையாக இருக்குமோ?'

தன்னையும் மீறி மீண்டும் ஒரு தடவை கண்ணாடிப் பெட்டியின் பக்கம் பார்த்தார். எலும்புக்கூடு பத்திரமாக இருந்தது. எனவே ஆன்ஸர் பேப்பரின் மீது மறுபடியும் கவனத்தைத் திருப்பினார்.

மீண்டும் அதே கலகல சத்தம்! எலும்புத் துண்டுகள் ஒன்றுடன் ஒன்று உராயும் சத்தம்.

ஸ்ரீகுமாருக்கு வியர்த்தது. மெல்ல இடதுபுறம் திரும்பிப் பார்த்தார்.

அவருடைய புலன்களில் குழப்பம் தெரிந்தது.

உடனே டேபிள் டிராயரைத் திறந்து டார்ச் லைட்டை எடுத்து வேலை செய்கிறதா என்று சோதித்தார். சக்தி வாய்ந்த, சார்ஜ் ஏற்றிக்கொள்ளக்கூடிய லைட் அது.

அன்று துரதிர்ஷ்டவசமாக அதை சார்ஜ் செய்ய மறந்து போயிருந்தார்.

இருப்பினும் அதை எடுத்துக்கொண்டு ஸ்டோர் ரூமின் வாசலை நோக்கி மெதுவாக நடந்தார். லைட்டின் பட்டனை அழுத்தினார்.

அவரால் நம்பவே முடியவில்லை!

டார்ச்சின் மங்கலான 'டல்' வெளிச்சத்தில் எலும்புக் கூட்டின் மண்டையோட்டுப் பகுதி அவரை நோக்கித் திரும்பி இருந்தது. கூட்டின் பிறபகுதிகள் பழையபடியே இருந்தன.

'ஒருவேளை எலும்புக்கூட்டை இந்த மாதிரியேதான் வைத்திருந்தோமா?' சந்தேகம் அவருக்குள் அரும்பியது.

மீண்டும் ஒரு தடவை எலும்புக்கூட்டை நன்றாகப் பார்த்துவிட்டு உடனே திரும்பிவந்து நாற்காலியில் அமர்ந்தார். ஆன்லர் பேப்பரைக் கவனித்தார்; மனம் பதியவில்லை.

பழையபடி அதே சத்தம். ஸ்ரீகுமாரின் உடம்பிலிருந்த ரோமங்கள் சட்டென்று விறைத்து நிமிரத் தொடங்கின.

திடுமென்று இடதுபக்கம் பார்த்தார்.

'தான் காண்பதெல்லாம் உண்மையா!' சொந்தக் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை.

இப்போது அந்த எலும்புக்கூடு முழுவதுமாகவே அவரை நோக்கித் திரும்பியிருந்தது.

ஸ்ரீகுமார் திடுக்கிட்டார்.



தன் கண்களுக்குத் தெரிவது உண்மையா? பொய்த் தோற்றமா?

ஒருவேளை எலி ஏதாவது கண்ணாடிப் பெட்டிக்குள் நுழைந்துவிட்டதா? சோதித்துப் பார்ப்பது என்று தீர்மானித்தார். விறுவிறுவென்று எலும்புக்கூடிருக்கும் ஸ்டோர்ரூமை நோக்கி நடந்தார்.

கண்ணாடிப் பெட்டியின் தாழை விலக்கிக் கதவைத் திறந்து பார்த்தார். அதற்குள் வித்தியாசமாக எதுவும் இல்லை. கதவை மூடிவிட்டு மீண்டும் எலும்புக்கூட்டையே கவனித்தார்.

'காற்றுகூட நுழையமுடியாதபடி கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் எலும்புக்கூடு தன்னை நோக்கி அதுவாகத் திரும்புமா?'

ஸ்ரீகுமாரின் உடம்பு நடுங்கியது.

'சே... என்ன இதெல்லாம்!'

மெதுவாக வெளியே வந்தவர் ஸ்டோர் ரூமின் கதவை மூட முயன்றார். துருப்பிடித்துப் போயிருந்த கீல்கள் அவ்வளவு சுலபத்தில் அசைந்து கொடுக்கவில்லை. இருப்பினும் கஷ்டப்பட்டு இழுத்துச் சாத்தினார்.

விஞ்ஞானத்தை மட்டுமே நம்பிக்கொண்டிருந்த ஸ்ரீகுமாரின் மனதில், சிறுவயதில் சொல்லப்பட்ட பல கதைகள் தேவை இல்லாமல் தலை நீட்டின.

கட்டிலில் வந்து அமர்ந்தார்.

லைட்டை அணைக்காமலேயே படுத்தார்.

கண்களை மூடியபடி சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

சட்டென்று லைட் அணைந்ததுபோல் தோன்றவே, கண்களைத் திறந்தார்.

உண்மையிலேயே லைட் அணைந்திருந்தது.

'கரண்ட் கட் இங்கெல்லாம் சாதாரணம்தானே!' தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக்கொண்டார்.

அறைக்குள் பரவியிருந்த இயற்கை வெளிச்சத்தில் உள்ளே இருந்த பொருள்கள் தெளிவற்றும், அவற்றின் நிழல்கள் பற்பல வடிவங்களிலும் தெரிந்தன. வடகிழக்குப் பகுதியிலிருந்த ஜன்னல் வழியாக வந்த சன்னமான வெளிச்சம் ஸ்டோர் ரூம் வாசல் கதவின் மீதும் பதிந்தது.

கதவு மூடியபடியே இருந்தது.

'டாங்...' கடிகாரம் ஒலித்தது.

பன்னிரண்டரையோ... ஒன்றோ இருக்கலாம். ஸ்ரீகுமார் கண்களை இறுக மூடிப் படுத்திருந்தார்.

சற்று நேரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்தார்.

ஒரு மோசமான கனவின் ஊடாகத் தூக்கம் கடந்து போவதை உணர்ந்தார். காணும்போதே அது ஒரு கனவுதான் என்றும் புரிந்தது.

சற்று நேரத்துக்கு முன்னால் நிகழ்ந்தவை கனவில் தொடர்ந்து கொண்டிருந்தன.

கண்ணாடிப் பெட்டிக்குள் தொங்கிக் கொண்டிருக்கும் எலும்புக்கூடு அசைகிறது.

கண்ணாடிப் பெட்டிக்குள் வெளிப்புறத் தாழ்ப்பாள் 'டங்' என்ற சத்தத்துடன் மேல் நோக்கி உயர்ந்து திறந்து கொள்கிறது.

கதவு வெளிப்புறமாகத் திறக்கிறது.

அதோ, அதற்குள் இருக்கும் எலும்புக்கூடு வெளியே வர முயற்சி செய்கிறது. இதெல்லாம் கனவுக்காட்சிதான் என்பதை அப்போதும் ஆழ்மனம் அறிவுறுத்தத்தான் செய்கிறது.

அது நிதானமாக தன்னை நோக்கி நடந்து வருகிறது.

இதோ நெருங்கிவிட்டது!

ஸ்ரீகுமார் சட்டென்று கனவிலிருந்து விழித்தார்.

கண்களைக் கசக்கியபடி ஸ்டோர் ரூமின் வாசலைப் பார்த்தார்.

என்ன!

தான் மறுபடியும் கனவு காண்கிறோமோ?



சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக, தனது மணிக்கட்டுப் பகுதியைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார்.

வலிக்கிறது; கனவில்லை!

ஆனால், ஸ்டோர் ரூமின் வாசல் விரியத் திறந்து கிடந்தது!

தான் மூடியிருந்த கதவு உட்புறமாக விரிந்து கிடக்கிறது. மங்கலான வெளிச்சத்தில் ஸ்ரீகுமார் மற்றொரு காட்சியையும் கண்டார்.

அந்தக் கண்ணாடிப் பெட்டியின் உட்புறம் வெறுமையாக இருந்தது.

'அதற்குள் இருந்த எலும்புக்கூடு எங்கே?'

ஸ்ரீகுமார் கட்டிலிலிருந்து விருட்டென்று எழுந்தார்.

டேபிள் டிராயரை திறந்து தீப்பெட்டியை எடுத்தார்.

மின்சார விளக்கு எதிர்பாராமல் அணைந்து போனால் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கும் பருமனான மெழுகு வத்தியின் தலையில் தீக்குச்சியின் நெருப்பு ஜுவாலை பற்றிப் படர்ந்தது.

அதிலிருந்து எழுந்த வெளிச்சம் சுற்றுப்புறத்தைக் கொஞ்சம் தெளிவாக்க முயற்சித்தது.

மெழுகுவத்தியைப் பிடித்தபடி ஸ்டோர் ரூமைநோக்கி நடந்தார் ஸ்ரீ குமார்.

உட்புறம் எட்டிப் பார்த்தார்.

கண்ணாடிப் பெட்டி இப்போது உண்மையாகவே காலியாகக் கிடந்தது. அதன் வெறுமை அவரைப் பார்த்து ஏளனம் செய்வது போலிருந்தது.

ஏதோ சத்தம் கேட்டு ஸ்ரீகுமார் திடுக்கிட்டவராகச் சட்டென்று திரும்பினார்.

அங்கிருந்து ஒரு பெண் குரல் மெதுவாக, "நான் இங்கே இருக்கிறேன்" என்றது.

## 2

தன் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. லாபரெட்டரிக்குள், அதுவும் தனது டேபிளுக்கு அருகில், மிக நெருக்கத்தில் பேரழகியான ஒரு பெண்ணுருவம்!

ஜன்னலின் கண்ணாடிக் கதவுகளை ஊடுருவி வந்த நிலவொளியில் அவளது முகத்தின் இடதுபுறம் தெளிவாகத் தெரிந்தது.

அவிழ்ந்து கிடந்த அவளது தலைமுடி, பின்புறமாக இருள் போலப் பரவிக் கிடந்தது; அது இடுப்புப் பகுதியையும் தாண்டி நீண்டிருந்தது.

அந்தக் கண்களில் வித்தியாசமான பளபளப்பு.

ஸ்ரீகுமார் அவளையே உற்றுப் பார்த்தபடி அசைவற்று நின்றார். பயத்தில் அவர் இதயம் படபடத்தது.

அவருக்கு கல்லூரியின் எல்லா மாணவிகளையும் நன்றாகத் தெரியும்.

ஆனால், எந்த முகம் மாதிரியும் இந்த முகம் இல்லை.

'இவள் யார்? எப்படி இந்த அறைக்குள் வந்தாள்?'

அந்தப் பெண்ணின் கழுத்துக்குக் கீழேயுள்ள உடல் பகுதி தெளிவற்று இருந்தது.

மேகப் பிசிறுபோல, அல்லது பனிப்படலம்/புகை போலிருந்தாள். மனதுக்குள் பயம் சன்னமாக வேர்விடத் தொடங்கினாலும் ஸ்ரீகுமார் அவளை நெருங்கினார்.

அவள் பாவாடையும், ரவிக்கையும் அணிந்திருக்க வேண்டும்; அதையும் அந்த அரைகுறை வெளிச்சத்தில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

''யாரும்மா நீ?'' ஸ்ரீகுமார் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டார். ''எப்படி இந்த அறைக்கு வந்தாய்?''



"நான் இங்கேயே இருக்கிறவள் தானே!" - மிகவும் தாழ்ந்த குரலில் புன்னகைத்தபடி அவள் பதில் சொன்னாள்.

ஸ்ரீ குமாருக்கு 'திக்' கென்றது.

"அந்தப் பக்கம் பாருங்க... அந்தக் கண்ணாடிப் பெட்டியை. இன்னிக்கு எனக்கு வெளியே வரணும்னு தோணிச்சு. அது மட்டுமில்லாம வரவேண்டிய தேவையும் இருந்தது."

அந்த நிசப்தத்தில் அவள் குரல் 'ஹோ' வென்று கேட்டது.

''எத்தனை நாள்தான் இன்னொருத்தரோட எலும்புக் கூட்டுல இருக்கிறது?''

''புரியலை!''

அவளது முகத்திலிருந்து கண்களை அகற்றாமலே சொன்னார் ஸ்ரீகுமார்.

அவருக்கு இன்னும் படபடப்பு அடங்கவில்லை.

''அன்னிக்கு ஒருநாள் நீங்க நினைக்கலையா? இந்த எலும்புக்கூட்டுல உடம்பும் தலையும் வெவ்வேறு ஆட்களோடதுன்னு!''

அந்த எலும்புக்கூட்டை, கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்துச் சுத்தப்படுத்தும்போது உடலும், மண்டையோடும் வெவ்வேறு நபர்களுடையவை என்ற நினைப்பு ஸ்ரீகுமாருக்கு வந்ததுண்டு.

'தான் நினைத்தது இவளுக்கு எப்படித் தெரிந்தது?'

''எனக்கு உங்களை நல்லாவே தெரியும். தினந் தோறும் உங்க கிராமத்தில இருக்கிற மலைக்கோயிலுக்கு போவீங்களே?'' - அவள் கேட்டாள்.

ஸ்ரீகுமாருக்கு வெள்ளமாய் வியர்த்துக்கொட்டியது.

அவருடைய கிராமத்தின் மிக உயரமான பகுதியே பகவதி கோயில் இருக்கும் அந்த இடம்தான். அதுதான் அந்தக் கிராமத்தைக் காத்துவரும் 'காவலம்மா'வின் இருப்பிடம்.

சுற்றுப்புறச் சுவர்களோ, பிராகாரமோ இல்லாமல் வெறும் கருவறை மட்டுமே உள்ள கோயில்.

ஆனால், தன்னுடைய வாழ்க்கையில் இதுவரை சந்தித்திராத இவளுக்கு எப்படித் தெரிந்தது இதெல்லாம்?

''உன் பேரு?'' - எச்சில் விழுங்கியபடி கேட்டார் ஸ்ரீகுமார்.

''சௌபர்ணிகா'' - அவள் தயக்கமின்றிப் பதிலளித்தாள்.

''உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்லணும்னு நான் ரொம்ப நாளா நினைச்சுட்டிருக்கேன்'' - காற்றில் அலைந்த மெழுகுவத்தி ஜுவாலைக்குக்கையால் அணைகொடுத்தபடி பேசினாள்.

''என் உடம்போட உண்மையான எலும்புக்கூடு மட்டும் திரும்பக் கிடைச்சுட்டா... அதனால பலவிதமான வேலைகளைச் செய்ய முடியும். இதுக்கு உங்களால உதவ முடியுமா?'' - அவள் கெஞ்சுவது போல் கேட்டாள்.

''அது எங்கே கிடக்குதோ? எனக்கு எப்படித் தெரியும்?'' ஸ்ரீகுமார் திக்கித் திணறி பதில் சொன்னார்.

''அதை நானே உங்களுக்குக் காட்டித் தர்றேன். நீங்க என்கூட வந்தாப் போதும்!'' என்றாள் அவள்.

''எங்கே?''

''ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கலாம். அதுவும் ஒரு காலேஜ்தான். அந்தக் கட்டடத்தோட ரெண்டாவது மாடியில் தான் அதைப் பத்திரப்படுத்தி வைச்சிருக்காங்க. இது அதுக்குத் தகுந்த நேரமும்கூட!''

'' இதோ பார்! எனக்கு ஒண்ணும் புரியலை. யார் நீ? அதுவே எனக்குத் தெரியாது. அதனால நிஜமாகவே உன் எலும்புக்கூடு அந்த காலேஜ்ல இருந்தாலும், என்னால திருடிக் கொண்டுவர முடியாது'' - ஸ்ரீ குமார் படபடத்தார்.

''விவரமா சொல்றேன். முதல்ல யாருக்கும் தெரியாம அதை அங்கேருந்து எடுக்கணும். யாருக்காவது தெரிஞ்சா



அதனால தேவையில்லாத சந்தேகங்கள் கிளம்பும். அப்புறம் அது நிறையப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்'' - அவன் மிகவும் நிதானமான குரலில் பேசினான். ''அதைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலை இல்லை. நான் எங்கேயும் வரமாட்டேன்''

''சந்தர்ப்பம் வரும்போது அதைப்பத்தி நானே உங்களுக்குச் சொல்றேன். இப்ப என்கூட வாங்க...'' - அவளது குரல் பிடிவாதமாக வற்புறுத்தியது.

இந்த இரவு நேரத்தில் அதுவும் முன்பின் தெரியாத இந்தப் பேரழகியோடு வெளியே போகக்கூடாதென்று ஸ்ரீகுமார் நினைத்தார். அந்த காலேஜின் வாட்ச்மேன் இவளோடு பார்த்தால் என்ன நினைப்பார்?

ஸ்ரீகுமார் வாட்ச்மேனைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போதே....

''வாட்ச்மேனைப்பத்திக் கவலைப்படறீங்களா? அதை என்கிட்ட விடுங்க நான் பார்த்துக்கறேன்.'' சௌபர்ணிகாவின் குரல் உறுதியுடன் தெறித்தது.

ஸ்ரீகுமாருக்கு ஆச்சர்யத்தில் தலை சுற்றியது. மறுபடி யோசித்தார்.

'நள்ளிரவு நேரத்தில் மற்றொரு கல்லூரிக்குள் நுழைந்து, அங்கிருந்து எலும்புக்கூடு ஒன்றை எடுத்துக்கொண்டு எப்படி இங்கு வருவது''

சௌபர்ணிகாவின் குரல் இடை வெட்டியது.

''என்ன யோசிக்கிறீங்கன்னு எனக்குத்தெரியும். நாம எப்படி இந்த இடத்துக்குத் திரும்பி வர்றதுங்கிறதுதானே? அதைப் பத்தியும் நீங்க கவலைப்பட வேண்டாம். நானே உதவறேன்; உங்களுக்கு எந்த மாதிரி உதவி வேண்டுமானாலும் நான் செய்யறேன். அந்த காலேஜ்ல ரெண்டாவது மாடிக்கு ஒரு பெரிய பைப் போகுது. அது ஜன்னலை ஒட்டித்தான் இருக்குது. ஜன்னலில் குறுக்குக் கம்பிகள்கூடக் கிடையாது. நீங்க அதுக்கு

உள்ளே நுழைஞ்சுட்டா, மிச்சத்தையெல்லாம் நான் பார்த்துக்கிறேன்'' - அவளது பேச்சு ஸ்ரீகுமாரை அச்சுறுத்தி வற்புறுத்தியது. அவரால் மறுக்க முடியவில்லை.

லாபரெட்டரியிலிருந்து செலுத்தப்பட்டவர் போல் வெளியேறிப் படிக்கட்டுகளைத் தாண்டிக் கீழ்ப்புறத்துக்கு வந்தார்.

'கேட்'டை நெருங்கியபோது வாட்ச்மேன் ராமச்சந்திரன் பீடி ஒன்றைப் புகைத்தபடி நின்றுகொண்டிந்தார்.

''என்ன சார்... வெளியில போறீங்களா?'' ராமச்சந்திரன் கேட்டார்.

ஸ்ரீகுமாருக்கு படபடத்தது. தன் பின்னால் நிற்கும் சௌபர்ணிகாவை பற்றி என்ன சொல்லிச் சமாளிப்பது என்று குழம்பிக்கொண்டிருந்தார்.

''தூக்கம் வரலை. சும்மா இப்படியே போய் கடை ஏதாவது திறந்திருந்தா காபி சாப்பிட்டு வரலாமேன்னு பார்த்தேன்'' - ஸ்ரீகுமாரின் வார்த்தைகள் தடுமாறின.

''அதோ பாருங்க! ஒரு ஆட்டோ ரிக்ஷா வருது. அதை முதல்ல நிறுத்துங்க'' சௌபர்ணிகாவின் குரல் பின்னாலிருந்து கட்டளையிட்டது.

அப்படியே செய்தார். ஆட்டோ அவர் அருகில் வந்து நின்றது.

''எங்க போகணும் சார்?'' -ஆட்டோ டிரைவர் விசாரித்தார்.

'ஆட்டோ டிரைவருக்கோ, வாட்ச்மேனுக்கோ சௌபர்ணிகா கண்ணில் படவே இல்லையா.?'

ஸ்ரீகுமாருக்கு இது வியப்பை ஏற்படுத்தியது.

இறங்க வேண்டிய இடத்துக்குச் சற்று முன்னாலேயே ஆட்டோவை நிறுத்திவிட்டு ஸ்ரீகுமார் இறங்கிக் கொண்டார்; சௌபர்ணிகாவும் இறங்கினாள்.

அந்த காலேஜின் கேட் உட்புறமாகப்பூட்டப் பட்டிருந்தது.



இதற்குள் எப்படி நுழைவது? -என்று யோசித்தபடி நின்றார்.

''இப்படி வாங்க; இதோ இந்தப் பக்கச்சுவர் வழியா உள்ளே போயிடலாம். நீங்க பயப்பட வேண்டியதில்லை. வாட்ச்மேன் நல்ல தூக்கத்துல இருக்கார். நான் உங்க பின்னாலேயே வர்றேன். என்னை மீறி எதுவும் நடக்காது... ம்... புறப்படுங்க'' - சௌபர்ணிகாவின் குரல் அவரைச் செலுத்தியது.

உடைந்து கிடந்த காம்பௌண்ட் சுவரைக்கடந்து உட்புறம் வந்தார் ஸ்ரீகுமார்.

வாட்ச்மேன் அடித்துப்போட்ட மாதிரி ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார்.

''அவரோட இடுப்புல இருக்கற சாவிக்கொத்தை எடுத்துக்குங்க. லாபரெட்டரியோட சாவியும் அதிலதான் இருக்கு'' - சௌபர்ணிகாவின் குரல் இருட்டில் ஒலித்தது.

ஸ்ரீகுமார் மெல்லக் குனிந்து அந்த வாட்ச்மேனின் இடுப்பிலிருந்த சாவிக்கொத்தை எடுக்கக் கையை நீட்டினார்.

## 3

காலேஜ் வராந்தாவில் படுத்திருந்த வாட்ச்மேன், சத்தம் கேட்டதால் எழுந்திருக்க முயன்றார்.

ஸ்ரீ குமார் துணுக்குற்றார். ஒருகணம் என்ன செய்வது என்று புரியவில்லை.

''எதுக்காகக் கண் விழிக்கணும்? அப்படியே அமைதியா தூங்குங்க....'' ஸ்ரீகுமாரின் முதுகுப் புறத்திலிருந்து சௌபர்ணிகாவின் குரல் மெதுவான குரலில் கட்டளையிட்டது.

அந்தக் குரலைக் கேட்டதும், சொன்னபடி கேட்கும் ஒரு நல்ல குழந்தையைப் போல் வாட்ச்மேன் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டார்.

''இப்ப... சாவியை எடுங்க!'' என்றாள் அவள்.

ஸ்ரீகுமார் இயந்திர கதியில் வாட்ச்மேனின் இடுப்பிலிருந்த சாவியை எடுத்தார். வாட்ச்மேன் மயக்கத்தில் ஆழ்ந்திருப்பவர் போல் கிடந்தார்.

ஸ்ரீகுமார் மேற்புறப் படிக்கட்டுக்குச் செல்லும் வாசல் கதவைத் திறந்தார். அந்தக் கொத்துச் சாவியிலிருந்து, சுலபமாகத் தன்னால் சரியான சாவியைக் கண்டுபிடிக்க முடிந்தது பற்றி, அவருக்கே வியப்பாக இருந்தது.

படிகளிலேறி மேல்தளத்துக்கு வந்தார்.

லாபரெட்டரியின் சாவியை அடையாளம் தெரிந்து கொள்ளவும், கதவைத் திறக்கவும் ஸ்ரீகுமார் அதிகம் கஷ்டப் படவில்லை.

அறைக்குள் வெளிச்சமில்லை.

''அங்கே ஸ்பிரிட் லாம்ப் இருக்கு பாருங்க பக்கத்திலேயே தீப்பெட்டியும் இருக்கு பாருங்க'' -சௌபர்ணிகா நல்ல வெளிச்சத்தில் பார்ப்பதைப் போலவே இயல்பாகக் கூறினாள்.

ஸ்ரீகுமாருக்கு ஆச்சரியங்கள் பழக ஆரம்பித்திருந்தன. அவருக்கு எல்லாமே ஒரு கனவு மாதிரி இருந்தது. ஸ்பிரிட் லாம்ப் ஒளிவிடத் தொடங்கியது.

அந்தச் சன்னமான வெளிச்சத்தில் ஸ்டோர் ரூமின் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த எலும்புக்கூடு ஸ்ரீகுமாருக்கு நன்றாகத் தெரிந்தது.

'இதை எப்படி வெளியே எடுத்துச்செல்வது?' குமார் யோசனையில் ஆழ்ந்தார்.

''மண்டையோட்டுக்குக் கீழேயிருக்கும் எலும்புகளைப் பிரித்து எடுத்து ஒரு சாக்குப்பைக்குள் போட்டுக்கொண்டு சீக்கிரமாகக் கிளம்பிவிடலாம்'' -அவள் ஆலோசனை கூறினாள்.

குமாருக்கு வேறு வழிதெரியவில்லை.



கண்ணாடிப் பெட்டியின் கதவைத் திறந்தார். மண்டையோட்டுக்குக் கீழேயிருந்த எலும்புக்கூட்டின் இணைப்புகளைக் கழற்றி, அவற்றை கோணிப் பைக்குள் போட்டுக்கொண்டார்.

கோணிப்பையை தோளில் போட்டுக்கொண்டு வெளியேறி, படிகளில் இறங்கத்தொடங்கினார். 'இந்த நிலைமையில் தன்னை யாராவது பார்த்துவிட்டால் என்ன செய்வது?' என்கிறபயம் அவரைக் கொன்றது. கொத்துச்சாவியை வாட்ச்மேனின் தலையருகே வைத்தார்.

எல்லாம் முடிந்து திரும்பிப் பார்த்தபோது அங்கே சௌபர்ணிகாவைக் காணவில்லை. ஸ்ரீகுமார் பார்வையால் இருளுக்குள் துழாவினார். அவள் எங்குமே தட்டுப்படவில்லை.

''நான் உங்க பின்னாலே இருக்கிறேன். மறுபடியும் ஒரு தடவை, லாபரெட்டரிக்குப் போய்ட்டு வந்தேன்.'' -அவள் கூறினாள்.

''எதுக்காக?'' - குமார் கேட்டார்.

''உள்ளேயிருந்து யாரோ கூப்பிடுற மாதிரி ஒரு சத்தம் அதனாலதான்...''

குமார் பிரமிப்போடு பார்த்தார்.

''உள்ளே நுழைஞ்சதும் அந்த மண்டையோடு என்னைப் பார்த்துத் திரும்பிச்சு. மேலும் கீழும் என்னை ஏறிட்டுப் பார்த்தது. அதுக்கு மேலே நான் அங்க நிக்கலை.''

குமார் பதில் சொல்லத் திராணியில்லாமல், மதில் சுவரைத் தாண்டிச் சாலைக்கு வந்தார்.

சொல்லி வைத்ததுபோல் ஆட்டோ ஒன்று வந்தது. ஏறிக் கொண்டார். அது ஆஸ்பத்திரியைக் கடக்கும் போது போலீஸ்காரர் ஒருவர் கை காட்டினார்.

ஆட்டோ டிரைவர் ஒருதடவை பின்புறம் திரும்பிப் பார்த்துவிட்டு, சட்டென்று பிரேக் போட்டார்.

போலீஸ்காரர் டார்ச்லைட்டை அடித்து உட்புறமாகப் பார்த்தார்.

''சாக்கு மூட்டைக்குள் என்ன இருக்கிறது?'' போலீஸ்காரரின் கேள்வி கடுமையாக ஒலித்தது.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் குமார் அசைவற்று உட்கார்ந்திருந்தபோது, அவருக்கு அருகே உட்கார்ந்திருந்த சௌபர்ணிகா பதிலளித்தாள்.

''நாங்க ஆஸ்பத்திரியில இருந்து வர்றோம். இதுக்குள்ள பாத்திரங்கள் இருக்குப்பா பேராண்டி...'' அவளது குரல் ஒரு பாட்டியின் குரலாக ஒலித்தது.

குமார் சட்டென்று திரும்பிப் பார்த்தபோது அறுபது வயதான பாட்டியொருத்தி அருகில் அமர்ந்திருந்தாள்.

''அப்படியா... ம்... சரி, சரி... போங்க!'' போலீஸ்காரர் மேற்கொண்டு சோதிக்காமல் போவதற்கு அனுமதி அளித்தார்.

ஆட்டோ டிரைவர் சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தார். ஆட்டோவில் குமாருடன் மற்றொருவர் அதுவும் வயதான பெண் மணி ஏறியதை அவர் கவனிக்கவில்லை என்பதுதான் காரணம்.

ஆட்டோ நகர்ந்தது.

கல்லூரியை நெருங்கியதும் கட்டணத்தைக் கொடுத்து விட்டுச் சாக்கு மூட்டையுடன் இறங்கினார் குமார்.

கேட் வெறுமனே மூடிக் கிடந்தது.

குமார், நேராக லாபரெட்டரி அறையை நோக்கி நடந்தார்.

இரவு நேரத்தில் தூங்காமல் சதா காவலிருக்கும் ராமச்சந்திரன், அப்போது நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார். கோணிமூட்டையுடன் குமார் தனது அறைக்கு வந்துசேர்ந்தார்.

கண்ணாடிப் பெட்டியை நெருங்கி, அதற்குள் வைத்திருந்த எலும்புக்கூட்டை வெளியே எடுத்தார்.

தான் படுத்துக்கொள்ளும் கட்டிலில் அதைப் படுக்க வைத்தார். பிறகு, அதன் மண்டையோட்டுப் பகுதியை உடல் பகுதியிலிருந்து வேறுபடுத்திக்கீழே வைத்தார்.



கோணிப் பைக்குள் இருந்த எலும்புத் துண்டுகளை வெளியே எடுத்துப் பொருத்தி வைத்து, அதைப் பழையபடி கண்ணாடிப் பெட்டிக்குள் தொங்கவிட்டார்.

ஏற்கெனவே கண்ணாடிப் பெட்டியில் இருந்த உடல்பகுதி எலும்புகளை அதே சாக்கிலேயே போட்டுக்கட்டி, ஸ்டோர் ரூமின் இருட்டான பகுதியில் பீரோவின் அடியில் தள்ளி வைத்தார்.

இவ்வளவையும் செய்து முடிப்பதற்குள்ளேயே தூக்கம், அவர் கண்களில் கனக்கத் தொடங்கியது.

கட்டிலில் படுத்தவாறே தூக்கக் கலக்கத்தில் ஸ்டோர் ரூமை பார்த்தார். மொத்த எலும்புக்கூடும்தான் பொருத்தி வைத்த மாதிரி பத்திரமாக இருந்தது.

'சௌபர்ணிகா எங்கே போனாள்?' சிந்தனை தீவிரமடைவதற்குள் குமார் உறக்கத்தில் ஆழ்ந்தார்.

**ம**றுநாள் எதிர்பாராத காரணத்தால் கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது.

ஸ்ரீகுமார் தனது அறையில் உட்கார்ந்து லைப்ரரியிலிருந்து எடுத்து வந்த ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தார். ஆவி மற்றும் பிசாசுகளைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த புத்தகம் அது.

நம்பமுடியாத பல சம்பவங்கள் அதில் தேதி வாரியாகத் தொகுக்கப்பட்டிருந்தன.

இங்கிலாந்தின் ஏதோ ஒரு நகரில் உள்ள லெவல் கிராஸிங்கின் முன் இளம்பெண் ஒருத்தி, வரும் வாகனங்களைக் கைகாட்டி நிறுத்திக் கட்டுப்படுத்துகிறாள்.

அதே கணத்தில், பயங்கரமான வேகத்தில் பாய்ந்து வரும் ரயில் வண்டி அந்த லெவல் கிராஸிங்கைக் கடந்து செல்கிறது. இதே போன்ற அனுபவங்கள் வேறு பலருக்கும் ஏற்படுகிறது.

செய்தியைக் கேள்விப்பட்ட பத்திரிகையாளர் ஒருவர் இதைப் பற்றி விசாரணை நடத்துகிறார். அது தொடர்பாகப் பழைய பத்திரிகைகளைப் புரட்டியபோது ஓர் உண்மை புலப் படுகிறது.

குறிப்பிட்ட அந்த லெவல் கிராஸிங்கில் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இளம்பெண் ஒருத்தி கார் ஓட்டிக்கொண்டு வந்தபோது, சிக்னலோ, கேட்டோ, இல்லாத தால் பாய்ந்து வந்த ரயில்வண்டி, காரில் மோதி அதைத் தூக்கித் எறிந்திருக்கிறது. தெறித்து விழுந்த அந்த இளம்பெண்ணின் உடல் பகுதிகளைப் பல்வேறு இடங்களிலிருந்து பொறுக்கி எடுத்தனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் மேற்படி லெவல் கிரா ஸிங்கைக் கடப்பவர்களுக்கு வித்தியாசமான அனுபவங்கள் ஏற்படத் தொடங்கியிருக்கின்றன.

மனிதர்களுக்குத் தொல்லை தந்த வேறு சில ஆவிகளின் கதைகளையும் அதில் குறிப்பிட்டிருந்தார்கள்.

**ம**திய வேளை.

ஓட்டலுக்குப் போய் சாப்பாட்டை முடித்துக்கொண்டு திரும்பவும் லாபரெட்டரிக்கு வந்த ஸ்ரீகுமாரிடம் அட்டெண்டர் ராகவன் நாயர் ஒரு தகவல் தெரிவித்தார். ''சார் உங்களுக்கு ஒரு போன்கால் வந்திருந்தது. நீங்க சாப்பிடப் போயிருக்கிறதா சொன்னேன். அவங்க ஒரு நம்பர் குடுத்திருக்காங்க. நீங்க வந்ததும் போன் பண்ணச் சொன்னாங்க''

ராகவன், தன்னுடைய சட்டை பாக்கட்டிலிருந்து நாலாக மடித்த ஒரு பழைய துண்டுக் காகிதத்தை எடுத்துக்கொடுத்தார்.

குமார் அந்த காகிதத்தை வாங்கிப் பார்த்தார். அதிலிருந்த நம்பர் அவருக்குத் தெரிந்ததாக இல்லை.

இருப்பினும் தன்னுடன் பேச விரும்பியது யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலுடன் அந்த நம்பருக்கு டயல் செய்தார்.

எதிர்முனையில் ரிசீவரை எடுக்கும் சத்தம் கேட்டது.



''ஹலோ... இந்த நம்பர்லேந்து யாரோ...'' ஸ்ரீகுமார் தொடரும் முன்,

''நான்தான் பிரபாகரன் பேசறேன். உன்னோட பழைய ஃப்ரெண்டுடா. மிலிட்டரியில் இருந்து திரும்பி வந்துட்டேன். ரெண்டு மூணு நாள் லீவு எடுத்துக்க. ஊர்ப்பக்கம் போயிட்டு வரலாமே?'' பிரபாகரன் இடை வெளியே விடாமல் பேசினான்.

ரொம்ப நாள் கழித்துப் பழைய நண்பனின் குரல் கேட்டதும் குமார் உற்சாகமானார். ஆனால், ஊருக்குப் போகிற ஐடியா அவருக்கு ஏனோ பிடிக்கவில்லை.

''ஊருக்கா... ம்... எனக்கு அங்க யார் இருக்காங்க?' குமார் கேட்டார்.

''ஏன் எங்களையெல்லாம் பார்த்தா மனுஷனாத் தெரியலையா? நீ ஊருக்கு வந்து வருஷக்கணக்காச்சுன்னு கேள்விப்பட்டேன். வா! நாம ஒருதடவை கிராமத்துப் பக்கம் போயிட்டு வரலாம். நம்ம ஊர் இன்னும் பழையபடியேதான் இருக்கு. மலையும், மலை மேல இருக்கிற பகவதி கோயிலும் அப்படியேதான் கிடக்கு, வாடா'' - பிரபாகரன் உரிமையோடு அதட்டினான்.

ஸ்ரீகுமாரின் மனத்தில் பழைய நினைவுகள் கிளர்ந்தெழத் தொடங்கின.

சிறுவயதில் விளையாடித் திரிந்த கோயில் மைதானம்... கோயில் நிலைகொண்டிருக்கும் இடத்தைச் சுற்றி நான்கு புறமும் மேற்புறமாகச் சரிந்து உயரும் முக்கூற்றி மலை. காட்டுக் கதளி, மூக்குச்சளிப் பழம், மூக்கூற்றிப் பூக்கள் ஏராளமாகக் கிடக்கும் பெரிய குன்றுப் பகுதி... எல்லாவற்றையும் ஸ்ரீகுமாரின் மனம் அசை போட்டது.

பெரிய பெரிய இரும்பு ஆணிகளை அறைந்திருக்கும் யக்ஷிப்பாலை மரம்.

இரவின் நிழல் விழத்தொடங்கினால் பிறகு யாருமே அங்கெல்லாம் போகமாட்டார்கள்.

ஊரிலேயே மிகவும் மோசமான ரௌடி என்று பெயரெடுத்த பார்கவன் பிள்ளை, அந்தக் கோயிலின் முன்புறம்தான் ரத்தம் கக்கியபடி விழுந்து செத்துப்போனான். நள்ளிரவு நேரத்தில் அவனுடைய பயங்கரமான அலறலைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தெழுந்த ஊரார் ஓடி வந்து பார்த்த போது பார்கவனின் உடல் எந்தவித அசைவுமற்றுத் தரை மீது கிடந்தது.

அவன் நெஞ்சுப் பகுதியில் காலடிச்சுவடு ஒன்று சற்று ஆழமாகப் பதிந்திருந்தது. அவனை மிதித்த பாதத்தின் விரல்களில் மெட்டி போன்ற நகை இருந்திருப்பதற்கான அடையாளம் தெளிவாகத் தெரிந்தது.

எல்லா நினைவுகளும் ஸ்ரீகுமாரின் நெஞ்சில் அலை மோதின.

''சரி... நானும் வர்றேன்'' - குமார் ரிசீவரை வைத்தார்.

அமானுஷ்யமான ஏதோ ஒரு சக்தி, தன்னை கிராமத்துக்கு இழுப்பதாக ஸ்ரீகுமாருக்கு தோன்றியது. எனவே முதல் நாள் இரவு நடந்த சம்பவங்களை அவர் மறக்க ஆசைப்பட்டார்.

சற்றும் தாமதிக்காமல் தனது அறைக்கு வந்த ஸ்ரீகுமார், தேவையான உடை மற்றும் பொருட்களை ஒரு சூட் கேஸுக்குள் எடுத்து வைத்தார். படியிறங்கி வெளியே வந்தார்.

''எங்க சார் ஏதாவது திடீர்ப் பயணமா?'' அவருடைய லீவு லெட்டரை வாங்கிக்கொண்ட சக லெக்சரர் கேட்டார்.

''கிராமம் வரைக்கும் போய்ட்டு வரலாம்னு...'' ஸ்ரீகுமார் அவசர அவசரமாகப் பதிலளித்தபடி வெளிப்புற 'கேட்' டை நோக்கி நடந்தார்.

'கேட்' டை நெருங்கிய அதே நேரம் அவருக்கு முன்னால் ஆட்டோ ஒன்று சர்ரென்று வந்து நின்றது.

அதன் டிரைவர் சந்தேகம் நிரம்பிய பார்வையோடு ஸ்ரீகுமாரைப் பார்த்தார்.

## 4

''சார்! நீங்கதானே நேத்து ராத்திரி ஒரு சாக்கு மூட்டையோட நம்ம ஆட்டோல வந்தீங்க?'' என்றார் ஆட்டோ டிரைவர்.

''ஆமாம். அதுக்கு என்ன இப்ப?' ஸ்ரீகுமார் எரிச்சலுடன் கேட்டார்.

''அதுக்கில்லை சார். நான், நீங்க எடுத்துட்டு வந்த சாக்கு மூட்டையை மட்டும் தான் முதல்ல கவனிச்சேன். கூட ஒரு பொண்ணும் வண்டியில ஏறினத கவனிக்கலை.''

''பொண்ணா! அவங்க வயசான பாட்டியாச்சே!''

''நல்ல வேடிக்கை போங்க! வண்டில ஏறும்போது யாரையும் நான் பார்க்கலை. போலீஸ்காரர்கிட்ட பதில் சொன்ன போது பாட்டியா இருந்தாங்க. ஆனா, ஆட்டோவுலேர்ந்து இறங்கும்போது ரொம்பச் சின்னப் பொண்ணாத் தெரிஞ்சாங்க. ''டிரைவர் பிரமிப்பு அகலாதவனாகச் சொன்னான்.

''பொண்ணாவது, பிசாசாவது... எல்லாம் உங்க பிரமையா இருக்கும்.''

''சரி விடுங்க சார்! இப்ப நீங்க எங்க போகணும்?''

''ரயில்வே ஸ்டேஷனுக்கு!'' என்று சொன்ன குமார் ஆட்டோவில் ஏறி அமர்ந்தார்.

ஆட்டோ பறந்தது; ஸ்டேஷனுக்கு முன்னால் நின்றது. ஏற்கெனவே ரயில் வண்டி, ஸ்டேஷனுக்கு வந்திருந்தது.

ஸ்ரீகுமார் ரயிலில் ஏறினார். பெரிய குரலில் விசிலடித்தபடியே அது புறப்பட்டது.

மாலை நேரமானபோது புகைவண்டி அவரது கிராமத்தை ஒட்டிய ரயில்வே ஸ்டேஷனில் நின்றது. அங்கு மிகச் சிலரே ஏறி இறங்கினர். ஸ்டேஷனை ஒட்டியே பஸ் ஸ்டாண்டு. ஏழு மணி பஸ், அவரது கிராமத்தின் வழியாகச் செல்லும். அதுதான் கடைசி

பஸ். அதில் ஏறி உட்கார்ந்தார் ஸ்ரீகுமார். அவருடைய நினைவுகள் முன்னால் பறக்க, பின்னால் தொடர்ந்தது அந்தப் பேருந்து.

கிராமத்தின் பெரிய ஆலமரத்தைச் சுற்றி வந்து நின்றது பஸ். அதற்கு மேல் அங்கிருந்து நடந்துதான் போக வேண்டும். சற்றுத் தொலைவில் ராமன் நாயரின் டீக்கடையும், வெற்றிலைப் பாக்குக் கடையும் தெரிந்தன. அங்கு மட்டும் தான் விளக்கு வெளிச்சம் தட்டுப்பட்டது.

படிக்கும் காலத்திலிருந்தே ஸ்ரீகுமாருக்கு நாயர் நல்ல பழக்கம்.

டீக்கடைக்குள் நுழைந்தார் ஸ்ரீகுமார். அவரைப் பார்த்த ராமன்நாயர் உற்சாகமாகி, ''அட! சின்னத் திருமேனியா? பார்த்து வருஷக் கணக்காச்சு. உங்க ஃபிரெண்ட் பிரபாகரன் இவ்வளவு நேரமா இங்கதான் காத்துக்கிட்டிருந்தார். உங்களுக்கு முன்னாடியே வந்துட்டார். உங்களக் கூப்பிட்டிருந்தாராம். 'வருவீங்களோ, மாட்டீங்களோ'ன்னு சொல்லிட்டே இருந்தாரு இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கிராமத்துக்குள்ள திரும்பிப் போனாரு" என்றார்.

''சரி, நீங்க ஒரு டீ போடுங்க...''

ஸ்ரீகுமார், கடையிலிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார்.

பால் ஊற்றாத கறுப்பு டீயுடன் இரண்டு மசால் வடை, பெரிய நேந்திரம் பழம் ஆகியவற்றைக் கொண்டு வந்து டேபிள் மீது வைத்தார் ராமன் நாயர்.

நல்ல பசியாக இருந்ததால், ஸ்ரீகுமார் எதையும் மிச்சம் வைக்காமல் சாப்பிட்டார்.

''இன்னும் ஒரு மணி நேரம் காத்திருந்தா, நானும் உங்களோடவே வந்துடுவேன். ஒன்பதரை மணிக்கு சில வாடிக்கையாளருங்க வருவாங்க. தோப்பு துரவுகள்ல வேலை



செய்யறவங்க, வேலையை முடிச்சுட்டுத்தான் வருவாங்க. நான் அவங்களுக்குன்னு தனிச் சரக்கே வச்சிருக்கேன். அதுதான்" ராமன் நாயர் அசடு வழியப் பேசினார்.

''அதென்ன தனிச் சரக்கு?'' புரியாமல் கேட்டார் ஸ்ரீகுமார்.

''அதுதாங்க... நாட்டுச் சரக்கு! அந்த வியாபாரத்தை ஆரம்பிச்சதுக்கு அப்புறம்தான் ரெண்டு பொண்ணுங்களைக் கட்டிக் கொடுக்க முடிஞ்சது" என்றார் ராமன் நாயர்.

அவ்வளவு நேரம் காத்திருப்பது வீண் என்று தோன்றியது ஸ்ரீகுமாருக்கு.

''ஒண்ணு பண்றேன் ராமன் நாயரே! நான் இப்படியே மெதுவா நடக்கிறேன் நம்ம பழைய பாதை அப்படியேதானே இருக்கு?"

''அதுக்கென்ன? அப்படியேதான் இடக்கு. கொஞ்சம் தூரம் நடக்கறதுக்குள்ள யாராவது துணைக்குக் கிடைக்காமலா போயிடுவாங்க?" என்றார் ராமன் நாயர்.

குமார் எவ்வளவோ வற்புறுத்திக் கொடுத்தும் சாப்பிட்டதற்கான பணத்தை வாங்கிக்கொள்ளவில்லை நாயர். மறுநாள் வந்து பார்ப்பதாகச் சொல்லி விடைபெற்றார் குமார்.

கிராமத்தைப் பார்த்து நடக்கத் தொடங்கினார். சற்றுத் தொலைவு போனதும், இருட்டுக்குக் கனமேறியது போலிருந்தது. தன்னுடைய பையைத் திறந்து, டார்ச் லைட்டை எடுத்து 'ஆன்' செய்தார். அந்த வெளிச்சத்தில் முன்புறம் கிடந்த ஒற்றையடிப்பாதை ஒரு பெரிய மலைப் பாம்பைப் போல வளைந்து வளைந்து போவது தெரிந்தது.

பாதையின் இருபுறங்களிலும் மரங்கள் அடத்தியாக வளர்ந்து பந்தல் போல் மேற்புறம் இணைந்திருந்தன.

நேராக பிரபாகரனின் வீட்டுக்குப் போகவேண்டும் என்று நினைத்துக்கொண்டார் ஸ்ரீகுமார். ஆனால், பிரபாகரனின் வீடு தோராயமாகத்தான் நினைவிலிருந்தது.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு கிராமத்துக்குள் நுழைவதால், புதிது புதிதாக முளைத்திருந்த துணைப் பாதைகள் ஸ்ரீகுமாருக்கு ஒரு பிரச்சினையாக இருந்தன.

''பிரபாகரனோட வீட்டைத் தேடிப்போறீங்க போல இருக்கே!'' பின்புறத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தார் ஸ்ரீகுமார்.

அவரது கண்களையே அவரால் நம்பமுடியவில்லை.

'அவள்' குமாரின் பின்னால் சிரித்த முகத்தோடு நின்று கொண்டிருந்தாள்.

''நீ ... நீ... எப்... எப்படி இங்க வந்து சேர்ந்தே?''

ஸ்ரீகுமார் அதிர்ச்சியோடு கேட்டார்.

''நீங்க இங்க வருவீங்கன்னு எனக்குத் தெரியும்! அதனால் தான் முன்கூட்டியே இங்க வந்து காத்திருக்கிறேன்.''

ஸ்ரீகுமாரினால் உள்ளுக்குள் எழுந்த ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை. லாபரெட்டரியின் ஸ்டோர் ரூமுக்குள், அதுவும் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த எலும்புக்கூடு இளம் பெண்ணாக வடிவெடுத்து, தற்போது தனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறது. அதுவும் தன்னுடைய கிராமத்தில்! நகரிலிருந்து எத்தனையோ கிலோ மீட்டர் தூரத்தில்! இது எப்படிச் சாத்தியம்?

''பிரபாகரனை உனக்கும் தெரியுமா என்ன?''

''நல்லாவே தெரியும். நடங்க! பேசிட்டே போலாம். மிலிட்டரியிலேருந்து வந்திருக்கிறவர்தானே? தெரியும்.''

அவள் ஸ்ரீகுமாரின் பின்னால் நடந்து வந்தாள். தரையில் உதிர்ந்து கிடந்த உலர்ந்த இலைச்சருகு மற்றும் சுள்ளிகள் மீது ஸ்ரீகுமாரின் காலடிகள் பட்டு நெரிபடும் சத்தம் தெளிவாகக் கேட்டது. ஆனால் தொடர்ந்து வரும் அவளது சத்தம் அதேபோல் கேட்கவில்லை.



''இதோ இந்தப் பக்கம்... வலது புறமாய்ப் போகணும்.'' அவளது குரல் வழிகாட்டியது.

அவள் குறிப்பிட்ட இடத்தில் பாதை இரண்டாகப் பிரிந்து சென்றது.

''இந்த இடத்துல இருந்த ஆலமரம், புயல்ல விழுந்துடுச்சு. 'தேவியோட கோபம்தான் காரணம்'னு சொல்லிக்கிட்டாங்க'' என்றாள் அவள்.

''சௌபர்ணிகா...'' என்று ஆரம்பித்தார் ஸ்ரீகுமார்.

''சௌபர்ணிகாவோட இன்னொரு பெயர், ஸ்ரீதேவிக் குட்டி...' அப்படி சொன்னாத்தான் பிரபாகரனுக்குத் தெரியும்'' என்றாள் அவள்.

இருவரும் பிரபாகரனின் வீட்டை அடைந்தனர்.

-தொடர்ந்து இரண்டு தடவை குரல் கொடுத்த பிறகுதான் பிரபாகரன் எதிர்க்குரல் கொடுத்தான். உடனே கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

''யாரு... ஸ்ரீகுமாரா? நான் கொஞ்சம் நேரத்துக்கு முன்னாடி வரையில் காத்திருந்திட்டு, சரி இன்னிக்கு வரமாட்டேன்னு நினைச்சு திரும்பி வந்தேன்'' என்றான் பிரபாகரன்.

குமார் பின்புறம் திரும்பிப் பார்த்தார். அங்கு அவள் இல்லை. வீட்டுக்குள் நுழைந்தார்.

''சாப்பிடறதுக்கு ஏதாவது தயார் பண்ணட்டுமா?''

''வேணாம்! ராமன் நாயரோட கடையில ஒரு பிடி பிடிச்சுட்டேன்.''

நண்பர்கள் இருவரும் ஒரே அறையில் படுத்துக் கொண்டார்கள்''

''ஸ்ரீதேவி என்கிற பெண்ணைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா பிரபாகரா?'' ஸ்ரீகுமார் பேச்சைத் துவக்கினார்.

அந்தப் பெயரைக் கேட்டதும் பிரபாகரனின் இதயத் துடிப்பு சட்டென்று அதிகரித்தது.

கார்ணமற்ற ஒருவித பயம் அவனை வளைத்துக்கொண்டது. ஸ்ரீகுமாரிடம் இப்படியொரு கேள்வியை அவன் எதிர்பார்க்கவே இல்லை.

''எல்லாத்தையும் நாளைக்கு சாவகாசமாப் பேசிக்கலாம்; இப்பத் தூங்கு" என்றான் பிரபாகரன்.

ஸ்ரீகுமார் பிடிகொடுக்காமல், ''உனக்கு சுவாரஸ்யமான ஒரு விஷயம் சொல்லட்டுமா? ஸ்ரீதேவிக்குட்டிதான் எனக்கு உன்னோட வீட்டையே காண்பிச்சுக் கொடுத்தவள்..."

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்த பிரபாகரன், சட்டென்று நெருப்புப் பெட்டியை எடுத்து அருகில் வைத்திருந்த விளக்கை ஏற்றினான்.

''கடவுளே... பகவதி! இவன் என்னென்னமோ சொல்கிறானே?" பிரபாகரனின் குரலில் பீதி அப்பட்டமாகத் தெரிந்தது.

## 5

'ஸ்ரீதேவிக் குட்டி' என்ற பெயரை குமார் உச்சரித்ததில், ரொம்பவே அதிர்ந்து போனான் பிரபாகரன்.

ஸ்ரீகுமார் அதைப் பொருட்படுத்தாமல் பேச்சை தொடர்ந்தார்.

''சரி, நீ மிச்ச விஷயத்தையும் தெரிஞ்சுக்க. ஸ்ரீ தேவிக் குட்டி இப்ப எங்க காலேஜில் இருக்கிற லாபரெட்டரி ரூம்லதான் அரூபமா இருக்கிறாள். இன்னும் சரியா சொல்றதானா என் படுக்கையறைக்குப் பக்கத்திலேயேதான் இருக்கிறாள்!'

பிரபாகரன் நம்பாமல் புன்னகைத்தான்.

''ஒகோ அப்படியா சேதி? இப்ப புரிஞ்சுபோச்சு. சின்னத் திருமேனி பயங்கரமான ஆளுதான். காலேஜில படிக்கிற யாரா



வது ஒரு பெண்ணா இருக்கும் நீ இப்ப சொன்ன ஸ்ரீ தேவிக் குட்டி. ஆனா, அவள் தான் இந்த வீட்டை அடையாளம் காட்டினாள்னு புருடா விடாதே!"

''இப்போதைக்கு இந்தப் பேச்சு அப்படியே இருக்கட்டும். மற்றதையெல்லாம் அப்புறம் சொல்றேன்."

நண்பன் தன்னை நம்பாதது ஸ்ரீகுமாருக்கு பிடிக்கவில்லை. சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, கண்களை மூடினார். ரொம்ப நேரம் தூக்கமில்லாமல் தவித்தார்.

காலையில் எழுந்தவுடன் கோயில் குளத்தில் குளித்து விட்டு, தேவியை வணங்குவதற்காகக் கோயிலுக்குப் போனார் ஸ்ரீகுமார்.

ஒரு காலத்தில் அபரிமிதமான சக்தியுடன் விளங்கிய கோயில் என்றுதான் அதைப் பற்றிபேசிக் கொண்டனர். பறவைகள்கூட கருவறையின் மேற்புறம் பறக்காது என்பார்கள். ஒரு சில பறவைகள் அந்தரத்திலேயே எரிந்து விழுந்ததாகவும் சொன்னார்கள். கிராமத்தில் இதுபோல் இன்னும் எத்தனையோ நம்பிக்கைகள்!

கோயிலிலிருந்து திரும்பி வந்த குமார், பிரபாகரனின் வீட்டில் சிற்றுண்டி சாப்பிட்டார். முதல் நாள் இரவு வந்தபோது, பிரபாகரனின் அம்மாவை ஸ்ரீகுமார் பார்க்கவில்லை. அவர் வேறு அறையில் உறங்கிக்கொண்டிருந்தார். இப்போது அந்த அம்மா தான் சிற்றுண்டி பரிமாறினாள்.

ஒரு காலத்தில் அவர், ஸ்ரீகுமாரின் பரம்பரை வீட்டை பெருக்கும் வேலைக்காரியாக இருந்தாள். இப்போது வயது ஐம்பத்தைந்துக்கு மேல் இருக்கும்.

''என்ன சின்னத்திருமேனி! தறவாடு (பரம்பரை வீடு)' நண்பர்கள் எதுவும் வேண்டாம்னு நினைச்சுட்டீங்களா?''

''அப்படி இல்லையம்மா. பட்டணத்திலேயே வேலை கிடைச்சுடுச்சு. கொஞ்ச தூரமா என்ன? அடிக்கடி இங்க

வந்துட்டுப் போறதும் அவ்வளவு சுலபமாயில்லை. அப்படியே கஷ்டப்பட்டு வந்தாலும் இங்க யார் இருக்கிறாங்க?"

ஸ்ரீகுமார், பிடிப்பில்லாமல் பதில் சொன்னார்.

''அதெல்லாம் சரிதான். இருந்தாலும் எவ்வளவு நாளைக்குத்தான் உங்க வீடு புல்பூண்டத்துப்போனது மாதிரி கிடக்கிறது?"

''அதுக்கெல்லாம் ஒரு ஏற்பாடு பண்ணிடலாம்."

ஸ்ரீகுமார் அப்போதைக்கு அந்த விஷயத்திலிருந்து நழுவ முயன்றார்.

''நாம காலாற நடந்துட்டு வரலாமா குமார்? அப்படியே உங்க வீட்டையும் பார்க்கலாமே!"

-பிரபாகரன் கேட்டான்.

இருவரும் புறப்பட்டனர். அவர்கள் முதலில் போனது தறவாட்டுக் காரியஸ்தரின் வீட்டுக்குத்தான்.

பொழுது விடிந்தபிறகுதான் அப்பு நாயருக்கு ஸ்ரீகுமார் வந்திருக்கும் சேதி தெரிந்தது. உடனே பிரபாகரனின் வீட்டுக்குப் புறப்பட்டார். ஆனால், அதற்குள் அவர்களே அவரது வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

"என்ன திருமேனி ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தா நானே அங்க வந்து பார்த்திருப்பேனே?"

அப்பு நாயர் மிகவும் பணிவான குரலில் கேட்டார்.

''சும்மாதான் வந்தேன். ஒரு தடவை ஊரைப் பார்த்துட்டு போகலாமேன்னு தோணிச்சு. அப்படியே கிளம்பிட்டேன். நாளைக்கே திரும்பிப் போயிடுவேன். இப்ப நம்ம வீட்டைப் போய்ப் பார்க்கலாமா?" என்றார் ஸ்ரீகுமார்.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு இந்த வீட்டின் கதவைத் திறந்தார் அப்புநாயர். துருப்பிடித்திருந்த தாழ்ப்பாள் 'கரகர'வென்ற சத்தத்தை எழுப்பியது.



உள்ளே நுழைந்ததும் முற்றப்பகுதி முழுவதும் பச்சைப் புல் வளர்ந்திருப்பது தெரிந்தது. துளசிமாடத்தின் பாதியளவு உயரம் வரை புல் செழித்து வளர்ந்திருந்தது.

''போன வாரம்தான் புல்வெட்டினோம்."- அப்புநாயர் கூறினார்.

''மறுபடி எல்லாத்தையும் ஒரு தடவை சுத்தம் பண்ணி வையுங்க. போகும்போது பணம் தர்றேன்."

''பணமே வேண்டாம் திருமேனி... தேங்கா வெட்டின வகையில கொஞ்சம் பணம் என்கிட்ட இருக்கு. நான் பார்த்துக்கறேன். அப்புறம் இந்த இடத்தை விற்கவா போறீங்கன்னு ரொம்பப் பேர் எங்கிட்ட கேக்கறாங்க."

''இப்ப அப்படி எதுவும் எண்ணமில்லை" என்ற ஸ்ரீகுமார், வீட்டை சுற்றிப் பார்த்துவிட்டு பிரபாகரனோடு திரும்பினார்.

மதிய உணவுக்குப் பிறகு கொஞ்ச நேரம் படுத்து ஓய்வெடுத்தார்.

மாலை நேரத்தில் இருவரும் கோயிலை நோக்கி நடந்தனர்.

குன்றின் உச்சியில் கருவறை மட்டுமே மீதமிருந்த கோயிலை நோக்கி இருவரும் படிகளில் ஏறினர்.

கோயிலை ஒட்டி தென்மேற்குப் பகுதியிலிருந்த ஆலமரத்தடியில் அமர்ந்தனர்.

''ஆமாம், 'ஸ்ரீ தேவிக் குட்டி'ங்கற பேரைக் கேட்டதும் உனக்கு தூக்கிவாரிப் போட்டதே! ஏன்? இந்த ஊருக்கும், அவளுக்கும் என்ன சம்பந்தம்?" என்றார் ஸ்ரீகுமார்.

அந்த ஊரில் பெரிய சூறாவளியையே ஏற்படுத்திய கதையைச் சொல்வதற்கு ஆயத்தமானான் பிரபாகரன்.

## 6

பிரபாகரன் சொல்லப் போகும் கதையைக் கேட்க ஆவலுடன் ஆலமரத்தின் நிழலில் உட்கார்ந்தார் ஸ்ரீகுமார்.

''அது ஒரு பயங்கரமான சம்பவம்! உனக்கு 'சந்தனக் காட்டு இல்லம்' ஞாபகமிருக்கா? அந்த வீட்டுத் தலைவர் கோவிந்தன் நம்பூதிரியைத் தெரியுமில்லையா? அதான், மந்திரம் தந்திரம்னு அலைஞ்சுட்டிருப்பாரே? அவரை ஞாபகமிருக்கா?'' என்றான் பிரபாகரன்.

''உம்... இப்ப ஞாபகம் வருது'' - ஸ்ரீகுமார் கண்களைச் சுருக்கிக்கொண்டு பதிலளித்தார்.

உச்சிக்குடுமியுடன், முழங்கால் வரையிலான துண்டு ஒன்றைக் கட்டிக்கொண்டு, கோயிலில் பூஜை நடத்தப் போகும் கோவிந்தன் நம்பூதிரியை ஸ்ரீகுமார் பார்த்திருக்கிறார்.

''ஒரு தடவை மாந்திரீகத்துக்குப் போன அவர், திரும்பி வந்தபோது ஒரு பெண்ணையும் கைக்குழந்தை ஒன்றையும் அழைத்து வந்தார்.

''சில காலத்துக்குப் பிறகு வெளியூர் போவதாகச் சொல்லிப் புறப்பட்டுப் போனார். ரொம்ப நாள் திரும்பவே இல்லை. அந்தப் பெண்மணியும், குழந்தையும் தனியாகத்தான் வாழ்ந்தனர். குழந்தை வளர்ந்தாள். அவளும் இந்தக் கோயிலில் பூஜை செய்திருக்கிறாள். ஒருவேளை நீ கூட அவளைப் பார்த்திருக்கலாம்'' என்றான் பிரபாகரன் ஸ்ரீகுமார் யோசனையில் ஆழ்ந்தார்.

சின்ன வயதில் அவர் கோயிலுக்குப் போனபோது கருவறையின் முன்புறம் நின்றபடி, தரிசனம் முடித்துவிட்டு வருபவர்களின் உள்ளங்கையில் பிரசாதமாக சந்தனத்தைப் போடும் இளம்பெண் ஒருத்தியின் தாமரை முகம் சட்டென்று மனதுக்குள் மின்னி மறைந்தது.

பிரபாகரன் விட்ட இடத்திலிருந்து தொடங்கினான்.



''ஒருநாள் அந்தப் பெண்ணும், அவளது அம்மாவும் திடீரென்று காணாமல் போனார்கள். மூன்று நாட்கள் கழித்து, அவர்களுடைய பிரதேங்கள் அந்த இல்லத்துக்குப் பின்னாலிருந்த குளத்தில் மிதந்தன''!

''அப்ப அந்த பெண்ணுக்கு என்ன வயசு இருக்கும் ஸ்ரீகுமார் விசாரித்தார்.

''வயது இருபத்தொன்று இருக்கலாம்.''

''அவுங்க சாவுக்கு என்ன காரணமாம்?''

அதெல்லாம் எனக்கு சரியா தெரியாது. அவ உடம்புல ஏதோ ஆவி புகுந்துக்கிட்டதா சொன்னாங்க; யாரோ அவளைக் கற்பழிச்சுக் கொன்னுட்டதாகவும் பேசிக்கிட்டாங்க; அதே சமயத்துலே தடியனுங்க மூணுபேரும் கோயில் பக்கத்திலேயே செத்துக்கிடந்தாங்க'' என்றான் பிரபாகரன்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அங்கே குஞ்ஞு ராமன் வந்தார்.

அவர் அறுபது வயது தாண்டியவர்; கல்தச்சர். சிற்ப வேலைப்பாடுகளும் தெரிந்தவர்.

ஸ்ரீகுமாரும், பிரபாகரனும் பேசிக்கொண்டிருந்த விஷயத்தை கேட்டுத் தனக்குத் தெரிந்ததைச் சொல்ல ஆரம்பித்தார்.

''வந்தவங்க முதல்ல அந்த அம்மாவைக் கொன்னுட்டாங்களாம். அந்தப் பொண்ணு, கொலைகாரங்களோட மோதினாளாம். வந்தவனுங்க, மகளையும் அடிச்சுக் கொன்னு ரெண்டு பேரையும் குளத்துல வீசியெறிஞ்சுட்டுப் போனதாகவும் பேசிக்கிட்டாங்க'' என்றார் குஞ்ஞுராமன்.

''கொலை செஞ்சவங்க யார்?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

குஞ்ஞுராமன், பிரபாகரனை உற்றுப் பார்த்தார்.

''நான் சொல்றேன் தம்பி. ஆனா நீ வீணா வருத்தப் படக் கூடாது. உங்க மாமா சந்து நாயர்தான் காரணம்னு சொன்னாங்க. அவர்தானே கோவிந்தன் நம்பூதிரி வீட்டுல காரியஸ்தரா இருந்தவர்.

நம்பூதிரி இறந்தபிறகு எல்லாச் சொத்தும் அந்தப் பெண்ணுக் கும் போய்ச் சேரும்னு அவருக்குத் தெரியாதா? அதனால அவங்களைக் கொன்னுட்டு, சொத்துக்களை மடக்கத் திட்டம் போட்டாராம்" என்றார் குஞ்சுராமன்.

"அப்படியா சொல்றீங்க,?" பிரபாகரன் கேட்டான்.

"ஆமாம் தம்பி! உங்க மாமாவோட பிள்ளைங்க நாலு பேருமே பக்கா ரௌடிங்க. நான் சொல்றனேன்னு வருத்தப் படாத. அவங்களை எதிர்த்த யாரும் உயிரோட இருந்ததில்லை" என்ற குஞ்ஞுராமன், கொஞ்ச நேரம் வெற்றிலையை அசை போட்டுவிட்டுப் புறப்பட்டுப் போனார்.

சூரியன் மறைய ஆரம்பித்தான்.

"நாம போகலாமா?" பிரபாகரன் எழுந்தான்.

"நீ போ பிரபாகரா. நான் இன்னும் கொஞ்ச நேரம் இங்க உட்கார்ந்துட்டு வர்றேன்" என்றார் ஸ்ரீகுமார்.

பிரபாகரன் கிளம்பிச் சென்றபின் ஸ்ரீகுமார் எழுந்து கோயில் கருவறையை நோக்கி நடந்தார்.

கோயில் முழுவதும் மோகினி சிலைகள். அதில் ஒன்றைப் பார்த்ததும், ஸ்ரீகுமாருக்கு தூக்கிவாரிப் போட்டது.

அந்தச் சிலையின் முகம், தனக்கு மிகவும் பரிச்சயமான முகம்போல் தோன்றிது. ஸ்ரீகுமார் சிந்தனையில் மின்னல் தெறித்தது. ஆம்! அந்தமுகம், அவர் லாபரெட்டரியில் சந்தித்த பெண்ணின் முகம் போலவே அச்சுஅசலாக இருந்தது.

அவள் இரண்டு பெயர்களைக் குறிப்பிட்டிருந்தாள்.

ஒன்று ஸ்ரீதேவி, மற்றொன்று சௌபர்ணிகா.

எதனால் அப்படிச் சொன்னாள்?

குளத்தில் மிதந்த பெண்ணின் பெயர் ஸ்ரீதேவி. அப்படி ஆனால் சௌபர்ணிகா யார்?



ஸ்ரீதேவியின் உடம்பில் ஏதோ ஆவித்தொல்லை இருந்ததாகவும், அவளை அடித்துக் கொன்று குளத்தில் போட்ட தாகவும் குஞ்ஞுராமன் சொன்னார்?

'அப்படியானால் இதோ தனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கும் இந்தச் சிலையின் பெயர்தான் சௌபர்ணிகா வாக இருக்குமோ? ஸ்ரீகுமாருக்கு உடம்பு நடுங்கியது.

சூரியன் மறைந்து இருள் பரவிக்கொண்டிருந்தது. காற்று உடம்பைத் தாலாட்டியது. ஆளரவமற்ற அந்தக் குன்றில்தான் தனியாக இருப்பது ஸ்ரீகுமாரை உறுத்தியது.

போய்விடலாமென்று முடிவெடுத்தபோது பின்னால் ஒரு குரல்; பழக்கப்பட்டகுரல்.

"என்ன... இவ்வளவு சீக்கிரமா கிளம்பிட்டீங்க?"

ஸ்ரீகுமார் அச்சத்தோடு திரும்பிப் பார்த்தார்.

அப்போது அந்த மோகினி சிலை தன்னை நோக்கி கொஞ்சம் முன்னால் நகர்ந்திருப்பதாக அவருக்குத் தோன்றியது.

## 7

**வி**யப்பு நிறைந்தவராக ஸ்ரீகுமார் அந்தச்சிலையையே பார்த்துக்கொண்டிருந்தார்.

ஒருவேளை சிலை நகர்வதுபோல தோன்றியது வெறும் பிரமையாக இருக்குமோ என்று நினைத்தார்.

இல்லை... சிலை கண்டிப்பாக நகர்ந்திருக்கிறது!

உயிரற்ற ஒரு பொருள் அதுவும் ஒரு சிலை, நின்ற இடத்திலிருந்து நகருமா?

உண்மையிலேயே ஸ்ரீகுமார் குழம்பினார். இது ஏதோ மனக் குழப்பம் என்று தீர்மானித்து, திரும்பி நடக்கத் தொடங்கினார்.

கோயில் காம்பௌண்டின் மேற்குப் புறமாகக் கீழ் நோக்கி இறங்கும் முதல் படிக்கட்டில் கால் வைத்தபோது, பின்புறத்தில் ஏதோ சத்தம் கேட்டது.

மறுபடியும் திரும்பிப் பார்த்தார். அங்கே ஒன்றும் விநோதமாக இல்லை.

விரைவாகப் படிக்கட்டுக்களைத் தாண்டிக் கீழே வந்தார்.

அன்றிரவு படுக்கையில் படுத்திருந்தபோது குஞ்ஞுராமன் குறிப்பிட்ட சம்பவங்கள் அவர் நினைவில் அலைந்தன.

காரியஸ்தர் சந்து நாயர் கொலை செய்தாரா? குளத்தில் சடலங்களாக மிதந்த அந்த அம்மாவும், மகளும் மறுபடி மறுபடி நினைவில் வெட்டி மறைந்தனர்.

**கா**லையில் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, பிரபாகரனிடம் முந்தைய நாள் இரவில் கோயில் வளாகத்துக்குள் தனக்கு நேர்ந்த அனுபவங்களைக் கூறினார் ஸ்ரீகுமார்.

கடைசியில், ''ஒன்று செய்யலாமா, கிருஷ்ண குறூப்பை சந்தித்தால் என்ன? அவர் மிகப் பெரிய மாந்திரீகர்'' என்றார்.

''நீயும் இதையெல்லாம் நம்ப ஆரம்பிச்சிட்டியா?'' பிரபாகரன் சிரித்தபடியே கேட்டான்.

''நடந்துவிட்ட சம்பவங்களைப் பார்க்கும்போது அதையெல்லாம் நம்ப வேண்டுமென்றுதான் தோன்றுகிறது.''

''அதுதான் உன்னோட விருப்பம்னா, அப்படியே செஞ்சுட்டாப் போகுது!'' பிரபாகரன் உடன்பட்டான்.

கிருஷ்ணக் குறூப்பு அந்த ஊரிலேயே மிகவும் புகழ்பெற்ற ஜோதிடர்; மாந்திரீகர். அவரைப் பார்க்க யார், யாரோ வருவார்கள்.

ஸ்ரீகுமாரும், பிரபாகரனும் குறூப்பை பார்க்கப் போனார்கள்.

நாலுகட்டும் (நான்கு அறைகள் மற்றும் வராண்டா உள்ள வீட்டு அமைப்பு) தெருவாசற்படியும் உள்ள பழமையான வீடு அது.



வராண்டாவில் உட்கார்ந்து குறூப்பு ஓலைச்சுவடி ஒன்றை புரட்டிக் கொண்டிருந்தபோதுதான், இந்த இருவரும் அங்கு சென்றனர்.

ஸ்ரீகுமாரை, உற்றுப் பார்த்தார் குறூப்பு.

''தெரிஞ்ச முகமா இருக்கே'' என்றார் அவர்.

''இருக்காதே... என்னை நீங்க பார்த்திருக்க முடியாது'' - ஸ்ரீகுமார் பதிலளித்தார்.

''ம்... ஞாபகம் வந்துவிட்டது. நான் சொல்லட்டுமா? சந்திரசேகரன் திருமேனியின் மகன்தானே? அந்த ஜாடை அப்படியே இருக்கிறது'' - குறூப்பு நெற்றிப் பொட்டை தட்டிக் கொண்டே சொன்னார்.

''ஆமாம். அவர்தான் எங்க அப்பா'' என்றார் ஸ்ரீகுமார் ஆச்சரியத்தோடு.

''என்ன விஷயமா வந்தே?'' - குறூப்பு ஓலைச் சுவடியை மடக்கி, பூஜையறை வாசல்படியை ஒட்டியிருந்த பீடத்தில் வைத்தபடி கேட்டார்.

''நம்ம கோயிலைப் பற்றி, ஒரு விஷயம் எனக்குத் தெரிய வேண்டியுள்ளது. அதற்காகத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன்.'' என்றார் ஸ்ரீகுமார்.

''இப்ப சந்து நாயரும், அவங்களோட ஆளுங்களும்தான் கோயில் சொத்துக்களையெல்லாம் கவனிச்சுக்கிறாங்க போலிருக்கு. கோயில் நிலைமையைப் பத்தி அவங்களுக்கு என்ன கவலை? ஆமாம், எதுக்குக் கேட்ட?'' என்றார் குறூப்பு.

''நேற்று சாயங்காலம் கோயில் பக்கத்திலுள்ள ஆல மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தேன். சூரியன் மறைந்த பிறகு புறப்படலாம்னு எழுந்து நடக்க ஆரம்பித்தேன். பின்புறத்திலிருந்து யாரோ கூப்பிடுவது போலத் தோன்றியது. அருகில் போய்ப் பார்த்தபோது, கருவறைக்கு முன்புறமிருந்த துவார

பாலிகையின் சிலை இருந்த இடத்திலிருந்து நகர்ந்திருப்பதாகத் தோன்றியது."

"ஓகோ... அப்படியா சேதி?" குறுப்பு சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

"தேவியின் அருகிலுள்ள துவாரபாலிகைகள் தேவியின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்கள். தேவி எதையாவது விரும்பியிருக்கலாம்" என்றார் குறுப்பு.

ஸ்ரீகுமார் மறுபடியும் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

காலேஜில் தனக்கு நேர்ந்த அனுபவங்களில் இடம்பெற்ற பெண்ணின் முகத்துடன் இந்தச் சிலையின் முகம் பொருந்திப் போகும் செய்தியை எப்படி இவரிடம் தெரிவிப்பது என்று யோசித்தார்.

"எதுக்கும் அந்தச் சிலையை ஒருதடவை நான் நேரில் வந்து பார்த்துடறேன்; வாங்க போகலாம்" என்றார் குறுப்பு.

மூவரும் தேவி கோயிலை நோக்கி ஒற்றையடிப்பாதை வழியாக நடந்தனர்.

அவர்கள் கோயிலை அடைந்தபோது, சூரியன் கருவறையின் உச்சிப் பகுதிக்கு வந்திருந்தான். கோயிலின் மேற்புறம் மேகக் கூட்டம் கவிந்திருந்ததால், அந்தப் பகுதியே நிழலால் மூடப்பட்டிருந்தது போலிருந்தது.

"நீங்கள் சொன்னது இந்தச் சிலையைத்தானா?" கிருஷ்ணக் குறுப்பு இடது புறமிருந்த சிலையை நெருங்கியபடி கேட்டார்.

ஸ்ரீகுமார் ஆமோதித்தார்.

குறுப்பு அந்தச் சிலையை தலையிலிருந்து கால்வரை பரிசோதித்தார்; மூன்றரையடி உயரமுள்ள அந்தச் சிலையை ஒரு தடவை சுற்றி வந்தார். சிலையின் கீழே, பின்புறத்தில் தேவநாகிரி எழுத்தில் என்னவோ பொறிக்கப்பட்டிருந்தது.



சிலையின் மீது படிந்திருந்த பாசத்தை, விரல்களால் வருடி உதிர்த்தார்.

பிறகு எழுத்து உள்ள பகுதியை மிகவும் கவனத்துடன் பார்த்தார், ஒவ்வொரு எழுத்தாக வாய்விட்டுப் படித்தார்: "சௌ...ப...ர்...ணி...கா!"

ஸ்ரீகுமாருக்கு ஆச்சரியத்தில் தொண்டை அடைத்தது.

லாபரெட்டரியிலிருந்த எலும்புக்கூடு முதலில் சொன்ன அதே பெயர்!

'அப்படியென்றால் ஸ்ரீதேவிக் குட்டியின் உடலில் புகுந்து கொண்ட ஆவி இந்த சௌபர்ணிகாதானா...?'

"உங்களைப் பார்த்து இந்தச் சிலை அசைந்திருந்தால், நிச்சயம் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது" என்றார் கிருஷ்ணக் குறுப்பு.

பிரபாகரனும், குமாரும் பிரமை பிடித்தவர்கள்போல் கிருஷ்ணக் குறுப்பையும், அந்தச் சிலையையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"போகலாம் வாங்க"

குறுப்பு மௌனத்தைக் கலைத்து, மலையை விட்டு இறங்கத் தொடங்கினர். பிரபாகரன் அவரைப்பின் தொடர்ந்தான்.

ஸ்ரீகுமார் கொஞ்ச நேரம் அங்கேயே நின்றார். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சை உதிர்த்துவிட்டுத் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

பிரபாகரனும், குறுப்பும் ஏதையோ பேசியபடி மலையிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தனர். ஸ்ரீகுமார் புறப்படத் தொடங்கியபோது உள்ளுணர்வு ஏதோ சொல்ல, சடக்கென்று கோயில் வாசலைத் திரும்பிப்பார்த்தார்.

அங்கே கருவறை வாசலில் ஸ்ரீதேவிக் குட்டி இவரை கண்ணிமைக்காமல் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

# 8

கருவறை வாசலில் ஸ்ரீதேவிக் குட்டியைப் பார்த்து ஸ்ரீகுமார் அதிர்ந்த அதே நேரம் அவர் வேலை செய்யும் கல்லூரியில் மற்றொரு சம்பவம் நடந்தது.

ஸ்ரீகுமாருக்கு பதிலாகப் பாடம் நடத்த கோபிநாதன் என்ற ஆசிரியர் கிளாஸ் ரூமில் நுழைந்தார்.

அன்றைய பாடம், மனித உடம்பிலுள்ள எலும்புகளைப் பற்றியதாக இருந்தது.

''யாராவது ஒருத்தர் என்கூட வாங்க. லேப்ல இருக்கிற எலும்புக்கூட்டை எடுத்துட்டு வரலாம்'' என்றார் கோபிநாதன்.

பிரதீப் என்ற மாணவன் கோபிநாதனுடன் வந்தான். இருவரும் லேபுக்குச் சென்றனர்.

அவர்கள் எலும்புக்கூட்டை எடுப்பதற்காக உள்ளே நுழைந்தனர். கண்ணாடிப் பெட்டியைப் பார்த்தார் கோபி. அது காலியாக இருந்தது.

''எலும்புக்கூட்டைக் காணோமே!'' அவர்கள் லாபரெட்டரியில் அங்கும் இங்கும் தேடினர்.

''ஒருவேளை வேற யாராவது அவங்க கிளாஸ் ரூமுக்கு எடுத்துட்டுப் போயிருக்காங்களோ...?'' தனக்குத்தானே பேசிக் கொண்டார் கோபிநாதன்.

அந்த நேரம் அட்டெண்டர் பாஸ்கரன் அந்தப் பக்கமாக வந்தான். அவனிடம் கேட்டார் கோபி.

''ஒருவேளை ஸ்ரீகுமார் சார் எங்கேயாவது எடுத்து வச்சிருக்காரோ, என்னவோ?'' - சொல்லிவிட்டு பாஸ்கரனும் அவர்களோடு சேர்ந்து தேடத்தொடங்கினான். ஸ்ரீகுமார் வழக்கமாகப் படுக்கும் கட்டிலின்கீழே கூட பார்த்தார்கள். ஆனால், எலும்புக்கூடு எங்குமே இல்லை.



''சார், இங்க இருக்குது எலும்புக்கூடு!'' - திடீரென்று பிரதீப்பின் குரல் கேட்டது.

உடனே கோபிநாதனும், பாஸ்கரனும் குரல் வந்த பகுதிக்கு விரைந்தனர்.

''இதோ பாருங்க சார்! எலும்புக்கூடு இந்தப் பைக்குள்ளே கிடக்குது!'' -பிரதீப் ஒரு கோணிப்பையைக் காட்டினான்.

''எதுக்காக இப்படிக் கட்டி வெச்சிருக்காங்க?'' என்று கேட்ட கோபிநாதன் கோணியை வாங்கி வாய்ப் பகுதியைப் பிரித்து எலும்புக்கூட்டை வெளியே எடுத்தார்.

''அட! மண்டையோட்டையே காணோமே?'' கோபிநாதன் ஆச்சரியப்பட்டார்.

மதியம் தாண்டுவதற்குள், எலும்புக்கூட்டின் மண்டையோடு காணாமல் போன செய்தி கல்லூரி முழுவதும் பரவியது.

அன்றைய மாலைப் பத்திரிகை ஒன்றிலும் இந்தச் செய்தி சிறியதாக இடம் பெற்றிருந்தது. 'கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்த மண்டையோடு மாயம்! கல்லூரி லாபரெட்டரியில் பரபரப்பு!'

அதே நேரம் நகரின் மற்றொரு பகுதியிலிருந்த கல்லூரியின் லாபரெட்டரியிலும் ஏறத்தாழ இதேபோல ஒரு சம்பவம் அரங்கேறிக் கொண்டிருந்தது. (இந்தக் கல்லூரிக்குத்தான் சௌபர்ணிகாவோடு நள்ளிரவில் வந்தார் ஸ்ரீகுமார்.)

அங்கேயொரு லேச்சரர் எலும்புக்கூட்டைத் தேடியபோது வெறும் மண்டையோடு மட்டுமே இருந்தது.

செய்தியைக் கேள்விப்பட்ட பிரின்ஸிபால், வாட்ச்மேனை வரவழைத்து விசாரித்தார்.

'தனக்குத் தெரியாமல் யாரும் எலும்புக்கூட்டை வெளியே எடுத்துச்செல்ல வாய்ப்பேயில்லை' என்று அந்த வாட்ச்மேன் சத்தியம் செய்தார்.

''ஆச்சரியமாத்தான் இருக்கு. அதை யாருய்யா இவ்வளவு கெட்டிக்காரத்தனமா கடத்திட்டுப் போயிருப்பாங்க?'' பிரின்ஸிபால் சந்தேகம் தீராமல் கேட்டார்.

அப்போது மாணவர் ஒருவர் மாலைப் பத்திரிகையுடன் பிரின்ஸிபாலின் அறைக்குள் நுழைந்தார்.

பேப்பர் செய்தியைப் பார்த்த பிரின்ஸிபால், ''அந்த காலேஜ்ல இருக்கிற எலும்புக்கூட்டில் மண்டையோடு மட்டும் காணோமாம். நம்ம கிட்ட வெறும் மண்டையோடுதான் இருக்குது. எதுக்கும் நாம ஒருதடவை அங்கே போய் செக் பண்ணிட்டு வரலாமா?'' என்றார்.

உடனே ஜுவாலஜி லெக்சரர் ஜான் சக்காரியாவை அழைத்து வரச் சொன்னார்.

பிரின்ஸிபால் சொல்வதைக் கேட்ட ஜான், சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு பேசினார்.

''அந்த எலும்புக்கூட்டைப் பார்த்தா நம்முடையது தானான்னு எனக்கு அடையாளம் தெரிஞ்சுடும்.''

''அதை எப்படிக் கண்டுபிடிப்பீங்க?'' என்றார் பிரின்ஸிபால்.

''நம்ம லேப்ல வெச்சிருந்த எலும்புக்கூட்டோட வலது கால் எலும்பு. லேசா விரிசல் விட்டிருக்கும். அதை வைச்சு சுலபமா அடையாளம் கண்டுபிடிக்கலாம்.''

''அப்படின்னா நீங்களே ஒரு நடை பார்த்துட்டு வந்துடுங்களேன்'' பிரின்ஸிபால் ஆர்வத்தோடு கூறினார்.

ஜான் சக்காரியா உடனே தனது ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு ஸ்ரீகுமார் பணிபுரியும் காலேஜை நோக்கிப் புறப்பட்டார்.

அந்தக் கல்லூரி முதல்வரிடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, வந்த விஷயத்தைத் தெரியப்படுத்தினார்.

அவர் ஜான் சர்காரியாவை லேபுக்கு அழைத்துச் சென்று தலையில்லாத எலும்புக் கூட்டைக் காட்டினார்.



ஜான் சர்க்காரியா, தன்னுடைய காலேஜிலிருந்த மண்டையோட்டைக் கையோடு கொண்டு வந்திருந்தார்.

முதலில் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த எலும்புக் கூட்டின் கால் பகுதியைப் பரிசோதித்தார். அதில் எந்த விதமான விரிசலும் இல்லை.

''சார், இது எங்க காலேஜில் இருந்து காணாமல் போன எலும்புக்கூடு இல்லை சார். ஆனால், எனக்கு ஒரு சந்தேகம்...'' என்றார் ஜான்.

''என்ன சந்தேகம், சொல்லுங்க!'' பிரின்ஸிபால் கேட்டார்.

''சார்! எங்ககிட்டே இருக்கிற மண்டையோடு ஆணினுடையது. உங்ககிட்ட இருக்கிற எலும்புக்கூடும் ஆணினுடையது தான் ரெண்டும் ஒரே ஆளாத்தான் இருக்கணும்னு தோணுது!'' என்று கூறிய சக்காரியா தன்னிடமிருந்த மண்டையோட்டை அந்த எலும்புக்கூட்டில் வைத்துப் பொருத்திப் பார்த்தார்.

மண்டையோட்டின் இடதுபுறம் ஒரு சிறிய விரிசல் இருந்தது. ஏற்கெனவே அங்கிருந்த எலும்புக்கூட்டின் தோள்பட்டை எலும்பிலும் அதே போன்ற விரிசல் இருந்தது. அந்த இரண்டும் ஒன்றோடொன்று பொருந்திப் போகிற மாதிரி பார்வைக்குத் தெரிந்தது. ''எனக்கொரு சந்தேகம். சரிதானான்னு டெஸ்ட் பண்ணிப் பார்க்கணும் சார்!'' என்றார் ஜான்.

''அதை எப்படி சோதிச்சுப் பார்க்கிறது?'' பிரின்ஸிபால் கேட்டார்.

''ஃபாரன்ஸிக் ஆளுங்க கண்டுபிடிச்சுச் சொல்லுவாங்க; அங்க என்னோட நண்பர் ஒருத்தர் இருக்கார். முரளின்னு பேர். அவரைக் கூப்பிட்டுக் கேட்டா உண்மை தெரிஞ்சுடும். கூட்டிட்டு வரலாமா?'' ஜான் கேட்டார்.

'எதுக்கு சார் நாம இந்த மாதிரி தலைவலியெல்லாம் இழுத்துப் போட்டுக்கணும்? பத்திரிகைக்காரங்களுக்குத்

தெரிஞ்சா பரபரப்பா எழுதிடுவாங்க' பிரின்ஸிபாலுக்கு ஜானின் ஐடியாவில் அவ்வளவாக ஆர்வமில்லை.

''நீங்க குழப்பிக்காதீங்க, சார். நான் சொன்ன கோணத்துல யோசிச்சுப் பாருங்க. உங்க காலேஜ் லேப்ல இருந்து ஒரு மண்டையோடு காணாமப் போகுது. அதே நேரம் எங்க காலேஜில எலும்புக் கூட்டோட மண்டையோட்டைத் தவிர மத்ததெல்லாம் காணாமப் போகுது. காணாமல் போன பகுதிகள் என்ன ஆச்சுன்னு யாருக்கும் தெரியலை. அதைவிட ஆச்சரியம் மிஞ்சியிருக்கிற ரெண்டையும் ஒண்ணு சேர்த்தா, பொருந்திப் போகிறது! இந்தச் சம்பவம், ஏதோ திகில் படத்துல வர்ற மாதிரி இருக்குது. யோசிச்சுப் பார்த்தா விபரீதமா ஏதோ நடக்கப் போறதுன்னு தோணுது. அந்த விபரீதத்தோட ஆரம்பம்தான் இந்தச் சம்பவம்னு என் உள்ளுணர்வு சொல்லுது'' -ஜான் சக்காரியா பிரமிப்பு மாறாமல் கூறினார்.

பிரின்ஸிபால் குழம்பினார்.

''இந்தப் பரிசோதனை அவசியம்னா உங்க விருப்பப் படியே செய்யுங்க!'' என்றார், அரைமனத்துடன்.

## ௯

எலும்புக்கூடு பற்றி ஆராய டாக்டர் முரளி வந்து சேர்ந்தார்.

அந்த எலும்புக்கூடும், மண்டையோடும் ஒரே ஆணினுடையதுதான் என்கிற முடிவுக்கு அவர் வந்தார்.

இந்தச் செய்தியும் அன்றைய மாலைப் பத்திரிகையில் வெளிவந்தது.

பலருடைய மனதிலும் தோன்றிய கேள்வி ஒன்றுதான்.

'ஒரு கல்லூரியிலிருந்த எலும்புக்கூட்டின் மண்டையோடும், மற்றொரு கல்லூரியிலிருந்த எலும்புக்கூட்டின் உடல் பாகங்களும் எங்கே போயின? எப்படி மறைந்தன?'



பிரின்ஸிபால் மாத்யூ ஆபிரகாம் இதைப் பற்றித்தான் யோசித்தார். கடைசியில், ஸ்ரீகுமார் வந்தபிறகு விசாரித்துக் கொள்ளலாம் என்று முடிவு கட்டி, அப்போதைக்கு அமைதியடைந்தார்.

அதே நேரம், ஏற்கெனவே இரண்டு நாள் விடுமுறை விண்ணப்பித்திருந்த ஸ்ரீகுமார், மேற்கொண்டு ஒரு வாரம் விடுமுறை கோரி கல்லூரிக்கு ஒரு கடிதம் எழுதினார்.

கோயிலிலிருந்து திரும்பும்போது அங்கு ஸ்ரீதேவிக் குட்டியைப் பார்த்த சம்பவம், அவரது மனத்திலிருந்து மறையாமலேயே இருந்தது.

அதைப் பற்றி அவர் வேறு யாரிடமும் மூச்சுவிடவில்லை. மறுபடியும் பிரபாகரனும் ஸ்ரீகுமாரும், ஜோதிடர் கிருஷ்ணக் குறுப்பைச் சந்திக்கச்சென்றனர்.

''எனக்குத் தெரிய வேண்டியதெல்லாம் ஒரேயொரு விஷயம்தான். எதற்காக ஸ்ரீதேவிக்குட்டியின் உடம்பில் சௌபர்ணிகா என்ற மோகினி ஆவேசித்தாள்?'' என்று கேட்டார் ஸ்ரீகுமார்.

''அதற்கான காரணத்தைத்தான் நான் ஏற்கெனவே உங்களிடம் சொல்லிவிட்டேனே; இந்தச் சம்பவத்துக்கு முன்பு என்னென்ன நடந்திருக்கிறதோ யாருக்குத் தெரியும்?'' என்றார் குறுப்பு.

''என்னோட மாமா சந்துநாயர்தான் இந்தச் சம்பவங்களுக்குப் பின்புலமா இருந்திருக்கிறார்னு, குஞ்ஞுராமன் சொன்னார். அந்த நிமிஷத்துல இருந்து குமாரோட மனம் இதைப்பத்தியே நினைச்சு வருத்தப்படுறதாத்தோணுது. பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்துக்கும், ஸ்ரீகுமாருக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. அப்புறம் எதுக்காக இதைப்பத்தியெல்லாம் நீ கவலைப்படணும்?'' என்று படபடப்பாகப் பேசினான் பிரபாகரன்.

''நான் நியாயத்துக்காகப் போராட நினைக்கிறேன் பிரபாகரா... உங்க தாய்மாமா இதுல சம்பந்தப்பட்டிருக்கிறதால உனக்கு ஏதாவது பிராப்ளமா?'' என்றார் குமார்.

'' நல்லா கேட்ட போ. எனக்கும் எங்க மாமாவுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது.'' என்றான் பிரபாகரன்.

''அப்ப ரொம்பவும் நல்லதாப் போச்சு. நான் உங்க மாமாகூட போராடுறதுன்னு தீர்மானிச்சுட்டேன்'' என்று உறுதியான குரலில் சொன்னார் ஸ்ரீகுமார்.

பிரபாகரன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான்! அவனது முகத்தில் பலவேறு வித உணர்வுகள் மின்னி மறைந்தது தெளிவாகத் தெரிந்தது. பிறகு ஸ்ரீகுமாரைப் பார்த்து, ''நான் கேக்கறேன்னு தப்பா நினைச்சுக்காத. எங்க மாமா எளேயிடத்து மனையில காரியஸ்தரா இருந்தார்ங்கிறது உண்மைதான். ஆனால், அவர்தான் அந்த வீட்டுத் தம்புராட்டியையும், ஸ்ரீதேவிக் குட்டியையும் கொலை பண்ணியிருப்பாங்கிறதை என்னால நம்ம முடியல. சரி, அப்படியே இருந்தாலும் அவரைக் குற்றவாளிக் கூண்டுல நிறுத்தறதுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கா? தயவு செஞ்சு எங்க மாமாவுக்காக நான் பரிஞ்சு பேசுறதா நினைக்கக்கூடாது. என்னோட சந்தேகம்தான் இது!'' என்றான் பிரபாகரன்.

கிருஷ்ணக் குறுப்பும் அப்போது அதைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருந்தார்.

தாயும், மகளும் இறந்துபோய் மூன்று வருடங்களுக்கு மேல் ஆகின்றன. இதுவரை யாரும் இப்படிப்பட்ட சந்தேகத்தை எழுப்பியதாகத் தெரியவில்லை குஞ்ஞுராமனைத் தவிர.

அப்படி ஏதாவது சந்தேகம் ஊரார் மனத்தில் ஏற்பட்டிருந்தால், இதுவரை அதற்காக எந்த முயற்சியுமா எடுக்காமல் இருந்திருப்பார்கள்? இவ்வளவு நீண்ட இடை



வெளிக்குப் பிறகு பழசைக்கிளறுவதால் அதனால் யாருக்கு என்ன லாபம்?

ஸ்ரீகுமாருக்கு அந்த வீட்டாருடன் எந்த விதமான தொடர்பும் இல்லை. பிறகு ஏன் இப்படியொரு முயற்சியில் ஈடுபட வேண்டும்... என்றெல்லாம் குறுப்பின் மனம் கணக்குப் போட்டது.

பிறகு பிரபாகரனைப் பார்த்து, ''நீ சொல்றது ஒரு வகையில் நியாயம்தான். ஆனா, தப்பித்தவறி உங்க மாமா குற்றவாளியா இருந்தா... உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செஞ்ச ஒரு துரோகியை விட்டு வைக்கிறதும் நல்லதில்லை'' என்றார் கிருஷ்ணக் குறுப்பு.

''நான்தான் ஏற்கெனவே சொன்னேனே! சட்டப்படி அவரைக் குற்றவாளிக்கூண்டுல நிறுத்தறதுக்கு ஆதாரம் ஏதாவது இருக்கா? அப்படி ஏதாவது இருந்தா நானும் உங்களோட ஒத்துழைக்கத் தயார்!'' என்றான் பிரபாகரன்.

அங்கே கொஞ்ச நேரம் மௌனம் தவழ்ந்தது. பிறகு, வேறு சில விவகாரங்களைப் பற்றிப் பேசிவிட்டு குறுப்பு அங்கிருந்து கிளம்பிப் போனார்.

பிரபாகரனும், ஸ்ரீகுமாரும் கிருஷ்ணக் குறுப்பிடம் போனதும், அவர்கள் கோயிலைப் பார்வையிட்டதும், சந்து நாயரின் கவனத் துக்கு வரவே செய்தன.

முதலில் அதை ஒரு பொருட்டாகவே அவர் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், போகப்போக அவருக்குள் சந்தேகம் தலையை உயர்த்தியது.

கிருஷ்ணக் குறுப்பு ஒரு மாந்திரீகர் என்பது சந்து நாயகருக்கும் தெரியும்.

சஞ்சலமடைந்த சந்துநாயர், அன்று மாலையே தன் ரகசியங்கள் முழுவதும் தெரிந்த சேக்குட்டி நாயரை வர வழைத்தார்.

சேக்குட்டி நாயர் ஊருக்குள் செல்வாக்கு நிறைந்தவர்.

போலிப் பத்திரங்கள் தயாரிப்பது, ஆள்மாறாட்டம் செய்வது போன்ற கிரிமினல் விஷயங்களில் தேர்ந்தவர்.

''ஒரு முக்கியமான விஷயம். அதனாலதான் உங்கள உடனே வரச்சொன்னேன்'' என்றார் சந்து நாயர்.

சேக்குட்டி நாயர், பார்வையாலேயே என்ன விஷயம் என்றார்.

''எளேயிடத்துச் சொத்துக்கள் இப்பவும் நம்ம கிட்டத்தான் இருக்கு... ஆனா, முறைப்படி பத்திரங்களோ, தஸ்தாவேஜுகளோ கிடையாது. அம்மாவும் பொண்ணும் செத்துப் போனதால எல்லாமே அப்படியப்பிடியே கெடக்குது. அது நம்ம கையவிட்டுப் போகாம இருக்கணும்னா உடனடியாக ஒரு வழி கண்டுபிடிச்சே தீரணும்!'' என்றார் சந்து நாயர்.

ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு மறுபடியும் தொடர்ந்தார் சந்து நாயர், ''இன்னொரு முக்கியமான விஷயம். செறுவள்ளி மனையைச் சேர்ந்த சின்னத்தம்புரான் வந்திருக்கிறார். காலேஜ்ல லெக்சரரா இருக்கிறாரே அவர்தான். எளேயிடத்துக் குடும்பத்தோட அவருக்கும் ஒரு தொடர்பு இருக்குது. ஆனா, அந்த விஷயம் அவருக்குத் தெரிஞ்சிருக்காது. அதை ஊருக்குள்ள எவனாவது சொல்லாம இருக்கமாட்டான். அவரோட தாத்தா ஒருத்தர் அந்த வீட்டுல பொண்ணு எடுத்தார். அந்த முறையில அவருக்கு ஒரு பையனும் பிறந்தான். அவன் பாலக்காட்டுல இருக்கிறான். இது வரைக்கும் அங்கேருந்து யாரும் வரலை. வந்திருக்கிற தம்புரானுக்கு அதெல்லாம் தெரிய வாய்ப்பு இல்லைதான். இருந்தாலும் நம்ம பாதுகாப்புக்கு எதை யாவது செய்யணுமே!'' சந்து நாயர் விளக்கினார்.

''விஷயம் ரொம்பவும் சுலபமாச்சே! இறந்துபோன சாவித்திரி அந்தர்ஜனமும் (வீட்டைவிட்டு வெளியேறாத



35547

நம்பூதிரிப் பெண்கள்) மகள் ஸ்ரீதேவிக்குட்டியும் சேர்ந்து சொத்துக்களையும் உங்களுக்கு ஏற்கெனவே எழுதிக்கொடுத்துட்டதா ஒரு பத்திரம் தயார் பண்ணிடலாம். என்ன சொல்றீங்க?'' என்றார் சேக்குட்டி நாயர்.

''இந்த மாதிரி ஏதாவது செய்யத்தான் உங்களைக் கூப்பிட்டேன். என்ன தேவையோ பண்ணிடுங்க. சாட்சிகள் வேணும். அதுவும் அந்தக் காலத்து மனுஷங்களா இருக்கணும். அப்புறம் பழைய பத்திரம். அதெல்லாம் உங்கிட்டயே இருக்கும். பார்த்துக்கங்க!'' பேசியபடி உள்ளே சென்ற சந்து நாயர் கையில் ஒரு நோட்டுக் கட்டோடு திரும்பி வந்தார்.

அவர் கையில் ஐயாயிரம் ரூபாய் இருந்தது. அதை சேக்குட்டியிடம் கொடுத்தார். ரூபாயைப் பெற்றுக் கொண்டு சேக்குட்டி விடுவிடுவென்று அங்கிருந்து நடையைக் கட்டினார்.

மூன்று வருடங்களுக்கு முன்னால் சொத்துக்கள் அனைத்தும் சந்து நாயருக்கு கிரயம் செய்து விட்டதாக அன்றிரவே ஒரு பத்திரத்தைத் தயார் செய்தார் சேக்குட்டி நாயர். அந்தப் பத்திரத்தில் தம்புராட்டி சாவித்ரி அந்தர்ஜனமும், ஸ்ரீதேவிக்குட்டியும் கையெழுத்திட்டதாக, ஃபோர்ஜரி செய்தார். அதேபோல் சாட்சிகள் கையெழுத்தையும் அவரே போலியாகப் போட்டார்.

மறுநாள் காலையில் சேக்குட்டி, பத்திரத்துடன் சந்துநாயரின் வீட்டுக்கு வந்தார்.

''இந்தாங்க நீங்க கேட்ட பத்திரம். இனிமேல் எதுக்கும் பயப்பட வேண்டாம்!'' என்ற சேக்குட்டி, பழையகால உறை ஒன்றை சந்து நாயரிடம் கொடுத்தார்.

''எதுக்கும் ஒருதடவை நீங்க படிச்சுப் பார்த்துடறது நல்லது'' என்றார் அவர்.

''கேசவா... இங்க வா!'' சந்து நாயர் தனது மகனை அழைத்தார்.

கேசவன் குட்டி போலீஸ்காரன். ஒரு சில மாதங்களுக்கு முன்னால் கற்பழிப்பு வழக்கு ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டு, பதவி நீக்கத்தில் இருந்தான்.

கேசவன் குட்டி வெளியே வந்தான்.

''இதை ஒரு தடவை படிச்சுப்பாரு'' சந்து நாயர் உறையை மகனிடம் கொடுத்தார்.

கேசவன் குட்டி உறையைப் பிரித்து, அதற்குள் இருந்த பத்திரத்தை வெளியே எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

அவன் படிக்கத் தொடங்கிய சில கணங்களில், பத்திரத்தின் கீழ்ப்புறத்திலிருந்து ஒரு கருகல் வாடை எழுந்தது. தொடர்ந்து சன்னமான புகை மேலெழும்பத் தொடங்கியது.

## 10

தான் படித்துக்கொண்டிருக்கும் பத்திரம் எரிவதைப் பார்த்ததும் கேசவன் குட்டி, அந்தத் தாளை பதற்றத்துடன் தூக்கி எறிந்தான்.

நெருப்பை அணைக்க முயற்சித்த போது, அது மேலும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. விரைவிலேயே பத்திரம் முழுவதும் எரிந்து சாம்பலாகிப் போனது.

சட்டென்று வீசிய காற்றில் அந்தச் சாம்பல் துகள்கள் பறந்தன.

யாரோ வேண்டுமென்றே பற்றவைத்து, எரித்துச் சாம்பலாக்கிப் பிறகு ஊதிப் பறக்க விட்டது போலிருந்தது அந்தக் காட்சி.

''என்னங்க இதெல்லாம்?'' சந்துநாயர் அதிர்ச்சியுடன் சேக்குட்டியிடம் கேட்டார்.



சேக்குட்டி நாயருக்கு எதுவும் பிடிபடவில்லை. பறக்கும் சாம்பல் துகள்களையே பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய வாழ்நாளில் இப்படியொரு காட்சியை அவர் பார்த்ததில்லை.

''இது யோசிக்க வேண்டிய விஷயம்தான். உடனடியாக மாற்றுவழி காணவேண்டும்'' என்றார் சேக்குட்டி.

''மாற்றுவழியென்று மொட்டையாகச் சொன்னால் எப்படி? விவரமாகச் சொல்லுங்கள்...'' சந்துநாயர் படபடத்தார்.

''இப்போது இங்கு நடந்தது சாதாரண விஷயம் அல்ல. திடீரென்று பத்தரம் எரிந்து சாம்பலாகிறது! இதை அலட்சியப் படுத்தக்கூடாது... புரிகிறதா?'' என்றார் சேக்குட்டி,

''ஆமாம். நிஜம்தான். அப்படீன்னா நம்ம கிருஷ்ணக் குறூப்பை வரவழைக்கலாமா?'' என்றார் சந்துநாயர் ஆர்வமாக.

''வேண்டாம்... அவரைக் கூப்பிட வேண்டாம்!''

''ஏன்? என்ன விஷயம்னாவது தெரிஞ்சுக்கலாமே?''

''அவரைக் கூப்பிட வேண்டாம்னு நான் சொல்றதுக்குக் காரணம் -இருக்கு. உங்க மருமகன் பிரபாகரனும், செறுவள்ளி மனையைச் சேர்ந்த சின்னத் திருமேனி-அதான் பட்டணத்து காலேஜ்ல வேலை செய்யறவரும் அந்த கிருஷ்ணக் குறுப்போட அடிக்கடி கூடிப் பேசறத நான் பார்த்தேன்.''

தனது மருமகன் பிரபாகரனின் பெயரைக் கேட்டதும் சந்துநாயர் தீர்க்கமாக யோசித்தார். பிரபாகரனிடமும், அவனது அம்மாவிடமும்தான் நடந்துகொண்ட முறை அவருக்கு நினைவுக்கு வந்தது.

''அப்படீன்னா வேறு யாரைக் கூப்பிடலாம்?'' கேட்டார் சந்துநாயர்.

சேக்குட்டி யோசனையில் ஆழ்ந்தார்.

அவருக்கு நாகத்தான் பாறையில் வாழும் ஜயந்தன் மந்திரவாதியின் ஞாபகம் வந்தது.

ரத்த சாமுண்டீஸ்வரிதான் அவன் வழிபடும் தெய்வம்.

ருத்ர தேவதையான சாமுண்டீஸ்வரிக்கு அவன் ரகசியமாக நரபலிகூடக் கொடுப்பதுண்டு என்று பேசிக்கொள்வார்கள். பைசாசிகமான மோகினிகளும், பிரேதாத்மாக்களும்தான் அவனது ஏவலாளர்கள், நண்பர்கள்.

சேக்குட்டி நாயர் ஏற்கெனவே அங்கு ஒரு தடவை மலைவாசி ஒருவரது துணையுடன் போயிருக்கிறார். அப்போது அங்கு அவர் பார்த்த காட்சி மிகவும் பயங்கரமானது.

நாகத்தான் பாறையை ஒட்டிய பள்ளத்தாக்கில் மண்டை ஓடுகளும், மனித எலும்புகளும் ஏராளமாகச் சிதறிக் கிடந்தன. சுற்றிலும் துர்வாடை; ஓர் அமானுஷ்யமான பயங்கரம்! எப்படிப்பட்டவர்களும் பயந்து நடுங்கக்கூடிய அந்தக் காட்சி அவ்வப்போது சேக்குட்டி நாயரின் மனதில் எட்டிப் பார்ப்பதுண்டு.

ஜயந்தனால் செய்யமுடியாத காரியங்களே இல்லையென்று அந்த மலைவாசி சொல்லியிருந்தார்.

அந்த மலைவாசி குடியிருக்கும் இடம்கூட சேக்குட்டி நாயருக்குத் தெரியும்.

''என்ன சேக்குட்டி... எதைப்பற்றி யோசிக்கிறீங்க?'' சந்து நாயர் இடைமறித்துக் கேட்டார்.

''இல்லை... கிருஷ்ணக் குறுப்பைவிட கெட்டிக்கார மந்திரவாதிங்க யாராவது இருக்காங்களான்னு யோசிச்சுப் பார்த்தேன். ஒருத்தர் இருக்கார். பேரு ஜயந்தன். ஒரேயொரு தடவை அவரைப் பார்த்தாப் போதும். நம்ம எதிரிங்க தொலைஞ்சு போயிடுவாங்க. நேராப் போய் அவரைப் பார்த்துட்டு வந்துடறேன்'' என்றார் சேக்குட்டி.

''கேசவா! சேக்குட்டிக்கு வழிச்செலவுக்கு ஏதாவது பணம் கொடுத்து அனுப்பு'' என்று மகனைப் பார்த்துச்சொன்னார் சந்துநாயர்.



கேசவன் கொண்டுவந்து தந்த பணத்தை வாங்கிக் கொண்டு சேக்குட்டி அங்கிருந்து புறப்பட்டார்.

ஏறத்தாழ அதே நேரம் ஸ்ரீகுமாரும், பிராபகரனும் கிருஷ்ணக் குறும்பிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''என்னோட லட்சியம் சந்து நாயர்கிட்டேயிருந்து அந்தச் சொத்துக்களை கைப்பற்றணுங்கிறது இல்லை; தவறு செஞ்சகுவாங்க தண்டனை அனுபவிக்கணும். இந்த விஷயத்துக்காக நாம கோர்ட்டுக்கு போகமுடியாது. குற்றச்சாட்டை நிரூபிக்கிறதுக்கு எந்தவிதமான ஆதாரமும் நம்மகிட்ட இல்லை 'அதனால...'' என்றார் ஸ்ரீகுமார்.

''நீங்க சொல்ல வர்றது புரியுது. மந்திரவாதத்தால முயற்சி பண்ணலாம். சரி, ஒருவேளை சொத்துக்களை மீட்கமுடிஞ்சா யார்கிட்டக் குடுக்கிறது?'' என்றார் குறுப்பு.

''நான்தான் சொல்லிட்டேனே! அந்தச் சொத்து எனக்கு ஒரு பொருட்டே கிடையாது. தவறு செஞ்சவங்களுக்குத் தண்டனை குடுக்கணும். அதுக்கு ஏற்பாடு செய்வோம். அதன் மூலம் வர்ற சொத்துக்களை பிரபாகரனுக்கேகூட கொடுத்திடலாம்'' ஸ்ரீகுமார் தெளிவாகச் சொன்னார்.

''அதெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம். நீங்க இப்படியெல்லாம் எதையாவது செய்ய ஆரம்பிச்சா, மாமாவோட கோபம் என் மேலேயும், அம்மா மேலேயும் திரும்பும். லீவு முடிஞ்சு நான் போயிட்டா, அம்மா தனியா வேற இருக்கணும்; அவங்க ரொம்பவும் பாதிக்கப்படுவாங்க.'' பிரபாகரன் கவலைப்பட்டான்.

''முதல்ல இதுக்கு பதில் சொல்லுங்க! நான் என்ன பண்ணணும்னு நினைக்கிறீங்க?'' குறுப்பு கேட்டார்.

செறுவள்ளி மனைக்குள் அமர்ந்தபடி அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். நேரம், இரவு பத்து மணிக்கு மேலாகி இருந்தது.

அன்று அமாவாசை. எங்கும் இருள் பரவியிருந்தது. வராந்தாவில் ஏற்றி வைத்திருந்த வெண்கல விளக்கின் வெளிச்சம் ஏறத்தாழ தெருவாசல்படி வரை பரவியிருந்தது.

வருடக் கணக்கில் ஆள்வாசம் இல்லாமலிருந்ததால் அந்த இல்லத்தின் முற்றப் பகுதியில் நிறையப் புல் மண்டி வளர்ந்திருந்தது.

அந்தக் கும்மிருட்டு ராத்திரியில் சட்டென்று தொலைவிலிருந்து ஏதோ ஒன்று பாய்ந்து வரும் சத்தத்தை அவர்கள் கேட்டனர். தெரு வாசலுக்கு வெளியேயிருந்துதான் அந்தச் சத்தம் வந்தது.

நெருங்கி வந்த சத்தம் துளசிமாடத்தை நெருங்கியதும் அப்படியே நின்று விட்டது.

ஏதோ ஒன்று துளசிமாடத்தை ஒட்டிய தரைப்பகுதியில் விழுந்த சத்தம் கேட்டது.

கிருஷ்ணக் குறுப்பு அந்த இடத்தை நோக்கி விரைந்தார்.

மாடத்தை ஒட்டியிருந்த தரைப்பகுதியில், சன்னமான வெளிச்சத்தில் அது தெரிந்தது.

வளைந்து தலையை உயர்த்தியவாறு நீல நிறத்தில் இருந்தது அது.

உற்றுப் பார்த்தபோது அது ஒரு பாம்பு போலத் தெரிந்தது.

''அந்த விளக்கை இப்படி எடுத்துட்டு வாங்க'' கிருஷ்ணக் குறுப்பு படபடப்போடு கத்தினார்.

பிரபாகரன் லாந்தர் விளக்கைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தான். பின்னால் ஸ்ரீகுமாரும் வந்தார்.

விளக்கு வெளிச்சத்தில் அவர்கள் பார்த்தபோது பாம்பு ஒன்று கருகிச் சாம்பலாகிக் கிடந்தது. அதைப் பார்த்ததும் மூவருடைய நெற்றிகளும் யோசனையில் சுருங்கின. குறுப்பின் முகத்தில் வியர்வை அரும்ப ஆரம்பித்தது.



''இதை யாரோ ஏவிவிட்டிருக்காங்க. சந்துநாயர் ஏதோ எதிர் நடவடிக்கை எடுத்துருக்கற மாதிரி எனக்குப்படுது'' என்றார் கிருஷ்ணக் குறுப்பு.

''அப்படின்னா...?'' - ஸ்ரீகுமார் புரியாமல் கேட்டார்.

''நாம இதுக்குப் பதிலடி கொடுத்தாகணும்!'' கிருஷ்ணக் குறுப்பு யோசனையில் ஆழ்ந்தார்.

''நீங்க சொல்றது எனக்கு விளங்கலை'' ஸ்ரீகுமார் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் கேட்டார்.

''சந்துநாயருக்கு எதிரா நாம என்னமோ செய்யறதா அவருக்குத் தோணியிருக்கலாம். இல்லேன்னா இந்த மாதிரி எல்லாம் நடக்கிறதுக்கு வாய்ப்பே கிடையாது. அப்புறம் நீங்க இன்னொரு விஷயத்தையும் புரிஞ்சுக்கணும்... நான் ரொம்பப் பெரிய மந்திரவாதியெல்லாம் கிடையாது. ஜோஸியம் தெரியும். ஓரளவுக்கு இந்த மாதிரி நடவடிக்கைகளை யார் செய்யறாங்கன்னு தெரிஞ்சுக்க ஹோமம் பண்ணுவேன்'' கிருஷ்ணக் குறுப்பு இருளை வெறித்தபடி பேசினார்.

''அப்படீன்னா இதுக்குப் பின்னால யார் இருக்காங்கன்னு பார்த்துடலாமா?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''பார்த்துட்டா போகுது. என்கூடக் கிளம்புங்க!''

''இந்த நேரத்துலயா?''

'' இந்த மாதிரி விஷயங்களுக்கு ராத்திரி பகல்ங்கிற வித்தியாசமெல்லாம் கிடையாது. இன்னிக்கு அமாவாசை. ரொம்பவும் பொருத்தமான நாளும்கூட!''

குறுப்பின் யோசனையை அவர்கள் ஒப்புக்கொண்டனர். மூவரும் உடனே அங்கிருந்து புறப்பட்டனர்.

குறுப்பு தனது வீட்டுக்கு வந்தவுடனேயே ஹோமம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அந்த நடு ராத்திரியில் சின்னச் சின்னச் சத்தமும் 'ஹோ' வென்று கேட்டது.

ஹோமம் ஆரம்பிக்கப்பட்டது, ஹோமகுண்டத்திலிருந்து புகைச்சுருள்கள் உயர்ந்தன. சற்று நேரத்துக்குள் நெருப்பு, கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

அதன் முன்னால் அமர்ந்தபடி குறுப்பு கண்களை மூடி, மந்திரங்களை உருவேற்றிக்கொண்டிருந்தார்.

அப்போது -

ஹோம குண்டத்திலிருந்து உயர்ந்து வந்த புகைச்சுருள் மற்றும் அக்னி ஜுவாலைகளுக்கு மத்தியில் ஒரு முகம் தெளிவாகத் தெரிந்தது.

ஸ்ரீகுமாரும், பிரபாகரனும் அதை வியப்போடு கவனித்தனர்.

கிட்டத்தட்ட ஒரு குதிரையைப் போலிருந்தது. அந்த பைசாசிகமான முகம். கிருஷ்ணக் குறுப்பு மெதுவாகக் கண்களைத் திறந்தார்.

அவரது நாக்கு அசைந்து ஒரு பெயரை உச்சரித்தது: ''ஜயந்தன்!''

குறுப்பு, அப்படிச் சொன்னதும் சட்டென்று அந்த முகம் நெருப்பு குண்டத்திலிருந்து மறைந்தது.

''அந்த முகத்தைக் கவனித்தீர்களா?'' கிருஷ்ண குறுப்பு கேட்டார்.

''பார்த்தோம்... இந்த அளவு பயங்கரமான ஒரு முகத்தை இதுவரைக்கும் எங்கேயுமே நாங்க பார்த்ததில்லை.''

''உண்மைதான். நீங்க பார்த்திருக்க முடியாது. இவன் பேரு ஜயந்தன். நாகத்தான் பாறைங்கிற பகுதியில் மலை அடிவாரத்துல குடியிருக்கிற பெரிய மந்திரவாதி, அவனை எதிர்க்கறதுங்கறது அசாத்தியமான காரியம்'' கிருஷ்ணக் குறுப்பு ஏமாற்றமும், அச்சமும் நிறைந்த குரலில் பேசினார்.

''அப்படின்னா இப்ப நாம என்னதான் செய்யறது?'' என்றான் பிரபாகரன்.

அவன் குழம்பிப் போயிருப்பது அந்தக் குரலில் தெரிந்தது.

## 11

'ஜயந்தனை' எதிர்ப்பது கஷ்டம் என்று கிருஷ்ணக் குறுப்பு சொன்னது பிரபாகரனை ரொம்பவே அதிர வைத்தது.

கிருஷ்ணக் குறுப்பு சற்று நேரம் தீவிரமாக யோசித்தபடி மௌனமாக உட்கார்ந்தார்.

பிறகு மெதுவான குரலில், ''துர்மந்திரவாதம் செய்வதில் ஜயந்தன் பெரிய கில்லாடி. அவனைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கேன். உண்மையைச் சொல்றதானா, அவங்கிட்ட மோதுற அளவுக்கு எங்கிட்ட எந்தவிதமான மந்திர சக்தியும் கிடையாது'' என்றார் விரக்தியோடு.

''ரொம்பவும் சிக்கலான நிலைமை. என்ன செய்யறதுன்னே ஒண்ணும் புரியலை!'' என்றார் ஸ்ரீகுமார் குழப்பத்தோடு.

யோசனையில் ஆழ்ந்திருந்த கிருஷ்ணக் குறுப்பு சற்று நேரம் கழித்து, ''எனக்குத் தெரிஞ்சு, ஜயந்தனோட மோதற அளவுக்கு நம்ம பக்கத்துல யாரும் இருக்கிறதாத் தெரியலை. வடக்குல (மலபார் பகுதி) என்னோட தாய்மாமா ஒருத்தர் இருக்கிறார். 'கேளு குறுப்'ங்கிறது அவர் பேரு. அவருக்கு வயசு தொண்ணூறு இருக்கும். வேணும்னா அவர்கிட்ட விசாரிச் சுப் பார்க்கிறேன்!''

"அதை உடனடியாகச் செய்யுங்கள்!" பிரபாகரன் பரபரத்தான்.

கிருஷ்ணக் குறுப்பு அன்றிரவே புறப்பட்டார்.

மறுநாள் காலையில் எழுந்து கோயிலுக்குப் போய்விட்டு வந்தார் ஸ்ரீகுமார். வீட்டில் அவருக்கு ஒரு தந்தி காத்திருந்தது.

கல்லூரியிலிருந்து பிரின்ஸிபால் அதைக் கொடுத்திருந்தார்.

'உடனே புறப்பட்டு வரவும்' என்றது தந்தி. ஸ்ரீகுமாருக்கு காலேஜின் லாபரெட்டரி ரூமும், அந்த எலும்புக்கூடும் நினைவுக்கு வந்தன.

'அங்கு விபரீதமாக ஏதாவது நடந்திருக்குமோ?' என்ற பயம் ஒருகணம் அவர் மனத்தில் எழுந்தது.

பிரபாகரனிடம் சொல்லிவிட்டு உடனே உடைமாற்றிக் கொண்டு புறப்பட்டார்.

பஸ்ஸில் பயணம் செய்யும்போது அவர் மனம், லாபரெட்டரியிலிருந்த எலும்புக்கூட்டைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது.

அந்தக் கண்ணாடிப் பெட்டி காலியாகத்தான் இருக்கும் என்பது அவருக்குத் தெரியும்.

'மண்டையோட்டைத் தவிர மீதமுள்ள எலும்புகளை ஒரு கோணிப்பையில் போட்டு மூலையில் தள்ளி விட்டிருக்கிறோம்.

யாராவது பாடம் நடத்த எலும்புக்கூட்டைத் தேடி இருப்பார்கள்; காணவில்லை என்பது தெரிந்திருக்கும். என்னென்ன பிரச்சினைகளை அது கிளப்பியிருக்கிறதோ? ஸ்ரீகுமாருக்கு அப்போது வராத கவலையெல்லாம் இப்போது வந்தது.

மதியம் இரண்டு மணிக்கெல்லாம் ஸ்ரீகுமார் கல்லூரியை அடைந்தார்.

நேராக பிரின்ஸிபாலின் அறைக்குச் சென்றார்.

''என்ன சார். ஏதாவது பிரச்சினையா?'' பிரின்ஸிபாலிடம் குரலை இயல்பாக வைத்துக்கொண்டு கேட்டார்.

''நீங்க ஊருக்குப் போகும்போது நம்ம ஸ்டோர் ரூம்ல கண்ணாடிப் பெட்டிக்குள்ள எலும்புக்கூடு பத்திரமாத்தானே இருந்தது?'' - ஸ்ரீகுமாரைக் கூர்ந்து பார்த்தபடி கேட்டார் பிரின்ஸிபால்.

அந்தக் கேள்வியை எதிர்பார்த்திருந்ததால் ஸ்ரீகுமார் வியப்போ, பதற்றமோ அடையவில்லை.

''சார், அந்த எலும்புக்கூட்டை ஒரு கோணிப்பையில் போட்டு ஓரமாக வைச்சிருக்கேன், அதைச் சுத்தம் பண்ணனும்



கிறதுக்காகத்தான் எடுத்தேன். ஏற்கெனவே ஒரு தடவை அப்படி க்ளீன் பண்ணியிருக்கேன்.

''பிரச்சினை அது இல்லை மிஸ்டர் ஸ்ரீகுமார்! நீங்க கோணிப்பையில் போட்டுக் கட்டி வச்சிருந்த எலும்புக்கூடு அப்படியேதான் இருக்கு. ஆனா, அதுல மண்டையோடு மட்டும் இல்லை. நீங்க எலும்புக்கூட்டை கோணிக்குள்ள போடும்போது மண்டையோட்டையும் போட்டீங்களா, இல்லையா?''

ஸ்ரீகுமார் சட்டென்று ஒரு பொய் சொன்னார்.

''மண்டையோட்டையும் சேர்த்துத்தான் கோணிப்பையில் போட்டேன், சார்!''

''ச்சே... மேட்டர் மொத்தமும் இடிக்குதே. இந்த விவகாரம் பத்திரிகைலையும் வந்து தொலைச்சடுச்சு. நாங்க நல்லா தேடிட்டோம். கோணிக்குள்ள மண்டையோடு இல்லை. அதே மாதிரி பக்கத்து காலேஜில இருக்கிற எலும்புக்கூட்டுல மண்டையோட்டைத் தவிர மிச்ச போர்ஷன் எல்லாம் மாயமா மறைஞ்சு போயிருக்கு!''

''சார்! எதுக்கும் நான் இன்னொரு தடவை ஸ்டோர் ரூம்ல தேடிப் பார்க்கட்டுமா?''

''நாங்க ஏற்கெனவே ஸ்டோர் ரூம், லேப் எல்லாத்தையும் சல்லடை போட்டுச் சலிச்சுட்டோம். தேடாத இடமே பாக்கியில்லை.''

''சார் கொஞ்சம் பொறுமையா இருங்க. நான் எதுக்கும் ஒரு தடவை தேடிப் பார்த்துடறேன். பிரின்ஸிபாலின் மறு மொழிக்குக் காத்திராமல் அறையை விட்டு வெளியேறினார் ஸ்ரீகுமார்.

'சே... இந்த விஷயம் பெரிய சிக்கல்ல மாட்டிவிட்டுடுச்சே!' என்று குழம்பியவராகத் தலையைச் சொறிந்தபடி ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தார்.

''இல்லாத மண்டையோட்டை எங்க போய் தேடறது?'' என்று தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டார்.

அவர் அப்படியும், இப்படியுமாக ரூமுக்குள் கண்களை அலையவிட்டபோது, அந்த அறையின் நிசப்தத்தை உறுத்தாமல் ஒரு பெண் குரல் பேசியது; 'அதோ பாருங்கள். அந்த மூலையில் ஒரு மண்டையோடு கிடக்கிறது.''

திடுக்கிட்ட ஸ்ரீகுமார் திரும்பிப் பார்த்தார். அறையில் யாருமில்லை. ஒருவேளை பிரமையாக இருக்குமோ என்று நினைத்தார்.

எதற்கும் அந்த மூலையில் ஒருமுறை தேடிவிடுவது என்ற முடிவுக்கு வந்தவராக, அந்தப் பக்கம் நடந்தார்.

அங்கே உபயோகமில்லாத பல பொருள்கள் குவிந்து கிடந்தன. அந்தக் குப்பைகளைப் புரட்டிக் கையால் துழாவினார்.

அப்போது -

அங்கே நிஜமாகவே மண்டையோடு ஒன்று கிடந்தது!

ஸ்ரீகுமாருக்கு தலை சுற்றியது.

தான் காண்பது கனவா, நனவா என்று புரியாமல் மண்டையோட்டையே வெறித்துப் பார்த்தார்.

அதைக் கையில் எடுத்தார்.

'அப்பாடா... தப்பித்துவிட்டோம்!' என்று தோன்றியது. அந்த மண்டையோட்டில் கம்பி ஒன்றை இணைத்து எலும்புக் கூட்டோடு பொருத்தினார். அதை அங்கேயே வைத்துவிட்டு பிரின்ஸிபாலின் அறைக்கு விரைந்தார்.

''என்ன ஸ்ரீகுமார்? பரபரப்பாக வர்றீங்க? என்ன ஆச்சு?'' என்றார் பிரின்ஸிபால்.

''அந்த அறைக்குள்ளேயேதான் இருந்தது. நான் பத்திரமா எடுத்து வெச்சிருந்தேன் சார்.''

நிம்மதிப் பெருமூச்சுவிட்ட பிரின்ஸிபால் பக்கத்து கல்லூரிக்கு டெலிபோன் செய்தார்.



''எங்க காலேஜ் எலும்புக்கூட்டோட மண்டையோடு, லேபுலதான் இருக்கு. அதை இன்ஃபார்ம் பண்ணத்தான் போன் பண்ணேன்'' என்று சந்தோஷமாய்ச் சொன்னார்.

உடனடியாக மண்டையோடு கிடைத்த தகவலைப் பத்திரிகை அலுவலகத்துக்கும் தெரிவித்தார்.

பிறகு ஸ்ரீகுமார் பக்கம் திரும்பி, ''என்ன ஸ்ரீகுமார்! வேணும்ன்னா லீவை கன்டினியூ பண்ணிக்கங்க'' என்றார் பிரின்ஸிபால்.

''ஆமாம் சார்! அட்லீஸ்ட் இன்னும் ஒரு வாரமாவது லீவு வேணும். இன்னிக்கு இங்கேயே இருந்துட்டு நாளை காலைல புறப்படறேன்'' என்றார்.

அன்று இரவு வழக்கம்போல் லாபரெட்டரி அறையில் தங்கினார்.

இரவு, வெகுநேரம் தூக்கம் வரவில்லை. ஊர் ஞாபகமும், நடந்து கொண்டிருக்கும் வினோதமான சம்பவங்களும் அவர் மனதை சஞ்சலப்படுத்திக்கொண்டிருந்தன. அப்படியே சாய்ந்து கிடந்தார். அவரையும் அறியாமல் கண்கள் மெல்ல அயரத் தொடங்கிய போது...

''ஒரு வழியாத் தப்பிச்சுட்டீங்க! இல்லையா?'' - ஸ்ரீகுமாரின் தலைமாட்டிலிருந்து சன்னமான பெண்குரல் கேட்டது. தூக்கிவாரிப் போட எழுந்து உட்கார்ந்தார் அவர். அங்கே, மங்கலான வெளிச்சத்தில் ஸ்ரீதேவி குட்டி நின்று கொண்டிருந்தாள்.

குமாருக்கு, 'திக்' கென்றது. ''என்ன... நீ... நீ... இங்கே எப்படி?'' ஸ்ரீகுமார் குழறினார்.

''ரொம்ப நேரமா இங்கேயேதான் இருக்கிறேன். நான் சொல்லித்தானே நீங்க மண்டையேட்டைத் தேடி எடுத்தீங்க. வீண் குழப்பம் வேண்டாம்னு நான்தான் ஒரு மண்டையோட்டை

அங்க கொண்டு வந்து வெச்சேன்'' என்றாள் ஸ்ரீ தேவி. அவள் கண்கள் ஏதோ ஒளிப்பிழம்பு போலத் தெரிந்தன.

ஸ்ரீகுமாருக்கு அவள் உருவமா, அருவமா என்று வழக்கம் போல் பிடிபடவில்லை. ஆனால், அவள் இயல்பாகப் பழகுவதால் இப்போது அவருக்கே மெல்ல மெல்ல தைரியம் வர ஆரம்பித்திருந்தது.

''நல்லது செஞ்சிருக்க ஸ்ரீதேவி. இல்லைன்னா என் பிரின்ஸிபால் என்னை ஒருவழி ஆக்கியிருப்பாரு; நான் பெரிய சிக்கல்லேர்ந்து தப்பிச்சுட்டேன். உனக்குத்தான் நன்றி சொல்லணும்'' என்றார் குமார்.

ஸ்ரீதேவி புன்னகைத்தாள். கொஞ்ச நேரம் ஸ்ரீகுமாரையே உற்றுப் பார்த்தாள். பிறகு அழுத்தமான குரலில், ''அதுக்குள்ள நன்றி சொல்லிட்டா எப்படி? இனிமேதான் உங்களுக்குப் பிரச்சினைகளே ஆரம்பிக்கப்போகுது!'' என்றாள்.

## 12

''எனக்கு என்ன பிரச்சனைகள் வரப்போகுது?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''சந்துநாயர் பயங்கரமானவர். எங்களோட மொத்தச் சொத்துக்களையும் அபகரிச்சுட்டார். கடைசியில் என்னையும் எங்க அம்மாவையும் கூண்டோட அழிச்சிட்டார்!'' ஸ்ரீதேவி கூறினாள்.

''எனக்கு ஒரு சந்தேகம்?'' ஸ்ரீகுமார் தலையணையை உயர்த்தி வைத்துக் கட்டிலில் மேலும் சாய்ந்து உட்கார்ந்தார்.

''என்ன சந்தேகம்னாலும் தயங்காமக் கேளுங்க!'' என்றபடி அவள் ஸ்ரீகுமாரின் கால்மாட்டில் அமர்ந்தாள்.

பாலைப்பூவின் (அலரிப்பூ) மணம்சட்டென்று அறையில் பரவியது.



அந்த காலேஜ் காம்பௌண்டுக்குள் எங்குமே பாலை மரம் இல்லை என்பது ஸ்ரீகுமாருக்குத் தெரியும்.

ஸ்ரீதேவியின் நீண்ட தலைமுடி கட்டிலில் இழைந்தன. அதன் மெல்லிய முனைகள் ஸ்ரீகுமாரின் கால் பகுதிகளைத் தடவிக் கொண்டிருந்தன.

''ஆமாம் ஸ்ரீதேவி, உனக்கு சௌபர்ணிகாங்கிற பேர் எப்படி வந்தது?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''நல்ல கேள்வி... அது மற்றொரு கதை. எங்களோட குடும்பக் கோயில்ல இருக்கிற தேவியோட காவல்காரிகளில் ஒருத்தி இந்த சௌபர்ணிகா. இதெல்லாம் ஒரு கற்பனை - ஐதீகம்னுதான் இதுவரைக்கும் நான் நினைச்சிட்டிருந்தேன். இருந்தாலும் தேவியை வணங்கப் போகும்போதெல்லாம் அந்தச் சிலைக்கும் ஒரு பூமாலை போடுறதை வழக்கமா வச்சிருந்தேன். அப்படிப் பட்ட ஒருசில சந்தர்ப்பங்கள்ல அந்தச் சிலை என்கிட்டப் பேசறதாக்கூட எனக்குத் தோணுச்சு. அந்தச் சிலைக்கு என்னை ரொம்பவும் பிடிச்சுப் போயிடுச்சுன்னு தோணுது!''

''அதெல்லாம் வீண் பிரமையா இருக்கலாம்'' ஸ்ரீகுமார் குறுக்கிட்டார்.

''இல்லவே இல்லை... நான் சொன்னது அவ்வளவும் சத்தியம்!'' -அவள் குரல் உறுதியுடன் ஒலித்தது.

''சரி அப்படியேகூட இருந்துட்டுப் போகட்டும். மேற் கொண்டு நான் ஏதாவது உதவ வேண்டியிருக்கா என்ன? ஒரு விஷயத்தை உன்கிட்டச் சொல்லணும்னு நெனைச்சுட்டே இருந்து மறந்துட்டேன். அந்த எலும்புக்கூடு இந்த அளவுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும்னு நான் எதிர்பார்க்கலை.''

''அதுதான் எல்லாம் சரியாயிடுச்சே. நானே அதுக்கான பரிகாரத்தையும் பண்ணிட்டேனே.'' -அவள் சொன்னாள்.

"''புரியலை!''

''நான்தான் வேற ஒரு மண்டையோட்டைக் கொண்டு வந்து வச்சுட்டேனே. அதோட உங்க பிரின்ஸிபாலுக்கு இருந்த சந்தேகமெல்லாம் தீர்ந்து போயிடுச்சே!''

''உண்மைதான். நல்லவேளை செஞ்ச! இல்லேன்னா பிரச்சனை ரொம்பப் பெரிசாப் போயிருக்கும்''

''அப்படியெல்லாம் நீங்க நிம்மதியடையறதுல அர்த்தமே இல்லை.''

''அப்படீன்னா?''

''அந்தச் சந்துநாயர் இப்போ உங்களைத் தொலைச்சுக்கட்டுற முயற்சியில ஈடுபட்டிருக்கார். அப்படிச் செஞ்சுட்டா சொத்துக்களைக் கைப்பற்ற முயற்சி செய்யுற எதிரிகளே அவருக்கு இருக்கமாட்டாங்க இல்லையா? எல்லாமே நிரந்தரமா அவருக்கே சொந்தமாயிடும்!''

''உண்மையாவா சொல்ற? நான் அந்த ஆளுக்கு என்ன கெடுதல் பண்ணினேன்? இதுவரைக்கும் நான் அப்படி எதையும் பண்ணலையே?''

''நீங்க அப்படி நினைக்கிறதா இருந்தா நான் என்ன சொல்ல? நீங்க உயிரோட இருக்கிற வரைக்கும் சொத்து எப்போ நம்ம கையை விட்டுப் போகுமோன்னு ஒவ்வொரு நிமிஷமும் அவர் பயந்துட்டே நாளைக் கடத்தணும். அதைவிட உங்களைத் தொலைக்கிறதுதானே அவருக்கு சுலபம். அதனால, நாம முந்திக்கிட்டா அவரைத் தோல்வியடைய வச்சுடலாம்!''

''நீ சொல்றது உண்மைதான்னு தோணுது. நான் ஊருக்குள்ள காலெடுத்து வச்சதைத் தெரிஞ்சுக்கிட்ட நிமிஷத்துலேர்ந்து அவர் எனக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பிச்சுட்டார். அதுக்கு ஏற்ற மாதிரி பொருத்தமான ஒரு மந்திரவாதியையும் அவர் கண்டுபிடிச்சுட்டார். ஆமாம், நான் எப்படி இந்த விஷயத்துல அவரை எதுத்து நிற்க முடியும்?''

''தைரியமா எதிர்க்க வேண்டியதுதான். மந்திரத்தை மந்திரத்தாலேயே ஜெயிக்கணும்!''



''காலேஜ்ல வேலை செய்யுற ஒரு லெக்சரர் இதையெல்லாம் செஞ்சுட்டிருக்க முடியுமா?''

''இப்படியெல்லாம் யோசிச்சா, அதுக்கு ஒரு முடிவே கிடையாது. இந்தச் சூழ்நிலையில் அவரை எதிர்த்தே ஆகணும். ஒரு வகையில அது என்னோட லட்சியமும்கூட. நான் வெற்றியடையறதுக்காகவாவது எனக்கு நீங்க உதவணும்!''

''நான் நிறைய யோசிக்க வேண்டியிருக்கு!''

''யோசிச்சா மட்டும் போதாது. லீவெடுத்து உடனே ஊருக்குப்போகணும். இதுக்குச் சரியான ஒரு பரிகாரம் செஞ்சே தீரணும்.'' - அவள் வற்புறுத்தினாள்.

''முயற்சி பண்றேன்...''

''அப்ப நான் கிளம்பட்டுமா?'' அவள் கட்டிலிலிருந்து எழுந்தாள்.

''இந்த நேரத்துல எங்கே போற ஸ்ரீ தேவி?''

''இங்கேயிருந்து அவ்வளவு சீக்கிரமா நான் எங்கேயும் போயிடமாட்டேன். உங்களுக்குத் தேவைப்படுற நேரத்துல நான் உங்ககிட்ட இருப்பேன்'' -பேசியவாறே மெதுவாக நடக்கத் தொடங்கியவள் இருட்டில் மறைந்தாள்.

கனவில் ஆழ்ந்திருப்பதைப் போல் ஸ்ரீகுமார் அப்படியே கட்டிலில் படுத்திருந்தார்.

நடக்கிற எதையுமே நம்ப முடியவில்லை. இப்படிப் பட்ட செயல்களும், உருவங்களும் உலகத்தில் இருக்க முடியுமா என்கிற வியப்பு அப்போதும் அவரிடமிருந்து அகலவே இல்லை.

தன்னுடைய இல்லத்தின் வராந்தாவில் உட்கார்ந்திருந்த போது துளசிமாடத்தின் அருகில் எரிந்தவாறே வந்து விழுந்த பாம்பு கருகிச் சாம்பலானது சாதாரணமான சம்பவமல்ல என்பது அவருக்குப் புரிந்தது.

இப்படிப்பட்ட சம்பவங்களை கதைகளில்தான் படித்திருக்கிறோம். அதெல்லாம் உண்மைதான் என்று பறை

சாற்றுவது போல் ஒவ்வாரு சம்பவமும் அடுத்தடுத்து... அந்த அனுபவங்கள் மறக்க முடியாததாகவும் இருக்கின்றன.

உறக்கம் கண்ணிமைகளை நெருங்க மாட்டேன் என்று அடம் பிடித்தது. எவ்வளவோ முயற்சி செய்தும் உறங்கவே முடியவில்லை.

கட்டிலிலிருந்து மெதுவாக எழுந்தவர் லேபின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். படிகளில் இறங்கிக் கீழ்த்தளத்தை அடைந்தார்.

காலேஜ் காம்பௌண்டில் வளர்ந்து நிற்கும் மரங்களின் குடைபோன்ற, அகன்ற மேற்பரப்பு தரைப் பகுதியை நிழலால் மேலும் இருட்டாக்கியிருந்தது.

நீண்ட வராந்தாவிலிருந்து ஸ்ரீகுமார் வெளியே வந்தார். இருட்டுப் பரப்பின் ஊடாக நடந்தார்.

''யாரது?'' சட்டென்று ஒருபெண் குரல் இருட்டிலிருந்து குதித்து வந்தது.

முன்பின் கேட்டறியாத பழக்கமில்லாத ஒரு குரலாக இருந்தது அது.

ஸ்ரீகுமார் சட்டென்று நின்றார்.

''யாருன்னு தெரியலையே?'' தெரிந்து கொள்ளும் ஆவலுடன் கேட்டார் ஸ்ரீகுமார்.

''என்னை உங்களுக்கு நல்லாவே தெரியும், நான்தான் சார் ஷைலஜா, பி.எஸ்.ஸி., செகண்ட் இயர்.'' குரலுக்கு உரியவள் இருளில் மறைந்தவாறே பேசினாள்.

''சுத்தமா முகமே தெரியலையே... கொஞ்சம் வெளிப் பக்கமா வந்து நில்லும்மா. ஆளையாவது அடையாளம் தெரிஞ்சுக்கிறேன்.'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''வேண்டாம் சார். யாராவது பார்த்துடுவாங்க'' -அவள் குரல் மட்டும் இருளை ஊடுருவியது.



''மணி பன்னிரண்டுக்கு மேல ஆயிடுச்சு. இதுக்கு மேல யாரு விழிச்சிட்டிருக்கப் போறாங்க? அதுவும் இந்த நேரத்தில, இந்த இடத்துல யாருக்கு என்ன வேலை இருக்கப் போகுது?''

''வாட்ச்மேன் தூங்கியிருக்கமாட்டார். சுத்திப் பார்க்கிறதுக்காககூட வரலாம்.''

அவள் சொன்னதும் நியாயம்தான், வாட்ச்மேன் எப்போது வேண்டுமானாலும் வரலாம். டார்ச்லைட்டை எடுக்காமல் வந்தது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் என்று அவர் தன்னைத்தானே நொந்து கொள்ளத் தவறவில்லை. லைட் இருந்திருந்தால் குரலுக்கு உரிய உருவத்தைப் பார்த்திருக்கலாம்.

''சரிம்மா... இந்த நேரத்துல எதுக்காக இங்க நிக்குற ஷைலஜா?''

''உங்களைப் பார்க்கத்தான் வந்துட்டிருந்தேன். நீங்களே எதிரே வந்துட்டீங்க.''

''என்னைப் பார்க்கறதுக்கா... இந்த நேரத்துலயா?''

''என்னை நம்புங்க... நான் உங்க மேல உயிரையே வெச்சிருக்கிறேன்.''

''ரொம்ப நன்றி. காலேஜில படிக்கிற பொண்ணுங்களுக்கு கத்துக் கொடுக்கிறவர் மேல மரியாதை இருக்கிறது சகஜம் தான். இருந்தாலும் இது ரொம்ப அதிகம்னு தோணுது!''

''நான் சொல்ல வந்தது அதில்லை சார்... உங்களை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்குது!''

திடுமென்று பனிக்கட்டி மாதிரி சில்லிட்டிருந்த கை ஒன்று ஸ்ரீகுமாரின் தோள் மீது பதிந்தது. அவர், அந்தக் கையை உடனே தட்டி ஒதுக்க முயன்றார். ஆனால் முடியவில்லை. கை அந்த அளவுக்கு வலுவுள்ளதாக இருந்தது.

அவருக்குப் பின்புறத்திலிருந்த பெண் உருவம் உண்மையிலேயே அழகாகத்தான் இருந்தது. அந்த உருவம்

சட்டென்று மேற்புறமாக, வளர்ந்ததுடன் அதன் வடிவமும் மாறத் தொடங்கியது.

பயங்கரமான ஒரு ரக்ஷஸின் (காட்டேரியின்) உருவத்துக்கு மாறிய அது, குமாரின் அருகிலிருந்த பைன் மரத்தின் பாதி உயரம் வரை நீண்டது.

தனது மொத்த பலத்தையும் ஒன்றாகத் திரட்டிக் கடுமையாகப் போராடியும், ஸ்ரீகுமாரால் அதன் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை.

அந்த உருவத்தின் இரண்டு கைகளும் ஸ்ரீகுமாரின் கழுத்தின் மீது பதிந்தன. சட்டென்று தனது கால்கள் பூமியிலிருந்து மேற்புறமாக எழும்புவதை அவர் உணர்ந்தார்.

நடப்பதெல்லாம் ஒருவேளை கனவாக இருக்குமோ என்று தன்னைத்தானே ஆறுதல் படுத்திக்கொள்ளவும் முடியாதவராகத் தவித்தார்.

காரணம், சுற்றுப்புறம் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. பூமி மட்டத்திலிருந்துதான் வெகு உயரத்தில் இருப்பதை உணரவே செய்தார்.

வினாடிக்கு வினாடி கழுத்து இறுகிக்கொண்டே வந்தது.

ஸ்ரீகுமாருக்கு மூச்சுத் திணறியது.

அந்த ஒரு கணத்துடன் தனது மூச்சே நின்று விடும் என்று தோன்றியது. வாயைத் திறந்து அலற முயன்றார். ஆனால், சத்தம் எதுவும் வாயிலிருந்து வெளியேறவில்லை.

மேற்கொண்டு என்ன செய்யலாம்.?

யோசிப்பதற்...

சட்டென்றுதான் அது நிகழ்ந்தது.

அவரது கழுத்தைப் பிடித்திருந்த பிடி மெதுவாகத் தளர்வது போல் தோன்றியது. அதோடு அருகிலிருந்த பைன் மரமே மொத்தமாக அதிர்ந்து குலுங்கி பிறகு விறைப்பு அடைந்தது போல் தோன்றியது.திடுமென்று ஏதோ ஒரு சத்தம்.



அவரை யாரோ மிகவும் பத்திரமாகப் பிடித்துத் தரையில் நிற்க வைத்தது போலிருந்தது. அடுத்த கணம் அவர் தரையில் நின்று கொண்டிருந்தார்.

தொடர்ந்து ஓர் அலறல் எழுந்து. அதன்பின் அங்கு நடந்த எதுவுமே அவருக்கு ஞாபகமில்லை.

கண்விழித்தபோது லேபுக்குள் தனது வழக்கமான கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தார். இரவில் நடந்து எல்லாம் மோசமான ஒரு கனவுதான் என்று தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக்கொண்டார்.

காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஸ்ரீகுமார் உடைமாற்றிக்கொண்டு புறப்பட்டார்.

ஸ்டாஃப் ரூமுக்கு வந்தபோது சக லெக்சரர்கள் குழுமியிருந்தனர்.

மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

வெளிப்புறத்திலிருந்து ஏதோ ஓர் இரைச்சல் கேட்டது. போராட்டக் கூச்சல் என்பது புரிந்தது. சத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்குள் கூட்டம் கூட்டமாக மாணவர்கள் கேட்டைக் கடந்து வெளியேறி மறைந்தனர்.

ஸ்ரீகுமார் என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் வெளியே பார்த்தார்.

யாரோ பைன் மரத்தின் அடியில் நின்று கொண்டிருப்பது போல் தோன்றியது,

இளம்பெண் என்பது புரிந்தது.

அவர் பக்கம் முதுகைக் காட்டி கொண்டு நின்றிருந்தாள்.

'அங்கு நிற்பது யார்?' என்று தெரிந்து கொள்வதற்காக பைன் மரத்தை நோக்கி நடந்தார்.

ஆனால், என்ன ஆச்சரியம்! அவர் பைன் மரத்தை நெருங்கிய போது அங்கு யாரும் தட்டுப்படவில்லை. அப்போதும் சந்தேகம் தீராதவராக ஒருதடவை பைன் மரத்தைச் சுற்றி வந்தார்.

யதேச்சையாக அவரது கண்கள் பைன் மரத்தின் அடிப் பரப்பைக் கவனித்தன. அங்கு சிவப்பு நிறமான திட்டு தெரிந்தது.

ஊன்றிக் கவனித்தபோது ரத்தம் என்பது விளங்கியது.

தரையில் விழுந்த ஒரு பொருளை எடுப்பது போன்ற பாவனையில் குனிந்தபடி ஊன்றிக் கவனித்தார்.

அருகிலிருந்த சுள்ளி ஒன்றை எடுத்து அந்தத் திட்டை விலக்கிப் பார்த்தார்.

சந்தேகமில்லை, அது ரத்தமேதான்!

இரவு நடந்த சம்பவங்கள் அவருக்கு நினைவு வந்தன.

''அப்படியானால் தன்னைக் கொல்ல வந்த பைசாசிகமான பூதாகார உருவத்துக்கு நேர்ந்திருக்கிறது! அப்படி ஒன்று நடந்ததன் அடையாளம்தான் இந்த ரத்தம்.

மதிய நேரத்தில் பிரபாகரனிடமிருந்து போன் வந்தது. 'உடனே புறப்பட்டு வரவும். அவசியமான விஷயம்!' என்று மட்டுமே தகவல் தெரிவித்துவிட்டு போன் எதிர் முனையில் வைக்கப்பட்டது.

'எதற்காக இருக்கும்?' என்று ஸ்ரீகுமார் யோசனையில் ஆழ்ந்தார்.

## 13

விடுமுறை விண்ணப்பத்தை எழுதிக் கொடுப்பதற்காக ஸ்ரீகுமார் பிரின்ஸிபாலின் அறையை நோக்கிச் சென்றார்,

''என்ன ஸ்ரீகுமார் சார், பிரச்சினையெல்லாம் நல்லபடியா தீர்ந்துடுச்சு போலிருக்கே?'' மகிழ்ச்சி நிறைந்த குரலில் கேட்டார் பிரின்ஸிபால்.

லேபரெட்டரியிலிருந்து எலும்புக்கூடு காணாமல் போனதிலிருந்து அவர் மனம் மிகவும் சஞ்சலம் அடையத்



தொடங்கியிருந்தது. பத்திரிகைகள் அதை பரபரப்புச் செய்தியாக்கியபோது அவரது கவலை அதிகரித்தது.

எலும்புக்கூடு திரும்பக் கிடைத்த பிறகுதான் அவர் முகத்தில் மகிழ்ச்சி தென்பட்டது.

''நான் உடனடியா ஊருக்குப் போக வேண்டியிருக்கு சார்...'' - ஸ்ரீகுமார் விண்ணப்பத் தொனியில் பேசினார்.

''உங்ககிட்ட இதுவரைக்கும் இப்படியொரு பழக்கமே இல்லையே, இது என்ன சார் புதுப் பழக்கம்?'' பிரின்ஸிபால் வியப்புடன் கேட்டார்.

''அவசரமாக அவசியமாத் தீர்க்கவேண்டிய சில குடும்பப் பிரச்சினைகள். ஒரேயொரு கடைசி வாரிசா நான் மட்டும்தான் மிச்சமிருக்கிறேன். நிறையச் சொத்துக்கள் கையைவிட்டுப் போயிடுச்சு. அது தொடர்பா நிறைய விஷயங்களைச் சீர்செய்ய வேண்டியிருக்கு சார்!''

''அப்படீன்னா காலாகாலத்துல ஒரு கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே. உங்களோட சொத்துக்களைப் பராமரிக்க இன்னோர் துணையும் கிடைக்குமே?''

''அதுக்காகக் கல்யாணம் பண்ணிக்கிட்டா பிரச்சினைங்க இன்னும் பெரிசாயிடும். என்னோட பொறுப்புகளும் கடமையும் அதிகமாயிடும்!''

''இதெல்லாம் கல்யாணம் பண்ணிக்காம இருக்க நாமளே சொல்லிக்கிற சமாதானங்கள். என்னிக்கானாலும் கல்யாணம் பண்ணிக்க வேண்டியது அவசியமில்லையா?'' -பிரின்ஸிபால் கேட்டார்.

''உண்மையைச் சொன்னா, நான் இதுவரைக்கும் அதைப் பற்றி யோசிச்சதே இல்லை சார்!''

''அப்ப இனிமேலாவது யோசிக்க ஆரம்பியுங்க... சரி, எத்தனை நாளுக்கு லீவு வேணும்?''

''எப்படியும் ஒரு வாரம் தேவைப்படும்!''

''எடுத்துக்கங்க. இந்தத் தடவை நீங்க ஊரிலேர்ந்து திரும்பி வரும்போது உங்களுக்கு ஏற்ற மாதிரி ஒரு பொண்ணையும் பார்த்துட்டு வாங்க!'' பிரின்ஸிபால் சிரித்தபடி பேசினார்.

ஸ்ரீகுமார் அதற்கு எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

விடுமுறை விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்துவிட்டு ஆபீஸ் அறையிலிருந்து வெளியேறினார்.

''இன்னும் கொஞ்ச நேரத்துல ஒரு பஸ் கிளம்பும். அதில போயிட்டீங்கன்னா சாயந்திரத்துக்குள்ளே வீட்டுக்கு போயிடலாம் சார்!'' - அவரது பயணத்தைப் பற்றிக் கேள்விப் பட்ட லீலாம்மா, ஸ்ரீகுமாரிடம் கூறினாள்.

பஸ்ஸிலிருந்து இறங்கும்போது மணி ஆறரைக்கு மேலாகி விட்டிருந்தது. பகல் குறைவாக இருந்ததால் அதற்குள் சூரியன் மறைந்துவிட்டிருந்தது.

பிரபாகரன் அவரை எதிர்பார்த்து பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தான். ஸ்ரீகுமாரைப் பார்த்தவுடன் அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

''என்ன பிரபாகரா, நான் போன -பிறகு விசேஷமாக ஏதாவது நடந்ததா?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''இருக்கு! அதைப்பத்திச் சொல்றதுக்காகத்தான் போன் செஞ்சேன். முதல்ல நாம வீட்டுக்குப் போயிடலாம். அங்க வெச்சுப் பேசிக்கிறதுதான் நல்லது'' -பிரபாகரன் கூறினான்.

இருவரும் பிரபாகரனின் வீட்டை நோக்கி நடந்தனர். ஸ்ரீகுமார் வரும் செய்தி தெரிந்திருந்ததால் சாப்பாடு தயாராக இருந்தது.

''உடனடியா சாப்பாட்டை முடிச்சுட்டு உங்க இல்லத்துக்கே போயிடலாம். மத்த விவரங்களை நிம்மதியா அங்கேயே உட்கார்ந்து பேசிக்கலாம்.'' பிரபாகரன் யோசனை கூறினான்.



ஸ்ரீகுமார் ஒப்புக்கொண்டார்.

அவர்கள் இல்லத்தை அடைந்தபோது மணி ஒன்பதுக்கு மேல் ஆகியிருந்தது.

பிரபாகரன் முன்கூட்டியே நிலவிளக்கில் எண்ணெய் ஊற்றி, பூஜையறை வாசலில் வைத்திருந்தான். ஆனால்'கதவைத் திறந்ததும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.' அப்படியானால் யாரோ விளக்கேற்றியிருக்கிறார்கள். பிரபாகரனுக்கு இது வியப்பை அளித்தது.

''யார் விளக்கை ஏற்றியிருப்பார்கள்?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''வீட்டுக்குள்ள வேறு யாரும் வந்து விளக்கேத்த வழியில்லை. யோசிக்கலாம்...'' பிரபாகரன் வீட்டுக்குள் நுழைந்தபடி பேசினான்.

அவர்கள் வராந்தாவுக்கு வந்தபோது அருகிலிருந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு இளம்பெண் ஒருத்தி வெளிப்பட்டாள்.

''யாரும்மா நீ? எனக்கு அடையாளம் தெரியலையே? ஆமா, நீ இங்க என்ன செய்யுறே?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''நிஜமாவா உங்களுக்கு என்னைத் தெரியலை? நானும் உங்க காலேஜிலதான் சார் படிக்கிறேன். பேரு ரேணுகா, பி. எஸ்ஸி. செகண்ட் இயர் படிக்கிறேன். பக்கத்துலதான் எங்க வீடு. எங்க அப்பாவுக்கும் உங்களை நல்லாவே தெரியும். அப்பா பேரு சங்கரன் நம்பூதிரி!'' மிகவும் பழக்கப்பட்டவளைப் போல் பேசினாள்.

''சங்கரன் நம்பூதிரியா? அவரை எனக்கு நல்லாவே தெரியும். ஆனா, அவருக்கு இந்த வயசில ஒரு பொண்ணு இருக்கிறது தெரியாதே'' ஸ்ரீகுமார் சந்தேகத்துடன் அவளைப் பார்த்தார்.''

''நான் சொல்றதெல்லாம் உண்மைதான் சார்!'' அவளது குரல் உறுதியாக ஒலித்தது.

''சரி, நானும் ஒப்புக்கிறேன். அப்படியே இருந்தாலும் இந்த நேரம்கெட்ட நேரத்துல, அதுவும் முன்பின் தெரியாத இந்த வீட்டுக்கு எதுக்காக வந்திருக்கிறே ரேணுகா?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''என்னை வரச் சொல்லியனுப்பினாங்க!'' அவள் மெதுவான குரலில் பேசினாள்.

''யார் சொல்லியனுப்பினது?'' ஸ்ரீகுமார் சந்தேகம் மாறாதவராகக் கேட்டார்.

''சௌபர்ணிகா!

''என்ன சௌபர்ணிகாவா?'' - ஸ்ரீகுமாரின் கண்ணிமைகள் சட்டென்று சுருங்கின.

ஆனால், எதுவும் புரியாத பிரபாகரன் ஒன்றும் பேச முடியாமல் வியப்புடன் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்க பயப்படத் தேவையில்லை. உங்களுக்குத் தொல்லை கொடுக்கிறதுக்காக நான் இங்க வரலை. நல்லதுக்காகத்தான் வந்திருக்கிறேன். தயவுசெஞ்சு என்னை நம்புங்க'' - ரேணுகா பதிலளித்தாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீகுமார், உடனே பிரபாகரனின் பக்கம் திரும்பி பார்த்தார்.

ஏதோ விபரீதத்தை உணர்ந்து கொண்டவனைப் போலிருந்தது பிரபாகரனின் முகம். இருப்பினும் அவன் எதுவுமே பேசவில்லை.

''சரி... நீ சொன்னது உண்மையா இருந்தா ரொம்ப நல்லது!'' - ஸ்ரீகுமார், அவளது வார்த்தையை முழுமையாக நம்பவில்லை என்பது புரிந்தது.

''உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டா என்னைக் கூப்பிடுங்க. நான் இங்கேயேதான் இருப்பேன்!'' பேசிவிட்டு உடனே அருகிலிருந்த அறைக்குள் மறைந்தாள்.



''என்னமோ... எனக்கு ஒன்னும் புரியலைப்பா!'' பிரபாகரன் மௌனத்தைக் கலைத்து முதல் தடவையாகப் பேசினான்.

''பரவாயில்லை... அதை விட்டுத் தள்ளு பிரபாகரா. நம்ம அறிவுக்கு எட்டாத எவ்வளவோ விஷயங்கள் இந்த உலகத்துல நடக்குது. நானே இதை சமீபத்துலதான் உணர்ந்தேன். உனக்கும் அதெல்லாம் ஓரளவு தெரியும்'' - ஸ்ரீகுமார் பேசினார்.

''உண்மைதான். ஏதோ கொஞ்சம் தெரியும். அன்னிக்கு நாம நேரிலேயே பார்த்தோமே!''- -பிரபாகரன் ஒப்புக் கொண்டான்.

சரியாக அதே நேரம் சந்துநாயரின் வீட்டில், மகா மாந்திரீகரான ஜயந்தன் அடுத்தகட்ட நடவடிக்கையாக என்ன செய்யலாம் என்பதைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''உடனடியா நான் ஏதாவது செய்யணுமா?'' சந்துநாயர் கேட்டார்.

''நீங்க குறிப்பிட்ட பொடியன், அவங்க வீட்டுக்கு வந்திருக்கிறான். அவனைத் தொலைச்சுக் கட்டிட்டா, பிரச்சினை இதோட முடிஞ்சிடும். எனக்கு என்ன தோணுதுன்னா, யாரோ ஒரு பெரிய கை அவனுக்குப் பின்னணியில வேலை செய்யுறதாத் தெரியுது!''

''அவன்கூட இருக்கிறவன் என்னோட தங்கச்சி பையன். பிரபாகரன்னு பேரு. உண்மையில அவன்தான் என்னோட பெரிய எதிரி. இங்க நடக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் அந்தச் சின்னத்திருமேனிக்குத் தெரியப்படுத்துறதே அவன்தான்!''

''ஏன் உங்களுக்குள்ள உறவுமுறை சரியில்லையா என்ன?'' ஜயந்தன் விசாரித்தார்.

''உறவுப் பகையாளிங்க! அவனோட அம்மா என்னோட சகோதரி. எங்க குடும்பத்தையே நாசமாக்கினவ அவன்தான்.

அவ, அவளுக்குப் பிடிச்சவனோட ஓடிப்போயிட்டா. அவனை நான் ஒண்ணுக்கும் உதவாதபடி செஞ்சுட்டேன். என்கிட்ட வந்து பங்கு கேட்டாள் சண்டை போட்டாள். 'ஒண்ணும் கிடையாது வெளியே போடி!'ன்னு விரட்டிட்டேன்."

''ஓகோ... கதை அப்படிப் போகுதா? அப்படின்னா ஒரே தோட்டாவுல மூணு பறவைகளையும் தொலைச்சுக் கட்டிட வேண்டியதுதான்"

''அது சாத்தியமானா... ரொம்ப சந்தோஷம்" சந்துநாயர் மிகவும் மகிழ்ச்சிப் பரவசத்துடன் பேசினார்.

''அப்படியானால் நாம உடனடியா ஒரு சத்ரு சம்ஹார ஹோமம் நடத்தணும். கொஞ்சம் அதிகமா செலவு செய்ய வேண்டியிருக்கும்" -ஜயந்தன் சொன்னார்.

''அதுக்கென்ன? எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, அந்த ஹோமத்தை நடத்தித் தீர வேண்டியது தான்." சந்துநாயர் ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டது தெரிந்தது.

''சத்ரு சம்ஹார ஹோமத்துக்கு அவசியமான பொருள் ஒரு பிணம். அதை முதல்ல எங்கேருந்து கொண்டு வர்றது?" ஜயந்தன் கேட்டார்.

''பிணம் வேணுமா? அவங்கள்லயே யாராவது ஒருத்தர் கதையை முதல்ல முடிச்சுட்டாப் போகுது. தனியாப் பிணத்தைத் தேடி நாம எங்கே அலையுறது? எப்படிக் கொண்டுவர்றது?" -சந்து நாயரின் மூத்த மகன் மாதவன்குட்டி கேட்டான்.

''தம்பி... நான் சொன்னது உங்களுக்குப் புரியலேன்னு நெனைக்கிறேன். நாம லட்சியமா நினைச்சிருக்கிற உயிர்களை தற்போதைய சூழ்நிலையில நம்மளால எதுவும் செய்ய முடியாது! அவங்க உடம்புல ஒரு கீறல்கூட விழாம ஏதோ ஒரு சக்தி காப்பாத்துது. அதனால நீங்க குறிப்பிட்ட எந்த முயற்சியும் பலனளிக்காது. அதனாலதான் நாம ஹோமம் பண்ண வேண்டியிருக்கு!" -ஜயந்தன் சூழ்நிலையை விளக்கினார்.



''அப்படீன்னா ஒண்ணு பண்ணலாம். ரெண்டு நாளைக்குள்ள செத்துப்போன, எரிக்காத உடம்பு ஏதாவது கிடைச்சா போதுமா?"

''அதெல்லாம் கதைக்கு உதவுற விஷயமாத் தெரியலை." - ஜயந்தன் உதட்டை பிதுக்கினார்.

''அப்புறம் என்னதான் செய்யுறது?" சந்துநாயர் கேட்டார்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது அந்த வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரி நாராயணி தெருவாசற் படியைக் கடந்து வெளியே போனாள். ஜயந்தனின் கண்கள் அவளைப் பொருட்செறிவுடன் பார்த்தன.

''அந்தப் பொண்ணு உங்க வீட்டைச் சேர்ந்த நபரில்லையே?" ஜயந்தன் கேட்டார்.

''இல்லை. வேலைக்காரிதான்!" மாதவன்குட்டி பதிலளித்தான்.

''ரொம்ப சௌகரியமாப் போச்சு. இப்ப உடனடியா பின்னாலேயே போய் அவளைத் தீர்த்துக் கட்டிட்டா நம்ம பிரச்சினை தீர்ந்தது. ஒரு விஷயம், ரத்தம் வெளியேறாம கச்சிதமா காரியத்தை முடிக்கணும்!" ஜயந்தனின் முகம் கொடூரமாகப் பளபளத்தது - இதைச் சொல்லும்போது!

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஒரு வினாடிகூடத் தாமதிக்காமல் வீட்டுக்குள் சென்ற மாதவன்குட்டி, கேசவன் குட்டியை அழைத்தான்.

உள்ளறையில் கட்டிலில் படுத்தபடி வெளியே பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்துக்கொண்டிருந்த கேசவன், தன்னை அழைத்ததும் சட்டென்று படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தான்.

இருவரும் அவசர அவசரமாக நாராயணி சென்ற வழியில் விரைந்தனர்.

''அவனுங்க ரொம்பவும் கெட்டிக்காரனுங்க! போன காரியத்தை முடிக்காம திரும்ப மாட்டானுங்க. இனி அடுத்ததா என்ன செய்யணும்னு சொல்லுங்க!'' சந்துநாயர் கேட்டார்.

''இன்னிக்கு ராத்திரி பன்னிரண்டு மணிக்கு ஹோமத்தை ஆரம்பிச்சுட வேண்டியதுதான். உடனடியா அஷ்டதருக்களோட சமித்துகளும் மற்ற பொருள்களையும் தயார்படுத்தணும். அதுவும் உடனடியா வேணும்'' ஜயந்தன் பேசினார்.

''செஞ்சுட்டாப் போகுது'' என்ற சந்துநாயர் உடனே கடைக் குட்டி மகனான விக்கிரமனை அழைத்தார். ஜயந்தனுக்குத் தேவைப்படுவதையெல்லாம் உடனடியாகக்கொண்டு வந்து சேர்க்குமாறு அவனிடம் கட்டளையிட்டார்.

அவனும் தலையாட்டிவிட்டுப் புறப்பட்டான்.

நள்ளிரவு!

சந்துநாயரது தென்னந்தோப்பின் நடுவிலிருந்த தேங்காய் கோடௌனில் ஹோமத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

கழுத்தை நெரித்து, மூச்சுத் திணற வைத்துக்கொலை செய்யப்பட்ட நாராயணியின் உடம்பு, அந்த கோடௌனுக்குள் ரகசியமாகக் கொண்டுவரப்பட்டுக், கிடத்தப்பட்டது.

''சந்துநாயர் மட்டும் இங்க இருந்தால் போதும். மத்தவங்க கூப்பிட்டா கேக்குற தொலைவில் வெளியே நில்லுங்க. நான் சொன்னபடி நடக்கலேன்னா, அதுக்கான பலனை அனுபவிக்க வேண்டியிருக்கும். அதுக்கு நான் பொறுப்பில்லை.'' ஜயந்தன் எச்சரிக்கை செய்தார்.

ஹோமகுண்டலத்தில் புகை உயரத் தொடங்கியது.

''அந்தப் பிணத்தின் உடம்பில் ஒரு பொட்டு நூல்கூட இருக்கக்கூடாது!'' ஜயந்தன் கட்டளையிடுவது போல் பேசினார்.

## 14

**ஹோ**மத்துக்கான எல்லாம் தயாராக இருந்தன. பிணத்தை மடியில் வைத்துக் கொண்டுதான் ஹோமத்துக்கான கிரியைகளைத் தொடரவேண்டும்.

ஹோமத்தின்போது தேவதையாகக் கற்பித்துக் கொள்ள, உயிருள்ள மற்றொரு பெண் தேவை. அதற்கும் ஜயந்தன் ஏற்பாடு செய்திருந்தார்.

ஜயந்தன் வசிக்கும் நாகத்தான் பாறையின் அடிவாரத்தில் வசிக்கும் மலைவாசிப் பெண் அவள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பங்கெடுப்பதற்காகவென்றே அவளை அவர் பழக்கி வைத்திருந்தார். இதற்கு முன்பும் இரண்டு மூன்று முறை அவளை இதுபோன்ற கர்மங்களில் ஈடுபடுத்தியிருக்கிறார்.

ஒவ்வொரு தடவையும் ஹோமம் முடிந்து அவளை அனுப்பும்போது உதவியதற்காக ஒரு தொகையையும் அவளிடம் கொடுத்து அனுப்புவார். அதனால் அவளது பெற்றோர் தங்களது மகளை ஜயந்தனுடன் அனுப்புவதில் தயக்கமே காட்டியதில்லை. மாறாக மகிழ்ச்சியே அடைந்தனர்.

ஹோம குண்டத்தில் ஜ்வாலைகள் உயரத் தொடங்கின.

ஸ்ரீகுமாரும், பிரபாகரனும் இல்லத்தின் திண்ணையில் அமர்ந்திருந்தனர்.

மணி பன்னிரண்டுக்கு மேலிருக்கும்.

அவர்களுக்கு உதவுவதற்காக வந்திருந்த ரேணுகா, அவர்கள் அமர்ந்திருந்த திண்ணைக்கு வந்தாள்.

''என்னம்மா?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டியிருக்கு. இப்பத்தான் ஞாபகம் வந்தது.'' அவள் பதிலளித்தாள்.

''நல்ல விஷயம் சொல்ல வந்த போ, இந்த நடுராத்திரி வேளையில!'' பிரபாகரன் சலித்துக்கொண்டான்.

''பரவாயில்லை நீ சொல்லும்மா!'' - ஸ்ரீகுமார் அவளைப் பார்த்துச் சொன்னார்,

''என்னமோ ஒரு பிரத்தியேகமான வாசனை வருதே, கவனிச்சீங்களா?!'' அவள் கேட்டாள்.

பிரபாகரனும், ஸ்ரீகுமாரும் அவள் சொல்வது உண்மை தானா என்று மூச்சை இழுத்து உள் வாங்கியவாறு சோதித்தனர்.

உண்மைதான்! சந்தன வாசனை காற்றில் மிகவும் சன்னமாக வீசியது. அவள் சொன்னதை ஒப்புக்கொண்டவர்களாக இருவரும் அவளைக் கவனித்தனர்.

''இந்த நடுராத்திரியில் இப்படியொரு வாசனை எங்கேயிருந்து, எப்படி வருதுங்கிறதைப் பத்தி யாராவது யோசிச்சீங்களா? குறிப்பா நாம இருக்குற சூழ்நிலையில் இதைக் கவனிக்காம இருக்கலாமா?'' -அவள் கேட்டாள்.

''யாராவது நெருப்புக் கொளுத்தியிருப்பாங்க. அதில சந்தனத்துண்டு ஏதாவது தவறி விழுந்திருக்கலாம்.'' ஸ்ரீகுமார் பதிலளித்தார்.

''உண்மை அது இல்லை. எங்கேயோ ஹோமம் பண்றாங்க!'' ரேணுகா தெரிவித்தாள்.

''என்ன ஹோமம்?'' பிரபாகரன் விசாரித்தான்.

''நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்.'' என்றவள் தெரு வாசற்படி கடந்து மறைந்தாள்.

''ச்சே... நாம ஒரு தப்பு செஞ்சுட்டோம். அந்தப் பெண்ணைத் தனியா அனுப்பிருக்கக்கூடாது. அவளுக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா நாளைக்கு நாமதான் பதில்சொல்ல வேண்டியிருக்கும். வா... கிளம்பலாம்.'' பேசியவாறே ஸ்ரீகுமார் அங்கிருந்து எழுந்தார்.

இருவரும் அவள் நடந்து போன திசையில் விரைந்தனர், முன்னாலிருக்கும் எதுவுமே தெரியாத கும்மிருட்டில், பகல்



வெளிச்சத்தில் நடப்பது போல் அவள் நடந்து கொண்டிருந்தாள். வினாடிக்கு வினாடி அவளது நடையின் வேகம் அதிகரித்தது.

அவளது விரைவுக்கு ஏற்றவாறு தொடர்ந்து செல்ல ஸ்ரீகுமாரும், பிரபாகரனும் மிகவும் கஷ்டப்பட நேர்ந்தது.

சற்றுத் தொலைவு நடந்தவள் இடது புறமாகச் செல்லும் குறுக்குப் பாதையில் திரும்பினாள். அந்தப்பாதை வயல் வெளியில் போய் முடிவடைந்தது.

வரப்பின் மீதும் தன்னுடைய வேகத்தைக் குறைக்காமல் அவள் விரைந்து நடப்பதை அவர்கள் கவனித்தனர்.

அந்த வரப்பு முடிவடைந்த இடம் ஒரு தென்னந்தோப்பு, அந்தத் தோப்பின் மையத்திலிருந்த தேங்காய் கோடௌனில்தான் ஹோமம் நடந்துகொண்டிருந்தது.

விரைவாக நடந்தவள் கோடௌனின் பின்புறமிருந்த பலகையின் இடைவெளி வழியாக உட்புறம் பார்த்தாள்.

அதற்குள் அவளைத் தொடர்ந்து வந்த இருவரும் கோடௌனை நெருங்கி விட்டனர்.

அதற்குள் அவர்கள் பார்த்த காட்சி எப்படிப் பட்டவர்களையும் திடுக்கிட வைக்கக் கூடியதாக இருந்தது.

மடியில் பிணத்தைப் படுக்க வைத்திருந்தார் ஜயந்தன். முன்புறம் ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த ஹோம குண்டத்தின் மறுபுறம் நின்றிருந்த இளம்பெண்மீது பூக்களையும் குங்குமத்தையும் வீசி எறிந்து கொண்டிருந்தார். அவர் உதடுகள் விரைவாக அசைந்து மந்திரங்களை உதிர்த்துக்கொண்டிருந்தன.

ஏறத்தாழ முக்கால் நிர்வாணமாக நின்று கொண்டிருந்த இளம்பெண்ணின் உடல் முழுவதும் குங்குமமும் வியர்வையும் ஒன்று கலந்து பரவி, பயமேற்படுத்தக்கூடிய தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஜயந்தனிடமிருந்து சற்றுத்தள்ளி, சந்துநாயர் தரையில் சப்பணமிட்டு அமர்ந்திருந்தார். அவரைப் பொறுத்தவரை இது வியப்புக்குரிய ஒரு காட்சியாக இருந்தது.

தனது லட்சியசித்தி இந்த ஹோமத்தால் நிறைவேறிவிடும் என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

வெளியிலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ரேணுகா, உடனே தலையைத் திருப்பி ஸ்ரீகுமாரின் காதுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னாள், ''நாம உடனடியாக எதையாவது செய்தே தீரவேண்டும்.''

''என்ன நடக்குதுன்னே எனக்கு ஒண்ணும் புரியலை. எல்லாமே ஒரே அதிசயமா இருக்கு!'' ஸ்ரீகுமார் மிகவும் தணிந்த குரலில் பேசினார்.

''இவங்க செஞ்சுட்டிருக்கிறதுக்குப் பேரு சத்ரு சம்ஹார ஹோமம். இவங்களுடைய எதிராளிகள் யாராகயிருந்தாலும் ரக்ஷஸுகளானாலும், மனிதர்களாக இருந்தாலும் இந்த ஹோமத்தின் முடிவில் வெந்து சாம்பலாகி விடவேண்டியது தான்!'' அவள் விளக்கினாள்.

''உண்மையாவா!'' பிரபாகரன் மொத்த உடலும் நடுங்கிய படி கேட்டான். அவனது கண்கள் ஸ்ரீகுமாரை வெறித்துப் பார்த்தன.

''உண்மைதான்!'' -அவள் உறுதியான குரலில் பேசினாள்.

''அதுக்கு இப்ப நம்மளால என்ன செய்ய முடியும்?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''நான் ஒரு வித்தை செஞ்சு பார்க்கிறேன்!'' என்றபடி அவள் வலது புறமாகத் திரும்பினாள்.

சற்று நேரத்தில் அவள் கோடௌனுக்குள் நுழைந்ததை அவர்கள் கவனித்தனர். அந்தச் சமயத்தில் அவளைக் கவனித்த ஸ்ரீகுமாரும், பிரபாகரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.



காரணம், அப்போது அவளது உடம்பில் உடை ஏதுவும் இருக்க வில்லை. அது மட்டுமின்றி அவளது உருவமே தெளிவற்றிருந்தது.

சந்துநாயரின் முன்பாக அவள் நடந்து சென்றபோதும் அவர், அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை; அப்படியே அசை வற்று உட்கார்ந்திருந்தார். எனவே சந்துநாயர் அவளைக் கவனிக்க வில்லை என்பது வெளியேயிருந்த இருவருக்கும் விளங்கவே செய்தது.

அப்படியானால் தங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் ரேணுகா நிச்சயமாக மனிதப் பெண் அல்ல என்பதும் புரிந்தது.

சௌபர்ணிகா அனுப்பியதாக அவள் குறிப்பிட்டபோது முதலில் ஸ்ரீகுமார் நம்பவில்லை. அது உண்மையாகத்தான் இருக்குமென்று இப்போது தோன்றியது.

மெதுவாக நடந்து சென்ற ரேணுகா ஹோமகுண்டத்தின் பின்புறம் நின்றிருந்த இளம்பெண்ணின் பின்னால் போய் நின்றாள்.

அதன்பிறகு அங்கு நடந்தது முற்றிலும் நம்ப முடியாத அதிசயமான ஒரு காட்சியாக இருந்தது.

ஒரு புகைச்சுருள் மாதிரி மாறிய ரேணுகா மிக விரைவிலேயே அந்த மலைவாசிப் பெண்ணின் உடலுக்குள் ஒன்றிக் கலந்தாள். வினாடி நேரத்துக்குள் ரேணுகா முற்றிலுமாக மறைந்தே போனாள்.

''என்னால நம்பவே முடியலை. ரேணுகா முழுசா மாயமா மறைஞ்சுட்டாளே!'' பிரபாகரன் கனவில் பேசுபவன் போல் பேசினான்.

''இந்த மாதிரி சம்பவங்களை நாம் இதுவரைக்கும் கேள்விப்பட்டதோட சரி. இப்போ நேரடியாவே பார்க்கிற வாய்ப்பு கிடைச்சிருக்கு'' ஸ்ரீகுமார் மந்திரிப்பது போல் பேசினார்.

''இதுவரைக்கும் யாரெல்லாமோ சத்ருசம்ஹாரம் நடத்தினதா நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பத்திரிகைகள் சிலதிலயும் வாசிச்சிருக்கேன். ஆனா, அதெல்லாம் உண்மையா இருக்காதுன்னு நினைச்சுட்டிருந்தேன்."

பிரபாகரன் கோடௌனின் வெளிப்புறத்திலிருந்து பலகைகளின் நடுவே இருந்த இடைவெளி வழியாக உட்புறம் நின்றுகொண்டிருந்த மலைவாசிப் பெண்ணையே ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தான்.

நிமிடங்கள் சில கடந்தன.

அந்தப் பெண்ணிடம் ஏதோ ஒரு மாற்றம் தென்பட்டது. அவளது உடம்பில் ஒட்டியிருந்த குங்குமத்தின் நிறம் முதலில் மறையத் தொடங்கியது. அது மட்டுமின்றி அவளது உடம்பில் இன்னதென்று விளக்க முடியாத ஏதோ ஓர் ஒளி பரவிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்குள் நெருப்பில் கனிந்த ஒரு வெண்கலச் சிலைபோல் அவள் மாறிவிட்டிருந்தாள்.

அந்த உடம்பில் வந்து விழுந்த பூவிதழ்கள் கருகத் தொடங்கின. ஜயந்தன் வீசிய குங்குமமும், ஹோமப் பொடியும் அவள்மீது பட்டவுடன் நெருப்புத் துணுக்களாகச் சிதறின.

நடப்பதெல்லாம் தன்னுடைய மகத்தான மாந்திரீக சக்தியின் விளைவு என்றுதான் ஜயந்தன் கர்வத்துடன் நினைத்துக் கொண்டார். எனவே அதையொட்டி அவரது உதடுகள் மந்திரத்தை உருவிட்டுக் கொண்டிருந்தன.

அந்தப் பெண்ணிடம் மீண்டும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. யாருமே எதிர்பார்க்காத விதத்தில் ஜயந்தன் கூட யூகிக்க முடியாத விதத்தில் அமைந்திருந்தது அந்த மாற்றம்.

அந்த மலைவாசிப் பெண் குனிந்த தலையுடன் தரையில் உட்கார்ந்தாள்.



திடுமென்று முன்புறமாகக் கைகளை நீட்டியவள் ஹோம குண்டத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் நெருப்புக் கங்குகளுக்குள் விரல்களைச் செருகி நெருப்புத் துண்டுகளை வாரி வாரி எதிரே இருந்த ஜயந்தன் மீதும், அவரது மடியில் இருந்த பிணத்தின் மீதும் வீசியெறிந்தாள்!

எதிர்பாராத இந்தச் சம்பவத்தால் ஜயந்தனின் கோபம் சட்டென்று உயர்ந்தது. உடனே இடதுபுறம் திரும்பியவர், வெண்கலக்கிண்டி ஒன்றில் பிடித்து வைத்திருந்த சேவலின் ரத்தத்தைக் கையில் ஊற்றி, அதை அவளுக்கு நேராகத் தெளித்தார்.

ரத்தத் துளிகள் உடம்பில் பட்டதும் அந்தப் பெண் பின்புறமாக மல்லாந்து விழுந்து அசைவற்றுப் போனாள்.

மடியில் கிடந்த பிணத்தை ஒருபுறமாக இழுத்து எறிந்து விட்டு ஜயந்தன் எழுந்தார்.

மாந்திரீகனின் பரபரப்பைக் கவனித்த சந்துநாயர் கேட்டார். "ஏன்... என்ன ஆச்சு?"

''ஹோமம் தோல்வியடைஞ்சிடுச்சு. ஏதோ ஒரு சக்தி பின்னணியில வலுவா வேலை செய்யுதுங்கிறது உறுதியாயிடுச்சு. முதலில் அந்தச் சக்தியைக் கண்டுபிடிக்க வேண்டும்'' -ஜயந்தன் கோபம் நிறைந்தவராக வெளியேற முயன்றார்.

''நான் ஏதாவது மாற்று ஏற்பாடோ, பொருட்களோ கொண்டுவரணுமா?'' -சந்துநாயர் கேட்டார்.

''நீங்க யாரும் எதுவும் செய்ய வேண்டியதில்லை. இதை நானேதான் பார்த்துக்கணும்!'' -ஜயந்தனது குரல் உறுதியுடன் வெளிவந்தது.

வெளியே மலைஜாதிப் பெண்ணின் அப்பா-அம்மா நின்று கொண்டிருந்தனர். ''உங்கள் மகளை அழைத்துக்கொண்டு போங்கள்!" என்று சொல்லிவிட்டு எங்கேயோ பார்த்தார் ஜயந்தன்.

''இனிமேல் இங்கே இருப்பது நல்லதல்ல!'' பின்னாலிருந்து ஒரு குரல் சொல்வது ஸ்ரீகுமாருக்குக் கேட்டது.

திரும்பிப் பார்த்தபோது மங்கிய வெளிச்சத்தில் நின்று கொண்டிருந்தாள் ஸ்ரீதேவி.

''இங்க எப்படி?'' ஸ்ரீகுமார் வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.

''அதையெல்லாம் அப்புறமா பேசிக்கலாம். முதல்ல இங்கேயிருந்து வெளியேறுங்க!'' ஸ்ரீ தேவி எச்சரிக்கை செய்தாள்.

சற்றும் தாமதிக்காமல் ஸ்ரீகுமாரும் பிரபாகரனும் விரைவாக நடக்கத் தொடங்கினர்.

இல்லத்தை நெருங்கிய போது வராந்தாவில் உட்கார்ந்திருந்தாள் ஸ்ரீதேவி.

''நீங்க ரொம்பவும் மெதுவா நடந்து வந்திருக்கிங்க போலிருக்கே!' ஸ்ரீதேவி அவர்களைப் பார்த்துக்கேட்டாள்.

## 15

''ஆமாம்... நீங்க எப்போ இங்கே வந்து சேர்ந்தீங்க?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''தோப்புக்குள்ள இருக்கிற தேங்காய் கோடௌன்ல ஹோமம் நடக்கிறதை நீங்களும் பார்த்திருப்பீங்களே. அது முடிஞ்சதும் கிளம்பினேன்!'' அவள் மிகவும் இயல்பான குரலில் கூறினாள்.

''ரொம்பவும் பயங்கரமான காட்சி'' பிரபாகரனுக்கு அங்கு கண்ட காட்சி அப்போதும் கண்ணுக்குள்ளேயே இருந்தது. இப்படிப்பட்ட ஒரு காட்சியை அவன் இதுவரை சந்திக்கவே நேர்ந்ததில்லை.



''இதனால் எல்லாம் மனம் தளர்ந்துவிடுகிறவரில்லை ஜயந்தன்'' -ஸ்ரீதேவி கூறினாள்.

''இந்த நிலைமையில நாம என்னதான் செய்யுறது?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''எல்லாத்துக்கும் ஒரு முடிவிருக்குது. அதுக்கான வழியும் இருக்குது!'' ஸ்ரீதேவி அவர்களுக்கு ஆறுதல் கூறினாள்.

''இருக்கலாம். ஆனா, இங்க நடக்கிறதையெல்லாம் பார்த்தா, எல்லாத்தையும் விட்டுட்டுப் பேசாம பட்டணத்துக்கே போய் நிம்மதியா வேலையைப் பார்க்கலாம்னு தோணுது!'' ஸ்ரீகுமார் சொன்னார்.

''அப்படி நீங்க போயிடறதால அவங்க திருப்தியடைஞ்சடுவாங்கன்னு நெனைக்கிறீங்களா? ஒருவேளை நீங்க இப்ப நினைக்கலாம் இதுக்கெல்லாம் காரணம் நான்தான்னு. ஆனால், அது உண்மையில்லை. நான் எதுவுமே செய்யலேன்னாக்கூட அவங்க உங்ககிட்ட மோதியிருப்பாங்க!''

''அதுக்கு சந்தர்ப்பமே இருக்காதே!'' - ஸ்ரீகுமார் மறுத்தார்.

''கைவசமிருக்கிற சொத்துக்கள், அதோட பத்திரங்கள் எல்லாத்தையும் தோண்டித்துருவிப் பார்த்தபோது சந்துநாயரது தான் அதெல்லாம்னு சொல்லிக்க எந்த விதமான வாய்ப்பும் இல்லை. நியாயமாக் கேட்க வேண்டியவர் நீங்கதான். அப்போ உங்களைத் தொலைச்சுட்டா, இப்ப உங்களுக்கு இருக்கிற சொத்தும் அவருக்குக் கிடைச்சுடும். போதாதா?''

''சங்குண்ணிநாயர் அதைப்பத்தி என்கிட்ட எதுவுமே சொல்லலையே?''

'' அவருக்கு அந்தச் சொத்துக்களைப்பத்தி தெளிவா எதுவும் தெரிஞ்சிருக்காது. சொத்துக்களுக்காக அவர்கள் எதையும் செய்யத் தயங்காதவர்கள். என்னோட விஷயத்தை எடுத்துக்கிட்டீங்கன்னா, என்னையும் எங்க அம்மாவையும் கொலை

செஞ்சவங்களை நான் பழிவாங்க நினைக்கிறது இயல்பான விஷயம் இல்லையா?'' ஸ்ரீதேவி கேட்டாள்.

''உண்மைதான். இந்த மாதிரியெல்லாம் பிரச்சினைகள் வரும்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவே இல்லை'' - ஸ்ரீகுமார் மிகவும் குழப்பமடைந்தவரைப் போல் தோன்றினார்.

''அதுக்காகக் கவலைப்பட வேண்டாம். நான் உங்க கூடவே இருக்கிறேனே. ம்... இப்பத்தான் ஞாபகம் வருது. உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேன்'' - பேசியவாறே வராந்தா சுவரை ஒட்டி நின்றாள்.

ஸ்ரீதேவி என்ன சொல்லப் போகிறாள் என்பதை அறியும் ஆவலுடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார் ஸ்ரீகுமார். பிரபாகரனைப் பொறுத்தவரை நடப்பது எல்லாமே நம்ப முடியாத காட்சிகளாக இருந்ததால் அவன் எதிலும் படாமல் ஒதுங்கியே இருந்தான்.

உண்மையில் ஸ்ரீதேவி யாரென்று அவனுக்குத் தெரிந்துதானிருந்தது. இருப்பினும் தற்போது தங்களுக்கு முன்பாக நின்றுகொண்டிருப்பவள் எப்போதோ இறந்துபோன ஸ்ரீதேவிதான் என்று நம்ப அவனது மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் நடக்கின்ற சம்பவங்களை வைத்துப் பார்த்தால் இவள் ஸ்ரீதேவிதான் என்று நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. எனவே மௌனமாக இருப்பதுதான் நல்லதென்று நினைத்தான்.

''நான் நாளைக்கே பட்டணத்துக்குப் புறப்படலாம்னு இருக்கிறேன். நான் ரொம்ப நாள் இங்கேயே தங்குறதும் நல்லதாத் தோணலை. காலேஜுக்குப் போகாமலும் இருக்க முடியாது.'' ஸ்ரீகுமார் நீண்ட யோசனைக்குப் பிறகு பேசினார்.



''நீங்க புறப்படுறதுல எனக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஆனால், அதனால அவங்க சும்மா இருக்கமாட்டாங்கங்கிறது உங்களுக்குப் புரிஞ்சா சரி.'' ஸ்ரீதேவியின் குரலில் எச்சரிக்கை தொனித்தது.

அதற்கு ஸ்ரீகுமார் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

''அப்ப நான் கிளம்பட்டுமா?'' - ஸ்ரீதேவி எழுந்தாள். இருளில் நடந்து மறைந்தாள்.

அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்த பிரபாகரன் கேட்டான்,''எனக்கு ஒரு சந்தேகம். நாம தேங்காய் கோடௌன்ல பார்த்த பொண்ணு ஸ்ரீதேவியில்லையே? இது என்ன புதுக் குழப்பம்?

''உண்மைதான். அவள் வேற ஒருத்தி. அவள் கூட ஸ்ரீதேவியின் கட்டுப்பாட்டில இயங்குறவளா இருக்கலாம். அதனால்தான் ஸ்ரீதேவி அங்கேயிருந்து உடனே புறப்பட்டு வந்திருக்கணும்.''

''அப்படியானா மலைவாசிப் பெண் என்ன ஆனாள்?'' - பிரபாகரன் கேட்டான்.

''நிச்சயம் ஏதாவது நடந்திருக்கணும். ஒருவேளை அவளோட உயிருக்கே ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாம்.''

பிரபாகரன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

''நாம பார்த்தது சத்ருசம்ஹார ஹோமம். உண்மையிலேயே அது அசாதாரணமான ஒரு மாந்திரீக வித்தைதான். ஆபத்து நிறைந்ததும்கூட. இப்படிப்பட்ட ஹோமங்கள் வழக்கமா தோல்வியடையறதில்லை. அதனால உடனடியாகவே அவங்க அடுத்த நடவடிக்கையைத் தொடங்கலாம்'' - ஸ்ரீகுமார் அதுவரை நடந்த சம்பவங்களை வைத்து ஒருமுடிவுக்கு வந்தார்.

மறுநாள் காலையில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு வந்த ஜயந்தன், சந்துநாயரின் அருகில் அமர்ந்து எதிராளியை எப்படி மடக்கலாம் என்பதைப்பற்றி யோசித்தார். சத்ருசம்ஹார ஹோமம் தோல்வியடைந்ததை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தனது மாந்திரீக வாழ்க்கையில் முதன் முதலாக ஏற்பட்டிருக்கிற ஒரு தோல்வி. ஆனால், அந்தத் தோல்வியால் அவர் துவண்டுவிட்டார் என்று சொல்ல முடியாது.

அந்த நேரம் மாதவன்குட்டி அங்குவந்து சேர்ந்தான்.

''அவர் வேலை செய்யிற காலேஜுக்கே ஒரு தடவை போயிட்டு வந்தா என்னன்னு நினைக்கிறேன்.'' - மாதவன் குட்டி கேட்டான்.

''என்ன திடீர்னு இப்படியொரு யோசனை? விசேஷமா ஏதாவது நடந்திருக்கா என்ன?'' - சந்துநாயர் கேட்டார்.

''இதோ இந்தச் செய்தியைப் பார்த்தீங்களா?'' - மாதவன் குட்டி கசங்கியிருந்த செய்தித்தாள் துண்டு ஒன்றைக் காட்டியபடி கேட்டான்.

சந்துநாயர் அதை வாங்கிப் படித்தார்.

''இதில் என்ன இருக்கு? காணாமல் போன ஏதோ ஒரு பொருள் திரும்பக் கிடைச்சிருக்குன்னு சொல்லியிருக்காங்க. இதனால நமக்கு என்ன பிரயோஜனம்?'' - சந்துநாயர் சுவாரசியமில்லாதவராகக் கேட்டார்.

''அதில் காணாமப் போயிருந்ததா அவங்க குறிப்பிட்டிருக்கிறது ஒரு எலும்புக்கூடு. இப்பப் புரிஞ்சதா?

''இருக்கட்டுமே, அதனால நமக்கு என்ன?''

''ஏதோ விஷயம் இருக்கும்னு தோணுது. எதுக்கும் நான் போய் விசாரிச்சுப் பார்க்குறேன்.'' - சொல்லிவிட்டு மாதவன் வீட்டுக்குள் நுழைந்தான்.



சற்று நேரத்துக்குள் உடைமாற்றிக் கொண்டு, வெளியே புறப்பட்டான். ஒன்பது மணிக்கு அங்கிருந்து பட்டணம் போகும் பஸ்ஸில் ஏறினான். பின்புறமாக ஏறியிருந்தான் மாதவன்குட்டி. அப்போதுதான் டிரைவர் ஸீட்டுக்கு அருகில் ஸ்ரீகுமார் உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான்.

ஸ்ரீகுமார் காலேஜுக்குத்தான் போகிறார் என்பது புரிந்தது. ஸ்ரீகுமார் எந்த காலேஜில் வேலை செய்கிறார் என்பதே அவனுக்குச் சரியாகத் தெரியாது. பட்டணத்தில் அதை விசாரித்துக் கண்டு பிடிப்பது அவ்வளவு கஷ்டமில்லை என்று நினைத்துத்தான் புறப்பட்டான்.

பஸ், ஸ்டாண்டுக்குள் வந்து நின்றதும் அவசர அவசரமாக இறங்கியவன், ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றான்.

பஸ்ஸிலிருந்து இறங்கிய ஸ்ரீகுமார் அருகில் நின்றிருந்த ஆட்டோ ஒன்றில் ஏறியதும், மாதவன்குட்டியும் மற்றொரு ஆட்டோவில் ஏறிக்கொண்டான்.

''எங்க சார் போகணும்?'' - ஆட்டோ டிரைவர் கேட்டார்.

''அந்த ஆட்டோவை ஃபாலோ பண்ணுங்க'' - மாதவன் குட்டி பதிலளித்தான்.

டிரைவர் மாதவன்குட்டியைச் சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தான். பார்வைக்கு மாதவன்குட்டி ஒரு போலீஸ்காரரைப் போல் தெரிந்ததால் அதன் பிறகு டிரைவர் அவனிடம் எதுவும் கேட்கவில்லை;

ஸ்ரீகுமாரைச் சுமந்து சென்ற ஆட்டோ காலேஜ் வாசலில் அவரை இறக்கிவிட்டது. தொடர்ந்து வந்த மாதவன்குட்டியும் காலேஜ் வாசலில் இறங்கினான். அவன் ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து மீதி வாங்குவதற்குள் ஸ்ரீகுமார் காலேஜுக்குள் போய்விட்டார்.

மாதவன்குட்டி சற்று நேரம் காலேஜ் வாசலிலேயே அப்படியும் இப்படியுமாக உலாவினான்.

சற்று நேரத்துக்குள் வகுப்புகள் தொடங்கிவிட்டதால் காலேஜ் பகுதியில் மனித நடமாட்டம் சுத்தமாக அடங்கி விட்டது.

அன்று போராட்டம் எதுவும் இல்லாத ஒரு நாள் போலும். மாதவன்குட்டி மெதுவாக நடந்து காலேஜ் வாட்ச்மேனை நெருங்கினான்.

''என்னங்க... யாரையாவது பார்க்கணுமா?" - வாட்ச்மேன் கேட்டார்.

''யாரையும் பார்க்கிறதுக்காக நான் வரலை. வேறொரு விஷயத்தைப் பத்தித் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு" - என்றவாறே மாதவன்குட்டி தன்னுடைய சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை வெளியே எடுத்து ஒரு சிகரெட்டை வாட்ச்மேனிடம் நீட்டினான்.

அவரும் அதை வாங்கிக்கொண்டார்.

''நீங்க எக்ஸ் மிலிட்டரிக்காரரா?'' - மாதவன் குட்டி நட்புடன் பேசத் தொடங்கினான்.

''ஆமாம் சார். மிலிட்டரியிலிருந்து வந்த பிறகு உடனேயே இங்க வேலை கிடைச்சுடுச்சு!" - வாட்ச்மேன் பதிலளித்தார்.

''அப்படீன்னா உங்களுக்கு ரெண்டு வருமானம்னு சொல்லுங்க" -மாதவன்குட்டி சிகரெட்டைப் பற்றவைத்தபடி கேட்டான்.

''ஆமாம்... நீங்க எதையோ தெரிஞ்சுக்க வந்ததாச் சொன்னீங்களே?"

''முதல்ல நான் யாருன்னு உங்களுக்குப் புரிஞ்சிருக்கணுமே. மிலிட்டரிக்காரருக்குத் தெரியாமலா இருக்கும்?"-மாதவன்குட்டி சிரித்தபடி கேட்டான்.

''தெரியாம என்ன சார்? ஆனா ஸ்டேஷன் எதுன்னுதான் தெரியலை. எல் அண்டு ஓவா, க்ரைமா சார்?"



தன்னுடைய நடிப்பு பலித்து விட்டது என்பது மாதவன் குட்டிக்கு உறுதியாகத் தெரிந்தது, வாட்ச்மேன் தன்னை ஒரு போலீஸ்காரர் என்றே நம்புவது தெரிந்தது. அதுவும் நல்லதுக்குத் தான் என்று தோன்றியது.

''எனக்கு ஒரு காரியம் தெரியணும். க்ரைம் பிராஞ்ச்சிலேர்ந்து தான் வர்றேன்."

''என்ன விஷயம் தெரியணும் உங்களுக்கு?"

''எலும்புக்கூடு ஒண்ணு காணாமல் போச்சே. அதைப் பத்தித்தான்!"

''ஓ... அதுவா... அது ஒரு அதிசயமான கதை. அது திரும்பக் கிடைச்ச பிறகும் என்னென்னவோ சந்தேகங்களைச் சொல்றாங்க!

''என்ன சந்தேகமாம்?" - மாதவன்குட்டி கவனத்துடன் வாட்ச்மேனைப் பார்த்தான்.

''முதல்ல எலும்புக்கூடு காணாமப் போச்சுங்கிற செய்தி பத்திரிகைகள்ல வந்தது, வேறொரு காலேஜ்ல இருந்துதான். அங்க வெறும் மண்டையோடு மட்டும்தான் இருந்ததாம். இங்க வந்து பரிசோதனை பண்ணிட்டு, இங்க இருக்கிற எலும்புக்கூடு அந்த மண்டையோடதுதான்னு சொன்னாங்க. அப்புறம் பார்த்தா எங்க காலேஜ்ல இருந்த எலும்புக்கூட்டுக்கு மண்டையோடு இல்லைங்கிற செய்தி வெளியே வந்தது.

''அப்புறம் என்னாச்சு?" மாதவன்குட்டிக்கு அது மிகவும் சுவாரசியமானதாக இருந்தது.

''காணாமப்போன தலை திரும்பக் கிடைச்சுடுச்சு."

''அப்படீன்னா, அந்த காலேஜ்ல இருந்த மிச்ச எலும்புக் கூடெல்லாம் திரும்பக் கிடைச்சிடுச்சா?"

''அது போனது போனதுதான். இதுவரைக்கும் கிடைச்சதா தகவல் இல்லை!"

''அப்ப இதுல வேற என்னவெல்லாமோ பிரச்சனை இருக்கு. கண்டுபிடிக்க வேண்டியதுதான்!'' -மாதவன்குட்டி தனக்குத் தானே பேசுவது போல் பேசிக்கொண்டான்.

''யாருக்குத் தெரியும்?'' வாட்ச்மேன் சலித்துக் கொண்டார்.

''அப்படீன்னா... நான் அந்த காலேஜுக்கும் ஒரு நடை போயிட்டு வரணும். அங்கேயும் விசாரிச்சாக வேண்டியிருக்கே.'' என்ற மாதவன் குட்டி அங்கிருந்து நடையைக் கட்டினான்.

## 16

மாதவன்குட்டி அந்த காலேஜை ஒரு தடவை சுற்றி வந்தான். சற்று நேரத்துக்குள் காலேஜுக்குள் ஏதோ ஓர் இரைச்சல் கேட்டது. மாணவ மாணவியர் கூட்டம் கூட்டமாக வகுப்பு அறைகளிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்தனர்.

பெருங்குரலில் அவர்கள் என்னமோ கோஷம் போட்டபடி வந்தனர்.

மாணவர்கள் போராட்டத்தைத் தொடங்கி இருக்கிறார்கள் என்பது புரிந்தது.

''எலும்புக்கூட்டைத் திருடியது யார் என்பது தெரிய வேண்டும்!'' கல்லூரி நிர்வாகமே உடனே கண்டுபிடி... கோஷங்களில் இதுவும் ஒன்று.

அதைக்கேட்டதும் மாதவன்குட்டிக்கு அந்த விஷயத்தில் சுவாரசியம் ஏற்பட்டது.

''பிரின்ஸ்பால்தான் இதற்குப் பொறுப்பு. எலும்புக் கூட்டை அவர் யாருக்காவது விற்றுவிட்டாரா என்பது தெரிய வேண்டும்.'' -நிமிடத்துக்கு நிமிடம் கோஷங்களின் வடிவம் மாறிக்கொண்டிருந்தது.



''எலும்புக்கூடு எங்கே?''

''கண்டுபிடிப்போம்... கண்டுபிடிப்போம் எலும்புக் கூட்டைக் கண்டுபிடிப்போம்.

இந்த கோஷங்களுடன் கேட்ட மற்றொரு கோஷம் மாதவன்குட்டியைக் கவர்ந்தது.

''எலும்புக் கூடு கிடைக்கவில்லையென்றால் பிரின்ஸ்பாலின் எலும்புக்கூட்டை வெளியே எடுத்துத் தொங்கவிடுவோம்!''

இதைத் தொடர்ந்து மாணவர்களின் மத்தியில் சிரிப்பு அலை உயர்ந்தது. கடலின் இரைச்சலைப் போல் இருந்தது அவர்களின் சிரிப்பு.

யாரோ ஒரு கெட்டிக்கார மாணவனது ஐடியாவில் சட்டென்று எழுந்த கோஷம் அது. எல்லோருக்கும் அது மிகவும் பிடித்துப்போனது. அதனால் நீண்ட நேரத்துக்கு அதுவே தொடர்ந்தது.

சற்று நேரத்துக்குள் மாணவர்கள் காலேஜ் காம்பௌண்டை விட்டு வெளியேறி ரோட்டுக்கு வந்தனர். அவர்களது வேகத்தைப் பார்த்தால், நேராக இன்னொரு காலேஜை நோக்கித்தான் செல்கிறார்கள் என்பது புரிந்தது.

மாணவர்கள் வெளியேறிவிட்டதால் வாட்ச்மேன் ஒவ்வொரு அறையின் கதவு மற்றும் ஜன்னல்களையும் மூடத் தொடங்கினார்.

அவர் தனது வேலைகளை முடித்துக்கொண்டு வரும் வரையில் மாதவன்குட்டி அங்கேயே காத்திருந்தான்.

திரும்பி வந்த வாட்ச்மேன் மறைவாக இருந்த தூண் ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்து பீடி ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

மாதவன்குட்டி அவரை நெருங்கினான்.

''என்னங்க பிரச்சினை? மொத்தப் பேரும் குரல் கொடுத்துட்டுப் போறாங்களே?'' - மாதவன்குட்டி கேட்டான்.

வாட்ச்மேன் அவனை தலைமுதல் பாதம் வரை ஒரு தடவை பார்த்தார்.

"நீங்க எங்கேயிருந்து வர்றீங்க? போலீஸ்காரரா என்ன?" - வாட்ச்மேன் சந்தேகத்துடன் கேட்டார்.

''அதெல்லாம் கிடையாது. சாதாரணமான ஒருத்தன் தான்!" - மாதவன் நட்பை வேண்டிச் சிரித்தபடி பேசினான்.

''யாராயிருந்தா என்ன? கேட்டுட்டீங்க சொல்லிடுறேன்..." என்றபடி அங்கு நடந்ததை விவரித்தார்.

''இங்கேயிருந்து காணாமல்போன எலும்புக்கூடே இல்லையாம். அங்க இருக்கிறது இந்த மண்டையோட்டோட எலும்புக்கூடுதான்னு போலீஸ்காரங்க சொன்னதா பேப்பர்ல நியூஸ் வந்திருந்ததே!" - மாதவன் கேட்டான்.

பரிசோதனை சரியா இருக்கலாம். அதனால பிரயோஜனம் இல்லேங்கிறதும்தான் தெரிஞ்சுபோச்சே!'' - வாட்ச்மேன் கூறினார்.

''இருக்கலாம், ஆமா இங்க இருந்த எலும்புக்கூடு எப்படிக் காணாமல் போச்சு? சாவியையும் நீங்கதானே வச்சிருப்பீங்க? என்னைக்காவது அசதியில கண்ணை மூடிட்டீங்களோ என்னவோ?"

''தூங்கினதா எனக்கு ஞாபகம் இல்லை. ஒருவேளை அப்படியே தூங்கியிருந்தாலும் ஒரு சின்னச் சத்தம் கேட்டாக்கூட விழிச்சுடுறவன், யோசிச்சுப் பார்த்தா, எலும்புக்கூடு காணாமல் போன அன்னிக்கு நான் அடிச்சுப்போட்ட மாதிரி தூங்கிட்டேன்னு நினைக்கிறேன். அப்படித்தான் இருக்கணும்." வாட்ச்மேன் கூறினார்.

''அப்ப, எலும்புக்கூட்டை யாரோ திருடியிருக்க வாய்ப்பு இருந்ததுங்குறீங்க!" - மாதவன்குட்டி கேட்டான்.



''இருந்திருக்கலாம். எதையும் உறுதியாச் சொல்ல முடியலை. இந்தப் பசங்களையும் கலபத்துல நம்ப முடியாது. ஒருவேளை அவங்களே கூட எலும்புக்கூட்டை எங்கே யாவது ஒளிச்சுவெச்சுட்டு பிரின்ஸ்பாலை மாட்ட வைக்கத் திட்டம் போட்டிருக்கலாம்."

''நீங்க சொல்றபடி பார்த்தா திறந்த பூட்டு திறந்தபடிதானே கிடக்கணும். நீங்க பார்த்தபோது பூட்டு, பூட்டினபடிதானே இருந்திருக்கு?" - மாதவன்குட்டி கேட்டான்.

அப்போதுதான் வாட்ச்மேன் அதைப்பற்றி முதன் முறையாக யோசித்தார். அப்படியானால் அந்த எலும்புக்கூடு எப்படிக் காணாமல் போயிருக்கும்? அது மட்டும் யாருக்கும் தெரியவில்லை.

தான் சேகரித்த விஷயங்களுடன் மாதவன்குட்டி ஊருக்குத் திரும்பி வந்தான். தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் அப்பா மற்றும் ஜயந்தனிடம் விவரித்தான்.

ஜயந்தன் அதைப்பற்றி எவ்வளவோ யோசித்தார். தலை புண்ணாவதுவரை யோசித்தார். அதுவரையிலான அவரது மாந்திரீக அனுபவத்தை வைத்துக்கூட அவரால் ஒரு விடையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடைசியில் அவரால் ஒரு முடிவுக்குத்தான் வரமுடிந்தது.

''இதிலேர்ந்து என்னால ஒரே ஒரு அனுமானத்துக்குத்தான் வரமுடியுது; இதுவரைக்கும் நடந்திருக்கிறதை வெச்சுப் பார்த்தா, நமக்கு எதிரா இருக்கிற சக்தி, ரொம்பவும் பலம் வாய்ந்ததுங்கிறது உண்மை" -ஜயந்தன் கூறினார்.

''எப்படி இந்த முடிவுக்கு வந்தீங்க?" -சந்துநாயர் கேட்டார்.

''இதுவரைக்கும் நாம கேள்விப்பட்டிருக்கிற ஆவி, பிசாசு பற்றின விஷயங்கள் அரூபமானது மட்டும்தான். ஆனால், இப்பத்தான் முதல் தடவையா உடம்பு இருக்குற இப்படிப்பட்ட

ஆவிகளைப்பத்திக் கேள்விப்படுகிறோம். அதனாலதான்..." - ஜயந்தன் கூறினார்.

"நீங்க சொல்றதைப் பார்த்தா அந்தப் பிசாசு ஸ்தூல வடிவமானது. அதாவது உடம்போட இருக்குன்னு அர்த்தமாகுது இல்லையா?" சந்துநாயர் பீதி நிறைந்தவராகக் கேட்டார்.

"உண்மைதான். அதாவது தங்கள் தேவைக்கு ஏற்ற மாதிரி வடிவம் மாறுறதுக்காக இதெல்லாம் எலும்புக்கூட்டைப் பயன்படுத்திக்கும்னு தோணுது. அதிலேயும் ஒரு சிக்கல் இருக்கு, அதாவது இந்தச் செயலுக்கும் வேறொருத்தரோட உதவி தேவை."

"ஒருவேளை நம்ம காலேஜ் வாத்தியார் அதுக்கு உதவியிருக்கலாம்."

"அப்படித்தான் இருக்கணும்."

"விஷயம் தெரிஞ்சுட்டதால காரியம் சுலபமாயிடும் இல்லையா?"

"இதுவரைக்கும் நாம பேசினது வெறும் அனுமானமாத்தான். முதல்ல அது உண்மைதானான்னு கண்டுபிடிப்போம்" -ஜயந்தன், சந்துநாயருக்கு ஆறுதல் கூறினார்.

ஜயந்தன் யோசனையில் ஆழ்ந்தார்.

'நாம் நினைக்கிறபடியே நடந்திருந்தால்கூட அந்த ஆவிக்கு வலுவேற்ற நிச்சயமாக வேறு யாராவது ஒருவர் உதவிக்கொண்டிருக்கலாம். அந்த ஒருவர் யார்?'

ஜயந்தன் ராசிப்பலகையைப் பயன்படுத்தத் தீர்மானித்தார். எனவே, நில(குத்து)விளக்கை எடுத்து வருமாறு கூறினார்.

பையிலிருந்து ஆவணிப் பலகையை வெளியே எடுத்தார். சோழிகளைப் பரப்பினார்.

பிரஸ்னம் (சோழி ஜோதிடம்) பார்க்கத் தொடங்கினார்.

"இந்த நேரம் நமக்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது. அதாவது, பிரேதப் பிசாசுகள் வெளியேறக்கூடிய நேரமல்ல இது.



35547
5305260

குறிப்பிட்ட நேரம் வரையில் அவையெல்லாம் தேவியின் கோயிலில்தான் இருக்கவேண்டும். அதனால் தற்போதைக்கு நாம் அதைப்பற்றிப் பயப்படத் தேவையில்லை! - ஜயந்தன் மகிழ்ச்சியுடன் பேசினார்.

பிரஸ்னத்தைத் தொடர்ந்துகொண்டிருந்த அவரது முகம் சற்று நேரத்துக்குள் பிரகாசமடைந்தது.

அந்த ஆள் யாரென்று கண்டுபிடித்து விட்டதைப் போல் அவரது மனம் குதூகலித்தது.

"இங்கே பக்கத்திலேயே எங்காவது தேவி கோயில் இருக்கிறதா என்ன?" - ஜயந்தன் கேட்டார்.

"இருக்கே!" சந்துநாயர் பதிலளித்தார்.

"உடனடியா நாம அங்க போக முடியுமா?" ஜயந்தன் கேட்டார்.

"இந்த நடுராத்திரியிலயா?" சந்துநாயர் பயத்துடன் கேட்டார்.

"எந்த நேரமா இருந்தா என்ன? நான்தான் கூடவே இருக்கிறேனே!" பேசிய ஜயந்தன் சோழிகளை வாரி பைக்குள் போட்டார்.

"மாதவன்குட்டி, வா... புறப்படலாம்!" சந்துநாயர் அழைத்தார்.

மாதவன்குட்டி டார்ச்லைட்டை எடுத்துக்கொண்டான். மூவரும் தேவி கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

ஒற்றையடிப் பாதையில் பயணத்தைத் தொடர்ந்த அவர்கள் விரைவிலேயே கோயிலிருக்கும் குன்றின் அடிவாரத்தை அடைந்தனர்.

மிகவும் மங்கலான வெளிச்சம் அந்த பிராந்தியத்தைச் சூழ்ந்திருந்தது.

மூவரும் படிக்கட்டுகளில் ஏறி குன்றின் மேற்புறம் வந்தனர். கோயில் பகுதி ஆளரவமற்றிருந்தது.

வடகிழக்குப் பகுதியில் பரவிப் படர்ந்தபடி நின்றிருந்த யக்ஷிப்பாலை (பாலை மரத்தில் மோகினிகள் குடியிருக்கும் என்பது ஒரு நம்பிக்கை. எனவே அப்படிப்பட்ட பாலை மரத்தை யக்ஷில் (மோகினி) பாலை என்பர்.) மொத்த இருட்டையும் ஏற்று வாங்கி ஒதுங்கி நின்றுகொண்டிருந்தது.

கீழிருந்து வரும் படிகளின் உச்சியில் வலதுபுறம் பெரிய ஆலமரம் ஒன்று நின்றுகொண்டிருந்தது.

ஓர் இலைகூட அசையாத - காற்றே இல்லாத சூழ்நிலை.

''நீங்க இப்படியே நில்லுங்க. நான் இதோ வநதிடுறேன்'' - ஜயந்தன் கருவறையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

கருவறைக்குச் செல்லும் படிக்கட்டின் இடதுபுறத்தில் மூன்று சிலைகள் இருந்தன.

ஜயந்தன் டார்ச்லைட்டை எரியவிட்டு சிலைகள் ஒவ்வொன்றையும் பரிசோதித்தார். மூன்று சிலைகளில் நடுவிலிருந்த சிலையைப் பார்த்த ஜயந்தனின் நெற்றி சுளிவடைந்தது.

மிகவும் அழகாக இருந்த அந்தசிலைக்கு மட்டும் ஏதோ அபரிமிதமான சக்தி இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

ஒருதடவை சுற்றுமுற்றும் பார்த்த ஜயந்தன், தனது வலது கையை அந்தச் சிலைக்கு நேராக நீட்டினார்.

சட்டென்று எதுவோ ஒன்று உடைந்து நொறுங்கும் சத்தம் பின்புறத்திலிருந்து கேட்டது. அதைத் தொடர்ந்து ''ஐயோ'' என்ற அலறலும் எழுந்தது. ஜயந்தன் உடனே சத்தம் கேட்ட திசையை நோக்கி ஓடினார்.

''சீக்கிரம்.... சீக்கிரம்....'' சந்துநாயர் கீழே விழுந்துகிடந்த ஆலமரக் கிளை ஒன்றை இழுத்து விலக்க முயன்றவராகப் பதற்றத்துடன் பேசினார்.



அங்கு வந்து சேர்ந்த ஜயந்தனும் சந்துநாயருடன் சேர்ந்து ஆலமரக் கிளையை இழுத்தார்.

கிளையின் அடிப்புறத்தில் மாதவன்குட்டி மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தான்.

மரத்தின் மேற்புறத்திலிருந்த பிளந்து கொண்டு விழுந்த ஆலமரக்கிளை மாதவன்குட்டியின் உச்சந் தலையில் விழுந்தது தான் காரணம்.

ஒருவழியாக அந்தக் கிளையை இழுத்து அப்புறப் படுத்தினார்கள்.

சட்டென்று காற்று பலமாக வீசியது. எதிர்பாராத ஒரு சூறாவளிபோல் எழுந்த அந்தக் காற்றில் கீழே கிடந்த ஆலமரக் கிளை குன்றின் மேற்புறமாக மேற்கு நோக்கி விர்ரென்று பறந்துபோனதை அவர்கள் கவனித்தனர்.

அத்துடன் நிற்காத காற்று தரையில் உதிர்ந்து உலர்ந்து போயிருந்த சருகுகளை வாரிக்கொண்டு போய் மாதவன் குட்டியின் உடலை மூடியது. சருகுகளுடன் உருளத் தொடங்கிய மாதவன்குட்டி கருவறை வாசலுக்கு வந்து சேர்ந்தான்.

மற்ற இருவரும் என்ன ஏதென்று நிதானிப்பதற்குள் மாதவன்குட்டியின் உடல், அங்கிருந்து கீழ்ப்புறமாக உருளத் தொடங்கியது. கோயிலின் காம்பௌண்ட்டைத் தாண்டியதும் மாதவன்குட்டியின் உடம்பு அசைவற்றுப் போனது.

சந்துநாயருக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் பிரம்மை பிடித்தவரைப்போல் பார்த்துக்கொண்டிருந்தார்.

''நீங்க இங்கேயே இருங்க. நான் போய் என்ன ஏதுன்னு பார்த்துட்டு வர்றேன். இவ்வளவு தூரம் வந்த பிறகு அப்படியே விட்டுட்டுப் போயிட முடியுமா என்ன?'' ஜயந்தன் அவமானம் கலந்த தோல்வியால் எழுந்த கோபத்துடன் படிக்கட்டுகளை மிதித்துக்கொண்டு மேற்புறமாக முன்னேறினார்.

## 17

மிகவிரைவிலேயே ஜயந்தன் கருவறை வாசலுக்கு வந்தார். கருவறைக் குள் நுழையவும் செய்தார்.

தான் ஏற்கெனவே கவனித்திருந்த சிலையை எடுத்துக்குளத்தில் வீசி எறிந்து விடுவது என்கிற முடிவுடன்தான் அங்கு வந்து சேர்ந்தார்.

ஆனால், அவர் அங்கு வந்து சேர்ந்தபோது கண்ட காட்சி வேறொன்றாக இருந்தது. கருவறையின் கதவு விரியத் திறந்து கிடந்தது.

கருவறையின் வெளியே இருந்த மூன்று சிலைகளும் மாயமாக மறைந்துவிட்டிருந்தன. வேண்டுமென்றே யாரோ சட்டென்று ஒளித்து வைத்ததுபோல் அவை இருந்த இடம் காலியாக இருந்தது.

''ஓகோ... உங்கள் வழி அதுதான் என்றால் அதையே நானும் தொடர்கிறேன்.'' - ஜயந்தனது உதடுகள் மந்திரிப்பது போல் முணுமுணுத்துக்கொண்டன. அவரது புருவக் கொடிகளின் முனைப்பகுதி மேற்புறமாக உயர்ந்தன.

அவர் கருவறை வாசலை அடைந்து வலது காலை உட்புறமாக எடுத்து வைக்க முயன்ற போது ஏதோ சீறுவது போன்ற சத்தம் கேட்டது. ஊன்றிப் பார்த்தார். பெரிய நாகம் ஒன்று படம் உயர்த்தியபடி தலையை மெதுவாக ஆட்டிக் கொண்டிருந்தது.

ஆனால், ஜயந்தன் அதைப் பொருட்படுத்தவில்லை. தனது இடது காலை ஒரு புறமாகச் சாய்த்தபடி பாம்பின் தலைக்கு மேல் கொண்டு சென்றவர் சட்டென்று அதன் கழுத்தைப் பிடித்தார். மகா மாந்திரீகரான அவரைப் பொறுத்தவரை அந்தப் பாம்பு பிரச்சினைக்கு உரிய ஒன்றாக இருக்கவில்லை.



பாம்பைப் பிடித்திருந்த கையை உயர்த்தியவர் ஒரு சுழற்றுச் சுழற்றி விசையுடன் பாம்பை வெளிப்புறம் எறிந்தார்.

ஒரு கயிறு போல் நீண்டு சென்ற பாம்பு கருவறைக்கு எதிரிலிருந்த ஆலமரத்தின் கிளையில் செருகிக்கொண்டு நின்றது.

ஜயந்தனின் முகத்தில் புன்னகை ஒன்று அரும்பியது. தான் ஓர் எட்டு முன்னேறியதாக அவர் மனம் கணக்கிட்டது. தொடர்ந்து தனக்கு வெற்றிதான் என்றும் நினைத்தார்.

கருவறைக்குள் எந்தவித எதிர்ப்புமின்றி நுழைந்தவர் தேவியின் சிலைக்குப்பின்னால், தான் சற்று முன்பு பார்த்த மூன்று சிலைகளும் இருப்பதைக் கவனித்தார். அவற்றில் நடுவில் இருப்பதுதான் அவர் தேடி வந்த சிலை!

ஒன்று, அந்தச் சிலையை எடுத்து ஏறத்தாழ பாழடைந்து போன கோயில் குளத்துகுள் எறிந்துவிட வேண்டும். அல்லது வேறு முறையில் அதாவது தூள்தூளாக அதை உடைத்து நொறுக்க முடிந்தால் அப்படியே செய்துவிடுவது என்பது அவரது திட்டம். ஆக்ரோஷத்துடன் சிலையைப் பிடிக்கக் கை நீட்டினார்.

ஸ்ரீதேவியின் இடது புறத்திலிருந்த சூலம் மெதுவாக இருந்த இடத்திலிருந்து அசையத் தொடங்கியது. ஒரு புறமாகச் சரிந்து வந்த சூலம் ஜயந்தனின் வலது கையைத்தொட்டது.

கையில் ஏதோ நெருப்புப்பட்டதைப்போல் உணர்ந்த ஜயந்தன், பார்வையைத் திருப்பியபோது நெருப்பில் கனிந்தது போலிருந்த சூலத்தைக் கவனித்தார். அதைப் பிடிப்பதற்காக ஜயந்தன் முயன்றார். ஆனால், அவரால் முடியவில்லை.

சூலத்தை அப்புறப்படுத்தாமல் தான் விரும்பும் சிலையை எடுக்கவும் முடியாது. சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த ஜயந்தன் வேறுவழியின்றிப் பின்வாங்கினார்.

அவர் அடிவாரம் வருவதற்குள் சந்துநாயர் ஆட்களை வரவழைத்து, மாதவன் குட்டியின் உடம்பை வீட்டுக்கு எடுத்துப் போயிருந்தார்.

மாந்திரீகரான ஜயந்தனைப் பொறுத்தவரை இந்தச் சம்பவம் மகத்தான ஒரு தோல்விதான். இருப்பினும் இதிலிருந்து முற்றிலுமாக ஒதுங்கவோ, பின்வாங்கவோ அவர் தயாராக இருக்கவில்லை.

மாதவன்குட்டியின் உடம்புக்கு முறைப்படியான சடங்குகள் செய்யப்பட்டு, எரிக்கப்பட்டது.

செய்தியை அறிந்த பிரபாகரன் அளவுக்கு அதிகமாகப் பயப்படத் தொடங்கினான்.

ஸ்ரீகுமாருக்கு உறுதுணையாக நின்று தன்னை எதிர்ப்பது அவன்தான் என்பது சந்து நாயருக்கு நன்றாகவே தெரியும். தனது மகன் இறந்துபோனதால் அதற்கான முழுப் பொறுப்பும் அவர்கள் இருவரும்தான் என்று நினைத்த சந்து நாயர் அவர்களைப் பழிவாங்க முன்னிலும் அதிக தீவிரம் கொண்டார்.

ஓர் எச்சரிக்கையாக முதலில் ஸ்ரீகுமாரைத் தொலைத்துக் கட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற முடிவுக்கு வந்தார்.

**கா**லேஜுக்கு வந்து சேர்ந்த ஸ்ரீகுமார் உடனே பிரபாகரனையும் வரவழைத்துத் தன்னுடன் தங்கவைத்துக் கொண்டார்; இந்தச் சூழ்நிலையில் அவனைக் கிராமத்திலேயே விட்டுவைப்பது நல்லது அல்ல என்பது அவருக்கே நன்றாகத் தெரிந்தது.

சந்துநாயர் நிச்சயமாகப் பழிவாங்க முற்படுவார் என்பது ஸ்ரீகுமாருக்குத் தெளிவாகவே தெரிந்தது.

இதைக் குறித்து மிகவும் அதிகமாக விவாதித்த சந்து நாயரும், அவரது மூன்று மகன்களும் 'பழிக்குப் பழி' வாங்குவது என்று சபதம் செய்தனர்.

தங்களது தீர்மானத்தையும் ஜயந்தனிடம் தெரிவித்தனர். தன்னுடைய நோக்கமும் அதுவே என்பதால் தன்னால் முடிந்த



மட்டும் அதை நிறைவேற்றியே தீருவதாக அவரும் உறுதி அளித்தார்.

''அந்த காலேஜ் வாத்தியாரை எப்படியாவது தொலைத்துக்கட்டி விட்டால் உங்களுக்கு நிம்மதியாகிவிடும் இல்லையா? அதை என்னிடம் விட்டுவிடுங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்'' - ஜயந்தனது வார்த்தைகள் அவர்களுக்கு நம்பிக்கையளித்தன.

''இப்போதைய சூழ்நிலையில் அந்த ஆளைக் கொல்வது மட்டுமே பிரயோஜனமான காரியமாகத் தெரியவில்லை. அவருக்குப் பின்னணியில் யாரெல்லாமோ இருக்கிறார்கள். அதனால் அவர்களையெல்லாம் முதலில் செயலிழக்கச் செய்தால் தான் வாத்தியாரைக் கொல்ல முடியும். அதுதான் பாதுகாப்பானதும் கூட'' - சந்துநாயரின் இரண்டாவது மகன் கிருஷ்ணன்குட்டி கூறினான்.

''அப்படியே செய்யலாம். நான் அவ்வளவு கலபத்தில் தோல்வியை ஒப்புக்கொண்டதே இல்லை'' - ஜயந்தன் உறுமினார்.

பிரபாகரன் வந்து சேர்ந்ததால் ஸ்ரீகுமார் தனது வழக்கமான லாபரெட்டரி இருப்பிடத்தை மாற்றிக்கொண்டு, தனியாகவே வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்திருந்தார்.

இப்போது கல்லூரி நேரத்தைத் தவிர மற்ற சமயம் முழுவதும் தனது பொழுதை ஸ்ரீகுமார் வாடகை வீட்டில்தான் செலவழித்தார்.

அன்றும் தனது வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்படத் தொடங்கினார். ஸ்ரீகுமார் கேட்டை நெருங்கியபோது லேபரெட்டரியைப் பூட்ட மறந்து விட்டோம் என்பது நினைவுக்கு வந்தது. மறதியை நொந்து கொண்டவராக லேபரெட்டரிக்குத் திரும்பினார்.

வெறுமனே முக்கால்வாசி சாத்தப்பட்டிருந்த கதவுகளை இழுத்து மூட முற்பட்ட சமயத்தில் லேபரெட்டரிக்குள் ஏதோ சத்தம் கேட்பதை ஸ்ரீகுமார் உணர்ந்தார்.

'இந்த நேரத்தில் லேபரெட்டரிக்குள் யாருக்கும் எந்த வேலையும் இல்லை. அப்படியானால் உள்ளே இருப்பது யாராக இருக்கும்?' என்று ஒருவினாடி யோசித்தார்.

மூடப்போன கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்.

ஸ்டோர் ரூம் பக்கம் ஏதேதோ அசையும் சத்தம் கேட்டது. தொடர்ந்து ஏதோ ஒன்று தரையில் விழுந்து உடையும் சத்தம்...

எலியோ, பூனையோ ஓடினால் தவறி விழுந்து உடைவது மாதிரியான சத்தமல்ல அது. யாரோ வேண்டுமென்றே வீசி எறிந்து உடைத்தது மாதிரியான சத்தம். அதுவும் கோபத்தில் விசையுடன் வீசி எறிந்தது போன்ற சத்தம்.

ஸ்ரீகுமார் ஸ்டோர் ரூமுக்கு வந்தார். சுவிட்சைத் தடவி லைட்டை எரிய வைக்க முயன்றார். பல்பு எரியவில்லை. அப்போதுதான் அங்கிருந்த பல்பு மாதக் கணக்கில் எரியாமல் இருப்பது ஞாபகம் வந்தது. கதவை ஒட்டியிருந்த பகுதியில் மட்டும் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது.

அந்த அறையிலிருந்து எதையாவது எடுக்க வேண்டுமானால் இரவு நேரத்தில் மெழுகுவத்தி எடுத்துச் செல்ல வேண்டும். பகல் நேரமானால் கிழக்குப் புறமிருக்கிற ஜன்னலைத் திறக்கவேண்டும்.

இப்போது மணி ஆறுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

மேற்குத் திசையில் ஜன்னல் எதுவும் இல்லை.

ஸ்ரீகுமார் வழக்கமாகத் தான் படுத்திருந்த இடத்துக்கு வந்தார். அங்கு மேஜைமீது மெழுகுவத்தி இருக்கும்.

தீப்பெட்டியைத் தேடி எடுத்து ஒரு குச்சியை உரசி ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தார்.



அங்கிருந்து வெளியே வந்தபோது மீண்டும் உள்ளேயிருந்து எதையோ போட்டு உடைக்கும் சத்தம்கேட்டது.

''யாரோ உள்ளே இருக்கவேண்டும்!'' ஸ்ரீகுமார் சந்தேகத்துடன் மீண்டும் உள்ளே நுழைந்தார்.

இரண்டு எட்டு எடுத்து வைப்பதற்குள் காலில் எதுவோ தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தபோது விலை உயர்ந்த 'கிப் ஆப்பரேட்டஸ்' என்கிற உபகரணம் ஒன்று உடைந்து கிடந்தது. அங்கிருந்து நகராமல் சுற்றுமுற்றும் ஊன்றிக் கவனித்தார். வேறு சில கண்ணாடிக் குடுவைகளும் உடைந்து தரையெங்கும் கண்ணாடித் துண்டுகள் பரவிக்கிடந்தன.

அவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே மற்றொரு பகுதியில் எதுவோ ஒன்று விழுந்து உடைபடும் சத்தம் கேட்டது.

''யாரது?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

ஆனால், யாரும் பதில் குரல் கொடுக்கவில்லை.

யாரோ அறைக்குள் இருப்பது உறுதி. ஆனால், அந்த உருவத்தைத் தன்னால் பார்க்க முடியவில்லை.

''யாரது? மரியாதையா உண்மையைச் சொல்லிடுங்க இல்லேன்னா...'' ஸ்ரீகுமாருக்குச் சட்டென்று ஒருயோசனை தோன்றியது.

அந்த அறையிலிருந்து வெளியே வந்த குமார், வெளியிலிருந்து பல்பு ஒன்றைக் கழற்றினார். ஸ்டோர் ரூமுக்குள் ஸ்டூலைப் போட்டு, ஹோல்டரில் பல்பைப் பொருத்திவிட்டு சுவிட்சைப்போட்டார்.

அந்த அறை முழுவதும் ஒளி பரவியது.

அப்போதும் அந்த அறைக்குள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

இருப்பினும் யாரோ ஸ்டோர் ரூமுக்குள் சுற்றி வருவது புரிந்தது. உருவமில்லாத அருவமான ஒன்றா?

'யாரது?' மறுபடி கேட்டார்.

"... .... ..."

ஸ்ரீகுமார் மிகவும் கவனத்துடன் ஒவ்வொரு பகுதியையும் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது நெருக்கத்தில் ஒருவர் மிகவும் சிரமப்பட்டு நடந்து செல்வது போன்ற சத்தம் கேட்டது. அப்படித் தோன்றியதற்குக் காரணம் அவருக்கு அருகிலிருந்த கண்ணாடி அலமாரிகளில் இருந்த கண்ணாடிப் பொருட்கள் அசைந்து ஒலியெழுப்பியதால்தான்.

சட்டென்று ஸ்ரீகுமாரின் பார்வை மேற்குப்புற பீரோவில் பூட்டியிருக்கிற கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் வைத்திருக்கும் ஆசிட் குடுவைகளின் பக்கம் திரும்பியது.

மிகவும் சக்தி வாய்ந்த சல்ஃப்யூரிக், ஹைட்ரோ குளோரிக் போன்ற ஆசிட்டுகள் அதற்குள் இருந்தன.

'அசைவு தெரிந்த பகுதியை நோக்கி ஒருஆசிட் பாட்டிலை வீசியெறிந்தால் என்ன? என்று ஸ்ரீகுமார் நினைத்தார். எனவே மெதுவாக ஸ்டூலிலிருந்து இறங்கினார்.

கண்ணாடி அலமாரியின் சாவி அதை ஒட்டியிருந்த சுவரில் ஆணியடித்து மாட்டப்பட்டிருந்தது.

சாவியை எடுத்து அலமாரியைத் திறந்தார்.

பாதி ஆசிட் இருந்த ஒரு பாட்டிலை வெளியே எடுத்தார். அப்போது தன்னையும் அறியாமல் எலும்புக்கூடு தொங்க விடப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டியின் பக்கம் அவரது பார்வை திரும்பியது.

"என்ன!" ஸ்ரீகுமார் வியப்புடன் குரல் எழுப்பினார்.

## 18

அன்று காலையில்கூட எலும்புக் கூட்டை வெளியே எடுத்து மாணவர்களுக்கு விளக்கியது ஸ்ரீகுமாருக்கு ஞாபகம் வந்தது.

ஆனால்... என்ன அதிசயம்!

அந்த எலும்புக்கூடு இப்போது கண்ணாடிப் பெட்டிக்குள் இல்லை. மாயமாக மறைந்து விட்டிருக்கிறது.

ஸ்ரீதேவியின் எலும்புக் கூட்டுக்குப் பதிலாக கோணிப் பையில் கட்டிவைத்திருந்த எலும்புக்கூடும், பிற்பாடு ஸ்டோர் ரூமிலிருந்து கிடைத்த மண்டையோட்டையும் இணைத்துத் தொங்கவிட்டிருந்ததுதான் அந்த எலும்புக்கூடு.

அந்த எலும்புக்கூடு காணாமல் போயிருக்கிறது.

அதற்குப் பதில் இப்போது ஸ்டோர் ரூமுக்குள் ஏதேதோ அசைவுகள் தென்படுகின்றன.

அப்படியானால், காணாமல்போன எலும்புக் கூட்டின் உரிமையாளர்தான் இப்போது இந்த அறைக்குள் இதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறதா? ஸ்ரீகுமார் யோசனையில் ஆழ்ந்தார்.

விஞ்ஞானத்துக்கு அறைகூவல் விடுப்பது மாதிரிதான் ஒவ்வோர் அனுபவமும் இருக்கிறது. தன்னுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்டவற்றைச் சந்திக்க நேருமென்று ஒருபோதும் அவர் கருதியதில்லை.

இதுவரையிலான கோட்பாடுகளையும், நம்பிக்கைகளையும் மொத்தமாகப் புரட்டிப் போடும் அளவுக்கு இருக்கிறது ஒவ்வொரு செயலும்.

சல்ஃப்யூரிக் ஆசிட் பாதிக்கு மேல் உள்ள பாட்டில் அப்போது அவரது கையில் இருந்தது.

அடுத்த அசைவு தென்படும் இடத்தை நோக்கி, திறந்த பாட்டிலை வீசியெறிய ஸ்ரீகுமார் தயாரானார்.

மெல்லிய ஓர் அசைவு தென்பட்ட இடத்தை நோக்கி பாட்டிலை விசையுடன் வீசினார்.

அடுத்த விநாடி.

அங்கு மாடேபிளின் மேல் அடுக்கி வைத்திருந்த பாட்டில்கள் மற்றும் டெஸ்ட் டியூப்கள் யாரோ தள்ளிவிட்டது போல் விழுந்து நொறுங்கின. அதேசமயம் மிகவும் விரைவாக யாரோ நகர்வது போலும் தோன்றியது.

அந்த அசைவு கண்மூடித்திறப்பதற்குள் சட்டென்று வாசலைத் தாண்டி வெளியேறவும் செய்தது.

என்ன செய்வதென்று புரியாமல் ஸ்ரீகுமார் ஒருகணம் குழம்பி நின்றார்.

கண்ணாடிப் பெட்டிக்குள் எலும்புக்கூட்டைக் காண வில்லை. தான் மீண்டும் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக் கொள்ளப் போகிறோம் என்பது அவருக்கு புரிந்தது.

எனவே, மிகவும் ரகசியமாக இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்.

ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது யாருக்கும் தெரியாமல் எங்கிருந்தாவது ஓர் எலும்புக்கூட்டை வாங்கி வந்து சத்தம் போடாமல் வைத்துவிட வேண்டியதுதான். எவ்வளவு யோசித்தும் வேறொரு சரியான வழி புலப்படவில்லை.

ஊருக்குள் லேபரெடரி பொருள்கள் விற்கும் ஒரு பெரிய கடை உள்ளது. அந்தக் கடையின் முதலாளி தனக்கு நன்கு தெரிந்த நெருக்கமானவரும்கூட.

அவர்களிடம் எலும்புக்கூடு தற்போது கைவசம் இருக்கிறதோ இல்லையோ? என்ன இருந்தாலும் அங்கு போய் விசாரித்துப் பார்க்கவேண்டியதுதான். ஸ்ரீகுமார் தீர்மானத்துக்கு வந்தார்.



வெளியேறி ஸ்டோர் ரூமைப் பூட்டிவிட்டு, சாவியைக் கையில் எடுத்துக்கொண்டு நேராக ஊருக்குள் இருக்கிற கடையை நோக்கிப்புறப்பட்டார்.

நல்லவேளையாக கடையின் உரிமையாளர் கடையிலேயே இருந்தார்.

ஸ்ரீகுமார் முதலாளி உட்கார்ந்திருக்கும் கேபினுக்குள் நுழைந்தார்.

''அட... நீங்களா? வாங்க ஸ்ரீகுமார் சார், எப்படி இருக்குறீங்க? ரொம்பவும் பிஸியா இருக்கீங்க போலிருக்கே?'' - கடைக்காரர் கேட்டார்.

''பிஸியா மட்டுமில்லை... ரொம்பவும் பரபரப்பாவும் இயங்க வேண்டியிருக்கு. உங்களுக்கும் அதெல்லாம் தெரிஞ்சிருக்குமே!'' - ஸ்ரீகுமார் பதிலளித்தார்.

''சாயந்திர பேப்பரைத் திறந்தா முக்கியச் செய்தியே அதுதானே! அதைத் தவிர புதுசா ஏதாவது செய்தி உண்டா சார்?'' - கடைக்காரர் விசாரித்தார்.

''உண்மைதான்... இப்போ இன்னொரு செய்தியோட உங்ககிட்ட வந்திருக்கிறேன்.''

''என்ன செய்தி சார்? இதுவரைக்கும் நடந்ததைவிடப் பெரிய பிரச்சினை ஏதாவதா?''

''கிட்டத்தட்ட அப்படித்தான்!''

''அப்படீன்னா ரெண்டாவது தடவையா இன்னொரு எலும்புக்கூடும் காணாமப் போயிடுச்சன்னு சொல்லுங்க.'' கடைக்காரர் ஓர் எலும்புக்கூட்டின் விலை வருமானமாகக் கிடைக்கப்போவதை மனத்துள் நினைத்துக் கொண்டார்.

''இந்த விஷயம் ரொம்பவும் ரகசியமா இருக்கணும் கிறதாலதான் நேரா உங்ககிட்டயே வந்திருக்கிறேன். பணம்கிறது இதுல ஒரு பிரச்சினையே இல்லை. விஷயம் ரொம்பவும் ரகசியமா இருக்கணும்கிறதுதான் முக்கியம்.''

''அப்படியே செஞ்சுடலாம். விஷயத்தைச் சொல்லுங்க சார். உங்களை இன்னிக்கு நேத்தா பழக்கம்? உங்க தேவை என்னவோ அதைச் சொல்லுங்க. என்னால முடிஞ்ச அளவு உங்களுக்கு உதவி பண்ணத் தயாரா இருக்கிறேன்."

''என்னோட தேவை ஒரு மனித எலும்புக்கூடு!" - ஸ்ரீகுமார் தயங்கியபடி கூறினார்.

''அப்படீன்னா உங்க காலேஜ்ல இருந்ததும் காணாமப் போயிடுச்சா? இதென்ன சார் கூத்து... எலும்புக்கூட்டைத் திருடறதுக்குன்னே புதுசா ஏதாவது கூட்டம் கிளம்பி இருக்கா என்ன? அப்படித் தேவைப்படுறவங்க ஏதாவது சுடுகாட்டுப் பக்கம் போய்த் தொலையக்கூடாதா? எதுக்காக காலேஜுக் குள்ள நுழையிறாங்க?"

''ஒருவேளை வேற காலேஜ்கள்ல கொண்டுபோய் விற்குறாங்களோ என்னவோ?'' ஸ்ரீகுமார் புதியதொரு சந்தேகத்தைக் கிளப்பினார்.

''எனக்கும் அப்படித்தான் சார் தோணுது. சரி, அது எப்படியோ இருந்துட்டுப் போகட்டும்... நல்லவேளையா என்கிட்ட இப்ப ஒரு எலும்புக்கூடு இருக்கு. வந்து ரெண்டு மூணு நாள் தான் ஆகுது. பேக்பண்ணிடட்டுமுங்களா? கையோட கொண்டுபோயிடுறீங்களா எப்படி?" - கடைக்காரர் கேட்டார்.

''இப்பவே எடுத்துட்டுப் போயிடுறேன், ஆமாம் என்ன விலை?"

"நாங்க வழக்கமா விற்குறது மூவாயிரம் ரூபாய்க்கு! நீங்க இருநூற்றைம்பது ரூபா குறைச்சுக் கொடுத்தாப் போதும்."

''தந்துடுறேன். ஒரு விஷயம். பார்ட் பார்ட்டா பிரிச்சு எவ்வளவு சின்னப் பொட்டலமா பேக்பண்ண முடியுமோ அவ்வளவு சின்னதா பேக் பண்ணிடுங்க. நான் அங்க போய் செட் பண்ணிக்கிறேன். ஸ்ரீகுமார் கூறினார்.



பணத்தைக் கொடுத்துவிட்டு எலும்புகூட்டை எடுத்துக் கொண்டு ஸ்ரீகுமார் உடனே காலேஜுக்குத் திரும்பினார். இரவு எழரை மணிக்கு மேல் ஆகியிருந்ததால் நல்லவேளையாக காலேஜில் யாரும் இல்லை.

ஆட்டோவிலிருந்து இறங்கும்போது பார்சலுக்குள் கண்ணாடிப் பொருள்கள் இருப்பதால் ஜாக்கிரதையாக எடுத்துவருமாறு வாட்ச்மேனிடம் கூறினார்.

வாட்ச்மேனும் அவர் சொன்னதை நம்பியதாகத் தோன்றியது. லேப் வரை பார்சலை எடுத்து வந்ததற்காக ஸ்ரீகுமார் வாட்ச்மேனுக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்தார். இவ்வளவு பெரிய தொகையை எதிர்பார்க்காததாலோ என்னவோ வாட்ச்மேன் மிகவும் மகிழ்ச்சியுடன் கிளம்பிப் போனார்.

ஸ்ரீகுமார் எலும்புக்கூட்டை முழுமையாகப் பொருத்தி கண்ணாடிப் பெட்டிக்குள் வழக்கமாக வைப்பதுபோல் தொங்கவிட்டார்.

தொங்கவிடும்போது அவரது மனத்தில் மற்றொரு சந்தேகம் தோன்றாமலில்லை. இந்த எலும்புக்கூடும் காணாமல் போய் ஏதாவது பிரச்சினைகளை ஏற்படுத்துமோ என்னமோ?

அன்று இரவு பிரபாகரனிடம் பேசும்போது நடந்தது எல்லாவற்றையும் ஸ்ரீகுமார் விவரிக்கத் தவறவில்லை. பிரபாகரன் பிரமிப்புடன் மொத்தத்தையும் செவிமடுத்தான்.

''இந்த நிலைமை எனக்கென்னமோ நல்லதாத் தோணலை. கிருஷ்ணக்குறுப்பைப் பார்த்து உடனே அவர்கிட்ட விஷயத்தைச் சொல்லிட்டா என்ன?" - பிரபாகரன் கேட்டான்.

''எதுக்காக? ஸ்ரீகுமார் கேட்டார்."

''இப்போ நீ வாங்கி வெச்சிருக்கிற எலும்புக்கூடும் எழுந்து போயிட்டா நிலைமை ரொம்பவும் சிக்கலாயிடும். அதனால இந்த எலும்புக்கூடும் அப்படி எழுந்து போகாம இருக்கிறதுக்கு ஏதாவது ஒருவழி பண்ணலாமே!"

''அது எப்படி முடியும்?''

''முயற்சி பண்ணலாம். அவர்கிட்ட அதுக்கு ஏதாவது வழி இருக்கலாம்.''

பிரபாகரன் சொல்வதும் சரிதான் என்று ஸ்ரீகுமாருக்குத் தோன்றியது.

மறுநாளும், அதற்கு அடுத்த நாளும் விடுமுறைதான் எனவே லீவு எடுக்கவேண்டிய அவசியமும் கிடையாது. இருவரும் மறுநாள் விடியற்காலையிலேயே பயணம் புறப்பட்டார்கள்.

மறுபடியும் இருவரையும் ஒருசேரப் பார்த்த கிருஷ்ணக் குறுப்பின் மனத்துள் சந்தேகம் எழும்பத் தொடங்கியது.

''வாங்க... வாங்க... என்ன விசேஷம்?'' குறுப்பு கேட்டார்.

ஸ்ரீகுமார் நடந்ததையெல்லாம் விவரித்தார்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட குறுப்பு சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

''இதெல்லாம் மிகவும் அசாதாரணமான சம்பவங்கள். இதுக்குப் பரிகாரம் செய்யக்கூடிய ஒருத்தரை நான் உங்களுக்குச் சிபாரிசு செய்யுறேன். இதுக்கு மட்டுமில்லாம, ஜயந்தனைச் சமாளிக்கவும் அவராலதான் முடியும். ரொம்பக் கெட்டிக்கார மனுஷன்!'' குறுப்பு கூறினார்.

''யாருங்க அவர்?'' -ஸ்ரீகுமார் கேட்டார்.

''பேரு தேவதத்தன் நம்பூதிரி. கொடூரமான எதையும் செய்யமாட்டார். ஆனா, எப்படிப்பட்ட மந்திரத்துக்கும் மாற்றுச் செய்யக் கூடியவர். நாம நெனைக்கிறதைவிடக் கெட்டிக்காரர். உங்ககூட நானும் வேணும்னா வர்றேன்'' - கிருஷ்ணக்குறுப்பு சொன்னார்.

''அவர்கிட்ட எப்பப் போகலாம்?'' - ஸ்ரீகுமார் நம்பிக்கை நிறைந்தவராகக் கேட்டார்.

''இப்பவே கூடப் போய் பார்க்கலாம். எனக்கும் அவரைப் பார்க்கவேண்டிய தேவையிருக்கு.'' -குறுப்பு எழுந்து வீட்டுக்குள் போனார்.



பயணம் புறப்படுவதற்கான உடையுடன் வெளியே வந்தார். ஏறத்தாழ நாற்பது கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டும், தேவதத்தன் நம்பூதிரியின் வீட்டை அடைய!

சாதாரணமாக வெளியே எங்கும் போகாதவராக இருந்ததால் அவர் இல்லத்திலேயே இருந்தார். வராந்தாவில் அமர்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார் தேவதத்தன்.

அறுபது வயதிருக்கலாம் அவருக்கு. கழுத்துவரை வளர்ந்து மடிந்திருக்கும் தலைமுடி. தாடி-மீசையும் அடர்த்தியாக இருந்தன. கழுத்தில் தங்கத்தால் இணைத்த ருத்திராக்ஷமாலை ஒன்றை அணிந்திருந்தார்.

அவரது மார்பில் கிடந்த பூணூலில் இரண்டு மூன்று தங்கச் சாவிகள் தொங்கிக்கொண்டிருந்தன.

அவரை நெருங்கிய மூவரையும் பார்த்துட்டு, ''என்ன கிருஷ்ணக்குறுப்பு, விசேஷமான செய்தி ஏதாவது உண்டா?'' என்று கேட்டார்.

''விசேஷமேதான்! கேட்கிறதுக்கு ரொம்பவும் சுவாரசியமான விசேஷமும் கூட!'' கிருஷ்ணக்குறுப்பு அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி பேசினார்.

''இவங்க யார்?'' ஸ்ரீகுமாரையும் பிரபாகரனையும் பார்த்தபடி கேட்டார்.

கிருஷ்ணக்குறுப்பு அவர்கள் இருவரையும் அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

''காலேஜ் வாத்தியாருங்கல்லாம் மாந்திரீகத்தையும், மந்திரவாதியையும் நம்ப ஆரம்பிச்சிட்டாங்களா? பரவாயில்லையே?'' -தேவதத்தன் சிரித்தபடி கேட்டார்.

''என்னைவிட எவ்வளவோ பெரியவங்கல்லாம் மாந்திரீகத்தை அபயம் தேடிவரும்போது, இது என்னங்க பெரிய விஷயம்?'' ஸ்ரீகுமார் பணிவுடன் பேசினார்.

''உண்மைதான்... நமக்குத் தெரியாத எவ்வளவோ விஷயங்கள் இந்த உலகத்துல இருக்கே'' - என்றவர் அவர்களை இருக்கை காட்டி உட்காரச் சொன்னார்.

இருவரும் வராந்தாவில் விரித்திருந்தபாயில் உட்கார்ந்தனர்.

''சொல்லுங்க... உங்க விசேஷத்தைக் கேட்போம். தேவதத்தன் அவர்கள் இருவரையும் பார்த்தார்.

ஸ்ரீகுமார் நடந்த சம்பவங்களை ஒன்றுவிடாமல் விவரித்தார்.

மௌனமாக எல்லாவற்றையும் கேட்ட பிறகு எழுந்து வீட்டுக்குள் போனவர், நீண்டநேரம் கழித்துதான் வெளியே வந்தார்.

''இந்த நூல்கயிறை அந்த எலும்புக்கூட்டின் கழுத்தில் போட்டு வையுங்க. தற்காலிகமா இது போதும். மத்த விஷயங்களை நாம சாவகாசமாப் பேசிக்கலாம். எனக்கு அவசரமான வேறொரு வேலை இருக்கு. நூல் கயிற்றை ஸ்ரீகுமாரிடம் கொடுத்தபடி தேவதத்தன் கூறினார்.

அவர்கள் உடனே அங்கிருந்து கிளம்பினர்.

**அ**ன்றிரவு ஜயந்தனும் சந்துநாயரும் தேங்காய் கோடௌனில் உட்கார்ந்திருந்தனர். மணி இரவு பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்தது.

சுற்றுப்புறம் அமைதியாக இருந்தது.

மாதவன்குட்டியின் மரணம் அவர்கள் இருவரையும் அதிகக் கவலைக்குள்ளாக்கியிருந்தது. சந்துநாயர் எதிர்பாராத இந்தத் தாக்குதலில் சற்று இடிந்துபோனார் என்றே சொல்லலாம்.

மேற்கொண்டும் தன் குடும்பத்தில் விபத்து ஏதேனும் ஏற்படுமோ என்றும் அவர் கலங்குவதாகத் தோன்றியது.

''உங்க எதிராளிகளுக்கு ஏதோ ஒரு ரக்ஷஸ் உதவி செஞ்சிட்டிருக்கு. அதை அடையாளம் கண்டுபிடிச்சிட்டா நாம ஜெயிச்சதா அர்த்தம்!'' -ஜயந்தன் பேசினார்.



''நீங்க சொன்னதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது!''

''இதுவரையிலும் நான் எங்கேயும் தோற்றதே கிடையாது'' -ஜயந்தன் மந்திரிப்பது போல் பேசினார்.

அதே நேரம் வெளியே ஏதோ ஒரு சத்தம் கேட்டது.

''யாரது?'' ஜயந்தனது குரல் மிரட்டுவது போல் கேட்டது.

ஓர் உருவம் சட்டென்று அவர்கள் இருந்த அறைக்குள் நுழைந்தது.

அது ஒரு மனித வடிவமாக இருந்தாலும் அதன் முகத்தில் ஏறத்தாழ முக்கால் பகுதி சதையே இல்லாமல் இருந்தது. பயங்கரத் தோற்றமுள்ள ஓர் உருவம்!

## 19

**அ**ந்த அறைக்குள் மங்கலாக எரிந்து கொண்டிருந்த லாந்தர் விளக்கு வெளிச்சத்தில் உள்ளே வந்த உருவத்தை அங்கிருந்த இருவராலும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

லாந்தரின் சிம்மினியில் புகை படிந்திருந்ததால் அதிலிருந்து வெளிவந்த வெளிச்சம் மிகவும் பலவீனமாக இருந்தது.

''யார் நீங்க?'' -சந்துநாயர் கேட்டார்.

'தன்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் தோப்புக்குள் நுழையக்கூடாது, என்பதற்காக நான்கு திசைகளிலும் ஆயுததாரி களைக் காவலுக்கு நிறுத்தியிருக்கும்போது இவ்வளவு தைரியமாக உள்ளே வந்திருப்பவன் உண்மையில் யாராக இருக்கக்கூடும்?' என்று சந்துநாயர் யோசனையில் ஆழ்ந்தார்.

''அவசரப்படாதீங்க. என்பேரு கோவிந்தன். - வந்தவன் முதல் தடவையாக வாய்திறந்து பேசினான்.

''யாரு கோவிந்தனா? இப்படியொரு ஆளை எனக்குத் தெரியாதே'' -சந்துநாயர் சந்தேகம் கொண்டவராகப் பேசினார்.

''ஆனா, எனக்கு உங்களையெல்லாம் நல்லாவே தெரியும்'' - வந்தவன் இன்னும் நிழல் பகுதியில் நின்றபடியே பேசினான்.

''இங்க எதுக்காக வந்திருக்கீங்க?

''அதையெல்லாம் உடனடியா சொல்லிட முடியுமா என்ன? நிதானமா உட்கார்ந்து பேசணும். நான் உங்ககிட்ட வரலாம் இல்லையா?'' - வந்தவன் ஜயந்தனைப் பார்த்துக் கேட்டான்.

ஜயந்தனும் புதிய மனிதனைப் பார்த்துத் திகைப்பு அடைந்தவராகவே தென்பட்டார்.

'தான் மிகவும் ரகசியமாக பூஜை மற்றும் மாந்திரீகம் நடத்தும் அறைக்குள் இவ்வளவு தைரியத்துடன் நுழையும் நபர் யாராக இருக்கக்கூடும்?' என்ற வகையில் யோசித்தது, ஜயந்தனின் மனம். எனினும் வந்தவரை ஜயந்தனின் கண்கள் ஊன்றிக் கவனிக்கவே செய்தன. அவரது கூர்மையான பார்வை புதிய மனிதனின் முகத்தைத் துளைத்துக்கொண்டு ஆழ்ந்து இறங்கியது.

ஜயந்தனது முகத்தில் தென்பட்ட திகைப்பு விரைவிலேயே சந்தேகமாக மாறத்தொடங்கியது.

''யாரு கோவிந்தனா?'' - ஜயந்தன் கேட்டார்.

''ஆமாம்!''

"வாங்க... இப்படி உள்ளே வாங்க?"

ஜயந்தன் பின்புறமாக நகர்ந்து லாந்தர் விளக்கைத் தொங்க விட்டிருக்கும் பகுதிக்கு அருகில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தார்.

சந்துநாயரும் பின்வாங்கி வந்து ஜயந்தனுக்கு அருகே அமர்ந்தார்.

அறிமுகமில்லாத அந்த மனிதன் அறையின் மையப் பகுதிக்கு வந்தான். அணைந்து கரித்துண்டுகள் மட்டுமே மீதமாக இருந்த ஹோமகுண்டத்தைப் பார்த்தபடியே நின்றான்.



''ஹோமம் எதுவோ செஞ்சிருக்கீங்க போலிருக்கே?'' - வந்தவனது குரல் ஒலித்தது.

''உங்க யூகம் சரிதான். ஆனா, ஹோமம்தான்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''

''அதையெல்லாம் தெரிஞ்சுக்கக்கூடிய ஒருத்தன்தான் நான். இந்த மாதிரி நான் எத்தனை ஹோமம் நடத்தியிருக்கிறேன் தெரியுமா?. அருவித் தண்ணியைத் எதிர்த் திசையிலே திருப்பி விட்டிருக்கிறேன். பாறையைப் பிளந்திருக்கிறேன். ஒரே ஒரு தடவை கொஞ்சம் சறுக்கிடுச்சு....'' வந்தவன் பேசினான்.

அதைக்கேட்டவுடன் ஜயந்தனின் உள்ளம்கூட ஒரு கணம் துணுக்குற்றது. ஜயந்தனின் மனம் துரிதமாகச் சிந்தனையில் ஈடுபட்டது. 'தன்னையே அதிரவைக்கும் இந்த மனிதன் உண்மையில் யாராக இருப்பான்?'

மங்கலான அந்த வெளிச்சத்தில் ஜயந்தன் வந்திருக்கும் புதிய மனிதனை தலைமுதல் பாதம்வரை ஊன்றிக் கவனித்தார்.

இருந்தும் எதையும் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அப்போதுதான் அந்த மனிதன் சட்டென்று தனது முகத்தைத் திருப்பினான். அதைக் கவனித்த ஜயந்தனும் சந்து நாயரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

அவனது முகத்தின் இடதுபுறம்...

எப்படிப்பட்ட தைரியசாலி பார்க்க நேர்ந்தாலும் பயந்து நடுங்கவே செய்வான். இடதுபுற முகத்திலிருந்த சதைப்பகுதி கரைந்து உருகிப்போனது போல் இருந்தது. உட்புறமிருந்த பற்களும், எலும்புகளும் வெளிப்புறம் தெளிவாகத் தெரிந்தன. காதின் ஒருபகுதி காணாமல் போயிருந்தது.

அந்த அளவுக்குப் பயங்கரமானதாகவும் பைசாசிமானதாகவும் இருந்தது அந்தக்காட்சி.

'' என்ன இது... உங்களுக்கு என்ன ஆச்சு?'' சந்துநாயர் கேட்டார்.

வந்த மனிதன் அந்த அறையை ஒருதடவை சுற்றுமுற்றும் பார்த்தான்.

ஜயந்தனுக்கு எதுவோ விஷயம் புரிந்தது போலிருந்தது.

''முதலில் அவர் உட்கார நாற்காலி ஏதாவது கொடுங்களேன்!'' ஜயந்தன் கூறினார்.

வெகுகாலமாகப் பயன்படுத்தப்படாமலிருந்த ஸ்டூல் ஒன்றைத் தேடி எடுத்துவந்து புதிய மனிதன் முன் போட்டார் சந்துநாயர்.

அந்த ஸ்டூலைத் தொடாமலே வந்தவன் அமர்ந்தான். அவன் கட்டியிருந்த வேட்டி அழுக்கேறி, கசங்கியிருந்தது. அதே நிறத்திலான துண்டு ஒன்றை மார்பை மறைத்தபடி போர்த்தியிருந்தான்.

''உண்மையிலேயே கோவிந்தனை எனக்குப் புரியலையே! எப்படி இங்க வந்து சேர்ந்தீங்க?'' ஜயந்தன், புதிய மனிதன் மீதிருந்து கண்களை அகற்றாமல் கேட்டார்.

''அது ஒரு கதை... திசை திரும்பிப் போன கதை!''

''திசைதிரும்பிப் போன கதையா? உண்மையிலேயே ஆச்சரியம்தான். ஜயந்தன் தனது வேட்டி மடிப்பில் செருகி வைத்திருந்த பொட்டலம் ஒன்றைப் பிரித்து கஞ்சா இலையை எடுத்து இடது உள்ளங்கையில் போட்டு கசக்கி, புகையிலை வைப்பது போல் ஈறுகளுக்கு மத்தியில் வைத்துக்கொண்டார்.

''நான் ஒரு மலைவாசி, நிறைய ருத்ர மந்திரங்கள் செய்திருக்கிற ஒரு மாந்திரீகன். காட்டு யானையோட உடம்புக்குள்ள ஒரு காட்டேரியை ஏவிவிட்டு, ஒரு தடவை ஒரு காலனி முழுவதையுமே நாசமாக்கியிருக்கிறேன். இது மாதிரி நிறைய...''

''உண்மையாவா?'' ஜயந்தன் விழிகளை அகல விரித்தபடி கேட்டார்.



தன்னைவிட கெட்டிக்காரனான மந்திரவாதிதான் தனக்கு முன்னால் அமர்ந்திருப்பவன் என்பது தெரிந்தவுடன், அப்படிப் பட்டவனுக்கு முன்னால் தான் உட்கார்ந்திருப்பதே தவறு என்றும் எழுந்து நின்று மரியாதை செய்யவேண்டும் என்றுகூட ஜயந்தனுக்குத் தோன்றியது.

''ரொம்ப சுவாரஸ்யமா இருக்கே மீதிக்கதையையும் சொல்லுங்களேன்'' என்று கேட்டுக்கொண்டே சந்துநாயர், குனிந்து கட்டிலுக்குக் கீழே வைத்திருந்த சாராய பாட்டில் ஒன்றை எடுத்து ஒரு கிளாஸில் ஊற்றி, அதை கோவிந்தனிடம் நீட்டினார்.

அதைவாங்கிய கோவிந்தன் சற்று நேரம் கிளாஸை உதட்டுடன் சேர்த்து வைத்தான். கிளாஸிலிருந்த மட்டம் ஓரிரு வினாடிகளுக்குள் இரண்டு அங்குலம் குறைந்தது.

''இனி கிளாஸில இருக்கிறதைக் கீழே ஊத்திடலாம். வெறும் பச்சைத்தண்ணிதான்!'' -கிளாஸை சந்துநாயரிடம் நீட்டியபடி கூறினான் கோவிந்தன்.

நம்பமுடியாதவராக சந்துநாயர் கிளாஸை வாங்கி முகர்ந்து பார்த்தார். கிளாஸில் இருந்த திரவத்தில் சாராயத்தின் வாசனையே இல்லை! வியப்பு அடைந்தவராக அவர் கோவிந்தனின் முகத்தை ஏறிட்டார்.

'' அது வெறும் தண்ணிதான். அதில இருந்த சாராத்தை மட்டும் நான் உறிஞ்சிக்கிட்டேன். கீழே ஊத்திடுங்க!'' கோவிந்தன் இயல்பான குரலில் பேசினான்.

பிறகு தனது கதையைத் தொடர்ந்தான்:

''நான் மலைப்பகுதியில குடியிருந்தபோது எதிர்பாராத விதமா திடும்னு மண் சரிவு ஏற்பட்டுச்சு. மழைக்காலம் முடிஞ்சு ஒரு மாசத்துக்குப் பிறகு யாருமே எதிர்பாராத நேரத்துல ஏற்பட்ட மண்சரிவு'' -என்று பேசத் தொடங்கிய கோவிந்தன் அப்போதும்

அந்தக் காட்சியைத் தனது கண்முன்னால் பார்த்துக்கொண்டு இருப்பது போல் தோன்றியது.

''பெரும்பாலான வீடுகளும், ஆட்களும் அந்த மண் சரிவுலே காணாமல் போய்ட்டாங்க. நான் ஒரு பெரிய பாறையைக் கெட்டியாப் பிடிச்சுட்டு கண்ணைமூடி நின்னுட்டிருந்தேன். அந்த விநாடி என்னோட நேரம் ரொம்ப மோசமானதா இருந்திருக்கணும். அந்தப் பாறையும் அசைஞ்சு நகர்ந்தது. நல்லவேளையா நான் பாறைக்கு அடியில நசுங்கலை. பாறையிலிருந்து தூக்கி எறியப்பட்டேன். அதுக்குப் பிறகு நான் கண்விழிக்கவே இல்லை.'' -அவன் பேச்சை நிறுத்தினான்.

யாருக்கும் எதுவும் விளங்கவில்லை.

தங்களுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் நபருக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று அவர்களுக்கு விளங்கவில்லை. அப்படிப் பட்ட ஒரு கட்டத்தில்தான் அவர் பேச்சை நிறுத்தி இருந்தார்.

''புரியவில்லையே!'' -ஜயந்தன் அமைதியைக் கலைத்தபடி கேட்டார்.

''நிஜமா புரியலையா? அதோட எல்லாமே தீர்ந்து போச்சு. உயிரில்லாத உடம்பா இருந்ததால எலும்புக்கூட்டைப் பதப்படுத்தி காலேஜுக்கு எடுத்துட்டுப் போனாங்க. எலும்புக் கூடா மாறினப்போ என்னோட மண்டையோடு மட்டும் மாறிப்போயிடுச்சு. அப்புறம் திரும்பக் கிடைச்சது. இப்போ உங்க முன்னால இந்த உருவத்தோடு நிக்குறேன்'' - கோவிந்தன் பேசினான்.

''ஒகோ... கதை அப்படி வருதா? ஆமா, இந்த முகம் இப்படியேதான் திரும்பக் கிடைச்சதா?'' - ஜயந்தன் கேட்டார்.

''இல்லை. நல்லாவேதான் இருந்தது. முகம் சீரழிஞ்சது இன்னொரு கதை! என்னோட மண்டையோடே, எலும்புக்



கூட்டுக்குக் கிடைச்ச பிறகு, நான் இருக்கிற கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியேறலாமேன்னு தோணிச்சு. வெளியேறினேன். அப்பத்தான் அங்க வேலை செய்யுற ஒரு லெக்சரர் தன் கைவரிசையைக் காட்டிட்டான். அப்படித்தான் இந்த முகம் இப்படி விகாரமாயிட்டது.'' சதை கரைந்துபோன தன் முகத்தை வெளிச்சம் படும்படி நன்றாகத் திருப்பிக் காட்டினான்.

சந்துநாயர் அந்தக் காட்சியைக் காணச் சகியாதவராக முகத்தை உடனே திருப்பிக்கொண்டார்.

''இப்போ என்ன செய்யுறதா உங்க நோக்கம்? - ஜயந்தன் கேட்டார்.

''என்னை இந்த அளவுக்குச் சீரழிச்சவனை நான் பழிவாங்கியே தீரணும். ஆனா, அவன்கிட்ட இது மாதிரியான ஆசிட்டுகள் இருக்கிறதால அவனை எப்படிச் சமாளிக்கிறதுன்னு தெரியலை'' -கோவிந்தன் ஆற்றாமையுடன் பேசினான்.

''ஒகோ... அந்த லெக்சரர் உங்க முகத்துல ஆசிட் ஊத்திட்டாரா?'' சந்து நாயர் கேட்டார்.

''ஆமாம்... இப்படிப்பட்ட திரவப் பொருள்கள் ஆவி-பிசாசுகளையும் பாதிக்கவே செய்யும். இருந்தாலும் கோவிந்தனை நாம பயன்படுத்திக்க முடியும்னு தோணுது! நீங்க சொன்னதை வச்சுப் பார்த்தா, எங்களோட எதிரிதான், உங்களையும் இப்படிச் சீரழிச்சிருக்கிறான்னு தெரியுது. அப்படியானா நாம எல்லோரும் ஒண்ணுசேர்ந்தா அவன் தப்பிக்க முடியுமா என்ன?'' - ஜயந்தன் கேட்டார்.

''அதுக்கு வாய்ப்பே இருக்காது. உங்களோட சேர்ந்துக்கிறதுல எனக்கும் எந்தவிதமான ஆட்சேபமும் கிடையாது!''

மறுநாள் தேவதத்தன் கொடுத்து அனுப்பிய மந்திரித்த சரடுடன் ஸ்ரீகுமார் காலேஜுக்கு வந்து சேர்ந்தார். யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்காக அந்தச் சரடை தனது மணி பர்ஸில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்.

அன்று நிறையத் தடவை யார்யாரோ வந்து எலும்புக் கூட்டை வகுப்புகளுக்கு எடுத்துச்சென்று பாடம் நடத்தினர், பாகங்களை விளக்கினர். எனவே, இரவில் அந்த சரடை எலும்புக்கூட்டின் மீது கட்டிவிடுவது என்று தீர்மானித்தார் ஸ்ரீகுமார்.

மாலை நேரமானதும் பிரபாகரனுடன் சேர்ந்து வெளியே போய்விட்டு வந்தார்.

திரும்ப காலேஜுக்கு வந்தபோது இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆகியிருந்தது. தனது பழைய படுக்கையறையான லேபுக்குள் நுழைந்தபோது ஸ்ரீதேவி கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

அவளது பார்வை கண்ணாடிப் பெட்டியின் மீதே பதிந்திருந்தது.

## 20

அறைக்குள் வந்த ஸ்ரீகுமார், ஸ்ரீதேவியின் அருகே கட்டிலின்மீது அமர்ந்தார்.

''என்ன தேவி, அப்படிப் பார்க்குறே?''

''அந்தக் கண்ணாடிப் பெட்டியைத் தான் பார்த்துட்டிருக்கிறேன்...''

''அந்த அளவுக்கு அதில என்ன தெரியுது?''

''அதுக்குள்ள ஏற்கெனவே இருந்த எலும்புக்கூடு என்ன ஆச்சு? அதோட மண்டையோட்டை நான் கொண்டுவந்து கொடுத்தேனே, ஞாபகமிருக்கா! வேண்டாம்னு தூக்கிப் போட்டுட்டீங்களா, இல்லை...'' ஸ்ரீதேவி வார்த்தைகளை முடிக்காமல் நிறுத்தினாள்.



அதுவரை நடந்த சம்பவங்களை ஸ்ரீகுமார் அவளிடம் ஒன்று விடாமல் கூறினார்.

''ஓகோ... அப்படியா சேதி?'' ஸ்ரீதேவி சந்தேகம் நிறைந்தவளாக ஸ்ரீகுமாரைப் பார்த்தாள்.

''ஸ்ரீதேவி... நான் எதிர்பாராத சம்பவங்களா தொடர்ந்து நடந்துட்டு வருது. உன்கிட்டேயிருந்துதான் இதெல்லாம் ஆரம்பம்!''

''உண்மைதான்! ஆனா, என்னைப் பொறுத்தவரை இந்த மாற்றம் தவிர்க்க முடியாத ஒரு விஷயமா இருந்துச்சு. என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினவங்களைப் பழிவாங்க இப்பத் தான் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு! ''ஸ்ரீதேவி கூறினாள்.

இரவு வெகுநேரமாகிவிட்டிருந்தது. நிலவு ஒளி இல்லாதிருந்தது. நட்சத்திரங்களிலிருந்து வெளிப்பட்ட கலவையான வெளிச்சம் தெளிவற்றதாக அறைக்குள் படர்ந்திருந்தது.

அந்த அரைகுறை வெளிச்சத்தில் அமர்ந்து இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். அத்துடன் சற்று தொலைவில் எரிந்து கொண்டிருந்த தெருவிளக்கின் வெளிச்சமும் சன்னமாகக் கலந்திருந்தது.

ஸ்ரீகுமார் மேஜைமீது இருந்த பருமனான மெழுகு வத்தியை ஏற்றினார்.

அந்த வெளிச்சம் அறையின் இருட்டை ஓரளவு போக்கியது. அந்தக் கண்ணாடிப்பெட்டியில் புத்தம் புதிய எலும்புக்கூடு பழையபடி தொங்கிக் கொண்டிருந்தது. முன்பு அதிலிருந்த எலும்புக்கூடு அப்போதும் ஒரு கேள்விக்குறியாகவே தென்பட்டது!

''நீங்க சொல்றதைப் பார்த்தா பொருத்திய எலும்புக் கூட்டுக்கும் உருவமாற்றம் நேர்ந்திருக்கிறது. அப்படித்தானே'' - ஸ்ரீதேவி கேட்டாள்.

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''அந்த உருவத்தின் அசைவை வைத்து அதன்மீது ஆசிட்டையும் வீசியிருக்கிறீர்கள்?''

''அறைக்குள் எதையெல்லாமோ போட்டு உடைக்கும் சத்தம் கேட்டுத்தான் நுழைந்தேன். வேறு எந்த வழியும் தெரியாததால் ஆசிட்டைப் பயன்படுத்தினேன்.''

''அப்படியானால் அந்த ஆவி வெளியேறிடுச்சுன்னு அர்த்தம். அதன் மூலமா உங்களுக்குத் தொல்லை ஏற்படவும் வாய்ப்பு இருக்கு!''

''உருவமில்லாத ஓர் ஆவி என்னை ஏதாவது செய்ய முடியுமா என்ன? என்ன செய்ய முடியும்?''

''ஆரம்ப கட்டத்துல அதுக்குச் சாத்தியமில்லைதான். ஆனால், சொந்தத் திறமையாலயோ, இல்லேன்னா தகுந்த மத்தவங்களோட உதவியாலயோ அப்படியொரு சக்தியை ஏற்படுத்திக்க முடியும். அதுக்கு வாய்ப்பு இருக்கு!''

''அப்ப உனக்கும் அப்படித்தான். இந்தச் சக்தி கிடைச்சதா ஸ்ரீதேவி?''

''ஆமாம்! என்னோட உடலும், தலையும் வேறவேற இடத்துல இருந்தாலும் அருபத்துல இருந்த என்னோட சக்தி எப்பவும் இதைப் பத்தியே யோசிக்கிறதையும் பயிற்சி செய்யறதையும் விட்டதே இல்லை. ஒரு கட்டத்துல என்னோட வலது கைச் சுண்டுவிரலுக்கு முதல்ல சக்தியை ஏத்திக்கிட்ட நான் படிப்படியா உடம்பு முழுவதிலும் அதைப் பரவ விட்டேன்.''

''அப்படியானா இப்போ உன்னோட பழைய சக்தி எல்லாம் முழுசா திரும்பக் கிடைச்சுட்டுதா?''

''முழுச் சக்தியுமே திரும்பக் கிடைச்சுடுச்சு. சக்தியை அதிகப்படுத்தறதுக்கு இங்கிருந்து வெளியேறின ஆவியும் முயற்சி பண்ணிக்கிட்டு இருக்கலாம்.

''இப்போ அந்த ஆவி எங்கே போயிருக்கும்னு நினைக்கிறே தேவி?''



''அதை உறுதியாச் சொல்ல முடியாது. நான் நேரடியாப் போய் விசாரிச்சாத்தான் தெரியும்!''

இங்கிருந்து வெளியேறிய ஆவி ஒருவேளை சந்து நாயரிடம் போயிருக்கலாம் என்றொரு சந்தேகம் அவளுக்கு இருந்தது. சந்துநாயரின் உதவியுடன் ஜயந்தன் ஸ்ரீதேவியை அழிப்பதற்கு ஹோமம் நடத்தியதை அவ்வளவு சுலபத்தில் மறந்துவிட முடியுமா என்ன? இங்கிருந்து காயம்பட்ட எதிரி ஒருவன், எதிரியின் எதிரியுடன் போய்ச் சேர்ந்து கொள்வதுதானே இயல்பு என்று கணக்கிட்டாள். ஒருவேளை அந்த ஆவி நேரடியாக சந்துநாயரிடம் போகவில்லையானாலும் எலும்புக்கூடு காணாமல் போனதைக் கண்டறிந்தால், இந்த ஆவியைத் தங்கள் பக்கமாக இழுக்கவும் சந்துநாயருடன் ஜயந்தனும் முயற்சி செய்வார் என்பதும் அவளுக்கு உறுதியாகத்தெரிந்தது.

எனவே, அந்த அறையிலிருந்து கிளம்பிய ஸ்ரீதேவி நேராக சந்துநாயரின் தேங்காய் கோடௌனை நோக்கிப் பயணமானாள்.

ஜயந்தனின் பார்வையும், மந்திர சக்தியும் மிகவும் கூர்மையுள்ளதாக இருப்பதால் ஸ்ரீதேவி மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொண்டாள். மேற்குப் புறமாக கோடௌனை அடைந்தவள், பலகைகளின் இடுக்கு வழியாக உட்புறத்தைப் பார்த்தாள்.

சந்துநாயர், ஜயந்தன் ஆகியோருடன் பைசாசிகமான முகத்துடன் உள்ள மற்றொரு மனிதனும் அங்கிருப்பது தெரிந்தது. ஸ்ரீகுமார் ஆசிட் ஊற்றியதால் ஒருபக்க முகம் அப்படி ஆகியிருக்கிறது என்பதும் ஸ்ரீதேவிக்குப் புரிந்தது.

ஜயந்தன், அந்தவிகாரமான வடிவத்திடம் எதையோ சொல்லிச் செய்ய வைத்துக்கொண்டிருந்தார்.

தற்சமயம் சுயமாக எதையும் செய்யும் வல்லமை இல்லாத அந்த ஆவிக்கு சக்தியேற்றுவதுதான் அவர்களுடைய நோக்கம் என்பது புரிந்தது.

இரவின் மூன்றாவது யாமம் முடிய இன்னும் சில நாழிகைகள் மட்டுமே இருந்தன. எனவே ஸ்ரீதேவி சட்டென்று அங்கிருந்து மறைந்தாள்.

''இனிமேல் இங்கு இருக்கவேண்டாம். நாளைக்கு வாருங்கள்'' -ஜயந்தன் விகாரமான அந்த வடிவத்திடம் கூறினார்.

''சரி, நான் கிளம்புறேன்'' - என்று உட்கார்ந்த இடத்தில் இருந்து எழுந்த வடிவம் கோடௌவுனிலிருந்து வெளியேறி இருட்டில் மறைந்தது.

**கா**லையில் வழக்கமான நேரத்தில் கண்விழித்த ஸ்ரீகுமார், ஸ்டோர் ரூம் பக்கமாகப் பார்த்தார்.

கண்ணாடிப் பெட்டிக்குள் எலும்புக்கூடு பத்திரமாக இருந்தது. உடனேயே தேவதத்தன் நம்பூதிரி கொடுத்து அனுப்பிய சரடை எடுத்து அங்கிருந்த எலும்புக்கூட்டின் மீது போட்டு விடலாமா என்றுகூட நினைத்தார். பிறகு, குளித்தவுடன் சுத்த பத்தமாகவே செய்துகொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

குளித்துவிட்டு வரும்போது லேபரெட்டரி வாசலில் பாட்டனி லெக்சரர் வசுந்தரா நின்றுகொண்டிருந்தாள்.

''இப்பத்தான் வந்தீங்களா?'' ஸ்ரீகுமார் லேபரெட்டரியின் வெளிக்கதவைத் திறந்தபடி கேட்டார்.

''ஆமாம்! இன்னிக்கு கொஞ்சம் சீக்கிரமாவே புறப்பட்டுட்டேன். லேப்லேர்ந்து முக்கியமான சிலவற்றை எடுக்க வேண்டியிருக்கு, என்றவாறே அவரும் லேபுக்குள் நுழைந்தார்.

இருபத்தேழு வயதான வசுந்தரா அழகானவள். இன்னும் திருமணமாகாதவளும்கூட. எத்தனையோ இடத்திலிருந்து அவரைப் பெண் கேட்டு வந்தபோதும் அவருக்கு மட்டுமே தெரிந்த ஒருசில பிரத்தியேகக் காரணங்களால் திருமண வாழ்க்கையைத் தள்ளிப் போட்டுக்கொண்டிருக்கிறார்.



ஸ்ரீகுமாரின் நல்ல குணங்கள் வசுந்தராவுக்கு மிகவும் பிடித்திருந்தன. எனவே மற்றவர்களைவிட அவரிடம் மனம் விட்டுப் பேசலாம். சற்று நெருக்கமான நட்பும் வைத்திருந்தார்.

வசுந்தராவைப் பார்க்கும் போது ஸ்ரீகுமாருக்கும் அதே போன்ற உணர்வுகள்தான் தோன்றின. 'எப்போதும் எதைப் பற்றியோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பது போலவே தோன்றும். ஒருவேளை இளமையின் துவக்கத்தில் ஏற்பட்ட நட்போ, காதலோ அவரது மனத்தில் அப்படியொரு இடம் பெற்றிருக்கலாம்...' என்று ஸ்ரீகுமார் எண்ணிக் கொண்டார்.

''பாட்டனி லேப்ல இல்லாத பொருளா என்ன?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''பாடம் நடத்தும்போது தாவர உணவை மட்டுமே பயன்படுத்தி உயிர் வாழ்கிற பறவை, மிருகங்களைப் பற்றிச் சொன்னேன். அப்படிப்பட்ட ஒண்ணுதான் தேனை மட்டுமே சாப்பிட்டு உயிர்வாழுற வௌவால்னு குறிப்பிட்டேன். ஸ்டஃப் பண்ணி வச்சிருக்கோமோ, அதுதான் தேவை'' -வசுந்தரா கூறினாள்.

''இங்கேயே இருங்க. நானே எடுத்துட்டு வர்றேனே'' - குமார் ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தார்.

உள்ளே நுழையும்போதே கண்ணாடிப் பெட்டிக்குள் எலும்புக்கூடு பத்திரமாக இருக்கிறதா என்று கவனிக்கவும் தவறவில்லை.

அழகான கண்ணாடி ஜாடி ஒன்றுக்குள் பதப்படுத்தி வைத்திருந்த பதப்படுத்தப்பட்ட வௌவாலையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

''இதுதானே நீங்க கேட்ட வௌவால்?''

அந்தக் கண்ணாடி ஜாடியைக் கையில் வாங்கிப் பார்த்த வசுந்தரா அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

ஸ்ரீகுமார் உடை மாற்றுவதற்காகப் போட்டு வைத்திருந்த தடுப்புக்குள் நுழைந்தார்.

உட்கார்ந்திருந்த வசுந்தரா அப்போதைக்கு எழுந்து போவதாகத் தெரியவில்லை.

''கேன்டீன்தானே போறீங்க. நானும் வர்றேன்" என்றபடியே வசுந்தரா எழுந்தாள்.

எலும்புக்கூட்டின் மீது கட்டுவதற்காகக் கொண்டு வந்திருந்த கயிறு தலையணையின்கீழ் பத்திரமாக இருந்தது. இப்போது வசுந்தராவின் முன்பாக அதை எடுத்துக் கட்டினால் ஏதாவது சந்தேகம் தோன்றும் என்பதால், பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தார் ஸ்ரீகுமார்.

கூடவே மற்றொரு யோசனையும் ஸ்ரீகுமாருக்குத் தோன்றாமல் இல்லை. இந்தச் சரடை எலும்புக்கூட்டின் மீது கட்டினால் என்ன நடக்கும்?

நிச்சயமாக, ஆச்சரியகரமான சம்பவம் ஏதாவது ஒன்று நடைபெறலாம். அப்படி ஏதாவது நடந்தால் நடப்பதை வசுந்தரா கவனிக்காமல் இருப்பதுதான் நல்லது. இல்லாவிட்டால் பிற்பாடு அது வேறு பிரச்சினைகளைக் கிளப்பலாம்.

எனவே தற்சமயம் வசுந்தராவுடன் கேன்டீனுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை. போகட்டும். இன்று இரவு பார்த்துக்கொள்ளலாம். பகல் நேரத்தில் வேறு யாராவது எலும்புக்கூட்டை வகுப்புகளுக்கு எடுத்துச் செல்லலாம். அப்போது அதன் மீது சரடு யாராவது தவறாக இருந்தால் நினைக்கலாம். ஒருவேளை இது எதற்கு என்று அவிழ்த்துப் போடவும் செய்யலாம். எனவே தற்சமயம் சரடை கட்டாமல் இருப்பதுதான் நல்லது.

ஸ்ரீகுமார் வசுந்தராவுடன் கேன்டீனுக்குப் போனார். டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது வசுந்தரா ஒரே ஒரு மல்லிகைப்



பூவை எடுத்து டேபிளின்மீது வைத்தார். பிறகு சிரித்தபடியே கேட்டார். ''இதெல்லாம் எவ்வளவு நாளா நடக்குது?"

ஸ்ரீகுமார் வியப்பால் வாய் திறக்க முடியாமல் கல்லாகச் சமைந்துபோனார்.!

## 21

முதலில் வசுந்தரா மல்லிகைப்பூவை எடுத்து டேபிள் மீது வைத்தபோது குமாரின் நெற்றி சுளிவடைந்தது. வசுந்தராவின் தலையில் மல்லிகைப்பூ எதுவும் இல்லை.

பிறகு இந்தப் பூ எப்படி அவருக்குக் கிடைத்தது? எங்கிருந்து கிடைத்தது? டேபிளின் மீது அந்த ஒற்றை மல்லிகையை வசுந்தரா வைத்தபோது எதையோ புரிந்து கொண்டு, அதைத் தனக்கு விளக்குவதற் காகவோ, நினைவூட்டுவதற்காகவோ அப்படிச் செய்வதாக ஸ்ரீகுமாருக்குத் தோன்றியது.

''ஏது இது? எதுக்காக இங்க வெச்சிருக்கீங்க? ஸ்ரீகுமார் கேட்டார்.

''இந்த மல்லிகை ஏதுன்னு எங்கிட்ட கேக்குறீங்களா?"

''பாட்டனி க்ளாஸ்க்கு எடுத்துட்டு போறீங்களோன்று கேட்டேன்!" ஸ்ரீகுமார் சிரித்தவாறே சொன்னார்.

''அதெல்லாமில்லை... இன்னும் வாடாம இருக்குற இந்தப் பூவுக்குத்தான் எப்படியொரு வாசனை? இந்த வாசனை இந்தப் பகுதியையே வாசனையாக்குறது உங்களுக்குத் தெரியலையா?'' வசுந்தராவின் கேள்வியில் சந்தேகம் கலந்திருந்தது.

''நல்ல வாசனை, இன்னும் சொல்லப்போனா அசாதார ணமான வாசனை! ஆமாம்... இது உங்களுக்கு எங்கேருந்து கிடைச்சது?" ஸ்ரீகுமார் உண்மையிலேயே ஒன்றும் புரியாதவராகக் கேட்டார்.

''கேள்வி சரியானதுதான். இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்றது? ஆமாம்... இதெல்லாம் எவ்வளவு நாளா நடக்குது? எனக்கு இதைப்பத்தி ஒண்ணுமே தெரியலையே? பொதுவா இந்த மாதிரி விஷயங்கள் ஏதாவது இருந்தா என்கிட்ட சொல்லியிருப்பீங்களே. ஆனா, இதுவரைக்கும் அப்பிடி எதையும் காதில வாங்கினதா ஞாபகமே இல்லை. என்கிட்டச் சொல்லக்கூடாத ரகசியங்கள் எதுவும் உங்களுக்கு இருக்கும்னு எனக்குத் தோணலை. முடிஞ்சா சொல்லுங்க.''

அதற்குள் சர்வர் வந்து நின்றார்.

ஸ்ரீகுமார் இரண்டு செட் பூரிகிழங்கு ஆர்டர் செய்தார்.

கேன்டீனில் ஆங்காங்கு லெக்சரர்களும் மாணவர்களுமாக உட்கார்ந்திருந்தனர். ஆண்களும் பெண்களும் வேறுபாடு இல்லாமல் ஒன்றாக அமர்ந்திருந்தனர். இவர்களை எல்லாம் பார்க்கும்போது சந்திப்புக்கும் பேச்சுக்கும் கேன்டீனை ஒரு கேந்திரமாக வைத்திருக்கிறார்கள் அவர்கள் என்றே தோன்றியது.

''நீங்க இவ்வளவு தூரம் அழுத்திக் கேட்டபோது தான் ஞாபகம் வருது. இதை என்னோட கட்டில்ல இருந்து எடுத்தீங்களா? அப்படீன்னா அதுல நீங்க கற்பனை பண்றதுக்கோ, குறுக்கு விசாரணை பண்றதுக்கோ எதுவுமே இல்லை. ஸ்ரீகுமார் மிகவும் சாதாரணமான குரலில் பேசினார்.

ஆனால், ஸ்ரீகுமாரின் இயல்பான இந்த பதிலை ஏனோ வசுந்தராவால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவரது கண்களிலிருந்த சந்தேகம் இன்னும் விலகியதாகத் தெரியவில்லை.

சர்வர் காபி எடுத்து வந்தார்.

''சமீப காலமா உங்ககிட்ட ஏதேதோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதா தோணுது. இதுவரைக்கும் ஊருக்கே போகாம இருந்த நீங்க இப்ப அடிக்கடி போயிட்டு வர்றீங்க. இதுக்கு என்ன அர்த்தம்? வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி பண்றீங்களா என்ன?'' - வசுந்தரா கேட்டார்.



இதைக் கேட்ட ஸ்ரீகுமார் வாய் விட்டுச் சிரித்தார்.

''இந்தச் சிரிப்புக்கு என்ன அர்த்தம்?'' வசுந்தரா மடக்ினார்.

''ஒண்ணும் இல்லை. உங்களோட கேள்விகளை நினைச்சதும் சிரிப்பு வந்தது!''

அதே நேரம் அவர்கள் அமர்ந்திருந்த பகுதியில் விநாடிக்கு விநாடி மல்லிகைப் பூவின் மணம் உயர்ந்துகொண்டே இருந்தது. வசுந்தராவின் முகத்தில் சந்தேகமும் கூடவே அதிகரித்தது. சுற்று முற்றும் பார்த்தார். தனக்கு அருகில் மிக அருகில் தலை நிறைய மல்லிகைப் பூவைச்சூடிக்கொண்டு யாரோ நிற்பதாக வசுந்தராவுக்குத் தோன்றியது.

டேபிளின்மீது வைத்திருந்த ஒற்றை மல்லிகையின் மணம் மட்டுமல்ல அது. யாரோ மல்லிகை பூவை முழக்கணக்கில் பந்தாகச் சுருட்டி மிக அருகில் வைத்திருப்பது போல் மணம் மிகவும் அடர்த்தியாக இருந்தது நிதரிசனமாகவே தெரிந்தது.

ஸ்ரீகுமாருக்குச் சட்டென்று விஷயம் விளங்கியது. அதாவது ஸ்ரீதேவி சமீபத்தில் எங்கேயோ இருக்கிறாள். ஆனால், அவளை யாரும் பார்த்துவிட முடியாது என்பதுதான் ஒரே ஆறுதல்.

எதற்காக பகல் நேரத்தில் அவள் தன்னைத்தேடி வந்திருக்கிறாள்?

விஷயம் என்னவாக இருந்தாலும் கேன்டீனிலிருந்து சீக்கிரமாக முடியுமோ வெளியேறி உடனே ஸ்டோர் ரூமுக்குப் போக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார் ஸ்ரீகுமார்.

டிபனை முடித்துக்கொண்டு சீக்கிரமாக எழுந்து கை கழுவினார்.

''என்ன இவ்வளவு அவசரம்? போய் நோட்ஸ் ஏதாவது தயார் பண்ணணுமா என்ன?'' - வசுந்தரா கேட்டாள்.

''ஆமாம்! மறந்தே போயிட்டேன். இப்பத் தான் ஞாபகம் வந்தது'' - ஸ்ரீகுமார் கர்ச்சீப்பால் கை, முகம் ஆகியவற்றைத் துடைத்தபடி பேசினார்.

வசுந்தரா அவரைப் பின் தொடர்ந்தாள்.

வசுந்தாவுடன் வந்த ஸ்ரீகுமார் இடதுபுறம் திரும்பினார். வந்த வழியாகத்தான் அவர் தனது அறைக்குச் செல்ல வேண்டும்.

அதற்கு மேல் வசுந்தரா ஸ்ரீகுமாரைப் பின் தொடரவில்லை.

ஸ்ரீகுமார் லேபரெட்டரிக்குள் நுழைந்தார்.

நல்லவேளையாக கண்ணாடிப் பெட்டிக்குள் எலும்புக்கூடு தொங்கிக்கொண்டிருந்தது.

மனத்தை மாற்றிக்கொண்டவராக, தேவதத்தன் நம்பூதிரி கொடுத்து அனுப்பிய சரடைக் கையில் எடுத்தார். யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்று பார்த்தார்.

பார்த்தால் எவ்வளவு அவமானகரமான விஷயம்! நிறைய முடிச்சுகள் போடப்பட்ட ஒரு கறுப்புக்கயிறு அது. சில குழந்தைகளின் இடுப்பு மற்றும் கழுத்து, கங்கணம் போன்ற பகுதிகளில் தோஷங்கள் மாறுவதற்காக இப்படிப்பட்ட கயிறுகளைக் கட்டுவதுண்டு. ஸ்ரீகுமாரும் இதையெல்லாம் பார்த்திருக்கிறார்.

அப்படிப்பட்ட கயிறு ஒன்றை வெறும் எலும்புக்கூட்டின் மீது கட்டி வைத்தால் கல்லூரி முழுவதும்அதைப் பற்றிக் கேலி செய்வார்கள். தன்னை ஒரு பழமைவாதி என்று சொல்வார்கள்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தார்.

எலும்புக்கூட்டை வைத்திருக்கும் கண்ணாடிப் பெட்டியின் கதவைத் திறந்தார்.

திடுமென்று மொத்த எலும்புக்கூடும் ஒருகணம் அதிர்ந்து கலகலவென்று ஓசை எழுப்பியதா என்ன!

அவருக்குச் சந்தேகமாக இருந்தது.



'ஒருவேளை பிரமையாக இருக்குமோ என்னவோ?' தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டார் ஸ்ரீகுமார்.

மெதுவாக கறுப்புச் சரடை எடுத்து எலும்புக்கூட்டின் இடதுகரக் கங்கணப் பகுதியில் கட்டினார், கண்ணாடிப் பெட்டியை மூடிவிட்டு ஒதுங்கி நின்று பார்த்தார்.

எலும்புக்கூடு எந்தவிதமான அசைவுமின்றி அமைதியாகவே இருந்தது.

மெதுவாக அறையிலிருந்து வெளியே வந்தார்.

மூன்றாவது பீரியடில்தான் தனக்கு வகுப்பு உள்ளது. அதுவரை காலேஜுக்குள்ளேயே இருக்காமல், கொஞ்சம் வெளியே போய்விட்டு வரலாம் என்று கிளம்பினார்.

சந்துநாயரும் ஜயந்தனும் ஒருவிதத்தில் மகிழ்ச்சி அடைந்தனர்.

எதிராளியின் பலம் என்னவென்று ஓரளவு விளங்கி விட்டது. எதிராளியும் பலம் வாய்ந்த ஒருத்தன்தான் என்பது புரிந்துவிட்டது. இதுவரையிலான தங்களது முயற்சிகள் எதனால் பயனற்றுப் போனது என்பதும் புரிந்தது.

இருப்பினும் ஜயந்தனுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. இதுவரையிலான அவரது மாந்திரீக வாழ்க்கையில் இப்படிப்பட்ட பரிசோதனைகளில் அவர் ஈடுபடவும் நேர்ந்ததில்லை.

மற்றொரு முறையில் சொல்வதானால் இதைவிடக் கொடூரமான ரக்ஷஸுகளையெல்லாம் அவர் வெகு சுலபமாகவே நேரிட்டு வெற்றி கண்டிருக்கிறார். எனவே தற்போது தான் சந்திக்க வேண்டியிருப்பது அதே போன்ற ரக்ஷஸாக இருக்கலாம். எனவே, அது கவலைப்படத் தக்க காரியமாகத் தெரியவில்லை.

ஆனால், ஸ்ரீதேவியைப் பொறுத்தவரை ஜயந்தனின் மதிப்பீடுகள் சரியானதாக இருக்கவில்லை. அவளுக்கு

கோயிலின் துவாரபாலிகையான சௌபர்ணிகா துணையாக இருப்பதே பெரும்பலமாக இருந்தது.

உண்மையில் ஸ்ரீதேவிக்கு அது ஒரு பெரும்பலமாகத் தோன்றவும் செய்தது.

சௌபர்ணிகா ஒரு நிழல் மாதிரியே ஸ்ரீதேவியைத் தொடர்ந்துகொண்டிருந்தாள்.

''கோவிந்தன் கண்டிப்பாக நமக்கு உதவுவார்!'' ஜயந்தன் கூறினார்.

''நானும் அப்படித்தான் நம்புறேன்!'' - சந்துநாயரும் ஒப்புக்கொள்வது போலப் பேசினார்.

''கோவிந்தனுக்கு அந்த லெக்சரர் மேல வெறித்தனமான கோபம் இருக்கு. அதுதான் நம்மளோட அதிர்ஷ்டமும்கூட. கோவிந்தனுக்கு சக்தி ஏற்றிவிட்டுட்டாப் போதும். மிச்சத்தை அவர் பார்த்துப்பார். அந்த உடம்பில் ரத்தத்தைச் சொரிய வேண்டும். அதுக்குக் கொஞ்சம் சேவலுங்க போதும். ஏழு நாள் தொடர்ந்து இப்படிச் செஞ்சோம்னா, கண்ணுக்குத் தெரியாத அவரோட கைகளுக்கு நல்ல வலு கிடைச்சுடும். அதன் பிறகு மற்ற மனிதர்களைத் தொடுமளவு தொடுஉணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். இந்த இரண்டும் முடிந்துவிட்டால் எல்லாம் சுலபமாக முடிந்துவிடும்.''

அன்றிரவு கோவிந்தன் வருவார் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருவரும் காத்திருந்தனர்.

இரண்டாவது பீரியடின் போது சக்காரியா சார் எதையோ எடுப்பதற்காக லேபரெட்டரிக்கு வந்தார். ஸ்டோர் ரூமை அடைந்தபோது கதவு திறந்து கிடந்தது.

குரங்கு ஒன்றின் எலும்புக்கூட்டை எடுக்க வேண்டி இருப்பது ஞாபகம் வந்ததால், உள்ளே நுழைந்தார்.

வெகுநாட்களாக மாணவர்கள் குரங்கின் எலும்புக் கூட்டைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.



ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்ததும் என்னமோ ஒன்று கருகும் வாசனை அவரது மூக்கைத் தாக்கியது. சமீபகாலமாகப் பத்திரிகைகளில் தீ விபத்துக்களைப் பற்றி ஏராளமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே சந்தேகம் நிறைந்த கண்களுடன் சுற்றுமுற்றும் பார்த்தார்.

ஆனால், குறிப்பிடும்படி எதுவும் தென்படாததால் கருகல் வாசனை தன்னுடைய கற்பனையாக இருக்குமென்று வெளியே வந்தார்.

அப்போது ஸ்ரீகுமார் லேபரெட்டரிக்குள் நுழைந்தார்.

''என்ன சார் இங்கே? நான் உங்களுக்கு ஏதாவது உதவணுமா?'' -ஸ்ரீகுமார் கேட்டார்.

''அதெல்லாம் ஒண்ணும் தேவையில்லை சார். குரங்கோட எலும்புக்கூடு எடுக்கவந்து மறந்து வெளியே வந்துட்டேன்.'' என்றவர் மறுபடி உள்ளே நுழைந்து, ஒரு சிறிய கண்ணாடிப் பெட்டியுடன் வெளியே வந்தார். பார்வைக்கு அது ஒரு குழந்தையின் எலும்புக்கூடு மாதிரி இருந்தது.

சக்காரியா சார் வெளியேறி விட்டார்.

ஸ்ரீகுமார் மேஜை டிராயரைத் திறந்தார். அதற்குள் இருந்த இரண்டு புத்தகங்களை எடுத்துப் புரட்டிப்பார்த்தார்.

''என்ன தேடுறீங்க?'' அவருக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

ஸ்ரீகுமார் திரும்பிப் பார்த்தபோது தெளிவற்ற ஸ்ரீ தேவியின் உருவம் தெரிந்தது.

''அடுத்த வகுப்புக்கான பாடம்...''

அவர்கள் இருவருக்குமிடையில் இருந்த இடைவெளி வழியே ஸ்டோர் ரூமின் எலும்புக்கூடுள்ள கண்ணாடிப் பெட்டி நன்றாகவே தெரிந்தது.

''பக்கத்தில் போய்ப் பாருங்களேன்!'' ஸ்ரீதேவி, கையால் சுட்டிக்காட்டியபடி கூறினாள்.

ஸ்ரீகுமார் அங்கிருந்து நகர்ந்து கண்ணாடிப் பெட்டியை நெருங்கி எலும்புக்கூட்டை முழுவதுமாகப் பார்த்தார்.

எலும்புக்கூட்டின் கங்கணப் பகுதியில் அவர் கட்டியிருந்த கறுப்புக் கயிறு சாம்பலாகிப் போயிருந்தது.

ஸ்ரீகுமார் வியப்பால் கண்களை அகல விரித்தார்.

## 22

"இது எப்படி இப்படியானது?" ஸ்ரீகுமார் வியப்பு மாறாத குரலில் கேட்டார்.

சற்று நேரம் எதையோ யோசித்த ஸ்ரீதேவி அதற்குப் பதிலளித்தாள். "வேறு யாராவது தங்களுக்கு எதிராகச் செயல் படலாம் என்பதைத் தெரிந்துகொண்டு முன்கூட்டியே இப்படியொரு பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். எலும்புக்கூட்டின் மீது சக்தியேற்றிவிட்டிருக்க வேண்டும்.

"ஓகோ... அப்படியொரு வழி இருக்கிறதா?" மேற்கொண்டு இந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கிற எலும்புக்கூடு அசையாமல் இருப்பதற்காகத்தான் திருமேனி (தேவதத்தன் நம்பூதிரி) இந்தக் கயிற்றை மந்திரித்து தந்தார். ஆனால், இப்படிப்பட்ட நடவடிக்கையை நமது எதிராளிகள் எதிர்பார்த்து அதற்கேற்ற முன்னேற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அப்படியானால் நான் உடனடியாகத் திருமேனியைச் சந்திக்க வேண்டுமே!" ஸ்ரீகுமார். ஏமாற்றத்துடன் அங்கிருந்து திரும்பினார்.

அன்று இரவுக்குள்ளேயே இதற்கொரு பரிகாரம் காணவில்லையென்றால், நிச்சயம் எலும்புக்கூடு கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியேறிவிடும் என்று குமார் நம்பினார். எனவே திருமேனியை உடனடியாகச் சந்திப்பது அவசியம் என்றும் நினைத்தார்.



பிரின்ஸ்பாலின் அறைக்குச் சென்று லீவு வேண்டும் என்று கூறினார் குமார்.

"என்ன சார்... சமீபகாலமா இப்படி அடிக்கடி லீவு எடுக்குறீங்க! ஏதாவது பிரச்சினையா?" இதுவரையில் லீவு என்பதைப் பற்றியே யோசிக்காத ஒரு மனிதர் ஸ்ரீகுமார் என்பது பிரின்ஸ்பாலுக்கும் நன்றாகவே தெரியும்.

"குடும்பத்துல சில பிரச்சினைங்க சார். இத்தனை நாளா அந்தப் பக்கமே தலைவெச்சுப் படுக்காம இருந்தேன். அதனால ஒண்ணுக்கு மேல ஒண்ணா எல்லாப் பிரச்சினைகளும் சேர்ந்து இப்ப ஒரே தலைவலியா மாறிடுச்சு. இனிமேலும் இதை எல்லாம் கவனிக்காம இருக்க முடியாதுங்கிற நிலைமை. என்ன சார் செய்யிறது?" ஸ்ரீகுமார் தன்னுடைய அவசரத்தை வெளிக்காட்டாமல் நாற்காலியில் அமர்ந்தார்.

ஸ்ரீகுமாரின் பிரச்சினையே தங்களது லேபில் உள்ள எலும்புக்கூடு தொடர்பானதுதான் என்பதைப் பற்றி பிரின்ஸிபால் கொஞ்சம்கூட யோசித்தே பார்க்கவில்லை.

"அவசியமா நீங்க போய்த்தான் தீரணும்னா கிளம்புங்க. நம்ம காலேஜோட நிலைமையை நான் உங்ககிட்ட விளக்கணும்கிற அவசியமே இல்லை" -பிரின்ஸிபால் லீவு லெட்டரை ஒருதடவை பார்த்துவிட்டுக் கையெழுத்துப் போட்டு, டிரேயில் தள்ளினார்.

ஸ்ரீகுமார், பிரின்ஸிபாலுக்கு நன்றி சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியேறினார்.

ஸ்ரீகுமார் மீண்டும் லேபரெட்டரிக்கு வந்தார். அங்கு ஸ்ரீதேவியைத் தவிர வேறு யாரும் இல்லை.

"லீவு கிடைச்சதுங்களா?" - அவள் கேட்டாள்.

"ஆமாம்! உடனடியா அவரைப் பார்க்கக் கிளம்பிட்டேன். இவ்வளவு நேரமும் தனியாவா உட்கார்ந்திருக்கிற?"

''நீங்க போன பிறகு யாருமே இந்த ரூமுக்குள்ள வரலையே?''

''அப்படீன்னா இப்ப என்கூட வர்றியா?''

''வந்துட்டாப் போச்சு, அந்தத் திருமேனியைப் பார்க்கணும்னு எனக்கும் ஆசையா இருக்கு!'' - ஸ்ரீதேவி அவருடன் புறப்பட்டாள்.

காலேஜிலிருந்து வெளியேறிய இருவரும் தென்புறமாக நடந்தனர்.

மேற்குத் திசையிலிருந்து ஆட்டோ ஒன்று வருவதைப் பார்த்த ஸ்ரீகுமார் கையைக் காட்டி, அதை நிறுத்தினார். இருவரும் ஆட்டோவில் ஏறிக்கொண்டனர். ஆனால், ஆட்டோ டிரைவருக்கு ஸ்ரீகுமாருடன் வந்த ஸ்ரீதேவி தெரியவே இல்லை.

ஆட்டோ, பஸ் ஸ்டாண்டை நோக்கி விரைந்தது.

நிலம்பூருக்குப் போகும் வண்டி புறப்படத் தயாராக இருந்தது. தேவதத்தன் நம்பூதிரி அங்குதான் குடியிருந்தார்.

இரவு சுமார் ஒன்பது மணியளவில் ஸ்ரீகுமார் அவரது மனையை அடைந்தார்.

திருமேனி நல்லவேளையாகத் தூங்காமல் இருந்தார்.

''என்ன இந்த நேரத்தில? ஏதாவது அசம்பாவிதம் நடந்துடுச்சா?'' - திருமேனி கேட்டார்.

ஸ்ரீகுமார் நடந்ததையெல்லாம் விவரித்தார்.

''ஓகோ... அப்படியா... நம்ம எதிராளியும் லேசுப் பட்டவன் இல்லேன்னு புரியுது. அவங்களும் இதையெல்லாம் ஓரளவு எதிர்பார்த்திருக்காங்கன்னு தெரியுது'' -திருமேனி நிலவிளக்கைப் பார்த்தபடி பேசினார்

''... ... ...''

''அந்த எலும்புக்கூட்டுக்குச் சொந்தக்காரனை அவங்களுக்கு ரொம்பவும் பிடிச்சுப் போயிடுச்சுன்னு தோணுது.



''இதுக்கு நாம என்ன பதில் நடவடிக்கை எடுக்கிறது திருமேனி?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''யோசிக்கலாம். இந்த உலகத்துல பரிகாரம் இல்லாத விஷயம்னு ஏதாவது ஒண்ணு இருக்கா என்ன?'' திருமேனி பூஜையறையின் சாவியை எடுத்தார்.

பூஜையறையின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவர் மிகவும் பழமையான ஓலைச்சுவடி ஒன்றுடன் வெளியே வந்தார்.

நிலவிளக்கின் முன்னால் அமர்ந்த திருமேனி, ஓலைச் சுவடியின் இதழ்களை அவசர அவசரமாகப் புரட்டி, குறிப்பிட்ட ஒரு பகுதியை எடுத்து வெகுநேரம் ஊன்றிப் படித்தார்.

அந்தச் சுவடியின் மத்தியில் ஒரு யந்திரம் வரையப் பட்டிருந்தது. கவனத்துடன் அதைக் கவனித்த திருமேனி செப்புத் தகடு ஒன்றைக்கையில் எடுத்தார். மேற்புற உத்தரத்தில் செருகி வைத்திருந்த பித்தளை எழுத்தாணியை உருவினார்.

சுவடியில் உள்ளதுபோன்ற யந்திரத்தை செப்புத் தகட்டில் வரைந்தார். யந்திரத்தின் இருபுறத்திலும் ஒரு சில மந்திரங்களை எழுதினார்.

ஒரு வெள்ளித் தாயத்து கூட்டினுள் அந்த யந்திரத்தை சுருட்டித் திணித்தார்.

''திரும்பவும் ஒருதடவை முயற்சி பண்ணிப் பார்ப்போம்!'' - திருமேனி கூறினார்.

''இன்னிக்கு ராத்திரிகூட அந்த எலும்புக்கூடு கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியேற வாய்ப்பு இருக்கே.'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''இல்லை. அதுக்கு வழி இல்லேன்னு தெரியுது. காரணம் பகல் நேரம் தங்கியிருக்க எலும்புக்கூட்டுக்கு ஏதாவது ஒரு இடம் வேணும். அப்படிப் பொருத்தமான இடம் கிடைக்கலேன்னா சிலநேரம் மத்தவங்ககிட்ட அகப்பட்டுக்கிற வாய்ப்பு இருக்கு.

எனவே முடிஞ்சவரைக்கும் அந்தக் கண்ணாடிப் பெட்டிக் குள்ளேயே இருக்கத்தான் வாய்ப்பு. பயப்படாமல் போயிட்டுவா!'

''ஒருவேளை நீங்க சொல்றபடி இன்னிக்கு ஒருநாள் கண்ணாடிப் பெட்டிக்குள்ளேயேகூட அது அடைஞ்சு கிடந்தா சரி!''

''ஆமாம், இப்பவே புறப்படப் போறீங்களா என்ன?'' - திருமேனி கேட்டார்.

''போகாம வேற வழி?''

''இப்ப உடனடியாப் போகலைன்னாலும் ஒண்ணும் ஆயிடாது. இங்கேயிருந்து நாளை காலையில ஏழுமணிக்குத்தான் பஸ். அதனால ராத்திரிப் பொழுதை இங்கே கழிச்சுடு றதுதான் நல்லது.''

''உங்களுக்கு கஷ்டம் எதுவும் இல்லேன்னா அப்படியே செஞ்சுடுறேன்.''

ஸ்ரீகுமார் தனது இரவுச் சாப்பாட்டை அன்று அங்கேயே முடித்துக்கொண்டார்.

பழமையான அந்த மனையின் தென்புறமிருந்த ஓர் அறையில் படுத்துக்கொண்டார் ஸ்ரீகுமார்.

வெகு நாட்களாகத் திறக்காமலிருந்த அந்த அறைக்குள் இருந்த ஒருவித நெடி ஸ்ரீகுமாருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

ஜன்னலைத் திறந்துவிட்டபோது குளிர்ந்த காற்று உட்புறத்தில் வீசியது.

மெதுவாகக் கண்களை மூடினார்.

சற்று நேரத்துக்குள் திறந்திருக்கும் ஜன்னல் பக்கமிருந்து என்னமோ சத்தம் கேட்டது.

சட்டென்று கண்களைத் திறந்த ஸ்ரீகுமார் அந்தப் பக்கமாகத் திரும்பினார்.



ஜன்னலுக்கு வெளியே யாரோ நின்றுகொண்டிருப்பதாகத் தோன்றிது.

''யாரது?'' ஸ்ரீகுமார் உரத்த குரலில் கேட்டார்.

''நான்தான்!'' - ஒரு பெண்ணின் குரல் பதிலளித்தது.

முன்பின் பழக்கமில்லாத ஒரு குரல். நிச்சயமாக அது ஸ்ரீதேவியின் குரல் அல்ல!

''ரேணுகா... இந்த இல்லத்தைச் சேர்ந்தவள்தான்!''

''இந்த இல்லத்தைச் சேர்ந்த பெண்தான்னா, ஏன் வெளியில நிற்கணும்?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''முன்பக்கமா வந்தா அப்பா பார்த்துடுவார். வாசலை ஒட்டியிருக்கிற அஎ றயிலதான் அவர் படுத்திருக்கிறார்.'' - அவள் பதிலளித்தாள்.

''சரி, இப்ப எதுக்காக வந்திருக்கீங்க? ஸ்ரீகுமார் கேட்டார்.

''அப்பாவுக்கு எங்களைப் பத்தின எந்தக் கவலையும் இல்லை. நாங்க மொத்தம் ஏழுபேரு. நான்தான் எல்லோருக்கும் மூத்தவள் .''

''ரேணுகா, உங்க வயசு என்ன?''

''இருபத்தேழு. கடைக்குட்டிக்குப் பதினெட்டு வயசு.''

''அவங்கள்லாம் எங்கே இருக்காங்க.?''

''தானிய அறையில படுத்திருக்காங்க. அவங்களுக்குத் தெரியாம நான் மட்டும் எழுந்து வந்திருக்கேன்.''

ஸ்ரீகுமார் தீப்பெட்டியை எடுத்து உரசி, மேஜை மேல் வைத்திருந்த நிலவிளக்கைக் கொளுத்தினார்.

அதன் வெளிச்சத்தில் அவர் ரேணுகாவைக் கவனித்தார்.

மிகவும் அழகாக இருந்தாள்.

''உங்க அப்பா ஏன் இன்னும் உங்களுக்கெல்லாம் கல்யாணம் பண்ணாம இருக்கிறார்?''

அவருக்கு அதுக்கெல்லாம் ஏது நேரம்? எப்பப் பார்த்தாலும் உங்களை மாதிரி யாராவது வந்துட்டே இருப்பாங்க. அவர் கவனம்

பூராவும் அதிலதான்." - ரேணுகாவின் வார்த்தைகள் துயரத்துடன் வெளிவந்தன.

உண்மையிலேயே ஸ்ரீகுமார் அவள் சொன்ன கதையைக் கேட்டுக் கவலையடைந்தார்.

ஒரு லெக்சரராக இருப்பினும் அவருக்குள் இருந்த தார்மீக உணர்வு விழித்தெழுந்தது.

இவ்வளவு புகழ்பெற்ற மாந்திரீகரான தேவதத்தன் தனது பெண்கள் யாரையும் இன்னும் கல்யாணம் செய்து அனுப்பாமல் வீட்டிலேயே வைத்திருக்கிறாரே!

ஸ்ரீகுமாருக்கு அந்தச் செய்தியே வியப்புக்குரிய ஒன்றாக இருந்தது.

ரேணுகா சொன்னது உண்மையாக இருக்கும் என்று தோன்றியது.

தன்னுடைய சொந்தத் தொழிலின் மீதுள்ள கவனத்தால் பெற்ற குழந்தைகளையே மறந்துவிட்டிருக்கிறார் அவர்.

'இப்போது என்ன செய்யலாம்?' ஸ்ரீகுமார் சுற்றுமுற்றும் பார்த்தார்.

'அறைக்கதவைத் திறப்பதானால், தேவதத்தன் நம்பூதிரி படுத்திருக்கும் அறைவழியாகத்தான் வெளியே போகவேண்டும்.'

தான் இந்த நேரத்தில் வெளியே போவதைப் பார்த்தால் அவர் என்ன நினைப்பார்?

அதைப் பார்த்தால் ரேணுகா சொன்னதை அப்படியே காற்றில் விட்டுவிட வேண்டியதுதானா? ஸ்ரீகுமார் சற்று நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார்.

கடைசியில், கொஞ்ச நேரமாவது அவளிடம் பேசி, துயரத்தைப் பகிர்ந்துகொள்ளலாம். அவளுக்கும் அது ஆறுதலாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்.

உட்புற வராந்தாவுக்கு வந்தார்.



தேவதத்தன் நம்பூதிரியிடமிருந்து எழுந்த குறட்டைச் சத்தம், அவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார் என்பதை உணர்த்தியது.

வெளிப்புறக் கதவைத் திறந்த போதும் அவர் விழித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஒருவேளை கண்விழித்து அவர் ஏதாவது கேட்டால், கற்பனையாக ஒரு காரணம் சொல்ல வேண்டியதுதான்.

வீட்டை விட்டு வெளியே வந்தவர் முற்றத்தைக் கடந்து தென்புறமாக நடந்தார்.

அவள் இன்னும் அங்கேயேதான் நின்றுகொண்டிருந்தாள்.

''ரேணுகா, இங்கயேவா நின்னுட்டிருக்கிங்க? ஸ்ரீகுமார் கேட்டார்.

''நான் காத்துக்கிட்டிருக்கிறேன்'' - அவள் ஸ்ரீகுமாரை நெருங்கினாள்.

அவள் நெருங்கியபோது இலஞ்சிப் பூக்களின் மணம் அவரைச் சூழ்ந்தது.

பிளவுஸூம், வேட்டியும் உடுத்தியிருந்தாள். கடுமையான நீண்ட தலைமுடி பின்புற இடுப்புப்பகுதியையும் தாண்டிக் கீழிறங்கியிருந்தது.

ஒரு மோகினியைப் போல மிகவும் அழகாகத் தோற்றமளித்தாள் ரேணுகா.

''அங்க உட்காரலாமா?'' - அவள் தெற்குத் திசையில் சற்றுத் தொலைவிலிருந்த குளத்தின் கல் படிக்கட்டுகளைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள்.

படிகளின் மீது படிந்திருந்த பாசம், ஈரம் உலர்ந்திருந்ததால் செதில்களைப் போல் மேற்புறமாக உயர்ந்திருந்தது. குளம் எத்தனையோ நூற்றாண்டுகளைத் தாண்டியிருக்கிறது என்பது புரிந்தது.

அசைவற்றுக் கிடந்த குளத்து நீரில் நிலவு ஒரு வெள்ளி அரிவாள் கிடப்பது போலத் தோன்றியது.

மேற்புறப் படிக்கட்டில் அவர்கள் அமர்ந்தனர்.

''ரேணுகாவோட அம்மாதான் சாப்பாடு பரிமாறின வங்களா?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''ஆமாம்... அவங்கதான் எங்க அம்மா?''

''உங்களுக்குத் தம்பிங்க யாரும்இல்லையா?'' குமார் விசாரித்தார்.

''இல்லை. எல்லாம் பொண்ணுங்கதான்.''

''அதுதான் சிக்கல். அப்படி யாராவது இருந்தா அவங்களாவது முயற்சி எடுத்திருப்பாங்க!''

''உண்மைதான்!''

குளத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருளடைந்த, உயர்ந்த மரமொன்று நின்றிருந்தது. அதுவரை அமைதியாக இருந்த மரத்தின் கிளைகள் திடுமென்று ஒருதடவை அதிர்ந்து குலுங்கியது போலிருந்தது. மரம் அதிர்ந்தபோது அதிலிருந்து நூற்றுக்கணக்கான வௌவால்கள் யாரோ விரட்டிவிட்டதைப் போல் நான்கு திசைகளிலுமாகப் பறந்தன.

''அதோ தெரியுதே அது ஒரு எட்டிமரம்!'' -அவள் கூறினாள்.

''அப்படியானால் அந்த மரத்துல ஏராளமான ஆணிகளை அறைஞ்சிருப்பாங்களே?''

''ஏன் அப்படிக் கேட்குறீங்க?''

''பொதுவா மந்திரவாதிங்க ரக்ஷஸுகளை எட்டி மரத்திலதானே ஆணி அறைஞ்சு கட்டுவாங்க. இது இல்லேன்னா ஆலமரம். அதனாலதான் சொன்னேன்!

''இதையெல்லாம்கூட தெரிஞ்சு வெச்சிருக்கீங்களே பரவாயில்லையே!''

''இதுல தெரிஞ்சுக்க என்ன இருக்குது? எத்தனையோ வருஷமா நாம கேள்விப்படுறதுதானே?'' என்ற ஸ்ரீகுமார்



படியிலிருந்து பெயர்த்தெடுத்த உலர்ந்த பாசத் துண்டை நீர்ப்பரப்பின் மீது எறிந்தார்.

அதுவரை அசைவற்றிருந்த நீர்ப்பரப்பு அசையத் தொடங்கியதால், அதில் பிரதிபலித்துக்கொண்டிருந்த நிலவு உருகி தண்ணீருடன் ஒன்றுகலந்தது போல் தெரிந்தது.

''அந்த மரத்திலிருந்து புறப்பட்ட மொத்த வௌவால் களும் அதில்தான் குடியிருக்கின்றன. இந்த நேரத்திலதான் அதெல்லாம் இரைதேடிப் புறப்படும். அதுங்க திரும்பி வரும்போது பாக்கு, முந்திரிக்கொட்டை மாதிரியான பொருள்கள் அந்த மரத்தடியில குவிந்து கிடக்கும்'' - அவள் தானாகப் பேசுவது போல் பேசினாள்.

''அப்படியானா இதுகூட ஒருவகையில் லாபம்தான்னு சொல்லுங்க!'' ஸ்ரீகுமார் சிரித்தார்.

''அதையெல்லாம் சேகரிச்சு விற்கிறது எங்களோட காரியஸ்தர்தான். அவருக்குத்தான் அந்த ஆதாயமெல்லாம்.''

''இந்த மாதிரி சின்னச் சின்னத் தொகையை நீங்க சேமிச்சா அதுக்கெல்லாம் தங்க நகையை வாங்கியிருக்கலாம் போலிருக்கே!''

''கண்டிப்பா வாங்கியிருக்கலாம். நான் அம்மாகிட்ட ஒரு தடவை இதைப்பத்திப் பேசியபோது சண்டை போட்டுத் திட்டிட்டாங்க!''

''ஒரு நம்பூதிரி குடும்பத்துல இப்படியெல்லாம் காசு சேர்க்கிறாங்கன்னு மத்தவங்க கேலி பேசுவாங்கன்னு பயந்திருப்பாங்க அதனாலதான்'' ஸ்ரீகுமார் மற்றொரு பாசத்துண்டை எடுத்து நீர்ப்பரப்பின் மீது எறிந்தார்.

ஆனால், அது நீரில் விழுந்தபோது எழுந்த சத்தம் ஸ்ரீகுமாரைத் திடுக்கிடச் செய்தது. ஒரு பெரிய பலாப்பழம் குளத்துக்குள் விழுந்தது மாதிரியான சத்தத்தை எழுப்பியது அது.

''என்ன இது?'' - ஸ்ரீகுமார் உட்கார்ந்த இடத்திலிருந்து துள்ளியெழுந்தார்.

''உட்காருங்க... இதுல பயப்படுறதுக்கு என்ன இருக்கு? இந்தக் குளத்துக்குள்ள குதிச்சுச் செத்துப்போனவங்க யாராவது இப்படிச் சத்தம் எழுப்பியிருக்கலாம். அவள் எந்தவிதமான தயக்கமோ, பயமோ இல்லாமல் பேசினாள்.

''நீங்க சொல்றது எனக்குப் புரியலை?''

''இதெல்லாம் இங்க ரொம்பவும் சாதாரணம்'' - ரேணுகா கூறினாள்.

''இருந்தாலும்...'' ஸ்ரீகுமார் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

திடுமென்று எழுந்த ரேணுகா, அவரது கையை எட்டிப் பிடித்தாள்.

அவளது விரல்கள் மிகவும் உறுதியானதாக இருந்தன. அவளது பிடியிலிருந்து நழுவுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

இருப்பினும் தனது முழு பலத்தையும் பயன்படுத்தி அவர் தனது கையை அவளிடமிருந்து இழுத்தார்.

அதேநேரம் -

குளத்துக்குள் இருந்து யாரெல்லாமோ கரை ஏறி வருவதை ஸ்ரீகுமார் கவனிக்கத் தவறவில்லை!

## 23

குளத்துத்துக்குள்ளிருந்து கரையேறி வருபவர்களின் உருவங்கள் தெளிவாக இருக்கவில்லை. நிழல் வடிவங்கள் போலிருந்த அத்தனை பேரும் பெண்களாக இருந்தனர். ஸ்ரீகுமாருக்குக் குழப்பமாக இருந்தது.

''என்ன ரேணுகா இது?'' - கையை விடுவிக்க முயன்ற ஸ்ரீகுமார் கேட்டார்.



35547
530526

''இவங்கள்லாம் இங்கேயே இருக்கிறாங்கதான். அப்பா இவங்களை இங்கதான் தங்கவைச்சிருக்காரு'' அவள் சிரித்தபடி கூறினாள்.

''இந்தக் குளத்துத் தண்ணிக்குள்ளயா?'' ஸ்ரீகுமார் வியப்புடன் அவளைப் பார்த்தார்.

''உண்மைதான்... அப்பா இப்படிப்பட்ட வேடிக்கைகளை நிறையவே செய்றது வழக்கம். அதோ அந்த எட்டி மரத்திலேயும் இவங்களைப் போலச் சிலர் இருக்கிறாங்க!'' - இப்போதும் அவளது சிரிப்பு மாறவில்லை.

அப்போதுதான் அவளது பேச்சில் ஏதோ உட்பொருள் இருக்கிறது என்பது அவருக்குப் புரிந்தது.

முடிந்தவரையில் அங்கிருந்து தப்பிக்க வேண்டுமென்று நினைத்தவர் அவளிடமிருந்து விடுபடும் முயற்சியில் ஈடுபட்டார்.

''அட... சும்மா உட்காருங்க. அவங்க உங்களை ஒண்ணும் பண்ணமாட்டாங்க'' - ரேணுகா வற்புறுத்தினாள்.

''வேண்டாம்... நாம் புறப்படலாம்!'' அவர் முன்புறமாக நடக்க ஆரம்பித்தார். அப்போது அவருக்குப் பின்னாலிருந்து ஏராளமானவர்கள் வாய்விட்டுச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

ஸ்ரீகுமார் திரும்பிப் பார்த்தபோது குளத்திலிருந்து எழுந்து வந்த பெண் உருவங்கள் மொத்தமும் குளக்கரையில் நின்று சிரித்துக்கொண்டிருந்தன. அவர்களது சிரிப்பு விகாரமானதாகவும், பைசாசிகமாகவும் இருந்தது.

ஸ்ரீகுமாரின் இதயத்தில் பய உணர்வு அரும்பத் தொடங்கியது.

ஒருவாறாகக் கையை உதறியவர் மிகவும் வேகமாக நடக்கத் தொடங்கினார்.

கையிலிருந்து நழுவிய ஸ்ரீகுமாரின் தோளைப் பிடித்தாள் ரேணுகா.

அந்தப் பிடியின் அழுத்தம் ஸ்ரீகுமாருக்கு வலியை ஏற்படுத்தவும் செய்தது. கூர்மையான நகம் தனது சதைக்குள்

இறங்குவது போல் தோன்றியது. தான் ஏராளமான ரக்ஷஸுகளின் (காட்டேரிகளின்) பிடியில் அகப்பட்டிருப்பது அப்போதுதான் அவருக்குப் புரிந்தது.

எப்படியாவது அந்தப் பைசாசக் கூட்டத்திடமிருந்து தப்பித்தாக வேண்டும் என்கிற சிந்தனையுடன் தலைதெறிக்க ஓடத் தொடங்கினார் ஸ்ரீகுமார். தேவதத்தன் நம்பூதிரியின் வீட்டுத் திண்ணையை மிதித்தவர் திரும்பிப் பார்த்தபோது அந்தப்பெண் உருவங்கள் சமாதி மாடத்துக்கு அருகில் (கேரளத்தில் இறந்து போனவர்களை அவரது வீட்டைச் சேர்ந்த பகுதியிலோ, தோட்டத்திலோ எரித்து, சாம்பலை வைத்து மாடம் கட்டுவது வழக்கம். இது சமாதி போல் இருக்கும். மாலை நேரத்தில் இந்த மாடத்தில் விளக்கேற்றுவது வழக்கம்) நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

தான் கேள்விப்பட்டிருந்ததற்கு மாறாக இத்தகைய பைசாசிக சக்திகளுக்கு மற்றவர்களைத் தொடும் சக்தியும் இருப்பது புரிந்தது.

படுக்கையில் படுத்த பிறகும் அவரால் அன்றிரவு உறங்க முடியவில்லை.

ஒவ்வொரு தடவை கண்களை மூடும்போதும் சற்று முன்பு நடந்த பயங்கரமான காட்சிகள் கண்களுக்கு முன்னால் வந்து பயமுறுத்தும்.

பொழுது விடிவதற்காக அவர் காத்திருந்தார். கிழக்குத் திசையில் வெளிச்சம் சற்றுத் தென்பட்ட போது ஸ்ரீகுமார் எழுந்தார்.

நேராகக் குளக்கரையை நோக்கி நடந்தார். இரவு நடந்த சம்பவத்தின் அடையாளமாக அங்கு ஏதேனும் மிச்சம் மீதி இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள ஆவலாக இருந்தார்.

அப்படி எந்த அடையாளமும் அங்கு தென்படவில்லை.



ஆனால் குளத்தின் மேற்புறப்படியின் கீழே இலஞ்சிப்பூ ஒன்று கிடப்பதைக் கவனித்தார். சுற்றுமுற்றும் பார்த்தபோது அருகில் எங்கும் இலஞ்சி மரம் தென்படவில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று அதை எடுத்துக்கொண்டார்.

இரவு தனக்கு நேர்ந்த அனுபவங்களின் அடையாளமாக அந்த இலஞ்சிப்பூ அவருக்குத் தோன்றியது.

குளித்துவிட்டு, மடியில் அந்தப் பூவை வைத்துக்கொண்டு தேவதத்தன் நம்பூதிரியிடம் வந்தார்.

அதற்குள் எழுந்து காலைக்கடன்களை முடித்து விட்டிருந்த நம்பூதிரி, பூஜையறைக் கதவைத் திறந்து, நில விளக்கின் முன்னால் அமர்ந்து தியானம் செய்துகொண்டிருந்தார்.

ஸ்ரீகுமார் மௌனமாக அவருக்குச் சற்றுத் தொலைவிலேயே நின்றுகொண்டார்.

தியானம் முடிந்து திரும்பிய தேவதத்தன் நம்பூதிரி, ஸ்ரீகுமாரைப் பார்த்து, ''சீக்கிரமாக எழுந்துவிட்டீர்கள் போல் இருக்கிறதே? என்றார்.

''சீக்கிரமா எழுந்துட்டேன்கிறது உண்மை. ராத்திரி தூங்கினாத்தானே காலையில் விழிக்க!'' ஸ்ரீகுமார் வராந்தாவில் உட்கார்ந்தபடி பதிலளித்தார்.

''ஏன், என்ன நடந்தது?

ஸ்ரீகுமார் இரவு நடந்த விஷயங்களை அவரிடம் விவரித்தார். அதற்கு அடையாளமாகத் தனது மடியில் வைத்திருந்த இலஞ்சிப்பூவை எடுத்து அவருக்கு முன்னால் வைத்தார்.

ஒருசில விநாடிகள் யோசனையில் ஆழ்ந்த திருமேனி, அந்தப் பூவைக் கையால் எடுத்தார்.

''இந்தப்பூ நீங்க குறிப்பிட்ட இடத்துல கிடந்தது இல்லையா?''

''ஆமாம் திருமேனி! இது ரேணுகா என்றபளின் தலையிலிருந்து விழுந்த பூதான். அவள் மட்டும் தான் இந்தப் பூவைச் சூடியிருந்தாள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இந்த ரேணுகா யார் திருமேனி?''

''ரேணுகா இந்த வீட்டைச் சேர்ந்த ஒருத்திதான்''

'' அப்படின்னா இப்போ அவள் இங்கே இல்லைனு அர்த்தமா?'' ஸ்ரீகுமார் வியப்புடன் கேட்டார்.

''அதுதான் உண்மை. அவள் இப்போ இங்க இல்லை., உயிரோடவே இல்லை! அவள் என்னோட சொந்த மகள்தான். அந்தக் குளத்துல குதிச்சுதான் உயிரை விட்டா, இத்தனைக்கும் அவளுக்கு நல்லா நீச்சல் தெரியும். எப்படி இறந்தாள்னு எனக்கே இதுவரைக்கும் தெரியாது'' - திருமேனி வருத்தத்துடன் பேசினார்.

''அப்ப நான் பார்த்தது உங்க மகளைத்தானா?''

ஸ்ரீகுமாரின் வார்த்தைகளை மறுக்க முடியாதவராகச் சற்றுச் சந்தேகத்துடன் அவரையே பார்த்தார் திருமேனி. பிறகு பேசினார்: ''நீங்க சொன்னது நான் இதுவரைக்கும் கேள்விப் படாத ஒரு செய்தி. எதுக்கும் நான் ஒரு தடவை அது என்னன்னு பார்த்துடறேன்!''

''ரேணுகாவோட விஷயத்தையா?''

''ஆமாம்... அவ இறந்த பிறகு சின்னச் சின்ன தொந்தர வெல்லாம் கொடுத்தாள். நான் அதையெல்லாம் சரி செஞ்சுட்டேன். சரி, நீங்க டிபன் சாப்பிடுங்க. மிச்சத்தை அப்புறம் பார்த்துக்கலாம்'' - திருமேனி ஒரு முடிவுக்கு வந்தவராக பேசினார்.

ஸ்ரீகுமார் வீட்டுக்குள் நுழைந்தார்.

நடுத்தர வயதான பெண்மணி ஒருவர் அவருக்குப் பரிமாறினாள். இளம்பெண்கள் யாரும் அங்கு இருப்பதாகவே தெரியவில்லை.



சிற்றுண்டியை முடித்துக்கொண்டு ஸ்ரீகுமார் வெளியே வந்த போது திருமேனி ஓலைச்சுவடியொன்றை வாசித்துக் கொண்டிருந்தார்.

''ஒண்ணு பண்ணுங்க ஸ்ரீகுமார். இன்னிக்கும் நீங்க இங்கேயே தங்குங்க. நாளைக்குப் போகலாம். அதுக்குள்ள என்னோட நண்பர் ஒருத்தரைப் பார்த்துட்டு வந்துடுறேன். நீங்க என்கிட்ட ஏற்கெனவே சொல்லியிருந்த விஷயத்தைப் பத்தி நாம கொஞ்சம் விரிவாப் பேசவேண்டியிருக்கு. இதையும் முடிச் சுட்டுப் புறப்பட்டீங்கன்னா நல்லது!'' மேற்கொண்டு எந்த விதமான பேச்சுக்கும் இடம் கொடுக்காமல் தெருவாசலைக் கடந்து திருமேனி வெளியேறினார்.

மதியம் வரையில் ஸ்ரீகுமார் அறைக்குள் தனிமையில் பொழுதைக் கழித்தார். சரி... வெளியே எங்காவது சுற்றி விட்டு வரலாம் என்று அவர் எழுந்தபோது மீண்டும் அந்த நடுவயதுப் பெண்மணி வந்து சாப்பிட அழைத்தார்.

சாப்பிடும்போது அந்தப் பெண்மணி அவ்வளவாகப் பேசவில்லை. இருந்தாலும் அவர் தேவதத்தன் நம்பூதிரியின் சகோதரி என்பதையும் தனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்பதையும் சூசகமாகத் தெரிவிக்கத் தவறவில்லை.

ரேணுகாவைப் பற்றிக் கேட்டபோதும் தேவதத்தன் நம்பூதிரி வெளியூரில் யாரையோ கல்யாணம் செய்துகொண்டதா கவும், அதன் மூலம் பிறந்த குழந்தையை இந்த வீட்டில் வளர்த்து வந்ததாகவும் குறிப்பிட்டாள்.

ரேணுகா எப்படி குளத்தில் விழுந்து இறந்தாள் என்பது மட்டும் இன்னும் தெரியவில்லை என்றும் கூறினாள்.

எப்படியிருந்தாலும் ரேணுகா, தேவதத்தன் நம்பூதிரியின் மகள் என்பது ஸ்ரீகுமாருக்கு உறுதியாகத் தெரிந்தது.

மீண்டும் அவளைச் சந்திக்க நேர்ந்தால் அவளிடமே மற்ற விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வது என்று தீர்மானித்தார்.

மாலை நேரத்தில் தேவதத்தன் நம்பூதிரி திரும்பி வந்தார். நண்பரைச் சந்தித்து வந்த விவரத்தை ஸ்ரீகுமாரிடம் தெரிவித்தார்.

''காலேஜில் நடந்த சம்பவங்களையெல்லாம் நண்பரிடம் சொன்னேன். உங்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பது சாதாரணமான ஆவியில்லை என்று அவர் கூறினார்.''

''அப்படீன்னா?'' குமார் சந்தேகத்துடன் அவரைப் பார்த்தார்.

''சாதாரணமாக ஆவிகளுக்கு மற்றவர்களைத் தொடும் சக்தி இருக்காது. அப்படிப்பட்ட ஆவிகள் நம்மை ஆபத்தான பகுதிகளுக்கு அழைத்துச் சென்று குளத்தில் விழவைப்பது, மரத்திலிருந்து நம்மை விழவைப்பது போன்றவற்றைச் செய்யும். ஆனால், அவற்றால் நம்மைத் தொடவோ, பிடித்துத் தள்ளவோ முடியாது!''

''நான் குறிப்பிட்ட எலும்புக்கூட்டுக்குத் தொடுஉணர்வு இருக்கிறதா தோணுது'' - ஸ்ரீகுமார் கூறினார்.

''உண்மைதான்... இல்லேன்னா லேபுல இருக்கிற பொருள்களை அதால தள்ளி உடைச்சிருக்க முடியாது!''

''அந்தத் தொடுஉணர்ச்சியை அகற்றுவதற்கு ஏதாவது வழியிருக்கா திருமேனி?''

''முயற்சி பண்ணிப் பார்க்கலாம். இதெல்லாம் அபூர்வமா நடக்கிற சம்பவங்கள் இல்லையா?''

''கண்டிப்பா ஏதாவது வழி கண்டுபிடிச்சே ஆகணும்!''

''அதுக்கான ஏற்பாட்டைச் செய்யலாம். நாளைக்கு நீங்க கிளம்பறதுக்குள்ள உங்ககிட்ட ஒரு பொருளைத் தர்றேன்!'' தேவதத்தன் உறுதியான குரலில் கூறினார்.

அன்று மாலை நேரத்தில் வராந்தாவில் உட்கார்ந்திருந்த நம்பூதிரி எழுந்து சமாதியைத் தாண்டி குளக்கரையை நோக்கி நடந்தார்.

மேற்புறப் படிக்கட்டுக்கு வந்தவர் சற்று நேரம் குளத்தின் நீர்ப் பரப்பைப் பார்த்தபடி நின்றார்.



மேற்பரப்பில் ஆம்பல் பூக்கள் ஆங்காங்கே மலர்ந்திருந்தன. படிக்கட்டில் இறங்கி கடைசிப் படிக்கட்டுக்கு வந்தவர், குளத்தின் அடிப்பகுதியை ஊன்றிக் கவனித்தார்.

அதன் அடிப்பரப்பில் எதுவோ ஒன்று கிடப்பது தெரிந்தது. ஊன்றிப் பார்த்த போது ஒரு பெண் உருவம் என்பது புரிந்தது.

தேவதத்தனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

யாரோ குளத்தில் விழுந்து இறந்துபோயிருக்கிறார்கள். இது நேற்றிரவுதான் நடந்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அதன் பிறகு அங்கு நிற்காமல் உடனே இல்லத்துக்குத் திரும்பினார்.

''தாட்சாயணி...'' உட்புறம் பார்த்துக் குரல் கொடுத்தார்.

அதற்குள் அவரது சகோதரி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

''யாரோ குளத்துக்குள் கிடக்கிறார்கள்.'' நம்பூதிரி சொன்ன செய்தியைக் கேட்டு தாட்சாயணி வியப்பு அடைந்ததாகத் தெரியவில்லை.

''தேவதத்தா, விஷயத்தைப் பெரிதுபடுத்தாதே! அது உனக்கு எதிராகத் திரும்பலாம். மந்திரவாதம் செய்வதற்காக நீ யாரையோ கொலை செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டுவார்கள். அதனால் பிணம் மிதக்க ஆரம்பிப்பதற்குள் கொண்டுபோய்ப் புதைத்துவிடுவது நல்லது'' - தாட்சாயணி கூறினாள்.

அவள் சொல்வது நல்ல யோசனை என்பது தேவதத்தன் நம்பூதிரிக்குத் தோன்றியது. ஆனால், இதையெல்லாம் தனியாகச் செய்ய முடியாதே. யாரைத் துணைக்கு அழைப்பது? அப்போது தான் ஸ்ரீகுமார் தன்னுடைய வீட்டில் இருப்பது நினைவு வந்தது.

ஸ்ரீகுமார் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தவர் அவரை எழுப்பினார். செய்தியைச் சொன்னபோது ஸ்ரீகுமார் மறுப்புச் சொல்லவோ, ஆச்சரியப்படவோ இல்லை.

''பயப்படாதீர்கள் திருமேனி, நான் உங்களுக்கு உதவுகிறேன்'' ஸ்ரீகுமார் ஆறுதல்படுத்தினார்.

உடனே இருவரும் குளத்தை நோக்கி விரைந்தனர். குளத்தின் அடிப்பரப்பை ஊன்றிப் பார்த்தபோது அது உண்மைதான் என்று குமாருக்கு விளங்கியது.

''குளத்துக்குள் இறங்கி பிணத்தை வெளியே எடுப்பதற்கு முன், அதைப் புதைப்பதற்காக ஒரு குழிவெட்டினால் நல்லது!''

திருமேனி சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

''அவ்வளவுதானே... அதற்கு ஒரு வழி இருக்கிறது. அதோ அந்த எட்டிமரத்தின் பின்னால் ஒரு பெரிய பள்ளமிருக்கிறது. ஒரு பெரிய மரம் வேரோடு பெயர்ந்து விழுந்ததால் ஏற்பட்ட பள்ளம். பாதாளம் மாதிரியான பள்ளம். பிணத்தை அதற்குள் போட்டு விட்டு கொஞ்சம் மண்ணையும் தள்ளிவிட்டால் போதும். யாருக்கும் எதுவும் தெரியாது!'' - திருமேனி கூறினாள்.

குளத்துக்குள் இறங்கிய ஸ்ரீகுமார் உள்ளே இருந்த பிணத்தைத் தோளில் போட்டுக்கொண்டு கரையேறினார்.

படிக்கட்டில் அதைப் படுக்கவைத்தார்.

''ஐயோ... இது நம்ம பாறுக்குட்டியாயிற்றே!'' - திருமேனி பதற்றமடைந்தார்.

''திருமேனி... யார் இந்த பாறுக்குட்டி? ஸ்ரீகுமார் கேட்டார்.

''அதோ... அந்தத் தென்னை மரங்களுக்கு இடையே ஒரு குடிசை தெரிகிறதே, அந்த வீட்டைச் சேர்ந்தவள். அங்கே தாயும் மகளுமாக இரண்டு பேர் மட்டும்தான் அதோ பாருங்கள்...'' அந்த உடம்பில் ஒரு காயத்தை திருமேனி சுட்டிக் காட்டினார்.

ஸ்ரீகுமார் அந்தக் காயத்தைக் கவனித்தார். இரண்டு பற்களால் ஏற்பட்ட ஒருகாயம் போல் தெரிந்தது அது.



''திருமேனி, இந்த உடம்பில் யாரோ பல்லால் கடித்திருப்பது தெரிகிறது. பற்களின் அமைப்பைப் பார்த்தால் ஆணினுடையது மாதிரிதான் உள்ளது'' - ஸ்ரீகுமார் கூறினார்.

''அப்படியா சொல்கிறீர்கள்?'' - திருமேனி சந்தேகத்துடன் கேட்டார். ''சரி அந்த உடம்பைத் தூக்கிக் கொள்ளுங்கள். நான் தொட்டால் தீட்டாகிவிடும். அதுவுமில்லாமல் வேறு சில சிக்கல்களும் உண்டு.

''அதற்கென்ன பரவாயில்லை. நானே எடுத்து வருகிறேன்.'' குமார் பிணத்தைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்தார்.

எட்டி மரத்தின் அடிப்பகுதிக்கு வந்தார்கள்.

அந்த உடம்பைப் பரிசோதித்தனர்.

''இவளுடைய ரத்தத்தை யாரோ குடித்திருக்கிறார்கள்!'' திருமேனி கூறினார்.

''இப்படிச் செய்தது யாராக இருக்கும்?''

''நம்முடைய எதிராளி என்று தான் நினைக்கிறேன்!''

''அவன் எதற்காக இங்கே வரவேண்டும்?''

''அதுதான் புரியவில்லை. விசாரிக்கலாம்!''

''சரி, முதலில் இதைப் புதைத்துவிடலாமே.''

பிணத்தைப் பள்ளத்தில் போட்டு, சுற்றியிருந்த மண்ணையும் கல்லையும் உள்ளே தள்ளினார்கள்.

நிதானமாக எட்டிமரத்தை நோக்கி நடந்த திருமேனி, மரத்தைத் தீவிரமாகப் பரிசோதித்தார்.

அப்போதுதான் அந்தத் துளை தென்பட்டது.

''ஓகோ... இங்கே இருந்த ஆணி விழுந்துவிட்டிருக்கிறது. இங்குதான் ரோகிணியை அறைந்து வைத்திருந்தேன்!''

''என்ன சொன்னீங்க!'' ஸ்ரீகுமார் வியப்புடன் திருமேனியை நெருங்கினார்.

## 24

"இது தான் காரணம்!" -தேவதத்தன் நம்பூதிரி ஆணி இல்லாத துவாரத்தைச் சுட்டிக்காட்டியபடி கூறினார்.

''இங்கு யாரை அறைந்து வைத்தீர்கள்?" ஸ்ரீகுமார் கேட்டார்.

''ரோகிணியைத்தான்! இப்போது அவள் சுதந்திரமாகி விட்டிருக்கிறாள். பாறுக்குட்டியின் மரணத்துக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். என்று தோன்றுகிறது. எனவே தற்சமயம் இது ரகசியமாகவே இருப்பதுதான் நல்லது" - திருமேனி எச்சரிக்கையுடன் பேசினார்.

இருவரும் இல்லத்தை நோக்கி நடந்தனர்.

ஸ்ரீகுமார் தனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் வந்து அமர்ந்தார். இந்த வீடும் சுற்றுப்புறமும் மிகவும் பிரச்சினைக்கு உரியதாகத் தோன்றியது. அதனால் எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து கிளம்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பி விடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

''நான் சொல்கிறபடி செய்யுங்கள். அந்த எலும்புக் கூட்டுக்கு மற்றவர்களைத் தொடும் வல்லமை இருப்பது தான் இதிலுள்ள சிக்கல். இது நாளுக்கு நாள் வளரவே செய்யும். பரவாயில்லை. அதை நாம் கவனித்துக்கொள்ளலாம். பயப்படாதீர்கள்!" - திருமேனி, ஸ்ரீகுமாருக்கு ஆறுதல் கூறினார்.

ஸ்ரீகுமார் காலையில் கிளம்பினார். நேராகத் தனது கிராமத்துக்குச் சென்று பார்த்துவிட்டு அங்கிருந்து காலேஜுக்குப் போவதென்று முடிவு செய்திருந்தார்.

ஒருவேளை பிரபாகரன் தன்னுடைய வீட்டுக்குப் போயிருக்கலாம். வீட்டை அடைந்தபோது அவர் நினைத்த படியேதான் நடந்திருந்தது.



இரண்டு நாட்களாகத் தன்னை எதிர்பார்த்துக் காத்திருந்தும் வராததால் பிரபாகரன் தன்னுடைய வீட்டுக்கே போய்விட்டிருந்தான்.

ஸ்ரீகுமார் கிராமத்துக்கு வந்திருப்பதை சந்துநாயர் தெரிந்து கொண்டார். ஜயந்தனிடம் செய்தியைத் தெரிவித்தார்.

''ரொம்பவும் வசதியாகப் போய்விட்டது. அந்த லெக்சரர் இன்னிக்கு காலேஜுக்குப் போகலைன்னா, கிராமத்திலயே அந்த ஆளோட கதையைத் தீர்த்துட வேண்டியது தான்!" - ஜயந்தன் பேசினார்.

அன்று இரவு பன்னிரண்டு மணியானபோது கோவிந்தன் வந்தான். முன்பு இருந்ததைவிட அவனது சக்தி அதிகரித்திருந்தது.

''என்ன... ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?" - ஜயந்தன் கேட்டார்.

அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது போல் வெற்றிலை பாக்கு இடிப்பதற்காக வைத்திருந்த சின்னஞ்சிறு உரலை தனது கால் கட்டை விரலால் நகர்த்தினான். பிறகு அதே விரலால் அதைத் தரையோடு வைத்து அழுத்தினான். மூன்று துண்டுகளாக உடைந்த உரல், பிறகு தூள்தூளாக நெரிபட்டது.

''இப்போது உங்களுக்கே தெரிந்திருக்குமே!" - கோவிந்தன் கேட்டான்.

''ரொம்பவும் சந்தோஷம். ஆமாம்! இவ்வளவு பெரிய பலத்தை வெச்சுக்கிட்டு என்ன செய்யுறதா உத்தேசம்?" - ஜயந்தன் கேட்டார்.

''பார்த்துட்டே இருங்க. தெரியும்!" - கோவிந்தன் உறுமுவது போலப் பேசினான்.

மூவரும் தேங்காய் கோடௌனிலிருந்து வெளியேறினார்கள்.

தென்னந்தோப்பின் மூலையில் தென்னை ஓலையைச் சுவைத்தபடி நின்றுகொண்டிருந்தது யானை ஒன்று.

அருகிலிருந்த மரக்கடை ஒன்றிலிருந்து அந்த யானையைக் கொண்டுவந்திருந்தார்கள். பாகன்கள் யாரும் அப்போது அங்கு இல்லை.

கோவிந்தன் யானைக்கு முன்னால் சென்று நின்றான். அவன் என்ன செய்யப்போகிறான் என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் மற்ற இருவரும் அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

திடுமென்று கோவிந்தனைக் கவனித்த யானை, தனது தும்பிக்கையிலிருந்த தென்னஞ்சோகையைக் கீழே போட்டு விட்டுப் பீதி நிறைந்த கண்களுடன் பின்னோக்கி நகர்ந்து நின்றது. வாலை மேற்புறமாக உயர்த்தி, தீனமாகக் குரல் எழுப்பியது. தொடர்ந்து தும்பிக்கையையும் முன்புறமாக உயர்த்தியது.

யானையின் தும்பிக்கையைப் பிடித்த கோவிந்தன் அதைக் கீழ்ப்புறமாகத் தாழ்த்தினான். யானையின் தலை தாழ்ந்து கொண்டே வந்தது. தும்பிக்கையை விட்ட கோவிந்தன், அதன் தந்தங்களைப் பிடித்து முன்புறமாக இழுத்தான். பயந்து மிரண்ட யானை முன்புறமாக நகர்ந்தது.

மூன்று பாகன்கள் ஒன்றாகச் சேர்ந்து வந்தாலே அவ்வளவு சுலபத்தில் அடங்காத அந்த யானை, கோவிந்தனைக் கண்டு மிரண்டதை அவர்கள் கவனிக்கவே செய்தனர். கோவிந்தனின் வல்லமை எத்தகையது என்று அவர்களுக்கு முழுமையாக விளங்கிவிட்டது போலிருந்தது.

''இவனைக் கொண்டு நாம் எப்படிப்பட்ட வேலையையும் செய்ய வைக்கலாம்'' - ஜயந்தன் மகிழ்ச்சி நிறைந்த குரலில் கூறினார். ''போதும் கோவிந்தா... வா போகலாம்!''

மூவரும் மறுபடி தேங்காய் கோடெளனுக்கு வந்தார்கள்.

''அந்த காலேஜ் வாத்தியார் இப்போ வீட்டுல இருக்கிறான். முடியுமானால் அவனை ஒருகை பார்த்துட்டு வந்துடேன்!'' - ஜயந்தன், கோவிந்தனிடம் கூறினான்.

''முயற்சி பண்றேன்!'' - கோவிந்தன் கூறினான்.



''அதெல்லாம் வேண்டியதே இல்லை. யானைகிட்ட நடந்துக்கிட்ட மாதிரியே அவன்கிட்டயும் நடந்துக்கிட்டாலே போதும்!'' - ஜயந்தன் யோசனை கூறினார்.

கோவிந்தன் தலையாட்டியபடி புறப்பட்டான்.

ஸ்ரீகுமாரின் இல்லத்தை நோக்கி நடந்தவனின் கண்ணில், பாதையில் கொழுத்துத் தடித்த காளைமாடு ஒன்று தட்டுப் பட்டது. கோவிந்தனது நாவில் எச்சில் ஊறியது.

சட்டென்று பாய்ந்து அந்தக் காளைமாட்டைப் பிடித்தான். அதனது சதைப்பிடிப்பான கழுத்துப் பகுதியில் அவனது பற்கள் பதிந்தன. முரட்டுத்தனம் நிறைந்த அந்தக் காளை அவனது பைசாசிகமான பிடியில் ஓர் எலிக்குஞ்சைப்போல் கிடந்து துடித்தது.

சற்று நேரத்தில் உடலில் ரத்தம் சுண்டிய காளை அசைவற்று நிலத்தில் விழுந்தது. புதியதாகப் பெற்ற சக்தி மற்றும் வெறியுடன் ஸ்ரீகுமாரின் இல்லத்தை நோக்கி விரைந்தான் கோவிந்தன்.

அப்போது ஸ்ரீதேவியும் ஸ்ரீகுமாரின் இல்லத்திலிருந்தாள்.

கட்டிலில் படுத்திருந்த குமாரை அவள் தட்டி எழுப்பினாள்.

''யாரு... பிரபாகரனா?'' என்று கேட்டபடி கண்விழித்தார் ஸ்ரீகுமார்.

''இல்லை... ஸ்ரீதேவி வந்திருக்கிறேன்... எழுந்திருங்க!

ஸ்ரீகுமார் எழுந்து உட்கார்ந்தார்.

''கொஞ்ச நேரம் வெளியில உட்கார்ந்து பேசலாம்!'' - அவள் அழைத்தாள்.

அவளது வார்த்தையில் ஏதோ ஓர் உட்பொருள் இருக்கிறது என்று அவருக்குப் புரிந்தது. எனவே, மறுப்பு ஏதும் சொல்லாமல் அவளைப் பின்தொடர்ந்தார்.

''முதலில் நிலவிளக்கை ஏற்றுங்களேன்!''

அப்படியே செய்தார்.

விளக்கிலிருந்து வெளிச்சம் பரவத் தொடங்கியபோது துளசிமாடத்துக்கு அருகே யாரோ ஒருவர் நடந்து வருவது தெரிந்தது. இதை முதலில் கவனித்த ஸ்ரீதேவி, ஸ்ரீகுமாரிடம் சுட்டிக் காட்டிச் சொல்லவும் தவறவில்லை. தெளிவற்றுத் தெரிந்த அந்த மனித உருவம் துளசிமாடத்துக்கு அருகில் வந்ததும் நின்றுவிட்டது.

''உங்ககூட மோதுறதுக்குத்தான் அந்த உருவம் வந்திருக்கிறதாத் தோணுது?'' - ஸ்ரீதேவி கூறினாள்.

''யாரது?'' ஸ்ரீகுமார் உரத்த குரலில் அந்த உருவத்தைப் பார்த்தபடி கேட்டார்.

''நான்தான் கோவிந்தன்!'' - வந்த உருவம் பதிலளித்தது.

''அப்படீன்னா புரியலையே?''

''புரியலையா? என்னோட முகத்தை விகாரமாக்கினது நீதானே. உன்னைப் பழிவாங்குறதுக்காக வந்திருக்கிறேன்.'' கோவிந்தன் முன்புறமாக நகர முயன்றான்.

''அசையாதே. அங்கேயே நில்!'' ஸ்ரீதேவியின் குரல் கட்டளைபோல் ஒலித்தது.

கோவிந்தன் அப்படியே நின்றுவிட்டு, அவளைப் பார்த்துக் கேட்டான். ''நீ யார்? என்னை எதற்காகத் தடுக்கிறாய்?''

''என்பேரு ஸ்ரீதேவி. என்னைப்பத்தி உனக்கு மேற்கொண்டும் ஏதாவது தெரியணுமா? இந்தா பார்த்துக்க! என்ற ஸ்ரீதேவி நிலவிளக்கில் எரியாமலிருந்த ஒரு திரியை எடுத்து ஜுவாலையில் காட்டிப் பற்றவைத்து, அதை கோவிந்தனுக்கு முன்னால் வீசி எறிந்தாள்.

நெருப்பாலான பாம்பு மாதிரி பாய்ந்துவந்த எரியும் திரியைப் பார்த்த கோவிந்தன் வியப்பால் வாயைப்பிளந்தான். பாய்ந்து வந்த திரி அவனது வாய்க்குள் நுழைந்து மறைந்தது.

''ஓகோ... அப்படியா சேதி? ஸ்ரீதேவி கேட்டாள்.



''திரியை மட்டுமல்லை... வேண்டுமானால் அந்த நிலவிளக்கையேகூட விழுங்குவேன்!''

''ஓகோ... அந்த அளவுக்குச் சக்தி இருக்கிறதா என்ன?'' - ஸ்ரீதேவி கேட்டாள்.

''பார்த்துக்கொள்! என்றவாறே வலது காலால் துளசி மாடத்தை ஒரு தட்டுத் தட்டினான்.

துளசி மாடம் இடம் பெயர்ந்து ஒருபுறமாகச் சரிந்து விழுந்தது. அதையே கவனித்துக்கொண்டிருந்த ஸ்ரீதேவி மறு விநாடி ஸ்ரீகுமாரைத் திரும்பிப்பார்த்தாள். அவரது முகத்தில் திகைப்பு தெரிந்தது.

''உடனடியாக என்ன செய்யலாம்?'' என்று யோசித்தாள் ஸ்ரீதேவி. பிறகு ''இதோ வந்துவிடுகிறேன்!'' - என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

அடுத்த விநாடி அவள் கோயிலில் இருந்தாள். சௌபர்ணிகா என்கிற துவாரபாலிகையின் முன்னால் வந்து நின்றாள்.

''எதிராளி பயங்கரமான சக்தியுடன் வந்திருக்கிறான். என்னால் அவனைச் சமாளிக்க முடியுமென்று தோன்றவில்லை!'' ஸ்ரீ தேவி முறையிட்டாள்.

''பயப்படத் தேவையில்லை. நீ புறப்படலாம். நான் கவனித்துக்கொள்கிறேன். தேவைப்படும் போதெல்லாம் நான் உன்னருகில் இருப்பேன்!'' சிலையிலிருந்து பதில் வந்தது.

அந்த பதிலில் திருப்தியடைந்த ஸ்ரீதேவி மறுவிநாடி இல்லத்துக்கு வந்து சேர்ந்தாள். அப்போது கோவிந்தன், ஸ்ரீகுமார் மீது பாயத் தயாராகிக்கொண்டிருந்தான்.

ஸ்ரீகுமாரின் கையில் திருமேனி கொடுத்த தாயத்து இருந்தது. 'ஒருதடவை முயற்சிசெய்து பார்க்கலாமே!' என்று நினைத்துத் தான் அதை வெளியே எடுத்து அவனுக்கு முன்பாக நீட்டினார்.

அதைப் பார்த்த கோவிந்தன் என்ன காரணத்தாலோ திடுமென்று அசைவற்று நின்று போனான். ஸ்ரீதேவி இந்தக் காட்சியைக் கவனிக்கவே செய்தாள்.

ஆனால், அப்போதைய சூழ்நிலையில் அந்தத் தாயத்தை அவனது கையில் கட்டுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. மீறி கட்ட முனைந்தால் அந்தத் தாயத்தை அவன் அசுத்தப்படுத்தவோ, அழிக்கவோ செய்தால் நிலைமை மேலும் சிக்கலாகிவிடும் என்பதால் ஸ்ரீகுமார் அந்த முயற்சியைத் தொடரவில்லை.

''இனி பயப்படத் தேவையில்லை!'' ஸ்ரீதேவி ஆறுதல் படுத்தும் முகமாகக் கூறினாள்.

ஸ்ரீதேவியின் உடம்பில் ஏதோ ஓர் அசைவு தென்பட்டது. உருவமில்லாமல் வந்த சௌபர்ணிகா, ஸ்ரீதேவியின் உடம்புக்குள் பிரவேசித்தாள்.

வராந்தாவிலிருந்த ஸ்ரீதேவி கீழே இறங்கினாள்.

''அங்கே போகாதே ஸ்ரீ தேவி!'' ஸ்ரீகுமார் தடுக்கப் போனார்.

''நீங்க பயப்பட வேணாம். நான் ஒரு சின்ன முயற்சி செஞ்சு பார்க்கிறேன்!'' ஸ்ரீதேவி, கோவிந்தனை நெருங்கினாள்.

''உனக்குத்தான் மகத்தான சக்தி இருக்கே! என்னை ஒரு தடவை பிடிச்சுப் பாறேன்!'' ஸ்ரீதேவி ஒருவித வீறாப்புடன் பேசினாள்.

கோவிந்தன் தனது வலது கையை நீட்டி ஸ்ரீதேவியைப் பிடிக்க முயன்றான். ஸ்ரீதேவியின் உடம்பில் கைபட்டதும் படாததுமாக நெருப்பைத் தொட்டதுபோல் சட்டென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டான்.

மறுபடியும் அவனது கை முன்புறமாக நீண்டது.

அப்போது ஸ்ரீகுமார் ஒரு காட்சியைக் கண்டார். ஸ்ரீதேவியின் உடல் நிறம் மாறிக்கொண்டே வந்தது. அந்த உடம்பில் சிவப்பு நிறம் அதிகரித்துக்கொண்டே வந்தது.



விரைவிலேயே உடம்பு நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய செப்பு போல் பளபளத்தது. அவளது மொத்த உடம்புமே அந்த நிறத்துக்கு மாறிவிட்டிருந்தது.

அந்த உடம்பிலிருந்து புறப்பட்ட வெப்பம் தனது உடம்பை மிகவும் கடுமையாகத் தாக்குவதாக கோவிந்தனுக்குத் தோன்றியது.

அவன் தற்காப்புக்காக பின்புறமாக நகர்ந்தான்.

சற்றுத் தொலைவு நகர்ந்தவன் சட்டென்று திரும்பி, தெருவாசற்படியைக் கடந்து ஓடி மறைந்தான்.

அதன் பிறகு ஸ்ரீதேவி தனது பழைய வடிவத்துக்குத் திரும்பினாள்.

''என்ன இதெல்லாம்?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''இதெல்லாம் என்னோட கெட்டிக்காரத்தனமில்லை. கோயில்ல இருக்கிற பகவதியோட அருள்!''

''எனக்குப் புரியலையே!'' ஸ்ரீகுமார் ஒன்றும் புரியாதவராகக் கேட்டார்.

''மனுஷங்களுக்கெல்லாம் அப்படித்தான் இருக்கும்'' அவள், அவரைப் பார்த்துச் சிரித்தபடி பேசினாள்.

**கோ**விந்தன் திரும்பி வந்தான்.

போன காரியத்தில் வெற்றி பெற்றுத்தான் திரும்புகிறான் என்று காத்திருந்த இருவரும் நினைத்தனர்.

''காரியம் பழம்தானே?'' - ஜயந்தன் கேட்டார்.

''அவன் அங்க தனியா இல்லை...''

''அப்படீன்னா?'' - ஜயந்தன் கேட்டார்,

''நான் அங்க போகும் போது அவன் தனியாத்தான் இருந்தான். கொஞ்ச நேரத்துக்குள்ள, என்னைவிட சக்தி வாய்ந்த வேறு யாரோ வந்து சேர்ந்துட்டாங்க!

''அது யாராக இருக்கும்?'' சந்து நாயர் கேட்டார்.

''கண்டுபிடிக்கனும்... அப்படியொரு சக்தி அவன்கூட இருக்கிற வரைக்கும் நம்மளால எதுவும் செய்ய முடியாது'' - கோவிந்தன் ஏமாற்றத்துடன் பேசினான்.

''ஒரு யானையையே எதிர்த்து நின்ன உன்னால, அவனோட துணையை ஒண்ணும் பண்ண முடியலையா என்ன?'' - ஜயந்தன் கொக்கி போட்டார்.

''அதுதான் உண்மை. பன்னிரண்டு யானைகளை எரிச்சுடுற அளவுக்கு அவ உடம்புல சூடு தெரிஞ்சது. அது சாதாரணமான சக்தியாத் தெரியலை. அதனால அந்த சக்தியோட மூலத்தைக் கண்டுபிடிக்கனும்! அப்புறம் அதை அழிக்கனும்!''

கோவிந்தனின் பேச்சைக் கேட்ட ஜயந்தன் நெற்றியைச் சுளித்தபடி அவனைப் பார்த்தார்.

''இந்தத் தடவை நிச்சயமாகக் காரியம் முடிந்துவிடும்.'' என்று தான் ஜயந்தன் நினைத்தார். ஆனால், நடந்திருப்பதோ நினைத்ததற்கு மாறாக!

''சரி கோவிந்தா நீ புறப்படு'' -ஜயந்தன் விடை கொடுத்தார்.

கோவிந்தன் அங்கிருந்து கிளம்பினான்.

அதன் பிறகு சந்துநாயரும், ஜயந்தனும் அடுத்தபடியாக என்ன செய்யலாம் என்பதைப்பற்றித் தீவிரமாக விவாதிக்கத் தொடங்கினர்.

''கோவிந்தன் குறிப்பிட்ட பெண் யார்?'' - சந்துநாயர் கேட்டார்.

''அதை கண்டுபிடிச்சுடலாம்!'' - ஜயந்தன் அவருக்கு உற்சாகம் ஊட்டினார்.

மறுநாள் காலை ஜயந்தன் குளித்துவிட்டு வந்தார்.

காலைப் பலகாரம் சாப்பிடுவதற்கு முன்பாக ராசிப் பலகையை எடுத்து வைத்து சோழிகளைப் பரப்பினார்.

சற்று நேரக் கணக்கிடலுக்குப் பிறகு அவரது முகம் பிரகாசம் அடைந்தது.



''ஆள் யாருன்னு தெரிஞ்சுபோச்சு!'' - ஜயந்தன் கூறினார்.

''யாருன்னுதான் சொல்லுங்களேன்!'' - சந்துநாயர் ஆவலுடன் கேட்டார்.

''கோயிலில் இருக்கிற பகவதியின் அருகில்தான் இடம் தட்டுப்படுகிறது. அதனால நம்மளோட விசாரணையை அங்க தான் தொடரனும்!'' - ஜயந்தன் கூறினார்.

''அதுக்கு நாம என்ன செய்யணும்?''

''நேரா கோயிலுக்குப் போகனும். மிச்சத்தை அங்க போன பிறகு பார்த்துக்க வேண்டியதுதான்!'' - ஜயந்தன் பதிலளித்தார்.

## 25

சந்துநாயரும் ஜயந்தனும் சோழி குறிப்பிட்ட திசையில் கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

''உங்க ஊர்க் கோயிலுக்குத்தான் இப்பப் போறோம்!''- ஜயந்தன் கூறினார்.

''ஏற்கெனவே நாம அங்க ஒரு தடவை போயி...''

''போனோம். ஆனா, அப்ப நம்மகிட்ட சரியான ஆதாரம் எதுவும் இல்லாம இருந்தது.''

இருவரும் அந்த இரவு நேரத்திலேயே கோயிலை அடைந்தனர். எங்கும் இருள் பரவி இருந்தது. வெளிச்சத்தின் எந்த ஓர் அடையாளமும் அந்தப் பகுதியில் இல்லாமலிருந்தது. காற்றே இல்லாத போதிலும் அசைந்துகொண்டிருந்த ஆலமரத்தின் இலைகள் மட்டும் என்னவோ ரகசியம் பேசிக்கொள்வது போல் சலசலத்தன.

மிகவும் மென்மையாக எழுந்த அந்த ஓசை அந்த இடத்தின் மர்மத்துக்கு மேலும் பயத்தை ஏற்றுவது போலிருந்தது.

ஜயந்தனும், சந்துநாயரும் அந்த ஆலமரத்தின் அடியில் நின்றிருந்தனர். அங்கிருந்து பார்த்தால் கோயிலின் வடிவம் நிழல் உருவம் மாதிரி தெரிந்தது. கருவறை மட்டுமே மீதமிருந்த அந்த பகவதி கோயில், தேர்ந்த ஓவியன் ஒருவன் வரைந்த நிழல் சித்திரம்போல் அழகாகக் காட்சி அளித்தது.

''நின்றுகொண்டே இருந்தால் எப்படி?'' - சந்துநாயர் கேட்டார்.

''அந்த பகவதியின் சக்தியை இல்லாமல் செய்ய வேண்டும்!''

''அதெப்படி?... சாத்தியமா?''

''என்னிடம் அதற்கான வேலையிருக்கிறது'' என்றவாறே ஜயந்தன் தனது கையிலிருந்த வெண்கலச் சொம்பு ஒன்றைக் காட்டினார்.

''இதுக்குள்ள என்ன இருக்கிறது?'' - சந்துநாயர் பயத்தில் சற்று விலகி நின்றவராகக் கேட்டார்.

''ஒரு மிருகத்தோட ரத்தம். அதுவும் வெறுக்கப்படும் ஒரு மிருகத்தினுடையது. இது தேவியின் சிலை மீது விழுந்தால், தேவியின் சக்திகள் அழிந்துவிடும்'' - ஜயந்தன் நம்பிக்கை நிறைந்த குரலில் பேசினார்.

''எனக்கென்னவோ பயமாக இருக்கிறது!'' - சந்துநாயர் பின்னுக்கு நகர்ந்தபடி பேசினார் .

''நீங்க எதுக்காகப் பயப்படணும்? நான்தான் உங்க பக்கத்திலேயே இருக்கிறேனே. சக்தியைக் குறைக்கவும், அதிகப்



படுத்தவும் என்ன செய்யணும்கிறதை நான் கற்று வெச்சிருக்கிறேன். இது மாதிரி எவ்வளவு இடங்கள்ல செஞ்சிருக்கிறேன்!''

ஜயந்தன் கயிறு ஒன்றினால் வாய்ப் பகுதியைக் கட்டி வைத்துப் பிடித்திருந்த சொம்புடன் கருவறையை நோக்கி நடந்தார். என்ன நடக்கப்போகிறது என்பது தெரியாமல் சந்து நாயர் பயத்துடன் நின்ற இடத்திலேயே அசையாமல் நின்றார்.

அடர்ந்து பரவிப் படர்ந்திருந்த ஆலமரத்தின் இருண்ட பகுதிகளிலிருந்து வௌவால் கூட்டம் ஒன்று சட்டென்று குரல் கொடுத்தபடி விருட்டென்று பறந்தது.

அவை பறந்தது ஒரே சமயத்தில் ஆயிரம் அம்புகளை எய்து விட்டது போலிருந்தது. திடுக்கிட்ட சந்து நாயர் தன்னையும் மீறித் தரையிலிருந்து ஒன்றரையடி உயரத்துக்கு உயர்ந்து குதித்தார். என்ன நடக்கப்போகிறதோ என்கிற பயங்கலந்த துடிப்புடன், ஜயந்தனது செயல்களையே வைத்த கண்வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதற்குள் ஜயந்தன் சொம்புடன் கருவறைக்கு முன்புறம் வியாளியின் வடிவம் செதுக்கியிருந்த சிலையை நெருங்கி விட்டிருந்தார். இன்னும் மூன்று படிகளைக் கடந்தால் கருவறையிலுள்ள தேவியை நெருங்கியிருப்பார். ஜயந்தன் தனது இடது காலை முன்புறமாக எடுத்து வைத்தார்.

அடுத்த நிமிடம்

கருவறையின் கதவு யாரோ மிதித்துத் திறப்பது போல் வெளிப்புறமாக விசையுடன் திறந்துகொண்டது.

அத்துடன் விசிலடிப்பது போன்ற சத்தத்துடன் வெளியே பாய்ந்து வந்த ஏதோ ஒன்று ஜயந்தனின் கையிலிருந்த சொம்பின்

சரட்டில் சிக்கி, சொம்புடன் அந்தரத்தில் உயர்ந்து எழும்பத் தொடங்கியது. கோயிலின் எல்லையைத் தாண்டி யாரோ எய்து விட்டது போல் அது மேற்குத் திசையில் விரைந்தது. கோயிலில் இருந்து ஏறத்தாழ அரை கிலோ மீட்டர் தொலைவிலிருந்த ஆற்றின் மேற்பரப்புக்கு வந்த சொம்பு கயிறு அறுந்ததுபோல் சட்டென்று ஆற்றில் விழுந்து கவிழ்ந்து மறைந்தது.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நடந்து முடிந்த இந்தச் செயலுக்குப் பிறகு விசிலடிப்பது போல் விசையுடன் பறந்து போன பொருள் அதே வேகத்துடன் திரும்பி வந்து கருவறைக்குள் மறைந்ததுடன், கருவறையின் கதவுகளும் வலுவுடன் மூடிக் கொண்டன.

எத்தனையோ தடவை பைசாசிகமான செயல்களைச் செய்திருக்கிற ஜயந்தன், இந்த ஒருகணத்தில் பயந்து நடுங்கவே செய்தார். சட்டென்று அங்கிருந்து பின்னோக்கி நகரத் தொடங்கினார். சந்துநாயரின் பக்கத்தில் வந்து நின்றார். அப்போது சற்று நேரத்துக்கு முன்பு பறந்துபோன வௌவால் கூட்டம் பழையபடி மரத்துக்குத் திரும்பி, இருளுக்குள் தங்களது இருப்பிடங்களில் தஞ்சமடைந்தன. வௌவால்கள் இருட்டின் துளிகளாகக் கரைந்து மரத்தின் அந்தகாரத்தில் கரைந்துபோயின.

''என்ன நடந்தது?'' சந்துநாயர் பிரமை பிடித்தவரைப் போல் கேட்டார்.

''நான் நினைத்தது போல் விஷயம் அவ்வளவு சுலபமாக இல்லை. இந்தக் கோயிலிலுள்ள பகவதியின் சக்தி அதிகம். உடனடியாக இதற்கு ஏதாவது மாற்றுக் கண்டுபிடித்தே தீரவேண்டும்'' - ஜயந்தன் கூறினார்.



''அந்தச் சத்தம் எங்கிருந்து கேட்டது?''

''என்னோட யூகம் சரியானதா இருந்தா, கருவறைக்குள் பகவதியின் கையிலுள்ள திரிசூலம் பாய்ந்துவந்து என் கையில் இருந்த சொம்பைப் பறித்துக்கொண்டு போய்த் திரும்பியிருக்க வேண்டும்?'' - ஜயந்தன் கூறினார்.

''அப்படியா சொல்றீங்க? அப்ப நாம உடனடியா இந்த இடத்துலேர்ந்து கிளம்புறது நல்லது. ஒருவேளை அந்தச் சூலம் நம்ம மேலயும் பாயுறதுக்கு வாய்ப்பு இருக்கு'' - சந்துநாயர் பயம் கலந்த குரலில் பேசினார்.

''இப்போதைக்குக் கிளம்ப வேண்டியதுதான். ஆனால், பிரச்சினை இத்துடன் தீரவில்லை. நாம உடனடியா ஏதாவது செய்யலேன்னா, எதிராளிங்க முந்திக்கிடலாம்.'' ஜயந்தன் கோயிலை மீண்டும் ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு படிகளில் இறங்கத் தொடங்கினார்.

அவர்கள் இருவரும் கடைசிப் படியைத் தாண்டிக் கீழே இறங்கியதும், ஸ்ரீதேவி ஆலமரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்தாள். அவள் கருவறையின் வாசலை நோக்கி மெதுவாக நடந்தாள். அப்போது கதவு மிகவும் மெதுவாகத் திறந்து கொண்டது. உட்புறம் இருளில் ஏதோ ஓர் ஒளி அசைவதை அவள் பார்த்தாள். பின்புறமாகத் திரும்பிய ஸ்ரீதேவி, ஸ்ரீகுமாரை அருகில் வருமாறு அழைத்தாள். அதுவரை எல்லாவற்றையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீகுமார் ஆலமரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்தார்.

அவரைப் பொறுத்தவரை விஞ்ஞானத்தை மீறிய அற்புதம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஸ்ரீகுமார் கருவறையின் படிக்கட்டு அருகே வந்து நின்றார்.

''உள்ளே பாருங்கள்!'' - ஸ்ரீதேவி அவரிடம் கூறினாள்.

திரும்பிப் பார்த்தவர் வியப்பினால் செயலற்றுப் போனார். பகவதி சிலைமீது மிகவும் பிரகாசமான ஏதோ ஒன்று ஊர்ந்து கொண்டிருந்தது. அதுவும் கழுத்துப் பகுதியில்தான் அதன் பளபளப்பும் அசைவும் துல்லியமாகத் தெரிந்தது.

ஊன்றிக் கவனித்தபோது அப்படி இழைவது பெருவிரல் பருமனிலிருந்த தங்க நிற நாகம் என்பது புரிந்தது.

அதன் உடலிலிருந்து வெளிப்பட்ட வெளிச்சத்தில் பகவதி சிலையின் ஒருசில பகுதிகள் கண்ணுக்குத் தெரிந்தது. மிகவும் மெதுவாக ஊர்ந்து நகர்ந்த அந்த நாகம் சூலத்தின் மீது ஏறி, மறுபடியும் பகவதியின் கழுத்துப் பகுதிக்கே திரும்பியது.

''கவனிச்சீங்களா? அந்தப் பாம்போட வாயில நீலம் கலந்த பளபளப்புத் தெரியுதா?'' ஸ்ரீதேவி கேட்டாள்.

ஸ்ரீகுமார் அதை முன்பே கவனித்திருந்தார்.

''அதுதான் நாகமாணிக்கம், மிகவும் அபூர்வமான பொருள். நாகமாணிக்கம் இங்க இருக்கிற வரையிலும் என்னையும் உங்களையும் யாராலயும் ஒண்ணும் செய்ய முடியாது.''

''யாராவது எடுத்துட்டுப் போயிட்டா?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''அதுக்கெல்லாம் வாய்ப்பே கிடையாது. நெருப்பை விட ரொம்பவும் சக்தி வாய்ந்தது, அதில் அடங்கியிருக்கிற சக்தி. அந்த நாகத்தை யாராவது தொட்டால்... அடுத்த வினாடியே ஜுவாலைகளால் தகிக்கப்பட்டு இல்லாமல் போயிடுவாங்க.''

ஸ்ரீகுமாரைப் பொறுத்தவரை இதெல்லாம் கேள்விப் படாத புதிய செய்திகளாக இருந்தன. இப்படிப்பட்ட கதைகளை



அவரது சிறுவயதில் நிறையக் கேட்டிருக்கிறார். பாட்டிக்குத் தெரிந்ததும், பாட்டி சொன்னதும் ஏறத்தாழ இப்படிப்பட்ட கதைகளைத்தான்.

''புறப்படலாமா? நாம இங்க பார்த்த செய்திகளை உடனேயே தேவதத்தன் நம்பூதிரிக்குத் தெரியப்படுத்தணும். அவருக்கு இந்தச் செய்தி பயன்படும்னு தோணுது'' - ஸ்ரீதேவி கூறினாள்.

இருவரும் இல்லத்துக்குத் திரும்பினர்.

மறுநாளே ஸ்ரீகுமார், தேவதத்தன் நம்பூதிரியைச் சந்திக்கப் புறப்பட்டார்.

நடந்ததை எல்லாம் தெரிவித்தார்.

''ஓகோ இவ்வளவெல்லாம் நடந்துவிட்டதா?'' என்று கேட்ட தேவதத்தன் யோசனையில் ஆழ்ந்தார். சற்று நேரம் கழித்து பேசத் தொடங்கினார்: ''ஸ்ரீகுமார், எனக்கு ஒரு சந்தேகம். உண்மையிலேயே அந்த நாகமாணிக்கம் அவ்வளவு சக்தி வாய்ந்தது தானா? அப்படியானால் ஜயந்தன் அதைக் கைப்பற்றி விட்டால் நம்மளோட நிலைமை ரொம்பவும் மோசமாயிடுமே!''

''அதை எப்படிக் கைப்பற்ற முடியும்?''

''அதற்கெல்லாம் மந்திரத்தில் வழியிருக்கிறது. கருட மந்திரம் தெரிந்திருந்தால், நாகத்தை மிகச் சுலபமாகவே செயலிழக்கச் செய்துவிடலாம்.''

''இருக்கலாம். ஆனால், பகவதியோட சக்தி கோயிலுக்குள்ள இருக்குமில்லையா?'' குமார் சட்டேன்று கேட்டார்.

''பகவதி எப்பவும் கோயிலுக்குள்ளேயே இருப்பாங் கன்னு சொல்ல முடியாது. அவர் நீராடப் போகும் ஒரு சந்தர்ப்பம் உண்டு. குறிப்பாகச் சொல்வதானால் துர்க்காஷ்டமி நாளில்

நீராட அவர் அதிக நேரம் எடுத்துக் கொள்வார். அந்த நாளும் நெருங்குகிறது. ஜயந்தன் இதெல்லாம் தெரியாத ஒரு மனிதராக இருக்கமாட்டார். அந்தத் தருணத்துக்காக அவர் காத்திருக்கிறதா எனக்குத் தோணுது!" தேவதத்தன் கூறினார்.

''நாம அதை எப்படித் தடுக்க முடியும்?''

அதேநேரம் ஜயந்தனும் சந்துநாயரும் அதே விஷயத்தைப் பற்றி அங்கு பேசிக்கொண்டனர்.

''துர்க்காஷ்டமி வரட்டும்.. அன்றுடன் எல்லாவற்றையும் நான் பலமிழக்கச் செய்யுறேன். அந்த மாணிக்கம் என் கைக்கு வந்தால் கதையே முடிந்துவிடும்!" - ஜயந்தன் கூறினார்.

## 26

"அன்றைக்கு மட்டும் நாம அதைக் காப்பாற்றவில்லையென்றால், வேறு எப்போதுமே அது சாத்தியமில்லை!'' - ஜயந்தன் முணுமுணுத்தார்.

''நீங்கள் சொல்வதுபோல் அது அவ்வளவு சுலபமா என்ன?'' -சந்துநாயர் கேட்டார்.

ஜயந்தன் யோசனையில் ஆழ்ந்தார். அவரது மனம் பல வழிகளில் அந்த விஷயத்தைப் பற்றியே யோசித்துக்கொண்டு இருந்தது.

இன்று வரையிலான வாழ்க்கையில் இப்படிப்பட்ட சோதனை முயற்சியில் ஜயந்தன் ஈடுபட்டதில்லை. இதுவரை செய்திருக்கிற மந்திரங்களில் அதற்கான வாய்ப்பும் இருந்தது இல்லை. எனவே அதற்காகப் பல ஓலைச்சுவடிகளைப் புரட்டிப்



பார்க்க நேர்ந்தது. இதைப் பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ளா விட்டால் ஒருவேளை ஆபத்தில் சிக்கிக்கொள்ளலாம்.

அதற்கான முயற்சிகளைச் செய்தாலும் இறுதியாக நாகத்தின் வாயிலிருந்து மாணிக்கத்தை யார் எடுப்பது? எப்படிப் பட்டவர்கள் அதை எடுத்தால் நாகம் தொல்லைப்படுத்தாமல் இருக்கும்?

ஜயந்தன் அலுப்பு சலிப்பு இல்லாமல் சுவடிகளை ஆராய்ந்தார். கடைசியாக ஒரு சுவடியில் 'நாகமாணிக்கம்' என்கிற தலைப்பு தட்டுப்பட்டது. அதில் குறிப்பிட்டிருந்த விஷயம் சற்றுக் கடினமானதுதான். பகவதி நீராடப்போவது இரவின் மூன்றாம் ஜாமத்தில்தான்.

எனவே மிகக்குறுகிய கால இடைவெளிக்குள் மாணிக்கத்தைக் கைப்பற்றவேண்டும். நாகம் தொல்லை தராமல் இருக்க கருடனைத் துணைக்கு அழைத்துக்கொள்ள வேண்டும்.

நாகம் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில்தான் நாக மாணிக்கத்தை வாயிலிருந்து வெளியே கக்கும். அது மிகவும் அபூர்வமான ஒரு சந்தர்ப்பத்தில் - அதுவும் கருடனுடன் போராடும் நேரத்தில்.

தன்னைத் தாக்க வரும் கருடனைக் கொத்துவதற்காக, நாகம் வாயைத் திறக்கும்போதுதான் அது வெளியே வந்து விழும். அப்படி விழுவது தரையிலும் நேரடியாக விழுந்து விடக்கூடாது. கல்போன்ற பரப்பில் விழும் மாணிக்கத்தைக் கையில் எடுப்பது மிகவும் கடினமான காரியம்.

அதே சுவடியில் மற்றொரு முறையும் குறிப்பிடப் பட்டிருந்தது. பன்னிரண்டு வயதான பெண்குழந்தை நினைத் தாலும் நாகமாணிக்கத்தை எடுக்கலாம். அதற்கும் சில முறைகள் இருந்தன.

ஏழுநாள் விரதமிருந்து நாகதேவதையை மகிழ்ச்சிப் படுத்திய பிறகு நாகமாணிக்கத்தை எடுக்க முயன்றால், நாகம் சுலபமாக வாயைத் திறக்கும். அப்போது நாகமாணிக்கம் கீழே விழாமல் நேரடியாகக் கையிலேயே வாங்கிக்கொள்ளலாம்.

இந்த இரண்டில் எது தனக்கு சரிப்பட்டுவரும் என்று யோசித்தார் ஜயந்தன்.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட விஷயம் சுலபமாகத் தோன்றினாலும், இந்தப் பரிசோதனைக்கு எந்தப் பெண் தயாராக இருப்பாள்?

மாணிக்கத்தை எடுக்கப்போகும் பெண் பயந்து மிரண்டால் அது மிகவும் சிக்கலாகிவிடும்.

உள்ள நிலைமையை ஜயந்தன், சந்துநாயரிடம் விவரித்தார்.

''முதலில் சொன்ன முறை எனக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லை. ஏனென்றால் அதைச் சுலபத்தில் பிரயோகிக்க முடியாது. நாகமாணிக்கம் விழும் சமயம் பகவதி வந்துவிட்டால் அத்துடன் எல்லாம் தொலைந்தது. அதன் பிறகு நாம் உயிருடன் திரும்புவதைப் பற்றி யோசிக்க வேண்டியதே இல்லை. அதனால்..." சந்துநாயர் பேச்சை அத்துடன் நிறுத்தினார்.

''இரண்டாவது வழி நல்லதுதான். ஆனால், அதற்கேற்ற பெண் நமக்கு எங்கிருந்து கிடைப்பாள்? அதேசமயம் அவள் கோயிலுக்குள் நுழையக் கூடியவளாகவும் இருக்கவேண்டும். பன்னிரண்டு வயது தைரியசாலி... இப்படிப்பட்ட பெண் குழந்தை எங்கே இருக்கிறாள்." ஜயந்தன் தீவிரமாக யோசித்தார்.

''அதற்கு வேண்டுமானால் முயற்சி செய்யலாம். காரியஸ்தர் கிருஷ்ணன் நாயருக்கு ஒரு மருமகள் சகோதரி மகள் இருக்கிறாள். கெட்டிக்காரியும் கூட!"



களித்தபடி சொன்னார்.

''என்ன சிக்கல்?"

''நாகமாணிக்கம் நமது கையில் விழுந்த பிறகு அந்தப் பெண் உயிரோடு இருக்கக்கூடாது. அது நமக்கு ஆபத்து."

''ஏன்?"

''நாகமாணிக்கம் நம்மிடம் இருப்பதை மற்றவர்கள் தெரிந்துகொள்வார்கள். இப்போதைய சூழ்நிலையில் கோயில் மீது கண்மூடித்தனமான பக்தி வைத்திருப்பவர்கள் அதன் பேரில் ஏதாவது பிரச்சினையைக் கிளப்பலாம். இன்னொரு முக்கியமான விஷயம், கோயில் நம்முடையது அல்ல. ஸ்ரீகுமாருக்குச் சொந்தமானது."

''அப்படியானால் அந்தப் பெண்ணைப் பேசமுடியாமல் செய்துவிட்டால் போகிறது."

''அது மேலும் சிக்கலாகிவிடும். அதனால் நாம் முதல் வழியையே பயன்படுத்திப் பார்ப்போம். முடியாவிட்டால் பிறகு இரண்டாவது வழியைப் பின்பற்றலாம்."

''அந்த அளவுக்கு நேரம் இருக்குமா? "

ஜயந்தன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

கடைசியில் இரண்டாவது வழியையே தேர்ந்தெடுப்பது என்று முடிவானது. அதில் ஒரே ஒரு மாற்றம். ஒரே நேரத்தில் இரண்டு முயற்சியையும் மேற்கொள்வது என்பதுதான் அது.

கருடனும் நாகமும் ஒன்றுக்கொன்று போராடும்போது நாகத்தின் வாயிலிருந்து விழும் மாணிக்கத்தை, மண்ணில் விழாமல் பெண் குழந்தை கவனித்துக்கொள்ளட்டும். திட்டத்தை இப்படி அமைத்துக்கொண்டால் எங்குமே எந்தவிதமான தவறும் நடக்க வாய்ப்பில்லை.

அதே நேரம் தேவதத்தனும் ஸ்ரீகுமாரும் நாகமாணிக்கத்தைப் பற்றியே விவாதித்தனர். பிரஸ்னம் பார்த்த போது மாணிக்கம் இருப்பது உறுதியானது. அத்துடன் மற்றொரு செய்தியையும் குறிப்பிட்டார் தேவதத்தன்.

''ஸ்ரீதேவி நினைத்தால் நாகமாணிக்கத்தை எடுக்க முடியும். அவளால் சுலபமாகக் கோயிலுக்குள் நுழையவும் முடியும். நாகம் அவளைத் தீண்டாது. தீண்டினாலும் அவளுக்கு அதனால் எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது. ஆனால், பகவதி கோயிலுக்குள் இருக்கும்போது மாணிக்கத்தை எடுக்க வாய்ப்பே இல்லை. தனது கழுத்தில் கிடக்கும் நாகத்தின் வாயிலிருந்து மாணிக்கம் பறிபோவதை அவர் விரும்ப மாட்டார். ஒப்புக்கொள்ளவும் மாட்டார்.''

''நம்மளோட நோக்கம் மாணிக்கம் எதிராளிங்க கைக்குப் போய்விடக் கூடாதுங்கிறதுதான்'' - ஸ்ரீகுமார் நினைவூட்டினார்.

அப்போது நேரம் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

ஸ்ரீகுமாரின் மனையின் வராந்தாவில் அமர்ந்துதான் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

பூஜையறை வாசலில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வராந்தாவை ஒட்டியிருந்த உள்ளறையில் அமர்ந்தபடியே ஸ்ரீதேவி அவர்கள் பேசுவதைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

சட்டென்று முகத்தை நிமிர்த்திய தேவதத்தனுக்கு தெரு வாசற்படியில் யாரோ நிற்பது போலத் தெரிந்தது. அதை மிகவும் ரகசியமான குரலில் ஸ்ரீகுமாரிடம் தெரிவிக்கவும் செய்தார்.



உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்த ஸ்ரீகுமார், உடனே தெரு வாசற்படியை நோக்கி ஓடினார்.

அவர் தெருவாசற்படியை நெருங்குவதற்குள் ஓடியவர் யாரோ அவருக்கு முன்னால் பந்தயத்தில் ஓடுவது போல் தெரிந்தது. சட்டென்று மறையவும் செய்தார்.

''நீங்கள் சொன்னது உண்மைதான். நான் போய்ச் சேருவதற்குள் அங்கிருந்து ஓடிவிட்டதால் ஆளை அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை'' திரும்பி வந்த ஸ்ரீகுமார் தெரிவித்தார்.

''ஒருவேளை வந்திருந்தது கோவிந்தனாக இருக்க வேண்டும். நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணிக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்திருக்கலாம் நமது எதிராளிகள்'' - திருமேனி கூறினார்.

''வந்தவன் கோவிந்தனாக இருந்தால் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகத்தான் அர்த்தம்'' -ஸ்ரீகுமார் கூறினார்.

''இதே மாதிரி நமது எதிராளியின் நடவடிக்கையைத் தெரிந்துகொண்டு நம்மிடம் சொல்ல யார் இருக்கிறார்கள்?

''நான் போகட்டுமா?'' - ஸ்ரீதேவி கேட்டாள்.

''ரொம்பவும் நல்ல விஷயம்!'' - திருமேனி மகிழ்ச்சியுடன் கூறினார்.

ஸ்ரீதேவி உடனே அங்கிருந்து மறைந்தாள். அவள் சந்து நாயரின் தேங்காய் கோடௌனை அடைந்தபோது ஜயந்தனும் அவரும் தங்களது பேச்சின் இறுதிக் கட்டத்துக்கு வந்திருந்தனர். அதனால் அவளால் எதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இருப்பினும் ஒருபெண் குழந்தையைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டது கேட்டது.

ஜயந்தன் சட்டென்று பேச்சை நிறுத்தினார். ''என்ன பேச்சை நிறுத்தி விட்டீர்கள்?'' - சந்துநாயர் கேட்டார்.

''ஒண்ணுமில்லை... சின்ன சங்கதிதான். பாலைப் பூவின் வாசனை வருகிறது. யாரோ இங்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. வந்திருந்தாலும் நாம் பயப்பட ஏதுமில்லை'' என்று கூறிய ஜயந்தன், நிலவிளக்கிலிருந்து எரியும் திரி ஒன்றை எடுத்து உதட்டருகில் வைத்து ஆக்னேய மந்திரத்தை உருவிட்டு அதை முன்புறமாக வீசி எறிந்தார்.

அந்தத் திரி பாம்பு வடிவத்துடன் எரிந்தவாறே பறந்து போனது.

தன்னை நோக்கிப் பாய்ந்து வரும் ஆக்னேயாஸ்திர வெளிச்சத்தை ஸ்ரீதேவி கவனித்தாள்.

அவள் தனது வலது கையை நீட்டி முழுவதுமாக எரிந்து ஒரு நெருப்புக்கோளம் போல் ஆகியிருந்த அந்தத் திரியைப் பிடித்தாள். பிடித்த சுருக்கிலேயே அதைத் திருப்பி எறியவும் செய்தாள்.

சற்றுத் தொலைவிலிருந்து பாய்ந்துவரும் நெருப்பை ஜயந்தனும் கவனித்தார். அவரை நோக்கி வருவது போல் விரைந்து வந்த நெருப்பு, நிலவிளக்கில் பழையபடி பொருந்திக் கொண்டது.

ஜயந்தன் ஒரு கணம் அசந்தே போனார்!

தான் ஏவிவிட்டது மிகவும் சாதாரணமாகத் திரும்பி வந்திருக்கிறது! அப்படியானால் எதிராளியும் சரியான நபர்தான். தன்னைவிட எந்த விதத்திலும் குறைந்த ஒருவரல்ல!

'ஒருவேளை இப்படிச் செய்தது அவளாகத்தான் இருக்க வேண்டும்!' என்ற முடிவுக்கு வந்தார்.



துர்க்கா அஷ்டமி தினத்துக்கு இன்னும் மூன்று நாட்கள் இருந்தன.

ஜயந்தனும், சந்துநாயரும் சேர்ந்து காரியஸ்தரின் மகளைத் தங்களது நோக்கத்துக்காகத் தயார்படுத்திக்கொண்டிருந்தனர்.

ஒரு ஏக்கர் தென்னந்தோப்பு தருவதாகச் சொல்லித்தான் அவளது குடும்பத்தாரைச் சம்மதிக்க வைத்திருந்தனர்.

அந்த நாளும் வந்தது.

இரவு பதினோரு மணிவரை அவளைப் படுத்து உறங்கும்படி கூறியிருந்தனர். பதினொன்றரை மணியானதும் அவளை எழுப்பிக் கோயில்குளத்தில் குளித்து வருமாறு கூறினர்.

பிறகு அவளது உடம்பில் விபூதி, சந்தனம் பூசி அவளைக் கோயிலுக்குள் கொண்டுபோனார்கள்.

எங்கும் காரிருள் நிறைந்திருந்தது. கோயிலின் சுற்றுப்புறம் அமைதியாக இருந்தது. ஏனோ அன்றைய இரவில் ஆலமரத்தின் இலைகள்கூட அசையாமலிருந்தன.

மூன்றாவது ஜாமம் ஆரம்பமானது.

சரியாக அதே சமயம் கருவறையின் வாசல் மெதுவாகத் திறந்துகொண்டது. கோயில் பகுதியில் மிகவும் மென்மையான காலடியோசைகள் கேட்டன.

பகவதியின் நீராட்டுக்காகப் பறவைகளும் பூதகணங்களும் பரிவாரங்களாகப் புறப்படுகின்றன என்பது ஜயந்தனுக்குப் புரிந்தது.

நல்லவேளையாகச் சந்தர்ப்பம் தங்களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறதென்ற உறுதியான நம்பிக்கையுடன் நின்றிருந்தார் ஜயந்தன்.

## 27

'யாரும் அசையக்கூடாது!' என்று சைகையால் தெரிவித்த ஜயந்தன் இடது புறமாக ஒதுங்கி நின்றார். திறந்த கருவறைக் கதவின் உட்புறத்திலிருந்து கால் சிலம்புகளின் ஓசை கேட்டது.

''பகவதிதான் வருகிறார்!'' ஜயந்தனின் உதடுகள் மந்திரிப்பது போல் முணுமுணுத்தன.

அவர் எந்தத் திசையை நோக்கி வருவார் என்பது உறுதியாகத் தெரியாததால் ஜயந்தன் ஒரு கணம் தடுமாறினார். அவர் வெளியே வரும்போது யாரையாவது பார்க்க நேர்ந்தால் எங்கிருந்து வருகிறது என்று தெரியாத தாக்குதல்தான். அப்படி விழுந்தால் திரும்ப உயிருடன் எழுந்திருப்பது சாத்தியம் அல்ல என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். எனவே மற்றவர்களை எச்சரிக்கை செய்வதற்காக அவர்களைத் திரும்பிப் பார்த்தார். அவர்களது மனமும் உயிரும் துடித்துக்கொண்டிருப்பது அவர்களது பார்வையிலிருந்தே தெரிந்தது. விரும்பத்தகாத ஏதாவது நடந்துவிட்டால்?

சிலம்புகளின் சத்தம் தெளிவாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து வேறு சில சத்தங்களும் கேட்பதாகத் தோன்றியது. கண்ணுக்குப் புலப்படாத என்னவெல்லாமோ தங்களைக் கடந்து போவதாக அவருக்குத் தோன்றியது. கோயிலின் படிக்கட்டுவரை அந்தச் சத்தம் தொடர்ந்தது. ஜயந்தனும் உடன் வந்தவர்களும் மூச்சை அடக்கிக்கொண்டு நின்றிருந்தனர்.

அதேநேரம் தேவதத்தன் நம்பூதிரியும், ஸ்ரீகுமாரும் கோயிலின் தென்மேற்கு மூலையில் இருந்தபடி நடப்பதை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்தனர். ஜயந்தனின் திட்டமும்



நோக்கமும் ஏற்கெனவே தெரிந்திருந்ததால் மௌனமாக அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

''என்ன செய்யலாம்?'' ஸ்ரீகுமார் தேவதத்தனிடம் கேட்டார்.

''பொறுங்கள்!'' அவர் மெதுவான குரலில் பதிலளித்தார்.

ஏதாவது சாகசம் செய்து எதிராளிகள் நாகமாணிக்கத்தைக் கொண்டுபோய்விடுவார்களோ என்று பயந்தாள் ஸ்ரீதேவி.

ஸ்ரீகுமார், ஸ்ரீதேவியை அருகில் வருமாறு அழைத்தார். அவள் அருகே வந்தாள். அவர்கள் என்ன சொன்னாலும் தயங்காமல் அதை செய்து முடிப்பது என்கிற தீர்மானத்துடன்தான் அவள் வந்திருந்தாள். நாகமாணிக்கம் எதிராளிகளின் கையில் சிக்கிவிட்டால் அது தங்கள் மொத்தப் பேரையும் பாதிக்கும் என்று அவளுக்கும் நன்றாகத் தெரியும்.

ஜயந்தன் கருவறை வாசலை நெருங்கி உட்புறமாக எட்டிப் பார்த்தார்.

அதற்குள் அசைந்துகொண்டிருந்த பிரகாசத்தை அவர் கவனித்தார். பிரகாசம் கருவறையின் இருளை ஒட்டுமொத்தமாக விரட்டியடித்திருந்தது.

பகவதி சிலையின் மீது நாகம் இழைந்துகொண்டிருப்பதை ஜயந்தன் கவனித்தார். இந்தச் சமயத்தில் அங்கிருந்த சிலைக்கோ, மற்ற விக்கிரகங்களுக்கோ எந்தவிதமான சக்தியும் இல்லை என்பது அவருக்கு உறுதியாகத் தெரிந்தது. பகவதியின் சக்தி மொத்தமும் கருவறையிலிருந்து வெளியேறியிருந்தது.

''உள்ளே போம்மா... போய் அதோ அந்த விளக்கை இப்படி எடுத்துட்டுவா!'' -ஜயந்தன் கூறினார்.

அந்தப் பெண்ணுக்கு மாணிக்கத்தைப் பற்றியோ, நாகத்தைப் பற்றியோ எந்தவிதமான தகவலும் தெரியாது. அதனால்தான் மாணிக்கத்தை விளக்கு என்று குறிப்பிட்டார்.

மாணிக்கத்தை எடுக்க முற்படும்போது நாகம் வாயைத் திறந்தால், மாணிக்கம் அவளது கையில் சுலபமாக விழுந்து விடும் என்றும் அவர்கள் நினைத்தனர். வரப்போகும் ஆபத்து எப்படிப்பட்டதென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

சந்துநாயரும், ஜயந்தனும் வற்புறுத்தியதால் அந்தப் பெண் குழந்தை கருவறைக்குள் நுழைய முயன்ற அதே வேளையில் ஸ்ரீதேவியும் அதற்குள் நுழைந்தாள்.

அந்தப் பெண் உள்ளே நுழைந்தாள்.

ஸ்ரீதேவி கருவறைக்குள் நுழைந்ததை எதிர்த்தரப்பினர் யாரும் கவனிக்கவில்லை. அவள் அரூபமாக இருந்தாள். பெண் குழந்தை மாணிக்கத்தை நோக்கிக் கையை நீட்டியபோது, நாகம் அவளைக் கொத்த முயன்றது. அதேநேரம் அதன் வாயிலிருந்து மாணிக்கம் வழுக்கி விழுந்தது. அதை எதிர்பார்த்துக் காத்திருந்தவளைப்போல் இரண்டு கைகளையும் முன்புறமாக நீட்டி, கையில் விழுந்ததும் ஸ்ரீதேவி வெளிப்புறமாக ஓடினாள்.

அந்தக் கணத்தில்தான் அங்கு இருப்பது பாம்பு என்று அந்தப் பெண்ணுக்குப் புரிந்தது. அலறியவாறே அவள் வெளியே ஓடிவந்தாள்.

யாரும் தொடாமல், பிடிக்காமல் நாகமாணிக்கம் அந்தரத்தில் பயணம் செய்வதாக ஜயந்தனுக்கும் சந்து நாயருக்கும் தோன்றியது. அது தங்களது கையை விட்டுப் போகிறது என்பதை அப்போதுதான் உணர்ந்தனர்.

அதற்குள் தேவதத்தனும், ஸ்ரீகுமாரும் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தனர்.

ஏமாற்றமடைந்தவர்களாக ஜயந்தனும் கூட்டத்தாரும் கருவறை வாசலிலிருந்து திரும்பி நடக்கத் தொடங்கினர்.



உண்மையில் கோயிலுக்குள் என்ன நடந்தது என்பதே ஜயந்தனுக்கு விளங்கவில்லை. காரணம், கருவறைக்குள் தனக்கு எதிராக யாராவது செயல்படுவார்கள் என்பதை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இதை எப்படி ஈடுகட்டுவது, உடனடியாக என்ன செய்வது என்பது புரியாமல் ஜயந்தன் கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்தார்.

**தே**வதத்தனும் ஸ்ரீகுமாரும் இல்லத்துக்கு வந்து சேர்ந்தனர். நாகமாணிக்கம் அப்போதும் ஸ்ரீதேவியின் கையில் இருந்தது. ஸ்ரீகுமார் அவசரமாக நிலவிளக்கை ஏற்றினார்.

''நல்லவேளை... நாமளும் அங்கேதான் இருந்தோம்கிறது அவங்களுக்குத் தெரியாது" -திருமேனி பேச்சைத் தொடங்கினார்.

''இருக்கலாம். ஆனா, அவங்களுக்கு நம்ம மேலதான் சந்தேகம் ஏற்படும்!"

''அதை அப்புறம் பார்த்துக்கலாம். இந்த நாகமாணிக்கத்தை நாம எங்கே பத்திரப்படுத்தி வைக்கிறது? இது பகவதியின் வெளிச்சம். இது காணாமப்போனது தெரிஞ்சதும் அவங்க எக்கச்சக்கமா கோபப்படப் போறாங்க!" தேவதத்தன் கூறினார்.

''அப்படியானால் இப்பவே இதைத் திரும்பவும் அங்கேயே கொண்டுபோய் வெச்சிடலாம்" - ஸ்ரீகுமார் கூறினார்.

''பொறுங்க... சட்டு சட்டுன்னு ஒரு தீர்மானத்துக்கு வந்துடக்கூடாது" - தேவதத்தன் நம்பூதிரி பேசினார்.

ஆனால், ஸ்ரீகுமார் ஏற்றிவைத்த விளக்கின் முன்புறம் சட்டென்று தங்கநிற நாகம் ஒன்று வெளிப்பட்டது.

''இதோ சொந்தக்காரரே வந்துட்டார். நாம அங்கே போகவேண்டிய அவசியமே இல்லை.'' ஸ்ரீதேவி... அந்த மாணிக்கத்தை அங்க வெச்சுடும்மா!'' - தேவதத்தன் கூறினார்.

ஸ்ரீ தேவியும் நாகமாணிக்கத்தை உடனே நிலவிளக்கின் முன்னால் வைத்தாள். படத்தைத் தாழ்த்தி மாணிக்கத்தை நோக்கி வந்த பாம்பு சட்டென்று மறையவும் செய்தது.

சந்துநாயரும் ஜயந்தனும் தேங்காய் கோடௌனுக்குள் அமர்ந்திருந்தனர். அப்போது நாகம் ஒன்று அவர்களுக்கு முன்பாக வந்தது. அவர்கள் கீழே போட்டிருந்த தளிர் வெற்றிலையின் மீது நாகமாணிக்கத்தை வைக்கவும் செய்தது.

''சரியான நேரத்துக்கு இது அங்கு போய்ச் சேர்ந்திருக்கு. இல்லேன்னா கோயில் நாகம் அங்க போயிருக்கும்'' - ஜயந்தன் வெற்றிலையில் பொதிந்த மாணிக்கத்தை எடுத்துத் தரையில் வரைந்த யந்திரத்தின் மையத்தில் வைத்தார்.

''இதுவரைக்கும் நான் தோல்வியே அடைஞ்சதில்லை. என் கண் முன்னாலேயே இப்படி ஒரு செப்பிடு வித்தை நடக்க விட்டுடுவேனா? சரி... நீ போகலாம்!'' - ஜயந்தன் நாகத்தை நோக்கிக் கூறினார்.

அது நிதானமாக ஊர்ந்து மறைந்தது.

''இனி என்ன நடந்தாலும் சரி. நான் ஜெயித்ததாகத்தான் அர்த்தம்!'' - ஜயந்தன், சந்துநாயரைப் பார்த்துக் கூறினார்.

''நாகமாணிக்கம் சரியான இடத்துக்குப் போய்ச் சேரலை. நாம எடுத்துட்டோம்கிறதை அவங்க தெரிஞ்சுக்கமாட்டாங்களா?'' - சந்துநாயர் கேட்டார்.

''வழியே இல்லை... அவ்வளவு கெட்டிக்காரத்தனமா தட்டிட்டு வந்திருக்கிறோம். எதுக்கும் நாம எச்சரிக்கையா



இருக்கிறது நல்லது. இந்த மாணிக்கத்தை நாம எங்க பத்திரமா வைக்கலாம்?'' ஜயந்தன் கேட்டார்.

''எங்க வீட்டுக்குள்ள இருக்கிற உள் அறையில வைக்கலாமில்லையா?''

''தாராளமா! ஆனா, ஒண்ணு அந்த அறைக்குள்ள உங்களைத் தவிர வேற யாரும் போகக்கூடாது.''

''அதைப் பார்த்துக்கலாம்!''

''அப்புறம் இப்படி ஒரு பொருள் உங்ககிட்ட இருக்கிறதை வேறு யாரும் தெரிஞ்சுக்கவும் கூடாது. கொஞ்ச நாள் அங்க இருக்குற நெல்லுக்குள்ளேயே கிடக்கட்டும். நெல் போட்டு வைச்சிருக்கிற அறையைப் பூட்டி, சாவியை உங்க இடுப்புலேயே பத்திரமா வெச்சிருங்க.''

சந்துநாயர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

அவர்களது திட்டப்படியே சற்று நேரத்தில் எல்லாம் நடந்தன.

ஸ்ரீகுமாரும் தேவதத்தனும் இல்லத்தின் வராந்தாவில் உட்கார்ந்திருந்தனர்.

மூன்றாவது ஜாமம் முடிவடையும் வேளை. பகவதியும் பரிவாரங்களும் நீராட்டை முடித்துக்கொண்டு திரும்பும் நேரமாகிவிட்டது.

நாகமாணிக்கம் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினார் ஸ்ரீகுமார். விஞ்ஞானத்தை மீறிய இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதால் முடிந்தவரையில் இதையெல்லாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதில் அவர் ஆர்வம் காட்டியதில் வியப்பில்லையே.

''ஒருதடவை நேராவே போய்ப் பார்த்துட்டு வந்துடலாமா?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''அதுக்கென்ன போய்ட்டு வந்துட்டாப் போகுது!'' திருமேனி எழுந்திருக்க முயன்றார்.

அப்போது அந்தரத்தில் ஏதோ ஒன்று பாய்ந்து வரும் சத்தம் கேட்டது. தெருவாசற்படி வரை வந்த சத்தம் அதன் பிறகு கேட்கவில்லை. சற்று நேரத்துக்குள் நாகம் ஒன்று ஊர்ந்து வந்து நிலவிளக்கின் முன்னால் படம் எடுத்தபடி நின்றது.

அதன் தலை சற்று அசைந்து அசைந்து தேவதத்தனையும் ஸ்ரீகுமாரையும் மாறி மாறிப் பார்த்தது. அப்போதுதான் தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது தேவதத்தனுக்குப் புரிந்தது. 'அப்படியானால் முன்பு வந்தது ஜயந்தன் அனுப்பிய போலியா?'

தேவதத்தன் உண்மையில் மிகவும் வருந்தினார். மேலும் சற்று நேரம் அப்படியே நின்றிருந்த நாகம் பூஜையறை வாசலில் போய் வளைந்து படுத்துக்கொண்டது.

''எதற்கும் நாம் ஒருதடவை கோயிலுக்குப் போய் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வோம். வாருங்கள் நம்பூதிரி!''

விரைவாக நடந்த இருவரும் கோயிலின் படிக்கட்டுகளைத் தாண்டி மேற்புறம் வந்தனர்.

அப்போது -

கருவறையின் கதவு திறந்து கிடந்தது. உட்புறத்தில் சிலம்புகளின் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

## 28

''உள்ளே சிலம்புகளின் சத்தம் கேட்கிறது'' ஸ்ரீகுமார் மிகவும் தாழ்ந்த குரலில் கூறினார்.

''பகவதி நீராடி முடித்துத் திரும்பிவிட்டிருக்கிறார்'' தேவதத்தனும் அதே குரலில் பதில் அளித்தார்.

''பார்த்துவிடலாமா?'' என்றபடி ஸ்ரீகுமார் கருவறைக் கதவை நோக்கி நகர்ந்தார்.

தேவதத்தனும் அவரைத் தொடர்ந்தார்.

மூடியிருந்த கதவின் இடைவெளி வழியாக உட்புறத்தைக் கவனித்தனர்.

''ஐயோ!'' தேவதத்தன் பதறியவராகத் திரும்பினார்.

''ஏன் பதறுகிறீர்கள்?'' -ஸ்ரீகுமார் கேட்டார்.

''நாகமாணிக்கம் கருவறைக்குள் இல்லை. இந்த நிலைமையில் நாம் என்ன செய்ய முடியும்?''

''அப்படியானால் நாம் ஏமாந்து போய்விட்டோம் இல்லையா?'' ஸ்ரீகுமார் பயமும் ஏமாற்றமும் கலந்த குரலில் கேட்டார்.

நாகமாணிக்கம் மட்டும் தங்கள் கைவசமிருந்தால், அதன் மூலம் எப்படிப்பட்ட காரியத்தையும் சாதித்துக்கொள்ளலாம் என்பது தேவதத்தன் நம்பூதிரிக்கும் நன்றாகத் தெரியும்.

முந்தைய நிலையைவிட இப்போது எதிராளிகளின் பலம் ஓங்கி விட்டிருக்கிறது. தங்களது செயல்களை மிகவும் சுலபமாகத் தடுப்பதுடன், தங்களைத் தற்காத்துக்கொள்ளவும் நாக மாணிக்கம் அவர்களுக்கு உதவும்.

எனவே எப்படியாவது அந்த நாகமாணிக்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று அந்த இடத்திலேயே தீர்மானித்தார்.

பொருள் இன்னாரிடம் இருக்கக்கூடும் என்பது தெரிந்தாலும் சரியாக அது எந்த இடத்தில் இருக்கிறது என்று தெரிந்தால்தான் அடுத்த நடவடிக்கையைத் திட்டமிட முடியும். பிரஸ்னம் பார்த்தால் விஷயம் சுலபமாகிவிடும்.

''வாருங்கள் போகலாம்'' தேவதத்தன் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

பிரஸ்னம் பார்ப்பதற்கு அன்றைய நாள் உகந்ததாக இல்லாததால் மறுநாள் பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளி வைத்தார்.

மறுநாள் பிரஸ்னம் பார்த்த தேவதத்தன் சந்தேகம் நிறைந்த குரலில் கூறினார்: ''மாணிக்கத்தை வீட்டுக்குள் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. நெல்மணிகளுக்குள் இருப்பதாகத் தெரிகிறது!''

''அவர்களது தேங்காய் கோடௌனிலும்கூட ஒரு தானிய அறை இருக்கிறது குறைந்தது ஐந்நூறு மரக்கால் நெல்லாவது கொள்ளக்கூடியது அது. அதற்குள்தான் இருக்க வேண்டும்'' - ஸ்ரீகுமார் பதிலளித்தார்.

''நீங்கள் சொல்வதுபோல்தான் இருக்க வேண்டும்.''

''அங்கிருந்து அதை எப்படி எடுப்பது?'' குமார் கேட்டார்.

''இதற்கு மாந்திரீக பலம் மட்டும் போதாது. தைரியம் தேவை. தோப்புக்குக் காவல்காரர்களை அப்புறப்படுத்த வேண்டுமானால் மந்திரத்தைப் பயன்படுத்தலாம்'' -திருமேனி சொன்னார்.



''பிரபாகரனுக்கு அந்தத் தானிய அறையைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனால் அதைத் திறந்து மாணிக்கத்தை வெளியே எடுக்கும் வேலையை அவனிடமே விட்டு விடலாம்!'' ஸ்ரீகுமார் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராகக் கூறினார்.

பிரபாகரனும் அதற்கு ஒப்புக்கொண்டான்.

ஒரே சமயத்தில் இரண்டு பேரை சமாளிக்கும் வல்லமை வாய்ந்தவன் பிரபாகரன்.

அன்று மாலை நேரத்தில் பிரபாகரன் தோப்புக்குள் நுழைந்தான்.

அந்த இடம் முழுவதுமே அவனுக்கு நன்கு தெரிந்த இடம் தான். தாய்மாமனுடன் மனஸ்தாபம் ஏற்படுவது வரையில் அவன் அங்கெல்லாம் தாராளமாகப் புழங்கியிருக்கிறான்.

சற்றுத் தொலைவிலிருந்து கோடௌனைப் பார்த்தான்.

அதன் அருகே யாரெல்லாமோ நின்று கொண்டிருப்பதாகத் தோன்றியது. நிலவொளியை மேகத்துண்டுகள் அவ்வப்போது மறைத்துக்கொண்டிருந்தன. அதனால் இருளும் வெளிச்சமும் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருந்தன.

கோடௌனுக்கு வெளியே நான்குபேர் சுற்றுப்புறத்தை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

அப்போது தோப்பின் கிழக்குப் பகுதி வழியாக இரண்டு பெண்கள் உள்ளே வந்தனர். வந்தவர்கள் மெதுவாக வடக்குத் திசையில் நகர்ந்தனர்.

''அதோ... யாரோ போகிறார்கள்!'' காவல்காரரில் ஒருவன் சொன்னான்.

சட்டென்று நான்கு காவல்காரர்களும் ஒன்றாகக்கூடி எதையோ பேசிக்கொண்டனர். அவர்களில் இருவர் அந்தப் பெண்கள் போன திசையில் நடக்கத் தொடங்கினர்.

முன்பின் தெரியாத பெண்கள் அவர்கள்.

''எங்கே போறீங்க?'' இருவரில் ஒருவன் அதிகாரத் தொனியில் கேட்டான்.

''கல்யாணியோட வீட்டுக்குப் போறோம்.'' ஒருத்தி பதிலளித்தாள்.

''இந்த நேரத்திலயா?''

''ஏன்... இந்த நேரத்துல போனா என்ன? நாங்க வழக்கமா போறவங்கதானே?''

''ஓகோ... அப்படியா...? அப்போ கோடௌன் வரைக்கும் வந்துட்டுப் போங்களேன்.''

''அவ்வளவுதானே. வந்துட்டாப் போகுது.'' எந்த விதமான மறுப்போ, எதிர்ப்போ இல்லாமல் ஒப்புக்கொண்டனர் பெண்கள் இருவரும். முன்னால் நடந்த இரண்டு காவல்காரர்களையும் பின் தொடர்ந்தனர்.

காவல்காரர்களில் இருவர் அங்கிருந்து நகர்ந்தவுடன், மற்ற இருவரும் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த தருணத்தில் பிரபாகரன் கோடௌனுக்குள் நுழைந்துவிட்டான். அதற்குள் பெண்களைக் கவனிக்கப் போனவர்களும் திரும்பி வந்துவிட்டனர்.

விரைவாக தானிய அறையை அடைந்த பிரபாகரன் வெளிப்புறம் மறைவாகக் காத்திருந்தான். திடுமென்று பெண்கள் இருவர் உட்புறம் வருவதைக் கவனித்தான்.

சட்டென்று அங்கு எரிந்துகொண்டிருந்த லாந்தர் விளக்கு அணைந்தது.

அதைத் தொடர்ந்து அங்கு என்னவெல்லாமோ புரண்டு விழும் சத்தம் கேட்டது. அத்துடன் ஏதேதோ அலறல்களும்



எழுந்தன. பிரபாகரன் நேரத்தை வீணாக்காமல் தானிய அறைக்குள் இறங்கி விட்டான்.

நெல்லை அதிகமாகக் கிளறிப் பார்க்கவேண்டிய தேவையே இருக்கவில்லை. மாணிக்கத்தின் வெளிச்சமே அதன் இருப்பிடத்தைச் சுலபமாக அடையாளம் காட்டிவிட்டது.

மாணிக்கத்தைக் கையில் எடுத்துக்கொண்டான் பிரபாகரன். சட்டையை மடக்கி மாணிக்கத்தை எவ்வளவுதான் மூடினாலும் அதன் வெளிச்சத்தை மறைக்க முடியவில்லை.

முடிந்த மட்டும் இரண்டு கைகளையும் பொத்திப் பிடித்து வெளிச்சம் தெரியாதபடி மூடிக்கொண்ட பிரபாகரன், வெளியே வந்ததும் தருணம் பார்த்து 'திபுதிபு'வென்று ஓடத் தொடங்கினான். ஸ்ரீகுமாரையும், தேவதத்தனையும் இல்ல வாசலில் பார்த்த பிறகுதான் பிரபாகரனுக்கு நிம்மதியான மூச்சே வந்தது.

''பிரபாகரா அதைத் தரையில் வைக்கக்கூடாது'' - திருமேனி கூறினார்.

''எங்கே வைக்கலாம்?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''இந்த அறைக்குள் வைத்துக்கொள்ளலாம். இந்த இடத்துக்கு யாரும் அவ்வளவு சுலபத்தில் வரமாட்டார்கள்'' தேவதத்தன் இடது புறமிருந்த அறையைச் சுட்டிக்காட்டினார்.

அந்த அறைக்குள் இருந்த கல்பெட்டிக்குள் பட்டுத் துணியில் பொதிந்த மாணிக்கத்தை வைத்து மூடினார்.

காலையில் தேங்காய் கோடௌனுக்கு வந்த சந்துநாயர், வாசலில் ரத்தம் கக்கியபடி இறந்துகிடக்கும் காவல்காரர்களைப் பார்த்தார். தானிய அறையைத் திறந்து பார்த்தபோது, இருட்டாக இருந்தது. மாணிக்கம் திருட்டுப் போய்விட்டதை உணர்ந்தார்.

உடனடியாக ஜயந்தனிடம் தகவல் தெரிவித்தார். ஜயந்தன் எதிர்பாராத ஒரு செய்தியாக இருந்தது அது. 'நாகமாணிக்கத்தை

உடனடியாகக் கைப்பற்றவில்லையென்றால், தனது எதிராளிகள் பலம் பெற்று விடுவார்கள். யோசனை எல்லாம் சரிதான். ஆனால், உடனடியாக மாணிக்கத்தைக் கைப்பற்றிவிட முடியுமா? அது சாத்தியமா?' என்று யோசித்தார்.

இன்னொருவரின் வீட்டுக்குள் புகுந்து அதை எப்படி எடுப்பது? அதற்கு ஏதாவது ஒரு தந்திரத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்.

அமானுஷிகமான சக்திகளால் இந்த வேலையைச் சுலபமாகச் செய்ய முடியும் என்று ஜயந்தன் நம்பினார்.

'இந்தச் செயல், ஸ்ரீகுமார் அந்த இல்லத்தில் இல்லாத போது நடைபெறவும் வேண்டும். அதற்கு கோவிந்தனே போதுமே' என்றும் தீர்மானித்தார்.

அன்று மதிய நேரத்தில் காலேஜிலிருந்து ஸ்ரீகுமாருக்கு ஒரு தந்தி வந்தது. 'உடனடியாகப் புறப்பட்டு வரவும்.' என்றது அது. நிச்சயமாக ஏதாவது அவசரமான வேலையாக இருக்க வேண்டும் என்று தோன்றியதால் அவரும் உடனே புறப்படத் தீர்மானித்தார்.

நாகமாணிக்கத்தை என்ன செய்வதென்பது குறித்து மூவரும் அவசர விவாதம் நடத்தினர்.

''தற்போதைய சூழ்நிலையில் ஸ்ரீகுமார் இல்லாமல் மாணிக்கத்தை இல்லத்திலேயே வைத்துவிட்டுப்போவது நல்லது அல்ல'' என்று திருமேனி எச்சரித்தார்.

''என்ன செய்யலாம்?'' ஸ்ரீகுமார் யோசித்தார்.

''அதை உன் கையிலேயே வைத்திருப்பதுதான் உசிதம் எடுத்துக் கொண்டுபோய் லேபில் வைத்துக்கொள்வதுதான் நல்லது.''

''பத்திரமான இடம்தான்!''

''லேபுக்குள் உன் அனுமதியின்றி வேறு யாரும் வரவும் மாட்டார்கள். அதற்குள் பத்திரப்படுத்த இடம் கிடையாதா என்ன?



''நல்ல யோசனைதான். இங்கிருந்தும் இடம் மாறிவிடும்! தேவதத்தன் அந்த யோசனையை ஆமோதித்து ஒப்புக் கொண்டார்.''

''அப்படியே செய்கிறேன்!'' என்ற ஸ்ரீகுமார் மதியநேரத்தில் அங்கிருந்து புறப்பட்டார்.

மாணிக்கத்தை ஒரு பட்டுத்துணியில் நாலைந்து மடிப்புகளுக்குள் வைத்துக்கட்டி சூட்கேஸுக்குள் திணித்தார்.

லேபரட்டரி ஸ்டாக் மற்றும் அத்தியாவசயமான பொருள்களை வாங்குவது பற்றியும் பேசுவதற்குத்தான் பிரின்ஸ்பால் அவசரமாக வரச்சொல்லியிருந்தார். தேவையான விவரங்களைக் கொடுத்து உதவிய ஸ்ரீகுமார், இரவில் தனது வழக்கமான படுக்கையறைக்கு வந்தார்.

சூட்கேஸிலிருந்த நாகமாணிக்கப் பொட்டலத்தை வெளியே எடுத்தார். அதை எந்த இடத்தில் பாதுகாப்பாக வைப்பது என்று யோசித்தார். ஸ்டோர்ரூமுக்குள் வந்த ஸ்ரீகுமார் பட்டுத்துணிப் பொதியை நீக்கினார். அந்த அறையில் மாணிக்கத்தின் பிரகாசம் பரவியது.

ஸ்டோர்ரூமின் மூலையில் பல வகையான சங்குகள் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன. அதில் மிகவும் அபூர்வமான சங்கு வகைகளும் இருந்தன. அப்படிப்பட்ட ஒன்றைத் தேர்ந்தெடுத்து, நாகமாணிக்கத்தை அதற்குள் போட்டு சங்கைக் கவிழ்த்து வைத்தார்.

நல்லவேளையாக சங்கிலிருந்து அதன் வெளிச்சம் அவ்வளவாக வெளிவரவில்லை. அதுவும் பகல் நேரத்தில் அதன் வெளிச்சம் சுத்தமாகத் தெரியாது. என்பது விளங்கியது. சங்கை வைத்துவிட்டுத் திரும்பியபோது அவரது கட்டிலில் ஸ்ரீதேவி அமர்ந்திருந்தாள்.

''இனிமேல் நீங்க பயப்படுறதுக்கு எதுவுமில்லையே?'' - அவள் கேட்டாள்.

''மாணிக்கம் நம் கையில் இருக்கும் வரையில் அவர்கள் ஓயமாட்டார்கள்!''

''இந்த இடத்துக்கு வர அவர்களுக்குத் தைரியம் இருக்காது என்று நினைக்கிறேன்.''

''அப்படி ஒரு பயம் அவங்ககிட்ட இருக்கணும். எதுக்கும் நீயும் எப்பவும் இது மேல ஒரு கண் வைச்சிருக்கிறது நல்லது'' - ஸ்ரீகுமார் நினைவூட்டினார்.

''இது நான் இருக்கிற அறைதானே பார்த்துக்கிறேன்.'' - ஸ்ரீதேவி ஒப்புக்கொண்டாள்.

சந்துநாயரின் வீட்டில் ஜயந்தன் தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''எல்லாமே அவனுங்ககிட்ட மாட்டிக்கிட்டதே! என்னத்தைச் செய்யிறது?'' - சந்துநாயர் கேட்டார்.

''வீட்டிலிருந்து அதை எடுத்துக்கொண்டு போய் காலேஜில் பத்திரப்படுத்தி வைத்திருப்பான். வேறு என்ன?'' ஜயந்தன் கூறினார்.

''அப்படியா சொல்கிறீர்கள்?''

''ஆமாம்! வேறுவழி. அங்கே போவதற்கு நம்மிடம் யாராவது இருக்கிறார்களா?''

''எனக்கு அந்த இடம் தெரியாது. நம்ம கோவிந்தனுக்குத் தெரியும்!''

''ஆனால், கோவிந்தன் அதைக் கையால் தொடமுடியாது என்பது தெரிந்துவிட்டதே!''

''வேறு என்னதான் செய்வது?''

''ஒன்று, அதை நாம் எடுத்துக்கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பொருள் அவர்களுக்கு உதவக்கூடாது. நாசமாகிப் போகட்டும்!''



''அழிக்க முடியாது. வேண்டுமானால் அசுத்தமாக்கலாம். அதை நமது கோவிந்தனே செய்யமுடியும்'' - ஜயந்தன் நெற்றியைச் சுளித்தபடி பேசினார்.

''நாகமாணிக்கத்தை அசுத்தப்படுத்தறதா?''

''ஆமாம்... அதுக்கான வழி எனக்குத் தெரியும்'' என்ற ஜயந்தனின் மனத்தில் கொடூரமான ஒரு திட்டம் உருவானது.

## 29

இப்போதைய சூழ்நிலையில் நாகமாணிக்கம் அவர்களிடம் இருப்பது வரையில் தங்களால் வெற்றிபெற முடியாது என்பது ஜயந்தனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. எனவே 'எப்படியும் அதைக் கைப்பற்றியே தீரவேண்டும்' என்று தீர்மானித்தனர்.

''நாகமாணிக்கம் இல்லத்துக்குள் இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு காலேஜுக்குப் போனால் போதாதா?

''அதுவும் நல்ல யோசனைதான்!'' - ஜயந்தன் ஒப்புக் கொண்டார்.

''தற்சமயம் ஸ்ரீகுமார் ஊரில் இல்லை என்பது தெரியும். ஆனால், யாரையாவது அனுப்பி முதலில் வீட்டுக் குள்ளேயே தேடச் சொன்னால் என்ன?''

''நல்லது. அப்படியே இருந்தாலும் அது பூஜை அறைக்குள் தான் இருக்கவேண்டும். பூஜையறைக்குள் நாம் யாரை அனுப்பி வைக்க முடியும்?''

''அதற்கெல்லாம் ஆள் இருக்கிறது. நீங்கள் அந்த நபருடன் துணையாகப் போனால் போதும்!''

அன்று இரவு இரண்டு வேலைக்காரர்களுடன் சந்து நாயரும், ஜயந்தனும் கிளம்பி ஸ்ரீகுமாரின் வீட்டை அடைந்தார்கள். தாழ்ப்பாளைத் திறக்க முடியவில்லை. உடனேயே வேலைக்காரர்களில் ஒருவன் புறப்பட்டுப் போய் எப்படிப்பட்ட பூட்டையும் திறக்க கூடிய சேகரனை அழைத்துக் கொண்டு வந்தான்.

கெட்டிக்காரத் திருடனான சேகரன் ஜெயிலிலிருந்து விடுதலையாகி அதிக நாளாகவில்லை. அவன் தன்னிடமிருந்த சாவிக்கொத்திலிருந்து எத்தனையோ சாவிகளை மாற்றி மாற்றிப் போட்டுப் பார்த்தான். கடைசியில் ஒரு சாவி பொருந்தியது.

அறையைத் திறந்தவுடனேயே அதற்குள் மாணிக்கம் இல்லையென்பது ஜயந்தனுக்குப் புரிந்தது.

''வாருங்கள் போகலாம்!'' ஜயந்தன் கூறினார் அவரது அடுத்த முயற்சி பிரஸ்னம் பார்ப்பதுதான்.

ஜயந்தன் மீண்டும் மீண்டும் சோழிகளைப் பரப்பினார். குலுக்கிப் போட்டார். ஆனால், விளைவு என்னவோ பூஜ்யம் தான்.

''நாகமாணிக்கத்தின் வெளிச்சம் வெளியே வராதபடி எதனாலோ மூடிவைத்திருக்கிறார்கள்'' ஜயந்தன் கூறினார்.

''அப்படிப்பட்ட பொருள் எதுவாக இருக்கும்?'' - சந்து நாயர் கேட்டார்.

''ஒரேயொரு பொருளுக்கு மட்டும்தான் அந்த சக்தி இருக்கிறது!

''புரியவில்லை!''



''வலம்புரிச்சங்கு! அபூர்வமாகக் கிடைக்கும் அந்தச் சங்குக்குள் ஒளித்து வைத்தால் மட்டும்தான் நாகமாணிக்கத்தின் வெளிச்சம் வெளியே வராது. ஆமாம், அந்த ஆளுக்கு எங்கிருந்து இந்தச் சங்கு கிடைத்திருக்கும்?

சந்துநாயர் யோசனையில் ஆழ்ந்தார்.

சந்துநாயரின் மகனும் அவர்களது பேச்சைக் கவனித்தபடி அங்கு நின்றுகொண்டிருந்தான். அவன் கல்லூரியில் படித்தவன். பி.எஸ்ஸி மூன்றாவது வருடத்தில் ஃபெயிலாகி வீட்டில் உட்கார்ந்திருப்பவன்.

''அப்பா, நீங்கள் அந்த ஸ்ரீகுமாரின் விஷயத்தைப் பற்றியா பேசுகிறீர்கள்?'' மகன், சந்துநாயரிடம் கேட்டான்.

''ஆமாம் சேது!

''அப்படியானா நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா? காலேஜ் லேபரெட்டரியில சின்னதும் பெரிசுமா ஏராளமான சங்குகளை வெச்சிருக்காங்க!''

''நீ நேரில பார்த்திருக்கியா?''

''நான் அந்த காலேஜில படிக்கலேன்னாலும் பொதுவா எல்ல காலேஜுகள்லேயும் சங்குகளை வெச்சிருப்பாங்கங்கிறது தெரியும்.''

''அப்படியானா சந்தேகமே வேணாம். நான் யூகிச்சது சரியாப் போச்சு!'' - ஜயந்தன் கூறினார்.

உடனேயே தனது மாந்திரீக சக்தியால் கோவிந்தனை வரவழைத்தார்.

"நான் உங்களுக்கு என்ன செய்யணும்?'' - கோவிந்தன் விசாரித்தான்.

''உங்கிட்ட ஒரு முக்கியமான பொறுப்பை ஒப்படைக்க வேண்டியிருக்கு.''

''சொல்லுங்க... காத்திருக்கிறேன்

கிளை நூலகம்
35547
53052

''காலேஜுக்குள்ள இருக்கிற சங்குக்குள்ள ஒரு நாக மாணிக்கத்தை ஒளிச்சுவெச்சிருக்காங்க. அதை எடுத்துட்டு வரணும்'' - ஜயந்தன் கூறினார்!

''நான் அதை எடுத்துட்டு வந்து தந்தா, பதிலுக்கு நீங்க எனக்கு என்ன செய்வீங்க?'' - கோவிந்தன் கேட்டான்.

ஜயந்தன் யோசனையில் ஆழ்ந்தார்.

ரக்ஷஸாக மாறிவிட்டிருக்கிற கோவிந்தனுக்குத்தான் என்ன செய்து உதவ முடியும்? அவன் எதை மனத்தில் நினைத்துக் கொண்டு கேட்கிறான்? ஒருவேளை தன்னை யாரும் பிடித்துக் கட்டிப்போட முடியாதபடி சுதந்திரமான ஒரு வாழ்வைக் கேட்கிறானோ?

''உன்னோட விருப்பம் என்னன்னு முதல்ல சொல்லு! - ஜயந்தன் கேட்டார்.

''எனக்குத் தேவை ரத்தம்... அதுவும் மனித ரத்தம். அதுதான் இப்போ ரொம்ப அத்தியாவசியம்!''

''அதுக்கு உனக்கு இப்போது என்ன கஷ்டம்? ராத்திரி வேளைகளில் அதெல்லாம் உனக்கு சுலபமாகக் கிடைக்குமே!

''கிடைக்க வேண்டும். ஆனால், கிடைப்பதில்லை. நானும் எத்தனையோ தடவை முயற்சி செய்து பார்த்துவிட்டேன். என் முகத்திலுள்ள விகாரத்தால், என்னைப் பார்ப்பவர்கள் மிரண்டு ஓடுகிறார்கள்."

''ஓடினால் என்ன... உன்னால் பிடிக்க முடியாதா?''

''அதைவிட ஒரு நல்ல வழி இருக்கிறது. என்னுடைய முகத்தின் விகார வடிவத்தை மாற்றிக் கொடுத்துவிட்டால், அதன் பிறகு பெண்களை மயக்கி அவர்களது ரத்தத்தைக் குடித்துக் கொள்வேன்.''

''ஓகோ... அப்படியா?'' - என்று கேட்ட ஜயந்தன், இவனது விகாரத்தைப் எப்படி மாற்றுவது என்று யோசித்தார்.



''சந்துநாயரே, இவனோட தேவை என்னன்னு தெரிஞ்சுக்கிட்டீங்க இல்லையா? இதுக்கு நாம என்ன செய்யலாம்?''

''அது ரொம்பவும் சுலபம். கூடுவிட்டு கூடு பாய்ந்தால் போதும்!"

''ஒரு தேர்ந்த மந்திரவாதி மாதிரிப் பேசுறியே... இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? - ஜயந்தன் வியப்புடன் கேட்டார்.

''கொஞ்ச நாள் ஒரு மந்திரவாதிக்கு நான் உதவியாளனா இருந்திருக்கிறேன். அப்படித்தான் இதையெல்லாம் தெரிஞ்சுக்க முடிஞ்சது."

''ஓகோ... ஒரு வகையில் நீயும் நம்ம ஜாதிதான். பரவாயில்லை! - ஜயந்தன் மகிழ்ச்சியுடன் சொன்னார்.

'இப்படிப்பட்ட ஆவி தன்னுடன் இணைந்து செயல் படுவதும் நல்லதுதான், என்று நினைத்தார் ஜயந்தன். எனவே எப்படியாவது கோவிந்தனைக் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

''உன்னோட யோசனை ரொம்பவும் நல்லது. நீ வேறொரு உடம்பில் புகுந்து கொண்டால் எலும்புக்கூடும் பழையபடி காலேஜிலேயே கிடக்கும் சுலபத்துல யாருக்கும் விஷயமும் தெரியாது!"

''எலும்புக்கூட்டைக் கழற்றிப் போட்ட பிறகு யாரும் என்னைத் தேடவும் மாட்டார்கள்!

''ஒப்புக்கிறேன். உன்னை எந்த உடம்புக்குள்ள ஆவாஹம் செய்யுறதுன்னுதான் புரியலை."

''அதுக்கும் நான் ஒரு ஆளைப் பார்த்து வெச்சிருக்கிறேன்!

''யாரது?

ஸ்ரீகுமாரோட நண்பன் பிரபாகரன். ரொம்பவும் கெட்டிக் காரருங்கூட. என்னை அவ்வளவு சீக்கிரத்தில சந்தேகப்படாம இருக்கிறது மட்டுமில்லை, எப்போதும் ஸ்ரீகுமாருடன் தங்கி அவரது நடவடிக்கைகளையும் கண்காணிக்கலாம்."

''அருமையான திட்டம்! - ஜயந்தன் பாராட்டினார். இதுவரை தனக்குக்கூட இப்படியொரு யோசனை தோன்ற வில்லை. ''சரி கோவிந்தன், நீ போகலாம். நான் உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்!"

''நான் பிரபாகரனின் உடம்புக்குள் புகுந்துகொண்டால், அதன் பிறகு நீங்கள் குறிப்பிட்ட மாணிக்கத்தை எடுத்துவருவது சுலபமாகி விடும்" - கோவிந்தன் மறுபடியும் ஒரு தூண்டிலை வீசிவிட்டு மறைந்தான்.

''இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? - சந்துநாயர் கேட்டார்.

''நடக்கக்கூடிய காரியங்கள்தான். அதற்கு நாம் முதலில் செய்யவேண்டிய வேலை பிரபாகரனைத் தீர்த்துக் கட்டுவது. உடனே கோவிந்தனை அந்த உடம்புக்குள் புகச்செய்ய வேண்டும். இரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்."

''மருமகனது வேலையை நான் பார்த்துக்கொள்கிறேன். அவன் கண்டபடி தண்ணியடிப்பான். அவனோட நெருங்கின நண்பனையே அதுக்கு ஏற்பாடு பண்ணிடலாம்!"

''பிரயோஜனமான ஒரு திட்டம்! இதெல்லாம் ராத்திரியில் தான் நடக்கவும் செய்யணும்!"

சந்துநாயர் தனது காரியஸ்தரை அனுப்பி பிரபாகரனின் நண்பன் குட்டப்பனை வரவழைத்தார்.

பாட்டிலுடன் பணமும் கொடுத்தால் எதை வேண்டுமானாலும் செய்யக்கூடியவன் குட்டப்பன். பிரபாகரன்



விடுமுறையில் வரும்போதெல்லாம் துணையாகக்கொள்வது குட்டப்பனைத்தான்.

குட்டப்பன் அன்றிரவு பிரபாகரனைச் சந்தித்தான். ''நல்ல சரக்கு கொஞ்சம் கிடைச்சிருக்கு பிரபாகரா! நீ கொண்டுவர்ற மிலிட்டரி சரக்கைவிட ரொம்பவும் கிக்கானது."

''நல்லதோ... கெட்டதோ நீ ஆசையாக் கூப்பிடும்போது வராம இருப்பனோ, போகலாம்."

இருவரும் புறப்பட்டனர்.

சந்துநாயரின் தேங்காய் கோடௌனை ஒட்டியபடி இருவரும் நடந்துகொண்டிருந்தனர்.

''மாமா உள்ளே இருப்பாரே? பிரபாகரன் சந்தேகம் எழுப்பினான்.

''அவர் ஊருக்குள்ளேயே இல்லை?" வியாபார விஷயமா ரெண்டு நாள் வெளியூர்ப் பயணம் போயிருக்கார். அதையெல்லாம் தெரிஞ்சுக்காம உன்னை இங்க கூட்டிட்டு வருவேனா?"

சந்துநாயர் வெளியூர் போனால் அங்கு தங்குவது வழக்கம் என்பது பிரபாகரனுக்கும் தெரியும்.

தேங்காய் கோடௌனுக்கு அருகில் யாரையும் காணவில்லை. கோடௌனின் தென்புறத்தில் தென்னை யோலை வேய்ந்த சிற்றறை ஒன்று உண்டு. அது சாதாரணமாகப் பயன்படுத்தப்படாமல் கிடந்தது. குட்டப்பனும் அவனது நண்பர்களும். (சில நேரம் சந்துநாயரின் பிள்ளைகள்கூட இருப்பார்கள்) மறைவாக பாட்டில்களைக்கொண்டு வருவது இந்த இடத்துக்குத்தான். எனவே அந்த இடத்தை யாருமே கவனிக்கமாட்டார்கள். உள்ளே கிளாஸுகளில் மதுவகை ஊற்றப்பட்டு, வறுத்த மீனும் வைக்கப்பட்டிருந்தது.

அதே நேரம் கோடௌனின் இருண்ட பகுதியில் ஜயந்தனும். சந்துநாயரும் மிகவும் எச்சரிக்கையுடன் காத்திருந்தனர்.

கோவிந்தன் மற்றொரு மூலையில் ஒண்டியிருந்தான்.

தான், பிரபாகரனுக்கு ஆபத்தை ஏற்படுத்தப்போகிறோம் என்பது குட்டப்பனுக்குத் தெளிவாகவே தெரிந்திருந்தது. எனவே எச்சரிக்கையுடன் மிகவும் குறைவாகக் குடித்தான்.

மதுபாட்டிலில் இருந்த கடைசி மதுவை பிரபாகரனின் கிளாஸில் ஊற்றினான். அந்த கிளாஸிலுள்ள மது தொண்டையை விட்டு இறங்கியதும் பிரபாகரன் சுயநினைவை இழக்கத் தொடங்கினான்.

அப்போது -

தேங்காய் கோடௌனின் உட்புறம் சிம்னி விளக்கின் திரி உயர்ந்தது. மாந்திரீக வித்தை செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் கச்சிதமாகச் செய்யப்பட்டிருந்தன.

சுத்தமாக சுயநினைவை இழந்த பிரபாகரன் பின்புறமாகச் சரிந்தான்.

## 30

பிரபாகரன் ஏராளமாகக் குடித்து விட்டுச் சுயநினைவில்லாமல் படுத்துக் கிடப்பதாகக் குட்டப்பன் வந்த சொன்னான்.

''சரி, நீ போகலாம். ஒரு விஷயம் சொல்றேன், கேட்டுக்க. இங்க நடந்த எதையும் யார்கிட்டயும் மூச்சுவிடக்கூடாது. இந்தத் தோப்பைத் தாண்டினதும் எல்லாத்தையும் மறந்திடணும். இந்தா... இத வச்சுக்க!'' - சந்துநாயர் தனது இடுப்பில் செருகி வைத்திருந்த நூறு ரூபாய் சுருள் ஒன்றை எடுத்து அவனது கையில் கொடுத்தார்.

குட்டப்பன் அதை வாங்கிக்கொண்டு வெளியேறினான்.

ஏதோ அபாயம் நேரப்போகிறது என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்தது. மேற்கொண்டு பிரபாகரனுக்கு என்ன



நடந்தால் என்ன? மாமனும் மருமகனும்தானே! எது நடந்தாலும் சரி.

குட்டப்பன் இருட்டினூடாக நடந்துகொண்டிருந்தான்.

ஜயந்தனும், சந்துநாயரும் சேர்ந்து பிரபாகரனை அறைக்குள்கொண்டு வந்து படுக்கவைத்தார்கள். அதன் பிறகு கோவிந்தனைப் பார்த்துச் சைகை செய்தனர்.

ஒருசில நிமிடங்களுக்குள் பிரபாகரனது உடம்புக்குள் கோவிந்தன் புகுந்துகொண்டான்.

வெகு நேரத்துக்கு பிரபாகரனது உடல் அப்படியே அசைவற்றுப் படுத்திருந்தது.

''ஒரு சந்தேகம்...?'' சந்துநாயர் ஜயந்தனைப் பார்த்துக் கேட்டார்.

''கேளுங்கள்!''

''இவன் பகல் நேரத்தில் எழுந்து நடமாடுவானா?''

''நடமாட மாட்டான். சூரியன் மறைந்த பிறகுதான் இவனது நடவடிக்கைகளே ஆரம்பமாகும். சுருக்கமாகச் சொன்னால் இனிமேல் இவன் கோவிந்தனேதான். இன்னும் தெளிவாகச் சொன்னால் இனிமேல் இவன் ஒரு ரக்ஷஸ்.''

''இவனை இப்படியே விட்டுட வேண்டியதுதானா?''

''தேவையில்லை. நம்மளோட நோக்கம் நிறைவேறிட்டா, அதுக்குப் பிறகு இவன் இருக்க வேண்டியதில்லை'' - ஜயந்தன் கூறினார்.

சற்று நேரத்துக்குப் பிறகு தூக்கத்திலிருந்து விழிப்பவனைப் போல் பிரபாகரன் எழுந்தான்.

''கோவிந்தா!'' - ஜயந்தன் அழைத்தார்.

''என்னங்க?'' - பிரபாகரன் கேட்டான்.

தங்களது திட்டம் வெற்றிபெற்றுவிட்டதாக ஜயந்தன் கணக்கிட்டார்.

தங்களது நோக்கம் நிறைவேறுவது வரையில் அவன் தங்களது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். எனவே இப்போது அவனை வெளியே விடக்கூடாது என்ற முடிவுக்கு வந்தார் ஜயந்தன். அப்போது அவனது உடம்புக்குள் மது நிறைந்திருந்ததால் நாளை இரவுக்கு மேல்தான் அவனைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

''நாளை இரவு வரை இவன் இங்கேயே கிடக்கட்டும். மற்றதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' - ஜயந்தன் கூறினார்.

சந்துநாயர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

ஸ்ரீகுமார் மறுநாள் காலையிலேயே கிராமத்துக்குப் புறப்பட்டார். சனி, ஞாயிறு விடுமுறையுடன் இரண்டு அரசாங்க விடுமுறையும் சேர்ந்துகொண்டதுதான் காரணம்.

புறப்படுவதற்கு முன்னால் ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்து ஒருதடவை சோதித்துவிட்டு பூட்டிக்கொண்டு கிளம்பினார். விடுமுறையாக இருந்ததால் வேறு யாரும் பரிசோதனைச் சாலைக்கு வரவேண்டிய தேவையிருக்காது என்று நினைத்தார். எனவே சாவியைத் தன்னிடமே வைத்துக்கொண்டார்.

மதிய நேரத்தில் ஸ்ரீகுமார் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். வழக்கமாக பிரபாகரன் அவரை எதிர்பார்த்துக்காத்திருப்பான். ஆனால், இன்று அவனைக் காணோம். 'ஒருவேளை அவனுக்கு ஏதாவது ஆகியிருக்குமோ?' என்று நினைத்துக் கவலைப்பட்டார்.

பிரபாகரனது வீட்டுக்குப் போய் விசாரித்தபோதும் உருப்படியாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. முந்தைய நாள் இரவு வீட்டைவிட்டுப் போனவன் இன்னும் திரும்பவில்லையென்று பிரபாகரனது அம்மா கூறினார்.

கிராமத்திலிருந்து அவன் எதற்காகவும் வெளியே போகவேண்டியது இல்லை என்பது ஸ்ரீகுமாருக்குத் தெரியும். அப்படியே கிளம்புவதாக இருந்தால் காலேஜுக்குத்தான் வருவான். காலேஜுக்கு வந்ததாகவும் தெரியவில்லை.



ஸ்ரீகுமார் தனது வீட்டுக்கு வந்தார்.

மாலை நேரத்தில் மீண்டும் ஒருதடவை பிரபாகரனின் வீட்டுக்குப் போய் விசாரித்தார். 'இன்னும் வரவில்லையே' என்ற தகவல் கிடைத்தது.

'வேறு எங்குதான் போய்த் தேடுவது?' என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்ட ஸ்ரீகுமார் யோசனையில் ஆழ்ந்தார்.

டீக்கடைக்குப் போனவர், தனக்குத் தெரிந்த யாராவது வருகிறார்களா என்று பார்த்தார். சிறுவயதில் தன்னுடன் படித்த சேகரன் தெருவில் போய்க் கொண்டிருப்பதைக் கவனித்தார்.

''சேகரா, பிரபாகரனைக் காணோமே. நீ எங்கேயாவது பார்த்தியா?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''நேத்து ராத்திரியில் பார்த்தேன்!'' - என்று நெற்றியைச் சுளித்தபடி கூறினான் சேகரன்.

''ராத்திரியிலயா, எங்க பார்த்தே?''

''வேற எங்க சாராயக்கடைக்கிட்டத்தான்'' சிரித்தபடி பதிலளித்தான்.

''அவன் கூட வேற யாராவது இருந்தாங்களா?''

''குட்டப்பன் இருந்தான். அவங்க ரெண்டு பேரும் நெருங்கின சிநேகிதர்களாச்சே!''

''அதுக்கப்புறம் குட்டப்பனையாவது பார்த்தியா?''

''இல்லையே''

எப்படியோ... விசாரிப்பதற்கு ஒரு பேராவது கிடைத்தே என்று குட்டப்பனைத்தேடி அலையத்தொடங்கினார். குட்டப்பனையும் யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை.

உண்மையைச் சொன்னால் குட்டப்பன் ஊராரின் கண்ணில் படாமல் ஒதுங்கிச் சென்று கொண்டிருந்தான்.

விடியற்காலை நேரத்தில் டீக்கடை அருகில் பிரபாகரனைக் காணாத போதே அவனுக்குள் சந்தேகம் எழுந்தது. விடியற்காலை நேரத்திலேயே தனக்குத் தெரிந்த இடங்களில்

எல்லாம் விசாரித்தான். ஆனால், எந்தத் தகவலும் கிடைக்க வில்லை.

குட்டப்பன் பயப்படத் தொடங்கினான்.

சந்து நாயரைப் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். பிரபாகரன் மற்றும் அவனது குடும்பத்தாருடன் அவரது உறவு நல்ல நிலையில் இல்லை என்பதும் தெரியும். எனவே குட்டப்பனின் சந்தேகம் அவர் மீதே அழுத்தமாகப் பதிந்தது.

வேறு எந்த வழியும் இல்லாமல் போனதால் மீண்டும் தேங்காய் கோடவுனுக்கே போய்ப் பார்ப்பதென்று தீர்மானித்தான். எனவே இருட்டும் வரை காத்திருந்தவன், தேங்காய் கோடவுனை நோக்கி நடந்தான். தொலைவிலிருந்து பார்த்த போது கோடவுனுக்குள் வெளிச்சம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால், யாரும் அங்கு இருக்கமாட்டார்கள் என்று நினைத்தான்.

கோடவுனுக்குள் நுழைந்தான். இருவரும் ஒன்றாக அமர்ந்து மதுவருந்திய கிற்றுக் கொட்டகைக்கு வந்து பார்த்தான். பிரபாகரன் இல்லை. அங்கேயே எங்காவது இருக்கலாம் என்று நினைத்தவன், சுவராக மறைக்கப்பட்டிருந்த பலகை இணைப்பின் இடைவெளி வழியாகப் பார்த்தான்.

உள்ளேயும் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உட்புறம் இருட்டாக இருந்ததால் உருவம் எதுவும் தட்டுப்பட வாய்ப்பில்லை. ஆனால், மூச்சுவிடும் சத்தமாவது கேட்கிறதா என்று கவனித்தான். அப்படியும் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சட்டென்று யாரோ அவனது கழுத்தில் கையைப் பதித்து அவனை அப்படியே மேற்புறமாக உயர்த்துவதாகத் தோன்றியது.

குட்டப்பனால் அலறக்கூட முடியவில்லை. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அவன் வெளிப்புறமாக வீசி எறியப்பட்டான்.



இரண்டு அல்லது மூன்று பேர் ஒன்று சேர்ந்து வந்தாலும் அவர்களை எதிர்க்கும் வல்லமையுள்ள குட்டப்பனால் அந்த நேரம் விழுந்த இடத்திலிருந்து எழுந்திருக்கக்கூட முடிய வில்லை.

அவ்வளவு உயரத்திலிருந்து அவன் வீசியெறியப் பட்டிருந்தான். அவனுக்குள் பயம் மெதுவாக உயரத் தொடங் கியது. ஆவி, பிரேதம், பிசாசு... என்று எதையெல்லாமோ கேள்விப்பட்டிருந்தான். ஆனால், அவற்றின் பலம் இன்ன தென்று தெரியாது. ஒருவேளை அப்படி ஏதாவது ஒன்று தன்னைத் தூக்கி எறிந்திருக்குமோ?

வெகு நேர முயற்சிக்குப் பிறகு ஒருவிதமாக எழுந்தான். இருட்டிலேயே மெதுவாக நகரத் தொடங்கினான்.

கோவிந்தனால் வந்திருப்பவனை அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது. இறந்துபோன ஒருவனின் உடம்புக்குப் பதிலாக, உயிருள்ள மனிதனின் உடம்பே சௌகரியமாகக் கிடைத்திருக்கிறது.

குட்டப்பன் எங்கெல்லாம் பக்குவமாகத் தேடியும் யாரும் தட்டுப்படவில்லை.

மேற்கொண்டும் தான் அங்கிருப்பது நல்லது அல்ல என்று தோன்றியதால் அங்கிருந்து கிளம்பினான்.

கோவிந்தன் இதையெல்லாம் கவனிக்கவே செய்தான். தனக்கு அபாரமான சக்தி கைவரப் பெற்றிருப்பதாக கோவிந்தனுக்குத் தெரிந்தது.

குட்டப்பன் அங்கிருந்து கிளம்பிய பிறகு கோவிந்தனும் அங்கிருந்து வெளியேறினான். அவனது மனம் ஸ்ரீகுமாரையே நினைத்துக்கொண்டிருந்தது. தன்னுடைய முகத்தில் ஆசிட் ஊற்றியவன் அவன்தானே? இப்போது தான் விரும்பிய சக்தி தனக்குக் கைவந்திருப்பதால் ஸ்ரீகுமாரைப் பழிவாங்கியே

திருவதென்ற முடிவுக்கு வந்தான். ஸ்ரீகுமாரின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

பிரபாகரனது வீட்டுக்குப் போய் இரண்டாவது முறையாக விசாரித்துவிட்டு, அப்போதுதான் ஸ்ரீகுமார் வீட்டுக்குத் திரும்பி வந்திருந்தார். அவரது மனம் மிகவும் குழப்பமடைந்திருந்தது.

'நிச்சயமாக பிரபாகரனுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. அவன் எங்கே போயிருந்தாலும் இதற்குள் திரும்பி வந்திருக்க வேண்டும்.' என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார்.

தெருவாசல் படிக்கு வந்த கோவிந்தன் சற்று நேரம் ஒதுங்கி நின்றுவிட்டு உட்புறமாக எட்டிப் பார்த்தான். ஸ்ரீகுமார் வராந்தாவில் உட்கார்ந்திருந்தார்.

அப்போது ஸ்ரீதேவியும் அங்கு வந்து சேர்ந்தாள்.

சட்டென்று ஒருபெண் உருவம் தட்டுப்பட்டதும் கோவிந்தன் சுவர் மறைவில் ஒளிந்து நின்றான்.

ஸ்ரீதேவிக்கு அவன் பயப்பட்டதுதான் காரணம். அவளுக்குப் பிரத்தியேகமான சில சக்திகள் இருப்பது அவனுக்குத் தெரியும்.

''என்னங்க... நண்பரைக் காணோம்னு வருத்தப் படுறீங்களா?'' - அவள் ஸ்ரீகுமாரிடம் கேட்டாள்.

''உண்மைதான். அவனைத் தேடாத இடம் இல்லை. என்ன செய்யுறதுன்னு தெரியலை.''

''அவருக்கு ஏதாவது ஆகியிருக்கும்னு நினைக்கிறீங்களா?''

''அப்படித்தான் தோணுது!'' - தெரு வாசற்படியைப் பார்த்தபடியே பேசினார்.

ஒருவேளை தனது கவலையும் பயமும் வீண் என்பது போல் எந்த நேரமும் அவன் வந்து நிற்கலாம் என்றும் நினைத்தார்.

''அந்த மந்திரவாதி இப்போதும் சந்துநாயரின் வீட்டில் தான் இருக்கிறார்.'' அவள் கூறினாள்.



''அப்படியானா விஷயம் விபரீதமாகத்தான் இருக்கணும்!''

''நாகமாணிக்கத்தை எடுக்க அவர்கள் முயற்சி செய்யலாம்னு தோணுது!

''இப்ப இருக்கிற சூழ்நிலையில அதுக்கு அவங்களுக்கு வாய்ப்பே கிடையாது!''

''ஒண்ணு செய்யலாம். எதுக்கும் நான் சந்துநாயரோட வீடு வரைக்கும் போயிட்டு வர்றேன். என்னதான் நடந்திருக்குதுன்னு தெரிஞ்சுக்க முடியுதான்னு பார்க்குறேன்'' - பேசியவள் எழுந்து நடந்து மறைந்தாள்.

அதே நேரம் -

தெருவாசற்படிக்கு வெளியே மறைந்திருந்த கோவிந்தன் வீட்டு முற்றத்துக்குள் காலெடுத்து வைத்தான்.

## 31

பிரபாகரனின் உடம்புக்குள் புகுந்து கொண்ட கோவிந்தன், தெருவாசற் படியருகில் நின்றபடியே உட்புறமாகக் கண்களை ஓட்டினான்.

ஸ்ரீகுமார் மட்டுமே அங்கு இருந்தான்.

இப்போது உள்ளே நுழைந்தால் எந்தவிதமான சந்தேகமும் தோன்றாது.

அவன் மெதுவாக உட்புறம் கால் எடுத்து வைத்தான். ஒரு தடவை முகத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டான். பிரச்சனை எதவும் ஏற்படாது என்ற தோன்றியதால் முன்னேறத் தொடங்கினான்.

துளசிமாடத்தை நெருங்கியபோது ஸ்ரீகுமார் அவனைப் பார்த்தார். நிலவிளக்கின் வெளிச்சம் அவனது முகத்தில் நன்றாக விழுந்துகொண்டிருந்தது.

''என்ன பிரபாகரா, அங்கேயே நின்னுட்டே...'' ஸ்ரீகுமார் அவனிடம் கேட்டார்.

பிரபாகரன் மேலும் சற்று நெருங்கி வந்தான். அவனிடம் ஒருவிதமான பதற்றம் தெரிந்தது. 'தான் கோவிந்தன்தான் என்பதை ஒருவேளை ஸ்ரீகுமார் கண்டு பிடித்து விடுவாரோ?' என்று அவன் பயந்தான். இருப்பினும் தயங்காமல் நடந்தான்.

''ஏன் வந்த கால்லயே நிக்குறே? உட்கார். ஆமாம் நீ எங்க போயிருந்தே. உன்னைத் தேடாத இடம் கிடையாது'' ஸ்ரீகுமார் விசாரித்தார்.

''அவசியமா நான் ஒரு சில இடங்களுக்குப் போகவேண்டி இருந்தது!'' திக்கித் திணறிப் பதிலளித்தான்.

''உனக்கு என்னதான் ஆச்சு? உன் குரல் ஏன் என்னமோ மாதிரி இருக்கு?''

''அதுவா... வந்து ஜலதோஷம் பிடிச்சிருக்கு! நேத்து கொஞ்சம் அதிகமா குடிச்சுட்டேன்.''

''ஓ அதுதானா விஷயம்? நீ அந்தக் குட்டப்பன்கூடவே சுத்திட்டிருக்கிறதா கேள்விப்பட்டேன்.''

''... ... ...''

''சரி, மேற்கொண்டு என்ன செய்யப்போறதா உத்தேசம்?''

''அதைப் பார்த்துக்கலாம். நீ சாப்பிட்டியா?''

''கொஞ்சமா சாப்பிட்டேன். அது போதும்.''

''சரி... வா வீட்டுக்குப் போகலாம். அம்மா ஏதாவது செஞ்சு வெச்சிருப்பாங்க!'' பிரபாகரனைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்து வைத்திருந்த கோவிந்தன் கூறினான்.

''இந்த நேரத்துலயா?''

''அதுக்கென்ன... வா, போகலாம்.''

ஸ்ரீருமாருக்கு அதில் எந்தவிதமான விபரீதமும் தட்டுப்பட வில்லை. ஒரு வகையில் பிரபாகரனின் அம்மா, அவருக்கும்



அம்மாவாகவே மாறிவிட்டிருந்தார். எனவே அவனுடன் புறப்படுவதென்று தீர்மானித்தார்.

ஆனால், கோவிந்தனது வருகைக்கான காரணம் வேறொன்று.

எப்படியாவது ஸ்ரீகுமாரை வீட்டிலிருந்து வெளியேறச் செய்து தோட்டத்தின் ஓரமாக உள்ள ஆழமான கிணற்றில் பிடித்துத் தள்ளி விடுவது அவன் திட்டம். சுற்றுச்சுவர்கூட சரியில்லாத அந்தக் கிணற்றுக்குள் விழுந்தால் பிறகு உயிருடன் மீள்வது நடக்காத காரியம்.

வருடக்கணக்கில் உலர்ந்த சருகுகளும் புல்லும் விழுந்து, காட்டுக்கொடிகளால் வலைபோல் சூழப்பட்டிருந்த அந்த கிணற்றுக்குள் பகல் நேரத்தில்கூட இருட்டுதான் நிரம்பி இருக்கும். சூரிய வெளிச்சமே படாமலிருக்கும் அதன் ஓரங்களில் ஊர்ந்து செல்லும் உயிரினங்கள்கூட சில இருந்தன.

இப்படிப்பட்ட கிணற்றுக்குள் விழுந்துவிட்டால் யாராவது தப்பிக்க முடியுமா என்ன? அதுமட்டுமல்ல, அந்தக் கிணற்றுக்குள் ஓர் உடல் கிடக்கும் விஷயமே யாருக்கும் தெரியாமல் போய்விடும்.

ஸ்ரீகுமார் முன்னால் நடந்துகொண்டிருந்தார். சற்றுத் தொலைவு நடந்த பிறகும் பிரபாகரன் எதுவும் பேசவில்லை. எப்போதும் வளவளவென்று பேசிக்கொண்டிருப்பது அவனது இயல்பு.

தனக்குப் பின்னால் ஒருவன் நடந்து வருகிறான் என்பதே குமாருக்குத் தெரியவில்லை.

''என்ன பிரபாகரா, ரொம்ப நேரமா சத்தத்தையே காணோம்?''

''என்னத்தைப் பேச?''

அப்போதும் அவனது குரலில் இருந்த மாற்றத்தை ஸ்ரீகுமார் கவனிக்கத் தவறவில்லை. பேசுவது அவனல்ல என்றே தோன்றியது.

''உன்னோட நிலைமையைப் பார்த்தா, உன்னோட எதிர்ப்புத் தீவிரமெல்லாம் குறைஞ்சுட்ட மாதிரி இருக்கே?''

''உண்மைதான்... எப்ப நம்ம கையில இருந்து அந்த மாணிக்கம் காணாமப்போச்சோ, அப்ப இருந்துதான் இப்படி.''

''நல்ல வேளையா நம்ம கிட்டக் கிடைச்சது. இல்லேன்னா நாம தோத்துப் போயிருப்போம்!''

''போனதெல்லாம் போகட்டும். அது திரும்பவும் நம்ம கையிலேயிருந்து போயிடாதபடி ரொம்பவும் எச்சரிக்கையா இருக்கணும்.''

''இனிமேல் அதைக் காணாமல் போக விட்டுடுவ னா என்ன?''

''இந்த இல்லத்துக்குள்ள அதை வெச்சிருக்கிறது எனக்கென்னமோ பாதுகாப்பானதாத் தோணலை.

''இந்தப் பக்கமே நான் அதைக்கொண்டு வரப் போறதில்லை.''

''அப்படின்னா அது ரொம்பவும் பத்திரமான இடத்துல இருக்கு. அதுல எதுவும் சந்தேகம் இல்லையே?''

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முற்படும் போதுதான் சற்றுத் தொலைவில் யாரோ நடந்து வருவதுபோல் தோன்றியது. நிலா வெளிச்சத்தில் அதுஒரு பெண் உருவம் என்பது தெரிந்தது.

''யாரு... ஸ்ரீதேவிதானே?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

அவள், அவருக்கு அருகில் வந்தாள்.

''எங்கே இந்தப் பக்கம்?'' - அவள் கேட்டாள்.

''பிரபாகரனோட வீட்டுக்குத்தான்!'' ஸ்ரீகுமார் பதிலளித்தார்.



''நீங்க எங்கே வேணும்னாலும் போங்க. முதல்ல அப்படியே பின்னுக்கு வாங்க சீக்கிரமா!'' அவள், அவரது தோளைப் பிடித்து இழுத்து இடது புறமாக நிற்க வைத்தாள்.

அப்போதுதான் ஸ்ரீகுமாருக்குப் புரிந்தது. தான் எப்படிப் பட்ட இடத்தில், பாழுங்கிணற்றின் விளிம்பில் நின்றுகொண் டிருக்கிறோம் என்பது. நல்ல வேளை முன்னோக்கி இன்னும் ஓர் எட்டு எடுத்து வைத்தால் அது நிச்சயம் கிணற்றுக்குள்தான் என்பதில் அவருக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை. சட்டென்று அவர் திரும்பிப் பார்த்தபோது பிரபாகரனையும் அங்கு காணவில்லை.

''பிரபாகரா... எங்க போயிட்ட?'' ஸ்ரீகுமார்.

பக்கத்தில் எங்கும் பிரபாகரன் இருப்பதாகத் தெரியவில்லை.

''உங்ககூட பிரபாகரன் இருந்தாரா என்ன?'' அவள் கேட்டாள்.

''ஆமாம். அவன்தான் என்னை வலுக்கட்டாயமா கூட்டிட்டு வந்தான்.

''அப்படின்னா... நாம நேரா அவர் வீட்டுக்கே போயிடலாம் வாங்க. என்னைப் பார்த்ததும் இடத்தைக் காலி பண்ணிட்டாரோ என்னவோ?''

ஸ்ரீதேவியைப் பார்த்து அவன் ஏன் சொல்லாமல் கொள்ளாமல் நழுவினான் என்பது ஸ்ரீகுமாருக்குப் புரியவே இல்லை.

இருவரும் பிரபாகரனின் வீட்டை அடைந்தனர். வீட்டு வராந்தாவில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. வெளிச்சம் எட்ட முடியாத மற்ற பகுதிகளில் இருள் அப்பிக் கிடந்தது.

பிரபாகரனின் அம்மா நல்ல தூக்கத்தில் இருக்கிறார் என்று தோன்றியது.

''நாம் திரும்பிப் போய்விடலாம்'' ஸ்ரீகுமார் கூறினார்.

''கொஞ்சம் பொறுங்க... நாம வருவோம்னு அவர் இதுவரைக்கும் காத்திருக்கலாம். எதுக்கும் ஒருதடவை குரல் கொடுத்துப் பார்ப்போம். ஸ்ரீதேவி சொன்னாள்.

ஸ்ரீகுமார், பிரபாகரனின் அம்மாவை அழைத்தார்.

முதல் தடவை குரல் கொடுத்தபோதே ''இதோ வர்றேன்! என்று பதில் வந்தது. சற்று நேரத்துக்குள் ஏற்றிய விளக்குடன் அவர் கதவைத் திறந்து வெளியே வந்தார்.

''யாரு திருமேனியா? கூட இருக்கிறது யார்?'' பிரபாகரனின் அம்மா கேட்டார்.

''ஓ... உங்களுக்குத் தெரியாது இல்லையா? இவங்க என்கூட காலேஜில வேலை செய்யுறாங்க. நம்ம ஊரைப் பார்க்கணும்னு சொன்னதால கூட்டிட்டு வந்தேன்.''

''இந்த ராத்திரி வேளையிலயா?'' - அந்த அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''நாங்க இவ்வளவு நேரமா பிரபாகரனுக்காகத்தான் காத்திருந்தோம்.''

''எங்க அவனைக் காணோமே?''

''இன்னும் வீட்டுக்கு வரலையா? ஒண்ணாத்தான் கிளம்பி வந்தோம்.''

''என்ன பிள்ளையோ? எதும் சாப்பிடாமல் நேத்துராத்திரி இங்கேருந்து போனவன்தான். அதுக்குப் பிறகு இது வரைக்கும் என் கண்ணுக்குத் தட்டுப்படவே இல்லை.''

''நிஜமாவா சொல்றீங்க? எங்களுக்காக நீங்க சமையல் செஞ்சுவெச்சு, காத்திட்டிருப்பீங்கன்னு அவன் சொன்னான்.''



''சமையல் பண்ணி வெச்சிருக்கிறது வாஸ்தவம்தான். ஆனா, நான் எங்கே அவனைப் பார்த்தேன்?''

''இதென்ன மாயம்? அவன் அதுக்குள்ள எங்கதான் போயிருப்பான்?'' ஸ்ரீகுமார் சுற்றுமுற்றும் பார்த்தார்.

''இப்பல்லாம் அவன் அந்தக் குட்டப்பன்கூடவே சுத்திக்கிட்டிருக்கான். அவன் ரொம்பவும் மோசமானவன். அது தெரியுமில்லையா உங்களுக்கு?''

''தெரியும்!''

''அதனால அவன் வீட்டுக்குக் கூட சரியான நேரத்துக்கு வந்து சாப்பிடுறதே இல்லை.''

ஸ்ரீகுமாரும் ஸ்ரீதேவியும் வராந்தாவில் உட்கார்ந்தார்கள்.

எப்படியும் பிரபாகரன் வந்துவிடுவான் என்று நினைத்தார் ஸ்ரீகுமார்.

''அப்போ நான் சாப்பாடு பரிமாறட்டுமா? ஆறிப் போயிருக்கும், வேணும்னா சூடு பண்ணிடுறேன்.''

''இந்த நேரத்துக்கு மேல அதெல்லாம் வேண்டாம். நாங்க கிளம்புறோம். அவன் வந்தா, நாங்க விசாரிச்சதா சொல்லுங்க.'' ஸ்ரீகுமார் எழுந்தார்.

அம்மா சரி என்று தலையாட்டினார்.

இருவரும் தெரு வாசற்படி கடந்தனர்.

''எதுக்காக அவன் இப்படியெல்லாம் கண்ணாமூச்சி விளையாடுகிறான்? ஒண்ணும் புரியலையே? ஸ்ரீகுமார் தனக்குத் தானே பேசிக்கொள்வது போல் கேட்டார்.

''நான் ஒண்ணு சொல்லட்டுமா?'' ஸ்ரீதேவி கேட்டாள்.

''சொல்லு!''

''தப்பா நினைச்சுக்கக்கூடாது. ஏன்னா... நீங்க ரெண்டு பேரும் நண்பர்கள்!

''அதுக்கென்ன... உன் மனசுக்குத் தோணுறதைச் சொல்லலாம்.

''பிரபாகரனும் சந்துநாயரும் மருமகன்-மாமா உறவுக்காரங்க. ஒருவேளை அவரை அவங்க மாமா தன் பக்கம் இழுத்துக்கிட்டாரோ என்னமோ?''

''உனக்கு ஏன் திடீர்னு இப்படித் தோணுது?''

''உறுதியாச் சொல்ல முடியலை. இதெல்லாம் என்னோட யூகம்தான். ஆனா, அதுக்கு வலுவான ஆதாரம் இருக்கு. நான் மட்டும் சரியான நேரத்துக்கு வந்து சேரலைன்னா, நீங்க இந்நேரம் அந்தப் பாழுங்கிணத்துக்குள்ள விழுந்துகிடப்பீங்க.''

''அதனால...?''

''உங்களை எதுக்காக அவர் அந்த வழியில கூட்டிட்டு வரணும்? சரி, வந்தது வந்தாச்சு... கிணத்தங்கரையில இருந்து ஏன் உங்களைத் தடுத்து நிறுத்த முயற்சி பண்ணலை?''

''இதெல்லாம் உண்மையாகவே இருந்தாலும் அதனால அவனுக்கு என்ன லாபம்?

''எனக்கு என்னமோ அவர் மேல சந்தேகமா இருக்கு.

''நீ இவ்வளவு தூரம் சொன்ன பிறகு நானும் யோசிக்க வேண்டி இருக்கு. இதெல்லாம் எவ்வளவு தூரம் சரின்னு கண்டு பிடிக்கலாம்.'' ஸ்ரீகுமார் ஒப்புக்கொண்டார்.

பிரபாகரனின் உருவிலிருந்த கோவிந்தன் நேராகப் போனது தேங்காய் கிட்டங்க்குத்தான்.

அங்கு சந்துநாயரும் ஜயந்தனும் இருந்தனர். நடந்த விஷயங்களையெல்லாம் கோவிந்தன் விளக்கினான்.

''இவ்வளவெல்லாம் செஞ்சும் உன்னால மாணிக்கத்தை எடுத்துட்டு வரமுடியலை. அவனையும் கொல்ல முடியலை.



இனிமேல இதெல்லாம் எப்ப நடக்குமோ?'' - ஜயந்தனின் குரலில் கோபம் தெரிந்தது.

''என்னோட தவறால நீங்க சொன்ன எதுவும் தடைபடலை'' - கோவிந்தன் பதிலளித்தான்.

''அப்புறம் யாரால?''

''அவன்கூட ஒரு பொண்ணு இருக்கிறா. அவள்தான் இதுக்கெல்லாம் காரணம்.''

''யாரு ஸ்ரீதேவிதானே?'' - சந்துநாயர் கேட்டார்.

''ஆமாம்.''

''அப்படினால் இனிமேலும் அவளை விட்டு வைக்கக் கூடாது. என்ன செய்யலாம் ஆசானே?'' ஜயந்தனைப் பார்த்தபடி சந்துநாயர் கேட்டார்.

''கேள்விக்கு வேலையே கிடையாது. அழிச்சிட வேண்டியதுதான்!''

''சாத்தியமா?''

''அவளோட ஜடத் தன்மையை அழிச்சுட்டாகூடப் போதும்.

''அதுக்கு வழி இருக்கா?

''அதாவது அவ புகுந்திட்டிருக்கிற எலும்புக்கூட்டை நாசமாக்கிடணும். அதுக்கான ஒரே வழி அதை எரிச்சுடறதுதான். காலேஜில இருந்து அவளோட எலும்புக்கூட்டை வெளியில் கொண்டுவந்தால் வேலை ரொம்பவும் சுலபம்.

''அதுக்குத் தகுந்த ஆள் யார்?''

''கோவிந்தன் போதும். அவனால நிச்சயமா அந்த வேலையைச் செய்ய முடியும்!'' - என்ற ஜயந்தன் அவனைப் பார்த்தார்.

## 32

"என்ன கோவிந்தா... உன்னால அது முடியாதா என்ன?" - ஜயந்தன் கேட்டார்

''முயற்சி பண்றேன்! - கோவிந்தன் பதிலளித்தான்.

''இப்படிச் சொன்னா எப்படி? அழிச்சே தீரணும்! நாங்க உனக்குப் புதுசா ஒரு மறுபிறவியையே தந்திருக்கிறோம். ராத்திரி நேரங்களில் அதாவது சூரியன் மறைவதிலிருந்து பொழுது விடிவது வரையில் நீஒரு மனிதனைப் போலவே நடந்துகொள்ளலாம். பகல் நேரத்தில் இந்த கிடங்குக்குள்ளேயே படுத்துக்கொள்ளவும் செய்யலாம்'' - சந்துநாயர் எடுத்துக் கூறினார்.

அவர் சொன்னதெல்லாம் சரிதான். இரவு நேரத்தில் தன்னை எந்தக் காரணம் கொண்டும் சந்தேகிக்க முடியாது-தான் பிரபாகரனே தான். பிரபாகரனின் வீட்டுக்குக்கூடப் போகலாம். அவனுடைய அம்மாவுக்குக்கூடச் சந்தேகம் ஏற்படாது. உண்மையிலேயே ஒரு புதுப் பிறவிதான் கிடைத்திருக்கிறது என்பதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது. அதுவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான்.

ஒரு ரத்தராக்ஷஸாக மாறி அவன் மனித ரத்தத்தைச் சுவைக்கலாம். சமீப காலம் வரை ஓர் எலும்புக் கூட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த அவனுக்கு இது உண்மையிலேயே புதுவாழ்வு தான். எனவே இந்த வாய்ப்பைச் சரியானபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அவன் தீர்மானிக்கவும் செய்தான். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் ஜயந்தனையும் சந்துநாயரையும் அனுசரித்துப் போவதைத் தவிர வேறு வழியில்லை.



''ஒரு விஷயத்தை நீ ஞாபகம் வெச்சக்கிறது நல்லது. பிரபாகரனோட உடம்பு கிடைச்சுட்டதால நீ முழுசா ஒரு மனுஷனா மாறிட்டதா நினைக்காதே. பகல் பொழுது முழுவதும் நீ வெறும் பிணம்தான். இந்த உடம்பைச் சாம்பலாக்கிவிட்டால் நீ பழையபடி ஒன்றுமில்லாமல் போய் விடுவாய். இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் சரி! - ஜயந்தன் எச்சரிக்கைத் தொனியில் கூறினார்.

உண்மைதான். அவர்களுடன் இணங்கிப் போகா விட்டால் தன்னுடைய நிலைமை மோசமாகிவிடும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

''நாங்க இதுவரைக்கும் சொன்னதெல்லாம் புரிஞ்சது இல்லையா? சொன்னபடியெல்லாம் நடந்துக்கிட்டா உனக்கு நல்லது" - ஜயந்தன் நினைவூட்டினார்.

''சரி... செய்யுறேன்!" -அவன் ஒப்புக்கொண்டான்.

மறுநாள் சனிக்கிழமை.

சூரியன் மறைந்த உடனேயே கோவிந்தன் தேங்காய் கிடங்கியிலிருந்து எழுந்தான்.

வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்தான்.

யாரும் தட்டுப்படவில்லை.

சற்று நேரத்துக்குள் ஜயந்தன் அங்கு வந்தார்.

''என்ன... இன்னிக்கு காலேஜில போய் முயற்சி பண்ணிலாமில்லையா?" -ஜயந்தன் கேட்டார்.

''போகலாம். ஆனால், நான் எப்படிக் கதவைத் திறப்பது?" - சந்தேகத்துடன் கேட்டான்

''அதுக்கான சக்தியெல்லாம் உனக்கு இருக்கிறது. நீ தாழ்ப்பாளைப் பிடித்து இழுத்தாலே அது தானாகத் திறந்து கொள்ளும்" -ஜயந்தன் கூறினார்.

''அந்த எலும்புக்கூட்டை இங்கே கொண்டுவந்து கொடுத்தால் போதுமில்லையா? - கோவிந்தன் கேட்டான்.

சந்துநாயரும் ஜயந்தனும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர். அவர்கள் இருவரது யோசனையும் ஒன்றுதான்.

கோவிந்தனால் அந்த எலும்புக்கூட்டை அவ்வளவு சுலபத்தில் அழிக்க முடியாது. எனவே அவன் தந்த எலும்புக் கூட்டை இங்கு கொண்டு வந்தால் மற்றதைத் தாங்களே கவனித்துக்கொள்ளலாம் என்று நினைத்தார்கள்.

''சரி, அப்படியே செய். மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' - ஜயந்தன் கூறினார்.

மறுநாள் காலையில் ஸ்ரீகுமார் எழுந்து குளித்து முடித்தவுடன் நேராக பிரபாகரனின் வீட்டுக்குப் போனார்.

பிரபாகரனின் அம்மா தோசை வார்த்து வைத்திருந்தார்.

''ராத்திரியில பிரபாகரன் வந்திருந்தான். ஆனால், ஒண்ணும் சாப்பிடலை. அவனுக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை. இப்ப வீட்டிலேருந்து அவன் எதையுமே சாப்பிடறதில்லை'' - அம்மா முறையிட்டார்.

''அவனோட புது சினேகிதன் அவ்வளவு நல்ல ஆளாத் தெரியலை. எதனால பிரபாகரன் இந்த மாதிரி மாறிப் போனான்னு யோசிச்சுப் பார்க்குறேன், ஒண்ணும் பிடி கிடைக்கலை''

ஸ்ரீகுமார் அம்மாவைப் பார்த்தபடி பேசினார்.

''நானும் அதைப் பத்தித்தான் யோசிக்கிறேன். இவ்வளவு சீக்கிரம் அவன் எப்படி மாறிப் போவான் பாருங்க. எல்லாம் மாயமா இருக்கு. பகல் நேரத்துல அவனைக் கண்ணால கூடப் பார்க்க முடியலை.

''என்ன வந்தாலும் சரி, இன்னிக்கு பகல்ல நான் அவன் எங்க இருக்கிறான்னு தேடி விசாரிக்கிறேன்.'' ஸ்ரீகுமார் தனது காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.



எங்கெங்கெல்லாமோ தேடியலைந்தார்.

இதுவரை, கள்ளுக்கடைப் பக்கமாகப் போனதில்லை என்றாலும் அங்கேயும் போய் தேடிப்பார்த்தார். அன்றொரு நாள் குட்டப்பனுடன் வந்ததைத் தவிர, அதற்கப்புறம் பிரபாகரனைப் பார்க்கவே இல்லையென்று கடைக்காரன் சொன்னான். ஆனால், மதியத்துக்குப் பிறகு குட்டப்பன் வருவதுண்டு என்றும் தெரிவித்தான்.

எனவே, குட்டப்பனை நேரில் பார்த்து விசாரிப்பதுதான் நல்லதென்ற முடிவுக்கு வந்தார் ஸ்ரீகுமார்.

மதியத்துக்குப் பிறகு கள்ளுக்கடைக்கு வந்தார்.

ஒரு நாளும் இல்லாத திருநாளாக கள்ளுக்கடையில் ஸ்ரீகுமார் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த எல்லோருமே அவரிடம் குசலம் விசாரித்தனர். அவர் கள் குடிப்பதற்காக வரவில்லை என்பது மற்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். கேட்டவர்களிடம் தான், பிரபாகரனைப் பார்க்க வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

''என்ன திருமேனி திடீர்னு இந்தப் பக்கம்?'' கடைக்குள் நுழைந்த குட்டப்பன் கேட்டான்.

''உட்கார் குட்டப்பா, உங்க ரெண்டு பேரையும் தேடித்தான் வந்திருக்கிறேன்'' ஸ்ரீகுமார்

குட்டப்பன் துணுக்குற்றான். 'எதற்காக நம்மைத் தேடி வந்திருப்பார்?' அவன் மனம் யோசிக்கத் தொடங்கியது.

உட்காரக்கூடத் தயங்கினான்.

''உட்கார் குட்டப்பா?'' குமார் வற்புறுத்தினார்.

உட்கார்ந்தான்.

''நான் பிரபாகரனைத் தேடி வந்திருக்கிறேன். அவனைப் பார்த்தே ரெண்டு மூணு நாளாச்சு. கடைசியா அவனை உன் கூடத்தான் பார்த்ததா ஆளுங்க சொல்றாங்க. அதுக்குப்பிறகு அவனைப் பத்தி எந்த விவரமும் தெரியாதுன்னு மத்தவங்க சொல்றாங்க'' ஸ்ரீகுமார் சொன்னார்.

''நிஜமாவா சொல்றீங்க?''

''நிஜமாத்தான். நான் எங்கேயெல்லாமோ விசாரிச்சுப் பார்த்துட்டேன். அப்புறம் மத்தவங்க சொன்ன விஷயமும் ஞாபகத்துக்கு வந்தது. அதனாலதான் சரி, எதுக்கும் உன்னையே பார்த்துக் கேட்டுடலாம்னு வந்தேன். முக்கியமா அவனை இப்போ பகல் நேரத்துல பார்க்கவே முடியறதில்லை.''

''ஐயோ... இது இப்படிப்பட்ட ஒரு விஷயமாப் போச்சே!'' குட்டப்பன் தன்னையும் மீறி நெஞ்சில் கை வைத்தான்.

''நீ பயப்படாத குட்டப்பா. அவனை பகல் நேரத்துல பார்க்க முடியலை. ராத்திரி நேரத்துல அவன் வீட்டுக்கு வந்துட்டுப் போறதா அவங்க அம்மா சொல்றாங்க!''

இந்த வார்த்தைகள் குட்டப்பனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தன.

''இப்பத்தான் நிம்மதியா இருக்கு!''

''அவனோட உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படலைன்னு அவங்க அம்மா சொன்னதிலேருந்து தெரியுது. அதனால அதை விட்டுத் தள்ளுவோம். ஆனா, இப்ப அவன் எங்க இருக்கிறான்? ஏன் இப்படி ஒளிஞ்சு திரியுறான்? அவன் மேல ஏதாவது கேஸ் இருக்கா? உனக்கு இதைப்பத்தி ஏதாவது தெரியுமா?''

''சேச்சே... அப்படியெல்லாம் எதுவும் இல்லை'' கள் எடுத்து வந்த சப்ளையரிடம் வேண்டாம் என்று கையால் ஜாடை செய்தபடி பேசினான் குட்டப்பன்.

''அவனால பல காரியங்கள் ஆகவேண்டியிருக்கு. அதனால அவனோட இருப்பிடத்தை முதலில் கண்டுபிடிக்கணும் அவன் இல்லாம நான் தனியா ஒண்ணும் பண்ணமுடியாது. அதனாலதான் கேட்குறேன்.

''நான் விசாரிச்சு என்ன ஏதுன்னு உங்ககிட்ட வந்து சொல்றேன். திருமேனி நீங்க புறப்படுங்க. நானே வர்றேன்!'' குட்டப்பன் சொன்னான்.



ஸ்ரீகுமார் தனது இல்லத்துக்குத் திரும்பினார்.

கள்ளுக் கடையிலிருந்து வெளியேறிய குட்டப்பன், பிரபாகரனைத் தேடி அலைந்தான். எங்கெல்லாம் அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் தேடினான்; விசாரித்தான்.

ஒரே ஒருத்தர் மட்டும் இரவு நேரத்தில் அவனைப் பார்த்ததாகச் சொன்னார்.

மாலை நேரத்துக்குப் பிறகு குட்டப்பன் இல்லத்துக்கு வந்தான்.

ஸ்ரீகுமாரும் ஸ்ரீதேவியும் வராந்தாவில் உட்கார்ந்திருந்தனர். மனத்தை மயக்கும் அழகியான ஸ்ரீதேவியைப் பார்த்ததும் குட்டப்பன் மலைத்தே போனான். மட்டுமின்றி எங்கேயோ பார்த்த முகமாகவும் அவனுக்குத் தோன்றியது.

''இவங்க யார் திருமேனி? எனக்குத் தெரிஞ்ச முகமாகவும் தெரியுது!'' - குட்டப்பன் கேட்டான்.

''நீங்க பார்த்திருக்க வழியே இல்லை. என்னோட சம்சாரம் இது. வடக்குப் பக்கம் ரொம்பத் தொலைவில இருக்குது இவங்க வீடு'' - ஸ்ரீகுமார் கூறினார்.

''அப்படியா? நீங்க கல்யாணம் பண்ணிக்கிட்ட சேதியே எங்களுக்கெல்லாம் தெரியாதே?'' - குட்டப்பன் ஸ்ரீதேவியின் மீது வைத்த கண்ணை எடுக்காமலேயே பேசினான்.

''நாங்க ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க. இவங்க என்கூட காலேஜில லெக்சரரா வேலை செய்யிறாங்க.'' ஸ்ரீகுமார் புன்னகைத்தவாறே ஸ்ரீதேவியைப் பார்த்துக் கூறினார்.

அவள் தலை குனிந்தபடி அமர்ந்திருந்தாள்.

''உண்மையைச் சொல்றதுக்கென்ன? இவங்களை மாதிரியே ஒரு பொண்ணு இந்த ஊர்ல இருந்தது. எனக்கு நல்லாவே தெரியும். அனா, அவங்க செத்துப்போயிட்டாங்க.

கொலை பண்ணிட்டதாகவும் பேசிக்கிறாங்க" - குட்டப்பன் பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தான்.

"நானும் அதைக் கேள்விப்பட்டிருக்கேன். ஒருத்தரை மாதிரியே உலகத்துல ஏழு பேர் இருக்கிறதாச் சொல்றாங்க. அதனால இந்த உருவ ஒற்றுமை சாத்தியம்தான்."

"இதெல்லாம் யாருக்குத் தெரியும்? பிரபாகரனைப் பத்திச் சொல்ல வந்த விஷயமே மாறிப்போச்சு."

"என்ன... எங்கேயாவது அவனைப் பார்க்க முடிஞ்சதா என்ன?" - ஸ்ரீகுமார் விசாரித்தார்.

"ராத்திரிநேரத்துல அவனைப் பார்த்ததா சாக்கோ சொன்னான். ஆனா, ஒரு வார்த்தைகூடப் பேசலையாம்!

"எங்க பார்த்தாராம்?

"சந்துநாயரோட தேங்கா கோடௌன்லேருந்து வெளியே வரும்போது பார்த்தானாம்.

"அப்டீன்னா அவன், அவங்க மாமா பிடியில வசமா மாட்டிக்கிட்டான்னு அர்த்தம். இந்த நிலைமையில என்னைப் பார்க்குற தர்மசங்கடம் வேண்டாம்னு ஒளிஞ்சு நடக்கிறானோ என்னவோ? ஸ்ரீகுமார் யோசனையில் ஆழ்ந்தார்.

"ஒருவேளை அப்படியும் இருக்கலாம்" - குட்டப்பன் முற்றத்திலிருந்த துளசி மாடத்தின் மீது சாய்ந்து உட்கார்ந்தான். அப்போது, அவனது பார்வை ஸ்ரீதேவியின் மீதே பதிந்திருந்தது.

ஸ்ரீதேவியைக் கொலை செய்த நபர்களுள் அவனும் ஒருவன் என்கிற விஷயம் திரும்பத் திரும்ப நினைவிலேயே சுழன்றுகொண்டிருந்தது. இருப்பினும் தனக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீதேவியைப் பார்த்தபோது அவனுள் பயம் தோன்றாமல் இல்லை.

"மேற்கொண்டு என்ன செய்யலாம்?" - ஸ்ரீகுமார் கேட்டார்.

குட்டப்பன் பதிலளிக்கவில்லை.



"பிரபாகரனை எப்படியும் கண்டுபிடிச்சே ஆகணும். நாம சந்துநாயரோட தேங்காய் கோடௌன் பக்கம் போய்த் தேடிப் பார்க்கலாமா? - ஸ்ரீகுமார் கேட்டார்.

"அதுக்கென்ன... தாராளமாகப் போகலாம். நானும் உங்ககூட வர்றேனே!" - குட்டப்பன் ஒப்புக்கொண்டான்.

"நானும் வர்றேனே!" - ஸ்ரீதேவி மெதுவான குரலில் பேசினாள்.

"என்னது... நீங்களும் தேங்கா கோடௌனுக்கு வர்றீங்களா, அதுவும் ராத்திரி நேரத்துல?" - குட்டப்பன் சிரித்தான்.

"நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன்." - என்ற ஸ்ரீதேவி எழுந்து உள்ளே போனாள்.

ஸ்ரீகுமாரும் குட்டப்பனும் சேர்ந்து சந்துநாயரின் தேங்காய் கோடௌனை நோக்கி நடந்தனர்.

இரவு மணி பத்துக்கு மேல் ஆகியிருந்தது.

தோப்புக்குள் நுழைந்தவுடனேயே தேங்காய் கோடௌன் பக்கம் வெளிச்சம் தெரிந்தது.

"உள்ளே யாரோ இருக்கிறாப் போலத் தெரிகிறது" குட்டப்பன் ரகசியமான குரலில் பேசினான்.

"சத்தம் எழுப்பாம நாம நடந்துபோய் முடிஞ்சா யார் இருக்குறாங்க, என்ன பேசிக்குறாங்கன்னு கேட்கணும்! ஸ்ரீகுமார் கூறினார்.

இருவரும் எச்சரிக்கையுடன் தேங்காய் கோடௌனை நெருங்கினர்.

பலகைச் சுவர்களின் இடைவெளி வழியாக உள்ளே பார்த்தனர்.

சந்துநாயரும், ஜயந்தனும் தட்டுப்பட்டனர்.

பிரபாகரனைக் காணவில்லை.

"அவன் போய் இந்தத் தடவை கண்டிப்பாகக் கொண்டு வந்து விடுவான். அதுல எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை" சந்து நாயரின் குரல்.

''உருவமும் பிரபாகரனோடதானதால யாரும் சந்தேகப் படவும் மாட்டாங்க" ஜயந்தன் கையில் வைத்திருந்த கிளாஸை காலி செய்துவிட்டு உதட்டைத் துடைத்தபடி கூறினார்.

''இங்க வந்துட்டா என்ன காரணத்தாலும் தாமதிக்கக் கூடாது. உடனே எரிச்சுடணும்!'' சந்துநாயர் உறுதியான குரலில் கூறினார்.

அவர்கள் எதைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள் என்று ஸ்ரீகுமாருக்கு சுத்தமாகப் புரியவில்லை!

## 33

அவர்கள் எலும்புக்கூட்டைப் பற்றிப் பேசிக்கொள்கிறார்கள் என்று தெரிந்தது. ஆனால் எந்த எலும்புக்கூட்டைப் பற்றி என்பது விளங்கவில்லை. மேலும் பிரபாகரன் தனக்கு எதிராகச் செயல்படுவான் என்பதையும் அவரால் நம்ப முடியவில்லை.

பிரபாகரன் ஒருவேளை தனது மாமாவுடன் சேர்ந்து கொண்டாலும், தனக்கு எதிராகச் செயல்படமாட்டான் என்றே நம்பினார். இருப்பினும் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக பிரபாகரனின் வீட்டை நோக்கி நடந்தனர். அம்மாவிடம் பேசிப் பார்த்தால் ஏதாவது விவரம் கிடைக்கலாம்.

பிரபாகரனது வீட்டில் நிலவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. அம்மா இன்னும் தூங்கவில்லை என்பது விளங்கியது. குட்டப்பனும் ஸ்ரீகுமாரும் தெரு வாசற்படியை நெருங்கும் போது, அம்மா விளக்கை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் போனார்.

உடனே குரல் கொடுத்தபடி ஸ்ரீகுமார் வேகமாக நடந்தார். குட்டப்பனும் தொடர்ந்தான்.

அம்மா விளக்குடன் திரும்பி நின்றார்.



''யார்... திருமேனியா?'' குட்டப்பனை ஒரு பார்வை பார்த்துவிட்டு விளக்கைத் தரையில் வைத்தார்.

மற்ற இருவரும் வராந்தாவில் அமர்ந்தனர்.

''அம்மா, பிரபாகரன் வந்தானா?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வந்திருந்தான். சாப்பாடு எதுவும் வேண்டாம்னு சொன்னான். என்னமோப்பா, அவன் போக்கே ஒண்ணும் பிடிபடலை. என் கையால அவன் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு தெரியுமா?'' -அம்மா விசனத்துடன் பேசினார்.

''அவன் இப்ப சந்துநாயரோடு சேர்ந்துட்டான், சந்தேகம் இருந்தா குட்டப்பனையே கேட்டுப் பாருங்க!'' ஸ்ரீகுமார் சொன்னார்.

''அப்படியா சொல்றீங்க? எங்களுக்குள்ள உறவு முறை அவ்வளவு சரியா இல்லையே? அவன் அங்கே போய்ச் சேர்ந்துக்க வழியே இல்லையே. என்ன ஆச்சு அவனுக்கு?'' - அம்மா குழப்பத்துடன் பேசினார்.

''சந்துநாயர் இங்க வந்திருந்தாரா'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''இல்லை... நாங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்தே ரொம்ப நாளாகுது . என்னதான் நடந்திருக்கும்னு யோசிக்கக்கூட முடியலையே!'' - அம்மா மூக்கின் மீது விரலைப் பதித்தபடி புலம்பினார்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரபாகரன் சந்து நாயருடன் சேரமாட்டான் என்பது அவனது அம்மாவுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் அவர் குழம்பித் தவித்தார்.

''போகும்போது எங்கே போறேன்ன ஏதாவது சொல்லிட்டுப் போனானா என்ன?''

''ஒண்ணும் சொல்லிட்டுப் போகலையே? இருட்டினதுக்கு அப்புறம் திருடன் மாதிரி வர்றான். ரெண்டு வார்த்தை பேசிட்டு சொல்லாமக் கொள்ளாம மறைஞ்சு போயிடுறான்.''

ஸ்ரீகுமார், குட்டப்பனின் முகத்தைப் பார்த்தார். அவனுக்கும் ஒன்றும் புரியவில்லை.

இரவு பதினோரு மணிக்கு மேல் ஆகியிருந்தது. பிரபாகரன் அப்போது குமார் வேலை செய்யும் கல்லூரி வாசலை அடைந்திருந்தான். கேட் பூட்டியிருந்தது.

உட்புறமிருந்த கூண்டில் காவல்காரர் பாதித் தூக்கத்தில் இருப்பது தெரிந்தது.

நள்ளிரவுக்கு மேல் சாதாரணமாக காவல்காரர் நல்ல தூக்கம் போட ஆரம்பித்துவிடுவார். கல்லூரிக்குள் அப்படியென்ன திருடன் வந்து திருடிக்கொண்டு போகப் போகிறான் என்கிற அசட்டைதான் காரணம்.

இருப்பினும் அங்கிருந்த எலும்புக்கூடு காணாமல் போனதிலிருந்து தூங்கும் வழக்கத்தை மூட்டைகட்டி வைத்து விட்டார்

பிரபாகரன் கேட் அருகில் வந்து நிற்பதை காவல்காரர் கவனிக்கவில்லை. காவல்காரர் சற்று வசதியாகச் சுவரில் நன்றாகச் சாய்ந்துகொண்டதும் பிரபாகரன் கேட் தாழ்ப்பாளின் மீது கை வைத்தான். என்ன அதிசயம்? அந்தத் தாழ்ப்பாள் தானாகத் திறந்து கொண்டது.

மிகவும் பெரிதான கேட் தாழ்ப்பாளைத்தான் தொட்டதும் திறந்துகொண்டது. பிரபாகரனின் உடம்பில் புகுந்துகொண்டிருந்த கோவிந்தனின் ரக்ஷஸ், தனது வல்லமையை நினைத்துப் பெருமிதம் கொண்டது. மேற்கொண்டு தன்னால் எதையும் செய்ய முடியும் என்கிற தன்னம்பிக்கை தோன்றியது.

தாழை விலக்கி, கதவை ஓரளவு திறந்துபோதும் காவல்காரர் விழித்துக்கொள்ளவில்லை. கோவிந்தன் சத்தம் எழுப்பாமல் கேட்டைக்கடந்தான்.

மணி சுமார் பன்னிரண்டாகியிருக்கும்.

பிரபாகரனின் உருவத்திலிருந்த கோவிந்தன் நேராக கல்லூரியின் பிரதான கட்டடத்தை நோக்கி நடந்தான்.

எங்கும் யாரையும் காணவில்லை.



மேற்புறம் செல்லும் படிக்கட்டு பிரதான கட்டடத்தின் வடக்குப் புறத்தில் இருந்தது.

அங்கு போனபோது யார் யாரோ ரகசியமான குரலில் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. கவனித்தபோது அதில் ஒன்று பெண் குரல் என்பதும் புரிந்தது.

இந்த நேரத்தில் இங்கு வந்து பேசிக்கொண்டிருக்கும் பெண் யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் பிரபாகரன் படிக்கட்டின் அடியில் இருந்த மறைவில் பதுங்கி நின்றான்.

திடுமென்று இரண்டு ஆண்கள் படிக்கட்டின் அடிப் பகுதியிலிருந்து கோவிந்தனை நோக்கி வந்தனர்.

வந்தவர்கள், கோவிந்தனைவிட வாட்டசாட்ட மானவர்கள். அந்த இருவரும்கூட காவல்காரனை ஏமாற்றிவிட்டு உள்ளே நுழைந்தவர்கள் என்பது புரிந்தது.

''யாருடா நீ!'' இருவரில் ஒருவன் கோவிந்தனைப் பார்த்துக் கேட்டான்.

கோவிந்தன் பதிலளிக்கவில்லை. அசையாமல் அப்படியே நின்றான்.

''மரியாதையா இங்கேருந்து போறியா இல்லையா?'' என்றபடி கையை ஓங்கிக்கொண்டு ஒருவன் கோவிந்தனை நெருங்கினான்.

தாழ் திறந்துகொண்ட சம்பவத்தின் மூலமே தனக்கு அபாரமான வல்லமை கை வந்திருப்பதை உணர்ந்த கோவிந்தன், கையை ஓங்கிக்கொண்டு வந்தவனை அப்படியே தூக்கி வீசி எறிந்தான்-மிகவும் சாதாரணமாக.

அவன் மூன்று ஆள் உயரத்துக்கு உயர்ந்து பொத்தென்று தரையில் விழுந்தான். விழுந்தவன் எழுந்திருக்க முடியாமல் தடுமாறினான்.

''ஓகோ... அப்படின்னா ஒரு கை பார்த்துட வேண்டியது தான்'' என்றபடி இரண்டாவது நபர் இடுப்பிலிருந்து பெரிய கத்தி ஒன்றை உருவியபடி கோவிந்தனை நெருங்கினான்.

கோவிந்தன் சற்றும் தயங்காமல் கத்தி பிடித்திருக்கும் கையைச் சட்டென்று பற்றி ஒருதடவை முன்புறமாக இழுத்து அவனையும் வீசி எறிந்தான்.

முதலில் விழுந்தவனைவிட அதிக உயரம் போய் இவனும் பொத்தென்ற தரையில் விழுந்தான்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியின் மூலம் இருவருமே சற்றுப் பயந்து உள்ளூர நடுங்கத் தொடங்கினர்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்தபடி நடுங்கிக் கொண்டு நின்றிருந்தாள் பெண் ஒருத்தி.

சட்டென்று சுதாரித்துக்கொண்டு ஓட முயன்றவளை கோவிந்தன் பாய்ந்து பிடித்தான். கோவிந்தனின் கைப்பிடி இறுக்கம் தனது கை எலும்பை முறித்துவிடுமோ என்று நினைத்தாள் அவள்.

தனக்கு முன்பாக நின்றுகொண்டிருப்பவன் மனிதப் பிறவிதானா என்ற சந்தேகம் அவளிடம் எழுந்தது இருப்பினும் அவனிடமிருந்து விடுபடக் கடுமையான முயற்சி செய்தும் பலிக்காமல் போனது.

கோவிந்தன், அவளைத் தன்னோடு சேர்த்துப் பிடித்து நிறுத்திக்கொண்டான். அப்போது அவன் முழுமையான ஒரு பிசாசாகவே மாறிவிட்டிருந்தான்.

சற்று நேரத்துக்குள் அவளது உடம்பு அசைவற்று அப்படியே படிக்கட்டின் அருகே விழுந்தது. கோவிந்தன் அவளைக் கீழே தள்ளிவிட்டு மாடிப்படிகளில் ஏறத் தொடங்கினான்.

லெபரெட்டரி அறை எங்கிருக்கிறது என்பது அவனுக்குத் தெரியுமாதலால் நேராக அதன் முன்னால் வந்து நின்றான். கதவு வெளிப்புறமாகப் பூட்டப்பட்டிருந்தது.

இந்தக் கதவும் சுலபமாகத் திறக்கப்பட்டது.

அதேநேரம், காலேஜின் பெரிய ஹாலிலிருந்து கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடித்தது.



உட்புறமிருந்த ஸ்டோர் ரூம்அறையும் பூட்டப்பட்டிருந்தது. அதேசமயம் ஸ்ரீதேவி வெளியேற முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

கோவிந்தன் கதவைத் தள்ளித்திறந்த அதே நேரம் ஸ்ரீதேவியும் தட்டுப்பட்டாள்.

இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் ஒரு கணம் பார்த்துக்கொண்டு நின்றனர்.

''வழியில ஒருத்தியைக் கொலை பண்ணிட்ட இல்லையா?'' - ஸ்ரீதேவி கேட்டாள்.

கோவிந்தன் சட்டென்று தன் உதடுகளைத் துடைத்துக் கொண்டான். அவனது கையில் ரத்தத் துளிகள் ஒட்டியிருந்தன.

''ஒரு பெண்ணோட ரத்தத்தைக் குடிச்சிருக்கேன்'' அவன் பதிலளித்தான்.

''அப்படியானால் நிலைமை ரொம்பவும் சிக்கலாகி விட்டது. இனிமேல் நீ இங்கே இருக்கவோ, நுழையவோ முடியாது. அவங்க கண்டுபிடிச்சுடுவாங்க?'' -ஸ்ரீ தேவி கூறினாள்.

''அதெப்படி?''

''கண்டுபிடிச்சுடுவாங்க!''

''அதை நான் பார்த்துக்கிறேன். அது கிடக்கட்டும், நான் எதுக்காக வந்திருக்கேன்னு தெரியுமா?''

''தெரியும். என்னோட எலும்புக்கூட்டை இங்கிருந்து எடுத்துப்போய் அழிக்கிறதுக்கு.''

''அப்படியொரு பொறுப்பை என்கிட்ட ஒப்படைச்சிருக்காங்க.''

''அதனால உனக்கு என்ன பலன்?''

''நான் உயிரோட இருந்தபோது எப்படியெல்லாம் நடந்துக்கிட்டேனோ, இனிமேலும் அப்படியெல்லாம் நடக்க முடியும்கிறதுதான். அதாவது இன்னும் வலுவோடு இருப்பேன்.''

''அதெல்லாம் உன்னோட கனவு. தங்களோட நோக்கத்தை நிறைவேத்திக்க உன்னை பயன்படுத்திக்கிறாங்க. அவங்களோட தேவை முடிஞ்சுட்டா, உன்னை அழிக்கவும் தயங்கமாட்டாங்க தெரியுமா?''

''இனிமே அப்படிச்செய்ய அவர்களால் முடியாது. என்னுடைய சக்தி அவர்கள் நினைத்த எல்லையைத் தாண்டி விட்டது." கோவிந்தன், ஸ்ரீதேவியை நோக்கி முன்னேறினான்.

''அசையாத! அங்கேயே நில். என்னைத் தொடக்கூடாது நீ. நான் உண்மையில் யாருன்னு தெரியுமா உனக்கு? இப்ப நான் ஒரு பிரம்ம ரக்ஷஸ், புரிஞ்சுதா? என்னைத் தொட்டா நீ இப்போ சாம்பலாகிப் போய்விடுவாய். நிரூபிக்கணுமா?'' - ஸ்ரீதேவி சட்டென்று அவனது இடது கை மணிக்கட்டைப் பிடித்தாள்.

அவள் கைவைத்த பகுதியின் கீழ்ப்புறப்பகுதி அப்படியே உடம்பிலிருந்து கழன்று விழுந்து எரியத் தொடங்கியது. இருவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அந்தக் கைப்பகுதி சாம்பலாகிப் போனது.

ஆபத்தை உணர்ந்த கோவிந்தன் சட்டென்று அங்கிருந்து பறந்தான். அரை மணி நேரத்துக்குள் எப்படி தான் அவன் சந்து நாயரின் தேங்காய் கோடௌனை அடைந்தான் என்பது அவனுக்கே புரியவில்லை!

அங்கு சந்துநாயரும் ஜயந்தனும் அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அவனைப் பார்த்ததும் போன காரியத்தை வெற்றியுடன் முடித்துவிட்டு வந்திருப்பான் என்று தோன்றியது.

''எங்கே... கொண்டுவரலையா?'' - ஜயந்தன் கேட்டார்.

''இதைப் பார்த்தீங்களா?'' - கோவிந்தன் தனது இடது கையைக் காட்டினான்.

''என்ன... என்ன... ஆச்சு?'' - ஜயந்தன் பதற்றத்துடன் கேட்டார்.

''நீங்க சொன்ன எலும்புக்கூடு என் கையைப் பிடிச்ச அடையாளம்! அவளுக்கு ஏதோ பிரத்தியேக சக்தி கை வந்திருக்கு. அவள் பிரம்ம ரக்ஷஸா மாறியிருக்கிறாள்.''

''ஓகோ... கதை அப்படிப் போகிறதா? அப்படியானால் இனிமேல் உன் ஜம்பம் அவளிடம் பலிக்காது. நானேதான் நேரடியாக ஈடுபட வேண்டும். என்னால் அது முடியும்" -ஜயந்தன் தன்னம்பிக்கையுடன் பேசினார்.



சந்துநாயர் துவண்டு போனார்.

தன்னுடைய நோக்கம் எப்படியும் இன்று நிறைவேறிவிடும் என்று நினைத்தார். ஸ்ரீதேவி இப்படி நாளுக்கு நாள் சக்தி பெற்று வந்தால், தனது நோக்கம் ஈடேறுவது கடினம் என்று அவருக்குத் தெரிந்துவிட்டது.

''பயப்படாதீர்கள் சந்துநாயரே, அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்" - ஜயந்தன் உறுதியளித்தார்.

''அதற்கு என்ன உத்தரவாதம்?''

''வழி இருக்கிறது. பகல் நேரத்தில் அவள் வெறும் எலும்புக்கூடுதான். அந்தச் சமயத்தில் அவளால் ஒன்றும் செய்ய முடியாது. அப்போது அவளை அழித்துவிட வேண்டியதுதான்" - ஜயந்தன் குரல் உறுதியுடனிருந்தது.

## 34

"பகல் நேரத்தில் நாம் எப்படி இதைச் செய்ய முடியும்?" சந்து நாயர் கேட்டார்.

''நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை ஆயிற்றே... எப்படி இருந்தாலும் இதுவரை நாம் நினைத்தது மாதிரி எதுவும் நடக்கவில்லை. ராத்திரி நேரமாகிவிட்டால், அவளுக்கும் உருவம் கிடைத்துவிடும். கோயிலில் இருக்கும் சௌபர்ணிகா என்ற மோகினியின் சக்தி அவளுள் ஆவேசித்திருப்பதால், கோவிந்தனால் ஸ்ரீதேவியுடன் மோதமுடியவில்லை" - ஜயந்தன் தனது அபிப்ராயத்தைக் கூறினார்.

''அப்படியானால்?''

''நான் சொன்னது தான் வழி!''

''பகல் நேரத்தில் அங்கிருந்து யார் எலும்புக்கூட்டை எடுத்துவருவது?''

''அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன்! -ஜயந்தன் வாசலைத் தாண்டி வெளியே பார்த்துக்கொண்டிருந்தார்.

''இனிமேல் பிரபாகரனால் அதைத் தொடவே முடியாது என்பது உறுதியாகிவிட்டது. அப்படியானால் அவனால் அந்த புரபஸரை அழிக்கவும் முடியாது இல்லையா?'' - சந்துநாயர் ஜயந்தனைப் பார்த்தார்.

''அதுதான் உண்மை நிலை. ஆனால், ஒரேயொரு அனுகூலம் என்னவென்றால், பிரபாகரனை அந்த புரபஸர் இன்னும் நம்புவதுதான். பிரபாகரன் மீது அந்த மனிதருக்கு எந்தவிதமான சந்தேகமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.''

''அதனால் நமக்கு என்ன லாபம்?''

''இருக்கிறது... ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டியது தான். நாம் சும்மா உட்கார்ந்திருந்தால் நிலைமை மோசமாகி விடும்.''

ஜயந்தன், பிரபாகரனை அழைத்தார். பிரபாகரன் அறைக்குள் வந்தான்.

''நான் என்ன செய்யணும் சொல்லுங்க!'' கோவிந்தன கேட்டான்.

''உன்னால் அந்த புரபஸரைக் கொல்ல முடியும், அந்த ஆள் உன்னை ஒருபோதும் அடையாளம் தெரிந்துகொள்ள மாட்டான் என்று தோன்றுகிறது. உன்னை இன்னும் பிரபாகரன் என்றே நம்பிக்கொண்டிருக்கிறான். அதனால் அவனது இருப்பிடத்திலேயே நீ அவனுக்குத் துணையாகப் படுத்துக் கொள்ளவும் செய்யலாம். அதை நீ இன்றைக்கேகூடச் செய்யலாம் என்ன சொல்கிறாய்?'' - ஜயந்தன் கேட்டார்.

''அதில் ஒன்றும் சிக்கலில்லை. நல்ல யோசனைதான்'' கோவிந்தன் ஒப்புக்கொண்டான்.

அவர்களது யோசனைப்படி பிரபாகரன், ஸ்ரீகுமாரின் இல்லத்துக்கு வந்து சேர்ந்தான். நேரம், நள்ளிரவாகியிருந்தது.



அன்று துர்க்காஷ்டமி நாளாக இருந்ததால் கோயிலில் தேவி இல்லை. தேவி தனது பரிவாரங்களுடன் நீராடப் போயிருந்தார். அவருடன் மோகினிகள், பிரம்மரக்ஷஸ"கள் போன்றோரும் போகவேண்டியிருந்ததால் ஸ்ரீதேவியும் தனது இருப்பிடத்திலிருந்து வெளியேறியிருந்தாள். இல்லத்தில் ஸ்ரீகுமார் மட்டுமே தனியாக இருந்தார்.

பிரபாகரன் தயங்கியவாறே தெரு வாசற்படியிலிருந்து உட்புறம் பார்த்தான். நிலா வெளிச்சம் அவ்வளவு தெளிவாக இல்லாவிட்டாலும் அவனால் எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ஊனமாகிப்போன இடது கை அப்போதும் வலித்தது. அதற்குக் காரணமான ஸ்ரீதேவி மீது அடங்காத பகையுணர்வு எழவும் செய்தது.

எங்கேயாவது ஒரு சிறு இடைவெளி கிடைத்து, அவள் அசந்துபோனால் நிச்சயமாக தொலைத்துக் கட்டிவிட வேண்டும் என்கிற வெறி அவனுள் எழுந்தது. அதேசமயம் தனது கையைப் பார்க்கும்போது ஸ்ரீகுமார் என்ன நினைப்பார் என்பதும் நினைவில் எழுந்தது. முடிந்த மட்டும் கையை வெளிக் காட்டாமல் சட்டைக்குள்ளேயே மறைத்துவைப்பது என்றும் தீர்மானித்தான்.

தெருவாசற்படி தாண்டி, முற்றத்துக்கு வந்து காதைக் கூர்மையாக்கிக் கொண்டு உள்ளே ஏதாவது பேச்சுக் கேட்கிறதா என்று கவனித்தான். இல்லை... மாறாக அமைதியாக இருந்தது. ஓர் இலை அசையும் சத்தம்கூட கேட்கவில்லை.

பிரபாகரன் மெதுவாக வராந்தாவில் காலெடுத்து வைத்தான். அங்கிருந்தவாறே சுற்றுமுற்றும் பார்த்தான். ஸ்ரீதேவி அங்கு இருக்க வாய்ப்பு இல்லைதான் என்றாலும் ஒரு வேளை தனது யூகத்துக்கு மாறாக இருந்துவிட்டால்... கையின் வலி அவனை மேலும் பயப்படும்படி செய்தது.

இந்த நிலையில் மறுபடி அவளது கண்ணில் பட்டு விட்டால், வலது கையும் ஊனமாகி விடலாம். அல்லது மொத்த உடம்புமேகூட எரிந்துபோகலாம்.

சற்றுநேரம் காத்திருந்தபோதும் யாரும் தட்டுப்படாததால் மேலும் முன்னேறுவதென்ற முடிவுக்கு வந்தான். ஆனால் கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

தனது பழைய வித்தையை இங்கு பிரயோகிப்பது அவ்வளவு நல்லதல்ல என்பதால், என்ன செய்யலாம். என்று யோசித்தான். சட்டென்று பின்புறம் வளர்ந்திருக்கும் மாமரம் ஞாபகம் வந்தது. உடனே பின்புறம் விரைந்தான்.

மாமரத்தின் மீது ஏறினான். அது மிகவும் சுலபமான வேலையாக இருந்தது. அங்கிருந்து மேலேறி சரிவின் மறுபுறம் கவனத்துடன் நகர்ந்தான். கையை அழுத்திப் பிடித்துக்கொண்டு கீழ் நோக்கி நகர்ந்த போதும் அவனுக்கு எந்தவிதமான பயமும் தோன்றிவில்லை. அதுவே வியப்பாக இருந்தது. அப்படியானால் தன்னால் நெட்டுக்குத்தான சுவரில்கூட தாராளமாக நடக்க முடியும் என்று தோன்றியது.

ஓட்டுப் பகுதியின் கடைசியை நெருங்குமுன் ஒரு முற்றத்தில் குதித்தான். அதுவும் அவனுக்கு மிகவும் விசித்திரமான அனுபவமாக இருந்தது. பறவை ஒன்று மிகவும் லாகவமாகப் பறந்து இறங்குவது போல் தரைப்பகுதியை அடைந்தான்.

தனக்குள், தானே எதிர்பார்க்காத என்னென்னமோ மாற்றங்களும், சக்திகளும் புகுந்திருப்பதாக பிரபாகரன் என்கிற கோவிந்தனுக்குத் தோன்றியது. தைரியம் அதிகரித்தது.

முற்றத்திலிருந்து ஸ்ரீகுமார் படுத்திருக்கும் அறையை நோக்கி நடந்தான்.

ஸ்ரீகுமார் நல்ல தூக்கத்திலிருந்தார்.

பிரபாகரன் சற்று நேரம் காதைக் கூர்மையாக்கிக் கவனித்தான்.

ஸ்ரீதேவி இன்றைக்கு வரமாட்டாள் என்பது உறுதியாகத் தெரிந்ததால் ஸ்ரீகுமார் சீக்கிரமாகவே படுத்துவிட்டார்.



ஸ்ரீகுமாரை எழுப்புவதென்று பிரபாகரன் தீர்மானித்தான். அப்படியல்லாமல் அந்த அறைக்குள் நுழைவது தன்னை காட்டிக் கொடுத்து விடலாம்.

கைவிரலால் கதவைத் தட்டினான். அந்தச் சத்தம் ஸ்ரீகுமாருக்குக் கேட்காததாலோ என்னவோ பிறகு குரல் கொடுத்தான்.

யாரோ தன்னை அழைப்பது தூக்கத்தை மீறி ஸ்ரீகுமாரின் மூளையில் உறைத்ததால் அவர் திடுக்கிட்டுக் கண்விழித்தார். அதேசமயம் வாசலை யாரோ தட்டும் ஓசையும் கேட்டது. ஸ்ரீதேவிதான் வந்திருப்பாள் என்று நினைத்துக் கதவைத் திறந்தார். ஆனால், வெளியே அவரது எதிர்பார்ப்புக்கு மாறாக பிரபாகரன் நின்றுகொண்டிருந்தான்.

ஸ்ரீகுமாரின் கண்களில் சந்தேகம் மலர்ந்தது. ஏனென்றால் வெளிவாசல் தாழ் பூட்டியது பூட்டியபடியே கிடக்கிறது. அவன் எந்த வழியாக உள்ளே வந்திருப்பான் என்று யோசிக்கத் தொடங்கியது. ஸ்ரீகுமாரின் மனம். இருப்பினும் அதையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு பிரபாகரனைப் பார்த்து அவர் கேட்டார். ''என்ன பிரபாகரா இந்த அகால நேரத்தில்? உனக்கு ஏதாவது தேவையா?''

''ஒண்ணும் வேண்டாம். பார்த்து ரொம்ப நாளாச்சே. சும்மா பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்'' பிரபாகரன் பதிலளித்தான்.

''சரி வா... வந்தது வந்துட்ட... வராந்தாவுல உட்கார்ந்து பேசலாம்'' என்ற ஸ்ரீகுமார் விளக்கின் திரியை நீட்டிவிட்டு நடக்கத் தொடங்கினார்.

அந்த நேரத்தில் அவரைப் பின்தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை கோவிந்தனுக்கு.

வராந்தாவை ஒட்டியிருந்த கதவும் மூடிக் கிடந்ததைப் பார்த்ததும் ஸ்ரீகுமாரின் சந்தேகம் வலுத்தது.

'பிரபாகரன் எப்படி வீட்டுக்குள் வந்தான்?'

ஒரு திருடனைப்போல் அவன் வ்ரவேண்டிய அவசியம் இல்லையே?

சந்தேகங்களை மனத்தில் போட்டு பூட்டிக்கொண்டு ஸ்ரீகுமார் கதவைத் திறந்து வெளியே வந்தார். கோவிந்தன் தொடர்ந்து வந்தான்.

இருவரும் வராந்தாவில் உட்கார்ந்தார்கள்.

பிரபாகரன், ஸ்ரீகுமாரின் மீது பாய்ந்து தாக்குவதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தான். ஆனால், உடனடியாக எதையும் செய்து காரியத்தைக் கெடுத்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வும்கூடவே பிறந்தது.

மற்றொரு தடையும் கோவிந்தனுக்குத் தட்டுப்படவே செய்தது. அது, ஸ்ரீகுமாரின் கழுத்தில் கிடந்த தாயத்து தங்கச் சங்கிலியில் ஒரு டாலர் போல் அது தொங்கிக்கொண்டிருந்தது.

அதற்குள் சுதர்சனச் சக்கரம் பொறித்த மந்திரத் தகடு சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

அந்தத் தாயத்து கண்ணில் படும்போதே மொத்தச் சக்தியும் வடிந்துபோவது போன்ற ஒரு தளர்ச்சி கோவிந்தனுக்கு அனுபவமானது.

மதிய வேளையில் சூரியனைப் பார்ப்பது போன்ற ஒரு ஜொலிப்பு . அந்த ஒளியே கோவிந்தனை நெருங்கவிடாமல் செய்துகொண்டிருந்தது.

ஆனால், அதையும் மீறித் தாக்குதலை எப்படித் தொடங்கலாம் என்று அவன் மனம் தீவிர யோசனையில் ஈடுபட்டது.

தனது கையால் ஸ்ரீகுமாரின் உடம்பைத் தொட்டால் மட்டுமே விபரீத பலன் உண்டாகும் என்பது கோவிந்தனுக்குப் புரிந்தது.

எனவே ஸ்ரீகுமாரின் உடலை, தன் உடலின் எந்தப் பாகமும் தொடாமல் தாக்கவேண்டும் என்று தீர்மானித்தான்.

''ஏன்... இத்தனை நாளா நீ என்னைப் பார்க்க வரலை பிரபாகரா?'' ஸ்ரீகுமார் கேட்டார்.



''நான் ரெண்டு தடவை வந்திருந்தேன். உன்னைப் பார்க்கவே முடியலை!'' - ஒப்புக்கு ஒரு பதிலைச் சொல்லி வைத்தான்.

''இங்க இல்லாம நான் வேற எங்க போவேன். நீயும் இல்லாததால நான் வீட்டைவிட்டு வெளியேறவே இல்லை!''

''ஒருதடவை வந்திருந்தபோது நீ காலேஜுக்குப் போயிட்டேன்னு தெரிஞ்சது.''

''அதுகிடக்கட்டும்... இப்ப நீ ஒழுங்கா வீட்டுக்குப் போறதில்லையாமே.''

''அப்படின்னு யார் சொன்னது?''

''உன் அம்மாதான்! பாவம் புலம்பினாங்க''

'அவங்க எப்பவும் அப்படித்தான்'' வாசல் படியருகே அமர்ந்துகொண்டு நிலவிளக்கை உற்றுப் பார்த்தபடி பேசினான்.

அவ்வளவு பெரிய நிலவிளக்கைக் கையில் எடுத்து பலமாக மண்டையில் இறக்கினால் ஸ்ரீகுமார் இறந்துபோவது நிச்சயம்.

இவ்வளவு நேரமும் தனது இடது கையை சட்டையின் கைப் பகுதியிலேயே மறைத்து வைத்திருந்தான். ஸ்ரீகுமார் இந்த விஷயத்தைக் கவனிக்கவே இல்லை.

ஆனால், பிரபாகரனின் தற்போதைய நிலை மிகவும் அசாதாரணமாக உள்ளதே என்று நினைத்த ஸ்ரீகுமார், கோவிந்தனுக்குத் தெரியாமலேயே கோவிந்தனை உன்னிப்பாகக் கவனித்ததால் அவனது கைப்பகுதி சட்டென்று தெரியவே செய்தது.

''நீ ஏன் அந்தக் கையை வந்ததிலேர்ந்து ஒளிச்சு வெச்சிருக்க?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

''நான் கொஞ்ச நாளா அரிசி ஆலையில வேலைக்குப் போனேன். அப்ப ஒரு சின்ன விபத்து.''

''இதை ஏன் நீ இதுவரைக்கும் சொல்லலை?''

''முதல் விஷயம் இந்தச் சம்பவம் எனக்கே ரொம்பவும் வருத்தமா இருந்தது. மத்தவங்களையும் எதுக்கு வீணா கஷ்டப்பட வைக்கணும்னுதான் சொல்லலை.''

''என்ன இருந்தாலும் நீ என்கிட்ட இதைப்பத்திச் சொல்லாம இருந்தது நல்லதில்லை. உன்னை நான் அந்த அளவுக்கா அந்நியமா நினைச்சிருக்கேன்?'' - ஸ்ரீகுமார் கேட்டார்.

கோவிந்தன் அப்போதும் தாக்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான்.

அவனது வலது கை விளக்கின் மேல் பகுதியை நிதானமாக எடுத்துக் கீழே வைத்தது -

''விளக்கையெல்லாம் தேய்ச்சுக் கழுவி ரொம்ப நாளாச்சுன்னு தோணுது'' என்று கூறியபடி விளக்கின் அடிப் பகுதியைக் கையில் எடுத்தான். அதன்மீது ஒட்டியிருந்த அழுக்குகளைச் சுரண்டத் தொடங்கினான்.

திடுமென்று அவன் கைகள் விறைப்பு அடைந்தன. விளக்குத் தண்டைக் கையில் எடுத்தான்.

## 35

**கோ**விந்தனையே கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீகுமார் சரியான தருணத்தில் சட்டென்று விலகியிருக்காவிட்டால், அவரது தலை பிளந்து ரத்தம் கொட்டியிருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை!

சட்டென்று முற்றத்தின் பக்கமாகப் பாய்ந்த ஸ்ரீகுமார் கேட்டார்: ''என்ன பண்ற நீன்னு உனக்கே தெரியுதா பிரபாகரா?'' ஒரு வேளை அதிகமாகக் குடித்து சுயநினைவை இழந்து விட்டானோ என்ற சந்தேகமும் அவருள் ஏற்பட்டது.

ஆனால், பிரபாகரன் அதைக் காதில் வாங்கியதாகவே தெரியவில்லை.

அவன் மறுபடியும் ஸ்ரீகுமாரைத் தாக்குவதற்காக விளக்குத் தண்டை ஓங்கினான்.



இந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது என்று ஸ்ரீகுமாருக்குப் புரியவில்லையானாலும் சட்டென்று அவனைப் பிடித்து பின்னுக்குத் தள்ளினார்.

கோவிந்தன் விளக்குடன் வீழ்ந்தான். இருப்பினும் விரைவிலேயே ஒரு புலியைப்போலப் பாய்ந்து எழுந்தான். ஸ்ரீகுமாரையே வைத்தகண் வாங்காமல் வெறித்துப் பார்த்தான்.

அந்தக் கண்களில் ஒருவித பளபளப்பு தெரிவதாகத் தோன்றியது.

ஸ்ரீகுமார் உடனே வராந்தா மீது தாவி ஏறினார்.

சுற்றும்முற்றும் பார்த்தபோது அவனுடன் மோதுவதற்கு ஏற்ற ஆயுதம் எதுவும் அகப்படவில்லை. ஆனால், சுவரில் சுதர்சன இயந்திரம் எழுதிய பெரிய தகடு ஒன்று ஃபிரேம் செய்து மாட்டப்பட்டிருந்தது தட்டுப்பட்டது. எந்தக் காலத்திலோ எழுதிப் பொருத்தப்பட்டது அது.

பஞ்சலோகத் தகட்டில் தயாரிக்கப்பட்டிருந்த அந்தத் தகட்டைச் சுற்றி கருந்தேக்கு மரத்தாலான ஃபிரேம் ஓர் அடி சதுரத்தில் அமைந்திருந்தது.

ஸ்ரீகுமார் சட்டென்று அந்த இயந்திரத்தை சுவரிலிருந்து பெயர்த்து எடுத்து கோவிந்தன் மீது வலுவுடன் எறிந்தார்.

ஃபிரேம் அவனது மார்புப் பகுதியில் விழுந்தது.

அவன் அப்படியே தரையில் மல்லாந்து விழுந்தான். அவனது கையிலிருந்த நிலவிளக்கு தூரத்தில் போய் விழுந்தது. அவனது கையிலிருந்த ஆயுதம் விழுந்துவிட்டதால் மேற்கொண்டு அவனை நெருங்க எந்த விதமான தயக்கமும் ஸ்ரீகுமாருக்கு ஏற்படவில்லை.

ஆனால், விழுந்தவன் எழுந்தவுடன் எதையோ கண்டு அரண்டவனைப் போல் மிரள மிரள விழித்து, தெருவாசலைத் தாண்டித் தலைதெறிக்கும் வேகத்தில் ஓடினான்.

ஸ்ரீகுமார் ஒன்றும் புரியாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

எல்லா வகையிலும் தனக்கு வலது கைபோல் உதவிக் கொண்டிருந்த பிரபாகரன் எப்படி இந்த அளவுக்கு விரோதியாக மாறினான் என்பது ஸ்ரீகுமாருக்கு இப்போதும் வியப்பாகவே இருந்தது. யோசனையில் ஆழ்ந்தவாறே ஸ்ரீகுமார் வராந்தாவில் அமர்ந்தார்.

நடந்த சம்பவங்கள் எல்லாமே ஒன்றுக்கு ஒன்று தொடர்பற்று, பிடிபடாதது போல் தோன்றியது. பிரபாகரனுக்கு என்னதான் ஆகியிருக்கிறது என்பதும் புரியவில்லை. அவனை மிகவும் நுட்பமாகக் கவனிக்க வேண்டும் என்று ஸ்ரீகுமாருக்குத் தோன்றியது.

நள்ளிரவைத் தாண்டி வெகு நேரம் ஆகிவிட்டதை ஸ்ரீகுமார் உணர்ந்தார்.

''சரி... கொஞ்ச நேரமாவது படுத்துத் தூங்கலாம், என்று வீட்டுக்குள் நுழைய முற்பட்ட போது தெரு வாசற்படியருகே ஓர் உருவம் தென்பட்டது. அது முன்னேறவும் செய்தது. சற்றுத் தொலைவில் வந்த பிறகுதான் ஆளை அடையாளம் தெரிந்தது.

அவள் ஸ்ரீ தேவி -

''இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தே ஸ்ரீ தேவி'' - ஸ்ரீகுமார் விசாரித்தார்.

''இன்னிக்கு துர்க்காஷ்டமி நாளில்லையா தேவிக்குத் துணையாப் போயிருந்தேன்'' ஸ்ரீதேவி பதிலளித்தாள்.

''தூங்குறதுக்கு முன்னாடி அது எனக்கு ஞாபகம் இருந்தது. அப்புறம் நடந்த களேபரத்துல மறந்தே போயிட்டேன். உண்மையைச் சொன்னா நான் நூலிழையில் தப்பிச்சிருக்கேன்.'' ஸ்ரீகுமார் முற்றத்தில் கிடந்த நிலவிளக்கு மற்றும் ஃபிரேமைப் பார்த்தபடி பேசினார்.

அப்போதுதான் அவற்றைப் பழையபடி எடுத்த இடத்தில் வைக்கவில்லையே என்ற ஞாபகமும் எழுந்தது.

முதலில் சுதர்சன இயந்திரத்தை எடுத்தார். அதை மறுபடி சுவரில் மாட்டப்போகும் போதுதான் அதிலிருந்த கொக்கி



கழன்றுபோயிருப்பது தெரியவந்தது. எனவே அதை வாசல்படி மீது வைத்தார், நிலவிளக்கின் அடிப்பகுதியை எடுத்து வந்தார்.

அதிலிருந்த எண்ணெயும், திரிகளும் வராந்தாப் பகுதியில் சிதறிக் கிடந்தன.

திரிகளை எடுத்து வைத்த பிறகு உள்ளேயிருந்து எண்ணெய் எடுத்து வந்து விளக்கேற்றினார்.

''என்ன நடந்தது?'' - ஸ்ரீதேவி கேட்டாள்.

''பிரபாகரன் இங்க வந்திருந்தான். இந்த விளக்குத் தண்டால என் தலையைப் பிளக்கப் பார்த்தான். எப்படியோ நல்லவேளையாத் தப்பிச்சுட்டேன். அவ்வளவுதான்!''

''இது ஏன் இங்க வந்தது?'' - சுதர்சன இயந்திரத்தைக் காட்டியபடி அவள் கேட்டாள்.

''கைக்கு ஒண்ணும் கிடைக்கலேன்னதும் இதை எடுத்து அவன் மேல எறிஞ்சேன்!''

''அதுக்கப்புறம் என்ன நடந்தது?'' - ஸ்ரீதேவி சந்தேகத்துடன் கேட்டாள்.

''இந்த இயந்திரம் சரியா அவன் நெஞ்சு மேல விழுந்தது. அதுக்கப்புறம் அவன் ஒரு வினாடிகூட நிக்கலை, ஓடிட்டான்.''

'' ஓகோ... அப்படியா சேதி?'' - ஸ்ரீதேவி யோசனையில் ஆழ்ந்தாள். பிரபாகரனிடம் ஏதோ மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவள் ஏற்கெனவே அனுமானித்திருந்தாள். ஆனால், அவனது சக்தியும் வளர்ந்துகொண்டிருப்பது இப்போது புரிந்தது.

''பிரபாகரனை ரொம்ப ஜாக்கிரதையா கவனிக்கணும். அவன் உண்மையில இப்ப பிரபாகரனே இல்லை!'' ஸ்ரீதேவி கூறினாள்.

''நீ சொல்றது புரியலை...''

''அவனுக்குள்ள என்னமோ ஒரு மாற்றம் உண்டாகி இருக்கு. நான் ஏற்கெனவே அவனை வேறொரு இடத்துல சந்திச்சேன். அவன், என்னைத் தாக்க வந்தபோது அவனோட கையைப் பிடிச்சு இழுத்துட்டேன்.''

''உனக்குமா தொல்லை கொடுத்தான்?''

''ஆமாம்... இது என்னமோ எதிர்பாராம நடந்ததுன்னு நினைச்சுத்தான் உங்ககிட்டச் சொல்லலை. அவனுக்குள்ள புகுந்திட்டிருக்கிற சக்தி என்னன்னு நாம கண்டுபிடிக்கணும்''

''அதுக்கு என்ன வழி?''

''நீங்க சுதர்சன இயந்திரத்தை எறிஞ்சதனாலதான் அவன் கீழ விழுந்தான். அதனால ஏதோ ஓர் அபாரசக்தி அவன் உடம்புல குடியிருக்குங்குறது நிச்சயம். அந்தச் சக்தி ஒருவேளை கோவிந்தனா இருக்குமோ?'' - ஸ்ரீதேவி கேட்டாள்.

''அப்படியும் நடக்குமா?''

''ஜயந்தன், பிரபாகரனோட உடம்புக்குள்ள ரத்த ரக்ஷஸை ஏவிவிட்டிருக்கணும்.''

''அப்போ பிரபாகரன்?''

''அதைத்தான் நானும் யோசிக்கிறேன். எதுக்கும் நாம ஒரு தடவை திருமேனியைப் போய்ப் பார்த்து சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக்கலாம். அதுக்கு நீங்கதான் போகணும்!''

''அப்படியே செய்யுறேன்''

''இன்னும் கொஞ்சநேரத்துல பொழுதுவிடிஞ்சுடும்'' - ஸ்ரீதேவி சொன்னாள்.

ஸ்ரீகுமார் படுக்கையறைக்குள் நுழைந்தார்.

தனிமையில் படுத்திருந்த ஸ்ரீகுமார் சிந்தனையில் ஆழ்ந்தார். பிரபாகரனிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி ஸ்ரீதேவி சொன்னதை அசைபோட்டபடியே படுத்திருந்தார். நேரம் கடந்து கொண்டே இருந்தது. அவருக்கு உறக்கம் வரவில்லை.

கடைசியில் களைப்படைந்த கண்ணிமைகள் தானே மூடிக் கொண்டன.

விடிந்து வெகுநேரமான பிறகுதான் ஸ்ரீகுமார் கண் விழித்தார்.

குளித்து, காலைக் கடன்களை முடித்துவிட்டு நேராக பிரபாகரனின் வீட்டுக்குப் போனார்.



அங்கு பிரபாகரனின் அம்மா தனியாக இருந்தார். வராந்தாவில் உட்கார்ந்தவாறு அவர் யாரையோ எதிர்பார்ப்பது தெரிந்தது.

''என்ன திருமேனி, அவனை எங்கேயாவது பார்த்தீங்களா?'' அந்தக் குரலில் கனமான சோகம் தெரிந்தது.

''நானும் அவனைத்தாம்மா தேடிட்டு வர்றேன். இங்கே வரலை இல்லையா?''

''ராத்திரிகூட அவன் வரலை. முதல் நாள் ராத்திரி வந்தான். பகல்லதான் ஆளு தட்டுப்படுறதே இல்லையே... உங்களுக்குள்ள ஏதாவது சண்டையா என்ன?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. அவனை நேர்ல பார்த்தாத்தானே அதையும் விசாரிக்கமுடியும்'' பேசியவாறே வராந்தாவில் அமர்ந்தார் ஸ்ரீகுமார்.

''இட்லி எடுத்து வெச்சிருக்கேன். வாங்க சாப்பிடலாம். நீங்க ரெண்டு பேரும் எனக்குப் பிள்ளைங்கதான்.'' அம்மா பரிமாறுவதற்காக எழுந்து உள்ளே போனார்.

ஸ்ரீகுமார் காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டார்.

அம்மாவின் துயரத்தில் அவரும் சேர்ந்து பங்கு கொண்டார்.

ஸ்ரீதேவி சொல்லியது போல் பிரபாகரனின் உடம்புக்குள் ஏதாவது ஆவி புகுந்திருந்தால் அதை விரட்டியே தீரவேண்டும் என்று ஸ்ரீகுமார் தீர்மானித்தார். அதனால் தேவதத்தன் நம்பூதிரியைப் பார்க்கப் போனார். அவரைப் பார்த்து எல்லா விவரங்களையும் தெரிவித்தார்.

''நீங்க சொல்றது உண்மையா இருந்தா பகல் நேரத்துல அவன் எங்க இருக்கிறான்னு கண்டுபிடியுங்க. அதைச் செஞ்சுட்டிங்கன்னா உங்க நோக்கம் நிறைவேறிடும்.''

''எங்கேயெல்லாமோ தேடிப் பார்த்துட்டோம். ஒண்ணும் தெளிவா தெரியலை. அவனோட சொந்த வீட்டுக்கே அவன் வர்றது இல்லையே?''

''எப்படி இருந்தாலும் பகல் நேரத்துல அவன் எங்கேயாவது தங்கித்தான் ஆகணும். சரி, நான் வேறொரு வழியில பார்க்கிறேன்!'' என்றவர், வீட்டுக்குள் போய் ராசிப் பலகை மற்றும் சோழிப்பையை எடுத்து வந்தார்.

பலகையைச் சரியான திசையில் பொருத்தி, தேவஸ்தானங்களிலும் குருஸ்தானங்களிலும் சோழிகளை வைத்தார்.

கைப்பிடிச் சோழியை எடுத்துக் குலுக்கிப் போட்டார். கணக்கிட்டார்.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்துவிட்டு மறுபடியும் அதையே தொடர்ந்தார். அவரது முகத்தில் சந்தேகத்தின் அலைகள் உயரத்தொடங்கின.

''பிரபாகரன் தற்சமயம் இடமில்லாமல் அலைந்து திரிகிறான்.'' திருமேனி கடைசியாகச் சொன்னார்.

''இப்படிச் சொன்னா எப்படி?''

''பிரபாகரனோட ஆத்மா சரியான போக்கிடம் இல்லாம அலைஞ்சிட்டிருக்கு.''

'' என்ன சொன்னீங்க, ஆத்மாவா?'' ஸ்ரீகுமார் வியப்புடன் கேட்டார்.

''ஆமாம்... அதுவேதான். நீங்க இப்போ பார்க்குற பிரபாகரன் உண்மையான நபரே இல்லை. தெளிவாகச் சொன்னால் அது பிரபாகரனின் உடம்பு மட்டும்தான்.''

''புரியலையே நீங்க சொல்றது?''

''பிரபாகரனைக் கொலை பண்ணின பிறகு அந்த உடம்புல வேறு ஏதோ ரக்ஷஸை ஏவிவிட்டிருக்காங்க. அதனாலதான் அவனால் பகல் நேரத்தில் நடமாட முடியாமல் இருக்கிறது'' திருமேனி விளக்கினார்.

''அப்ப நான் என்னதான் செய்யணும்?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

உண்மையில் இது ஒரு பெரிய பிரச்சினைதான். பிரபாகரனோட உடம்பை நாம ஏதாவது செஞ்சா, அது



பிரபாகரனையே கொன்னுட்டதாகத்தான் அர்த்தம். நீங்க ரெண்டு பேரும் நண்பர்களா இருந்ததால அவங்க அம்மாவும் உங்களைப் பழி சொல்லுவாங்க. இதையெல்லாம் நாம சொன்னா, பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூடத்தனம்னு கேலி செய்வாங்க!'' - தேவதத்தன் நம்பூதிரி கூறினார்.

''அதனால...''

''நான் முயற்சி பண்ணிப் பார்க்கிறேன். பிரபாகரனைக் கொண்டுவர முடியுதான்னு''

''இதுவும் புரியலை! ஸ்ரீகுமார் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''அதுக்காக நாம ஒரு ஹோமம் நடத்தணும். அலைஞ்சு திரிஞ்சுக்கிட்டிருக்கிற பிரபாகரனோட ஆத்மாவை ஆவாஹம் பண்ணணும். கொஞ்சம் கஷ்டமான வேலைதான். இருந்தாலும் நான் முயற்சி செஞ்சு பார்க்கிறேன்'' - திருமேனி சுயமே பேசுவது போல் பேசிக்கொண்டார்.

## 36

தேவதத்தன் நம்பூதிரியின் யோசனைப்படி பிரபாகரனது ஆத்மாவை வரவழைப்பதென்ற முடிவுக்கு வந்தார் ஸ்ரீகுமார்.

அதற்கான ஏற்பாடுகள் மிகவும் ரகசியமாக இல்லத்திலேயே மேற்கொள்ளப்பட்டன. எல்லா வேலைகளும் பகல் நேரத்திலேயே நிறைவேற்றப்பட்டன. அதற்கு வேறொரு காரணமும் இருந்தது.

இரவு நேரத்தில் ஹோமம் நடத்தினால் பிரபாகரனது உடம்பில் ஆவேசித்திருக்கிற கோவிந்தனால் அதை உணர்ந்து கொள்ள முடியும். அது ஜயந்தனுக்குத் தெரியவும் செய்யும்.

பகல் நேரம் என்பது கோவிந்த[illegible] செயலற்ற, உயிரற்ற கால நேரம்.

35547
53052

மற்றொரு சிக்கலும் இருந்தது. பிரபாகரனின் ஆத்மாவை வரவழைத்தால் தற்காலிகமாக அது நுழைந்துகொள்வதற்கு ஏற்ற ஒருவனைக் கண்டுபிடிக்க வேண்டும். மந்திரத்தால் பக்குவப் படுத்தப்பட்ட ஒரு மனித உடம்புக்குள் இப்படிப்பட்ட ஆத்மாவைப் பிரவேசிக்கச் செய்யலாம்.

அதற்கேற்ற ஒருவரைக் கண்டுபிடித்து அவரிடமிருந்து சம்மதமும் பெற வேண்டும்.

ஸ்ரீகுமார் தனது வீட்டின் பழைய காரியஸ்தராக இருந்த நாராயணன் நாயரை வரவழைத்தார்.

எழுபது வயதைத் தாண்டிய நாராயணன் நாயர் நம்பிக்கைக்கு உரியவரும்கூட.

அவரிடம் எல்லா விவரங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டால் பிரபாகரன் காணாமல் போனதை அவர் உணர்ந்துகொள்வார். அது வேறு ஏதாவது புதிய பிரச்சினைகளைக் கிளப்பலாம். ஒரு சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியே இவற்றைச் செய்வதாகச் சொன்னார்கள்.

அவரோ, தனது சகோதரி மகள் ஜெயலட்சுமியை இதற்காகப் பரிந்துரை செய்தார்.

இருபத்தோரு வயதான ஜெயலட்சுமி கல்லூரி மாணவி. பி.ஏ. மூன்றாமாண்டு படிப்பவள்.

சிறு வயதிலிருந்தே அவள் இப்படிப்பட்ட மந்திர தந்திரங்களில் ஆர்வம் உள்ளவளாக இருந்தாள்.

எங்கே கோயில் கண்டாலும் வணங்கிவிட்டு வரும் இயல்பு கொண்டவள். மாந்திரீக விஷயங்களிலும், கவடிகளிலும் ஈடுபாடு கொண்டவள்.

மாமா அவளிடம் விஷயத்தைச் சொன்னதும் அவள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள்.

முக்கியமாக ஹோமம் நடத்துவதை நேரடியாகப் பார்க்கலாம் என்பதுதான் அவளது மகிழ்ச்சிக்குக் காரணம். எனவே எந்தவிதமான மறுப்புமின்றி இந்த யோசனைக்கு ஒப்புக் கொண்டாள்.



''என்ன சொன்னாங்க?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''சந்தோஷமா ஒப்புக்கிட்டாள். மத்த மனுஷங்களுக்கு எந்த வகையிலாவது உதவறதுன்னா அவளுக்கு ரொம்பவும் சந்தோஷம். போதாக்குறைக்கு மந்திரதந்திரங்கள்லயும் ஈடுபாடு இருக்கு. எல்லாத்துக்கும் மேலா இந்த மந்திர வித்தைப் பிரயோகங்களை நேரடியாப் பார்க்கலாமேங்கிறது அவளோட ஆசை.''

''ரொம்பவும் நல்லதாப் போச்சு. ஈடுபாடு இருந்தாலே இந்த மாதிரி விஷயங்கள்ல நமக்கு ரொம்பவும் ஒத்தாசையா இருப்பாங்க.'' தேவதத்தன் நம்பூதிரி சொன்னார்.

மறுநாள் வெள்ளிக்கிழமையன்று இல்லத்தில் ஹோமம் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

நாராயணன் நாயர் அதற்குத் தேவையான பொருள்களை ரகசியமாகச் சேகரித்தார்.

''ஒரு விஷயம் ஞாபகம் வச்சுக்கங்க!'' - ஸ்ரீகுமார் எச்சரித்தார்.

''சொல்லுங்க திருமேனி!'' நாராயணன் நாயர் காதைக் கூர்மையாக்கிக்கொண்டு கேட்டார்.

''நமக்கு இந்த விஷயத்துல சில எதிராளிங்க இருக்காங்க. நாம என்ன செய்யறோம்னு தெரிஞ்சுக்க அவங்க ரொம்பவும் ஆர்வமா இருப்பாங்க. யார்கிட்டேயும் வாயைத் திறக்கக் கூடாது. விஷயம் ரொம்பவும் ரகசியமா இருக்கணும். இங்க கொண்டு வர்ற பொருளுங்களைப் பத்திக் கேட்டா, சமையலுக்காகன்னு சொல்லிடுங்க'' - ஸ்ரீகுமார் எச்சரித்தார்.

மறுநாள் காலையில் ஜெயலட்சுமியைக்கொண்டு வருவதாகச் சொல்லி நாராயணன் நாயர் புறப்பட்டார்.

இங்கு தயாராகிக்கொண்டிருந்த திட்டங்களைப் பற்றி சந்துநாயருக்கு எதுவும் தெரியவே இல்லை.

அன்று இரவு ஜயந்தன் தேங்காய் கோடெனுக்கு பிரபாகரனை வரவழைத்தார்.

''நீ குமார் வேலை செய்யும் காலேஜுக்குப் போக வேண்டும். இன்னிக்குப் பௌர்ணமியானதால சில சமயம் எலும்புக்கூடு இல்லாமலேயே அவள் கோயில் பக்கத்துல அலைஞ்சுட்டிருக்கலாம். அப்படி இருந்தா அந்த எலும்புக் கூட்டைக் கொண்டு வர்றது சுலபம்'' -ஜயந்தன் கூறினார்.

''நீங்க சொல்றபடி தொல்லையில்லாம இருந்தா கண்டிப்பா கொண்டு வர்றேன்'' - பிரபாகரன் சம்மதித்தான்.

ஏறத்தாழ நள்ளிரவை நெருங்கும் சமயம் பிரபாகரன் காலேஜ் காம்பௌண்டை நெருங்கினான்.

கையிலிருந்த துண்டு பீடியை கடைசியாக நன்றாக உள்ளுக்கு இழுத்துச் சுண்டியெறிந்த பிறகு காவல் கூண்டுக்குள் நுழைய முற்பட்டார் காவல்காரர்.

பிரபாகரன் மேலும் சற்று நேரம் அங்கேயே நின்றான்.

காவல்காரர் கண் மயங்கத் தொடங்கிய நேரம், பிரபாகரன் கேட்டைக் கடந்து உள்ளே நுழைந்தான்.

பிரதான கட்டடத்தின் வராந்தாவுக்கு வந்து தென்புறமாக நடந்தான்.

அங்குதான் மாடிப்படிக்குச் செல்லும் படிக்கட்டு இருந்தது. ஆள் நடமாட்டம் இல்லாத நேரமானதால் அங்கு விளக்குகளும் எரியாது. எனவே யாரும் தன்னைக் கவனிக்க மாட்டார்கள் என்றும் நினைத்தான்.

மாடியேறி வலது புறமாகத் திரும்பினால் சயின்ஸ் டிபார்ட்மெண்ட்டை அடையலாம்.

ஆனால், மாடிப்படியின் அருகே சென்றதும் யாரோ ரகசியமாகப் பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டது.

''யாரோ வர்றாங்க'' - ஒரு பெண்ணின் குரல்.

முன்பொருதடவை அங்கு நடந்த சம்பவம் பிரபாகரனுக்கு ஞாபகம் வந்தது.

அவன் தயங்காமல் முன்னேறினான்.

அப்போதும் படிக்கட்டின் அருகிலிருந்து மூன்று பேர் அவனை நோக்கி வந்தனர்.



''உயிர்மேல ஆசையிருந்தா அப்படியே திரும்பிப் போயிடு. இல்லேன்னா தலையை நுங்கு சீவுற மாதிரி சீவிடுவோம்'' அவர்களில் ஒருவனிடம் நீண்ட கத்தி இருந்தது.

அதையெல்லாம் பொருட்படுத்தாதவனைப் போல பிரபாகரன் நடந்துகொண்டிருந்தான்.

''மேற்கொண்டு ஓர் எட்டு எடுத்து வைத்தால்கூட இது கண்டிப்பா உன் கழுத்துல விழும்'' - கத்தி வைத்திருந்தவன் கையை ஓங்கினான்.

''ஜாக்கிரதை... அவன் ஆபத்தானவன். ஏதாவது ஆயிடப் போகுது'' பின்னாலிருந்து யாரே ஒருவன் குரல் கொடுத்தான்.

''யோசிக்க வேண்டியதுதான். இவன் பாட்டுக்குச் செத்துத் தொலைஞ்சுட்டா நேரா வந்து நம்மளைப் பிடிச்சுக்குவாங்க. நம்மளை இங்க இருக்குறவங்களுக்குத் தெரியும். இல்லேன்னா இவனைப் பிடிச்சு உலுக்கினாக்கூட கொட்டிடுவான்'' - மற்றொருவன் கூறினான்.

''எல்லாமே சிக்கல்தான். போனாப் போகுது உன்னைக் கொல்லலை. ஓடிப்போ'' வாளைத் தாழ்த்திக்கொண்டான் உயர்த்தியவன்.

ஏற்கெனவே வம்புக்காரனான கோவிந்தனைப் பொறுத்த வரை அவர்களது பேச்சுகள் எல்லாம் ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை.

எதையும் சட்டை செய்யாதவனாக அவன் பாட்டுக்கு நடந்துகொண்டிருந்தான்.

அவனது தைரியத்தைக் கவனித்த கத்தி வைத்திருந்தவன் ஒருகணம் கோபப்பட்டான். ஒருதடவை அவனது உடம்பில் கீறிக் காயப்படுத்திப் பயப்படுத்தினால் என்ன என்று நினைத்தான். கத்திக்காரனும் வீம்புக்காரன்தான். ஒன்றிரண்டு கொலை வழக்குகளில் சிக்கி ஜாமீனில் வெளி வந்திருந்தான் அவன்.

எனவே பிரபாகரனின் கழுத்தைக் குறிவைப்பதற்குப் பதிலாக அவனது வலது தோளைக் குறிவைத்து கத்தியை வீசினான்.

கண்மூடித் திறப்பதற்குள் வலது கையை உயர்த்திய பிரபாகரன், கத்தியின் பிடியை எட்டிப் பிடித்தான். மிகவும் சாதாரணமாக அந்தக் கத்தியை அவனிடமிருந்து உருவிக் கொண்டான்.

கத்தியைப் பறிகொடுத்தவன் மலைத்துப் போய் நின்றான். இதுவரை அவனிடம் வேறு யாரும் இப்படி நடந்து கொண்டது இல்லை. வித்தியாசமான முதல் அனுபவம்.

கத்தி கையைவிட்டுப் போனதும் கத்திக்காரன் மெதுவாகப் பின்னோக்கி நகரத் தொடங்கினான்.

ஆனால், பிரபாகரன் அவர்களுடன் மோதுவதற்கு விருப்பமில்லாதவனைப் போல் வாளை வெளிப்புறமாக வீசியெறிந்துவிட்டுத் தொடர்ந்து நடந்தான்.

மூவராலும் அந்தக் காட்சியை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

கத்தியைப் பறிகொடுத்தவன் பிரபாகரனைப் பின் தொடர்ந்தான். கட்டடத்தின் பின்புறம் புதர் மண்டி வளர்ந்திருந்தது. இருட்டாகவும் இருந்தது.

''உன் மனசுல ரொம்பப் பெரிய வீரன்னு நினைப்பா? எங்களை அவ்வளவு சுலபத்துல எதுத்துட முடியும்னு நெனைக்கிறியா?" - கேட்டவாறே இடுப்பிலிருந்த கட்டாரிகளை உருவி பிரபாகரனின் விலாப் பகுதிகளில் குத்த முயன்றான். எதிராளியின் இரண்டு கைகளிலும் கத்தி.

சற்றும் பதற்றப்படாமல் அவனது இரண்டு கைகளையும் அழுத்திப் பிடித்து அவனையே மொத்தமாக இரண்டு தடவை சுற்றிவிட்டு வீசியெறிந்தான்.

கத்தி வைத்திருந்தவன் ஆழமான குப்பைக் குழிக்குள் போய் விழுந்தான்.

அவனைத் தொடர்ந்து வந்த மற்ற இருவரும் பயத்துடன் பின்னோக்கி நடக்கத் தொடங்கினர்.

பயங்கரம் நிறைந்த சினிமாப் படத்தின் காட்சி போல அவர்களுக்குத் தெரிந்தது.



அதன்பிறகு பிரபாகரன் பாட்டுக்கு நடந்தான்.

லேபரெட்டரி உள்ள பகுதிக்கு வந்தான்.

இரண்டு மாடி கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் நின்றபடி மேற்புறம் பார்த்தான்.

பைப் ஒன்று மேற்புறம் வரை நீண்டிருந்தது. அதுவும் ஜன்னலை ஒட்டித்தான் போனது. அதில் ஏறினால் சீக்கிரமாக மேற்புறத் தளத்தை அடையலாம்.

பைப்பைப் பிடித்து மேற்புறமாக ஏறத் தொடங்கினான்.

இரண்டு அடி உயர்வதற்குள் அவனது எடையைத் தாங்காமல் பைப் மொத்தமாகப் பெயர்ந்து விழுந்தது. நல்ல வேளையாக பிரபாகரன் விழாமல் சுவரில் தொத்திக் கொண்டான்.

அவனது கை சுவரில் ஒரு பல்லியினுடையதைப்போல் ஒட்டியிருந்தது. அவனாலேயே அவனை, அவனது சக்தியை நம்ப முடியவில்லை. கையை அப்படியே மேற்புறமாக எழுப்பினான். ஓர் உடும்பைப்போல் செங்குத்தான வெறும் சுவரில் அவனால் ஏறமுடிந்தது.

ஜன்னலை நெருங்கியவன், குறுக்குக் கம்பிகளை அனாயாசமாக உருவிக் கீழே போட்டான்.

உள்ளே நுழைந்தான்.

அந்த அறைக்குள் யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு, அருகிலுள்ள ஸ்டோர் ரூமில் நுழைந்தான்.

கண்ணாடிக் கூண்டுக்குள் ஸ்ரீதேவியின் எலும்புக்கூடு தொங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தான்.

சுற்றுமுற்றம் பார்த்தான். காலியான கோணிப்பை ஒன்று பீரோவின் அடியில் கிடந்தது.

கண்ணாடிப் பெட்டியிலிருந்து எலும்புக்கூட்டை எடுத்து கோணிப் பைக்குள் போட்டுக்கொண்டு தோளில் போட்டபடி பழையபடி சுவர் வழியாகவே இறங்கினான்.

அவன் மேலிருந்து இறங்கி வருவதை ஏற்கெனவே அங்கிருந்தவர்கள் கவனித்தனர். குப்பைக் குழியில் விழுந்தவனும் அதற்குள் எழுந்துவிட்டிருந்தான்.

''திருடன்... திருடன்...'' அவர்கள் மூவரும் உரத்த குரலில் அலறினர்.

பிரபாகரன் கோணிப்பையுடன் தலைதெறிக்கும் வேகத்தில் ஓடத்தொடங்கினான்.

கேட்டை நெருங்கியபோது தூக்கக் கலக்கத்திலிருந்து விடுபட்ட காவல்காரர் அவனைத் தெளிவாகப் பார்த்தார்.

''பிரபாகரன்...!'' - காவல்காரரின் உதடுகள் அவரையும் மீறி உச்சரித்தது.

## 37

பிரபாகரனுக்கு தோளில் போட்ட கோணி மூட்டையுடன் காலேஜ் கேட்டைத் திறந்து வெளியேறுவதைவிட அதன்மேல் தாவி ஏறுவதுதான் சுலபம் என்ற தோன்றியதால் நிற்காமல் கேட்டின் மீது ஏறினான். அதை எதிர்பார்த்துக் காத்திருந்த காவல்காரர் அவனைப் பின்புறத்திலிருந்து கட்டிப்பிடித்து விட்டார்.

உடனே கேட்டிலிருந்து கீழே இறங்கிய பிரபாகரன் காவல்காரரை எரித்துவிடுவது போல் பார்த்தான்.

''என்னை விட்டு விலகி நில்!'' - பிரபாகரன் கடுமையான குரலில் கட்டளையிட்டான்.

'' இந்த மூட்டையுடன் உன்னை இங்கிருந்த போக நான் அனுமதிக்க முடியாது'' - காவல்காரரின் கையில் அடுத்த கணம் கத்தி மின்னியது.

''இந்தத் தகரம் எதுக்கு?''

''கோணி மூட்டையை நீ இங்கேயே போடலேன்னா, உன்னைக் கொல்லுறதைத் தவிர எனக்கு வேற வழி கிடையாது. நான் ரிட்டயர்டு மிலிட்டரிக்காரன்'' - காவல்காரர் மீசையை நீவி விட்டபடி பேசினார்.



''அப்படியா சொல்றீங்க? அப்ப நான் கட்டுப்பட்டுத்தான் ஆகணும்!'' - பிரபாகரன் மீண்டும் கேட்டைப் பிடித்தான்.

''விளையாடாத... நான் பொல்லாதவன்!'' - காவல்காரர் எச்சரித்தார் மீண்டும்.

சட்டென்று திரும்பிய பிரபாகரன் காவல்காரரின் சட்டையைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கினான். காவல்காரரின் கைகள் காற்றில் பிடியைத் தேடி அலைந்தன. கண்ணிமைப் பதற்குள் அவரைக் காவல் கூண்டுக்கு மேலாக வீசியெறிந்தான்.

இப்படியொரு தாக்குதலை காவல்காரர் எதிர்பார்க்க வில்லை என்பது புரிந்தது. சுதாரிப்பதற்குள் உச்சியிலிருந்து உருளத் தொடங்கியவர் சுவரில் மோதி பொத்தென்று தரையில் விழுந்தார். அதன்பிறகு அவர் எழுந்திருக்க முயன்றும் முடியவில்லை.

ஆனால், திருடன் யார் என்பது அவருக்கு நன்றாக விளங்கியது.

ஸ்ரீகுமார் சாரின் நண்பர் மாதிரிதான் தெரிகிறார். அவரைப் பார்ப்பதற்காக இரண்டு மூன்று தடவை காலேஜுக்கு வந்திருப்பதும் ஞாபகம் வந்தது.

அதன் பிறகு பிரபாகரன் அங்கு நிற்கவில்லை. விரைவாக கேட்டைத் தாண்டி வெளியேறினான்.

பன்னிரண்டு மணிக்குமேல் ஆகியிருந்தது. அப்போது மேற்குப் பக்கத்திலிருந்து இரண்டு போலீஸ்காரர்கள் வந்து கொண்டிருந்தனர். சமீபகாலமாகத் திருட்டுபயம் அதிகரித்திருந்ததால், பிரத்தியேகமாக 'பீட்' போட்டிருந்தனர்.

கோணிப்பை ஒன்றைத் தோளில் போட்டுக்கொண்டு வரும் பிரபாகரனை அவர்கள் கவனித்தனர். வருபவன் நிச்சயமாகத் திருடன்தான் என்று நினைத்தனர்.

''டேய்... நில்லுடா அங்கேயே!'' - ஒரு போலீஸ்காரர் குரல் கொடுத்தார்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு பிரபாகரன் அப்படியே நின்றான்.

அந்த முச்சந்தியில் அப்போது அவர்களைத் தவிர வேறு யாருமே இல்லை.

போலீஸார் அவனை நெருங்கினர்.

''சாக்குக்குள்ள என்னடா?'' - போலீஸ்காரரின் குரல் மிரட்டல் தொனியில் இருந்தது.

''எலும்புத்துண்டுங்க!''

''மனுஷ எலும்பா?''

''ஆமாம்!''

''ஆகா. நல்ல திருட்டுத்தான்... எங்கேயிருந்து திருடிட்டு வர்ற?''

''சுடுகாட்டுலயிருந்து!'' - தயங்காமல் பதிலளித்தான்.

எங்களைத் தெரியுதில்லையா?''

''அதனாலதான் உண்மையைச் சொன்னேன். சந்தேகமா இருந்தா மூட்டையை அவிழ்த்தே காட்டுறேனே!'' கோணியைத் தோளிலிருந்து இறக்கி வாய்ப்பகுதியைப் பிரித்துக் காட்டினான்.

அவர்கள் பரஸ்பரம் தங்களை பார்த்துக்கொண்டனர்.

''எதுக்கு இது?'' - மற்ற போலீஸ்காரர் கேட்டார்.

''மந்திரவாதம் பண்றதுக்கு!'' - பிரபாகரன் வெகு சாதாரணமான ஒரு விஷயம் என்பது போல் பேசினான்.

''சரி, எதுக்காக இருந்தாலும் நாம ஸ்டேஷனுக்குப் போயிடலாம். அங்க போனபிறகு வேணும்னா உன் மந்திரவாதத்தைச் செய்யலாம். ஸ்டேஷனில் இருக்கிற மத்தவங்களும் வேடிக்கை பார்க்கலாம் என்ன சொல்ற?'' - ஒருவர் மற்ற போலீஸ்காரரைப் பார்த்துக் கண்சிமிட்டியபடி பேசினார்.

பிரபாகரன் சாதாரணமான ஒருமனிதன் என்று நினைத்துத்தான் போலீஸார் அவனிடம் பேசிக்கொண்டிருந்தனர். ஏதோ கிளம்பி வந்ததற்குப் பலனாக ஒரு புதிய கேஸ் கிடைத்ததாகவும் இருக்குமென்று கருதினர்.

''சரி, கிளம்பு ஸ்டேஷனுக்கு!''

''அங்கேயெல்லாம் வர்றதுக்கு எனக்கு நேரமில்லையே. வரவும் மாட்டேன்'' - பிரபாகரன் தன் வழியே நடக்க முயன்றான்.



''நில்லுடா... டேய்... நாங்க சொல்லிக்கிட்டே இருக்கோம். நீ பெரிய ரௌடி மாதிரி போய்ட்டே இருக்க... போனாப் போகட்டும்னு பொறுமையாப் பேசினா, விளையாட ஆரம்பிச்சுட்டியா?''

ஒருவர் சட்டென்று பாய்ந்து அவனைப் பிடித்தார். ஆனால் பிரபாகரன் இரண்டு பேரையும் ஒரே நேரத்தில் இரண்டு கைகளால் தூக்கி வலுவுடன் வீசியெறிந்தான்.

அந்தரத்தில் சற்று நேரம் பறந்தவர்கள் அருகிலிருந்த ஒரு காம்பௌண்ட் சுவருக்குள் போய் விழுந்தார்கள். பிறகு எதுவுமே நடக்காததைப் போல அவன் பாட்டுக்கு நடக்கத் தொடங்கினான்.

தட்டுத்தடுமாறி எழுந்து வெளியே வந்து பார்த்தபோது பிரபாகரன் காணாமல் போயிருந்தான்.

லாரி ஒன்று அந்தப் பக்கமாக வந்தபோது கைகாட்டினான். லாரி நின்றது. விசாரித்த பிறகு ஏறி உட்கார்ந்தான்.

''சாக்கு மூட்டையில் என்ன?'' - லாரி டிரைவர் கேட்டார்.

''எடைக்குப் போடவேண்டிய பழைய அலுமினியப் பாத்திரங்கள் கிடக்குது!'' - என்றவாறு கோணியைத் தனது காலடியிலேயே போட்டுக்கொண்டான்.

ஊரை அடையும்போது விடியற்காலை மூன்று மணியாகி இருந்தது.

கோணிப்பையுடன் சந்துநாயரின் தேங்காய் கோடௌனை நோக்கி நடந்தான்.

பிரபாகரன் என்கிற கோவிந்தனை எதிர்பார்த்தபடி அங்கு ஜயந்தனும், சந்துநாயரும் கட்டிலில் படுத்திருந்தனர்.

பிரபாகரன் கதவைத் தட்டினான்.

இருவரும் எழுந்தனர்.

அவனிடமிருந்த கோணிப்பையைப் பார்த்ததும் இருவரது முகங்களிலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

''இதுதான் நமக்குத் தேவைப்பட்டதா?''

''ஆமாம்!'' என்ற பிரபாகரன் கோணி மூட்டையைப் பிரித்தான்.

''காலதாமதம் செய்யாம உடனே எரிச்சுட வேண்டியது தான்'' - ஐயந்தன் கூறினார்.

சந்துநாயர் கோடௌனுக்குள் தயாராக வைத்திருந்த மண்ணெண்ணெய் டின்னை எடுத்தார்.

ஸ்ரீதேவியின் எலும்புக்கூட்டை பக்கத்திலிருந்த கொன்றை மரத்தின் அடியில் போட்டனர். மந்திரம் உச்சரித்தபடியே அதன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி, ஐயந்தன் தீ கொளுத்தினார்.

எலும்புக்கூடு எரியத் தொடங்கியது.

''இனிமேல் அவள் கண்ணுக்குத் தெரியும் படியாக உலாவ முடியாது!'' - ஐயந்தன் வெற்றிப்பெருமிதத்துடன் பேசினார்.

''கோவிந்தா, இந்த எலும்பு மொத்தமும் எரிஞ்சு சாம்பலாகிறவரைக்கும் நீ இங்கேயே காவலிரு. முழுசா எரியறதுக்குள்ள யாராவது கொண்டுபோயிட்டாங்கன்னா சிக்கல்!'' - ஐயந்தன் எச்சரித்தார்.

சந்துநாயரும் ஐயந்தனும் அங்கிருந்து கிளம்பினர்.

பிரபாகரன் அங்கேயே காவலிருந்தான்.

அதேசமயம் சற்றுத் தொலைவில் ஏதோ ஒரு வெளிச்சம் தெரிவதை ஸ்ரீகுமார் கவனித்தார். தேவதத்தன் நம்பூதிரியும் அதைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

''தேங்காய் கோடௌன் கிட்டயிருந்துதான் வெளிச்சம் தெரியுது. மந்திரவாதி ஐயந்தன் இப்ப அங்கதான் இருக்கிறார். ஒரு தடவை போய்ப் பார்த்துட்டு வந்துட்டா என்ன?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

திருமேனியும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

தென்னந்தோப்பை நெருங்கியதுமே அவர்களுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

எதையோ அங்கே போட்டு எரிக்கிறார்கள்.

வேகவேகமாக நடந்தனர்.

சற்றுத் தொலைவிலேயே பிரபாகரன் அதன் அருகில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.



''என்ன இது?'' ஸ்ரீகுமார் கேட்டார்.

''எலும்புக்கூடு எரியுது.'' அப்போது பேசியவன் கோவிந்தன். உண்மையைச் சொன்னான்.

''யாரோட எலும்புக் கூடு?''

''ஒரு பெண்ணோடது.''

''என்ன பிரபாகரா இதெல்லாம்?'' ஸ்ரீகுமார், பிரபாகரனைப் பிடிக்க முயன்றார்.

ஆனால் பிரபாகரனை அங்கிருந்து அசைக்க முடியவில்லை. நட்டு வைத்த தூண்மாதிரி அசையாமல் நின்றான். அசாதாரணமான பலத்துடன் இருப்பதாகத் தெரிந்தது. அது மட்டுமின்றி முன்பின் தெரியாதவனைப்போல் அவன் பேசியது வேறு ஸ்ரீகுமாரை குழம்ப வைத்தது.

அதேநேரம் தேவதத்தன் நம்பூதிரி, தரையிலிருந்து கொத்தாகக் கைப்பிடி பசும்புல்லைப் பிடுங்கி மந்திரித்தவாறே எரிந்து கொண்டிருக்கும் எலும்புக்கூட்டின் மீது போட்டார்.

அடுத்த விநாடியே தீ அணையவும் செய்தது.

''நீங்க என்ன காரியம் பண்ணிட்டீங்க?'' பிரபாகரன் எழுந்து பக்கத்திலிருந்த ஸ்ரீகுமாரைத் தாக்க ஆரம்பித்தான்.

உடனே திருமேனி அவன் பக்கமாகத் திரும்பி, அவனை நோக்கி சுண்டுவிரலை நீட்டினார்.

பிரபாகரன் அப்படியே அசைவற்றுப் போனான்.

''யார் நீ?'' - திருமேனி கேட்டார்.

''கோவிந்தன்!'' - பதிலளித்தான்.

''அப்ப பிரபாகரன் எங்கே?''

''அவன் இப்ப இல்லை. நான் மட்டும்தான் இருக்கிறேன்.'' சொல்லியபடி அவன் அங்கிருந்து ஓடி மறைந்தான்.

எலும்புக்கூட்டில் எரிந்த தீ இப்போது முற்றிலுமாக அணைந்துவிட்டிருந்தது.

''எனக்கு என்ன தோணுதுன்னா, இதை எங்க காலேஜில இருந்து திருடிட்டு வந்திருக்கணும். அநேகமா இது ஸ்ரீதேவியோட எலும்புக்கூடாத்தான் இருக்கும்.''

''நீங்க சொல்றது உண்மையா இருந்தா, அவளுக்கு இந்த எலும்புக்கூடு இனிமேல் பயன்படாது. நெருப்பு தீண்டிட்ட எலும்பை அவளால பயன்படுத்த முடியாது''

''அப்புறம் இதை என்ன செய்யறது?''

''தேவையான மந்திரங்களைப் பிரயோகித்து நாம இதை பாதுகாக்கணும்.''

''அப்படியானா ஸ்ரீதேவியோட விஷயம்?''

''அதை நாம பிற்பாடு பார்த்துக்கலாம்.''

''இந்த எலும்புக்கூட்டை என்ன பண்றது?''

''அதைத் திரும்பவும் அந்த கோணிப்பைக்குள்ளேயே போட்டு எடுத்துட்டு வாங்க!''

ஸ்ரீகுமார் எலும்புத் துண்டுகளை கோணிப்பைக்குள் போட்டுக்கொண்டு திருமேனியைப் பின்தொடர்ந்தார்.

இருவரும் இல்லத்தை அடைந்தனர்.

''தற்சமயம் இந்த மூட்டை அந்த எட்டி மரத்து மேல இருக்கட்டும், மறைவா வையுங்க!'' திருமேனி கூறினார்.

உடனேயே மரத்தின் மீது ஏறிக்கொண்ட ஸ்ரீகுமார், கோணிப்பையை எட்டிமரத்தின் அடர்த்தியான இலைப் பரப்புக்குள் மறைத்து வைத்தார்.

அடுத்தபடியாக நாம் செய்யவேண்டிய வேலை, கோவிந்தனை அழிப்பதுதான். அவன் பகல் நேரத்தில் எங்கும் வெளியேற முடியாது. இரவு நேரத்தில் அவனைப் பிடிப்பதும் சுலபமல்ல. அதனால் அவன் பகல் பொழுதில் தங்கியிருக்கும் இடத்தை நாம் கண்டுபிடிப்பது அவசியம்'' -தேவதத்தன் கூறினார்.

பொழுது புலர்ந்தது.

சந்துநாயரும், ஜயந்தனும் ஒன்றாகப் புன்னை மரத்தின் அடிப்பகுதியை வந்து பார்த்தனர். அங்கு கொஞ்சம் புல் மட்டும் கருகிக் கிடந்தது.

''சாம்பலைக் காணோமே?'' - சந்துநாயர் கேட்டார்.

''நானும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எலும்பு எரிஞ்சதாத் தெரியலை. நடுவில என்னமோ



சிக்கல் ஏற்பட்டிருக்கு. எதுக்கும் நாம கோடௌனுக்குள்ள போய்ப் பார்ப்போம்.''

அங்கு கோணிமூட்டை இல்லை. அத்துடன் பிரபாகரனையும் காணோம்!

## 38

**அ**ன்று இரவு ஸ்ரீகுமாரின் இல்லத்தில் ஹோமத்தைத் தொடங்கினார்கள்.

பழைய காரியஸ்தர் நாராயணன். நாயரின் தங்கைமகள் ஜெயலட்சுமியும் வரவழைக்கப்பட்டிருந்தாள்.

தேவதத்தன் நம்பூதிரியால் பிரபாகரனின் ஆத்மாவை வரவழைக்க ஹோமம் ஆரம்பிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே, ஜெயலட்சுமியின் கண்களில் மாற்றம் தென்படத் தொடங்கியது.

விரைவிலேயே அவை ஸ்ரீதேவியின் கண்களைப் போல் மாறிவிட்டன.

அதைப் பார்த்த ஸ்ரீகுமார் அதிர்ந்தார். 'இந்த உடலுக்குள் ஸ்ரீதேவி எதற்காக நுழைந்திருக்கிறாள்? பிரபாகரனின் ஆத்மா ஏன் வரவில்லை? அவரை கேள்விகள் துளைத்தன. தேவதத்தன் நம்பூதிரியும் இதே மாதிரி யோசனையில்தான் இருந்தார்.

அவர்கள் இருவரும் ஆர்வத்துடன் ஜெயலட்சுமியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தனர். அவள் பேச ஆரம்பித்தாள். பேசும்போது குரல் தழுதழுத்தது.

''என் எலும்புக்கூடு மேல நெருப்பு விழுந்துவிட்டதால, இனிமேல் அதுல நான் பிரவேசிக்க முடியாது. இனி நான் பழையபடி அலையவேண்டியதுதான்'' - என்றாள் ஸ்ரீதேவி.

தேவதத்தனும், ஸ்ரீகுமாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஸ்ரீகுமார், கண்களை மூடிக்கொண்டு தீர்க்கமாக யோசித்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக, ''நீ ஜெயலட்சுமியோட

உடம்புலேயே இப்போதைக்கு இரு. அந்தப் பொண்ணோட ஆத்மாவ, உங்கிட்டயே அடக்கி வெச்சுக்க. நான் கூடிய சீக்கிரம் எல்லாத்துக்கும் ஒரு மாத்து வழி செய்யறேன் என்றார். அன்றைய இரவை அவர்கள் மூவரும் அவரவர் பிரச்சினைகளைப் பற்றி யோசித்தபடி கழித்தனர்.

மறுநாள் காலையில் காலேஜுக்குப் புறப்பட்டார் ஸ்ரீகுமார்.

அவர் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்ததும் மாணவர்களும் வேறு சில ஆசிரியர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். 'பிரபாகரன்தான் எலும்புக்கூட்டை திருடிக்கொண்டு போனான்' என்று வாட்ச்மேன் சொன்னதை அவர்களில் பலர் நம்பவில்லை. 'காவல்காரன் போதையில் இருந்திருப்பான். ஸ்ரீகுமார் சாரோட ஃபிரெண்டு, திருடற அளவுக்கு மோசமானவராக இருக்க மாட்டார் என்று அவர்களுக்குள்ளேயே பேசிக் கொண்டனர்.

எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீகுமார், சிரித்த முகத்தோடு அவர்களை சமாதானப் படுத்தினார். ''திருட வந்தது என் நண்பன் பிரபாகரனா இருக்க முடியாது! ஆனா, நம்ம காவல்காரரோ சத்தியம் பண்ணாத குறையா 'நான் பார்த்தே'ன்னு சொல்றாரு, எதுக்கு இவ்வளவு பிராப்ளம்? தொலைஞ்சு போன எலும்புக் கூட்டுக்கு பதிலா நானே வேற ஒண்ணு வாங்கி வச்சுடறேன்'' என்றார்.

அப்போது அந்தப் பக்கம் வந்த பிரின்ஸிபால், ''மிஸ்டர் ஸ்ரீகுமார்! நடந்தது நடந்துடுச்சு. உங்க ஃபிரெண்டு இதப் பண்ணிருப்பார்னு நானும் நினைக்கலை. அதனாலதான் இது விஷயமா போலீஸ்லேயும் புகார் கொடுக்கலை. நீங்க போய் உங்க வேலையைக் கவனிங்க'' என்றார்.

பிரின்ஸிபாலின் தலையைப் பார்த்ததுமே பலர் அங்கிருந்து நழுவத் தொடங்கியிருந்தனர். அவர் பேசி முடித்தபோது எல்லோரும் அந்த இடத்தைவிட்டு அகன்றிருந்தார்கள். தனியாக நின்றுகொண்டிருந்த ஸ்ரீகுமாரிடம் பிரின்ஸிபால் தோழமையோடு



நெருங்கி, தோளில் கை போட்டுக்கொண்டார். ''ஸ்ரீகுமார்! உங்க டெடிகேஷனையும், வேலையையும் யாரும் குறை சொல்ல முடியாது. ஆனாலும் இப்பல்லாம் நீங்க அடிக்கடி லீவு போடறீங்க அதை மட்டும் கண்ட்ரோல் பண்ணீங்கன்னா நல்லா இருக்கும்'' என்றார்.

ஸ்ரீகுமாரின் கண்கள் கலங்கின. ''ஸாரி சார். இவ்வளவு அன்பா என்னை நீங்க நடத்தறதுக்கு நான் கொடுத்து வெச்சிருக்கணும். ஒரு நல்ல ஆத்மாவுக்கு உதவி பண்ணப் போய், நான் வேற சில சிக்கல்கள்ல மாட்டிக்கிட்டேன். சீக்கிரம் அந்தப் பிரச்சினையையெல்லாம் 'ஸால்வ்' பண்ணிட்டேன்னா... மறுபடியும் வழக்கம் போல காலேஜ்லயே குடித்தனம் நடத்த ஆரம்பிச்சிடுவேன்,'' என்றார்.

''நோ! நோ! இன்னும் எத்தனை நாளைக்கு கட்டை பிரம்மச்சாரியா இருப்பீங்க? உங்க பிராப்ளம் முடிஞ் சிடுத்துன்னா, நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக் குங்க. எத்தனை நாளைக்கு எலும்புக்கூடுங்களோட தூங்கப் போறீங்க?'' என்று கண்ணை சிமிட்டியபடி சொல்லிவிட்டு, தனது அறையைப் பார்த்து நடக்க ஆரம்பித்தார் பிரின்ஸிபால்.

அன்று முழுவதும் ஸ்ரீகுமாருக்கு பாடங்களில் மனம் ஓடவே இல்லை. கல்லூரி முடிந்ததும், நேராக லேபுக்கு சென்றார். சாப்பிடக்கூட பிடிக்கவில்லை. அவர் மனம் என்னென்னவோ யோசனைகளில் ஆழ்ந்தது.

''எனக்கும் சந்துநாயருக்கும் என்ன சம்பந்தம்? நான் எதற்காக இப்படி கிராமத்துக்கும், காலேஜுக்குமாக அலைகிறேன்? யாருக்காக வினோதமான ஆபத்துக்களை தைரிய மாகச் சந்திக்கிறேன்? இதற்குப் பெயர்தான் விதியா? ஸ்ரீதேவிக் குட்டியையும், அவள் தாயையும் சந்துநாயர் கொன்றுவிட்டு சொத்தை அனுபவிக்கிறார். அவருடைய மருமகன், தன்னுடைய மாமனின் நடவடிக்கைகள் பிடிக்காமல் ஒதுங்கி வாழ்ந்தான்.

மந்திரவாதம் செய்யும் எதிரிகளோடு நான் மோதுவது யாருக்காக? ஸ்ரீ தேவியின் சொத்துக்களை மீட்டு நான் யாருக்குத்

தரப்போகிறேன்? இந்தப் போராட்டத்தில் பிரபாகரனை இழந்து விட்டேனா, இல்லையா என்றே தெரியவில்லை. அவனுடைய ஆத்மா எங்கே இருக்கிறது? அவனுடைய உடம்பில் புகுந்து கொண்டிருக்கும் கோவிந்தனை விரட்டியடித்தால், ஒருவேளை மறுபடியும் பிரபாகரனுக்கு உயிர் கிடைக்கலாம். ஸ்ரீதேவியோ இனி உடம்பு இல்லாமல் அலையவேண்டிய நிலைக்கு வந்துவிட்டதாகச் சொல்கிறாள்.

அமைதியாகப் போய்க்கொண்டிருந்த வாழ்க்கையில் புயலடிக்க வைத்து விட்டாளே ஸ்ரீதேவி! யோசித்துப் பார்த்தால் அவளுக்காக, அவளுக்காக மட்டுமேதான் இத்தனை தூரம் போராடுகிறோம். அந்தக் களங்கமில்லாத ஆத்மா, சந்துநாயரை ஒழித்துக் கட்டினால்தான் நிம்மதி அடையும். அவளுடைய தாயையும் அவளையும் கொன்றவர்களைப் பழிவாங்க என்னுடைய உதவியை நாடி வந்திருக்கிறாள். அவளுடைய ஆத்மா சாந்தியடைய எத்தனை ஆபத்து வந்தாலும் சமாளிக்க வேண்டியது தான்... ஸ்ரீகுமார் ஒரு முடிவுக்கு வந்தபோது, லேபின் கதவருகே ஏதோ சத்தம் கேட்டது. இரவு விளக்கின் ஒளியில் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் 12.05 என்றது கடிகாரம்.

'யார் இந்த நேரத்தில் லேபுக்கு வராங்க...?' என்று யோசித்தபடி எழுந்தார் ஸ்ரீகுமார். அப்போது திடீரென்று அந்தக் கதவு வெடித்து திறந்தது. உள்ளே கோவிந்தன் நுழைந்தான். வந்தவன் ஸ்ரீகுமாரை நெருங்கினான்.

''டேய் மரியாதையா அந்த நாகமாணிக்கத்தை எங்கிட்ட கொடுத்துடு. உன்னை சேதம் பண்ணாம போயிடறேன். ஏதாவது தப்பாட்டம் ஆடினா, உன் தோலை உரிச்சு, உன்னோட லேப்லயே உன்னை எலும்புக்கூடா தொங்கவிட்டுடுவேன்.'' - என்று உறுமினான்.

ஸ்ரீகுமாரால் வந்திருக்கும் ஆபத்தை ஊகிக்க முடிந்தது. 'ஏதாவது பேசி, அவனுடைய கவனத்தைக் கலைத்து, தானும்



தப்பிக்க வேண்டும்; நாகமாணிக்கத்தையும் காப்பாற்ற வேண்டும்' என்று நினைத்தார்.

''பிரபாகரா! உனக்கு எதுக்கு நாகமாணிக்கம்?'' என்று ஆரம்பித்தார்.

''நான் பிரபாகரன் இல்லை. கோவிந்தன் போன தடவை ஸ்ரீதேவியோட எலும்புக்கூட்டை மட்டும்தான் எடுத்துட்டு வரச் சொன்னாரு ஜயந்தன். அந்த வேலையை வெற்றிகரமா முடிச்சுட்டேன். இப்ப உன் ஆளு உருவமில்லாம அலையறாள். இந்த தடவை நாகமாணிக்கத்தை எடுத்துவர சொல்லி இருக்காங்க. அதையும் எடுத்துட்டுப் போய் அவங்ககிட்ட சேர்த்துட்டா உன் ஆட்டம் க்ளோஸ். ஏற்கெனவே உன் நண்பன் பிரபாகரனை வெட்டி விட்டுட்டோம். அடுத்தது ஸ்ரீதேவி. இப்ப நாக மாணிக்கம். அதையும் ஒழிச்சுட்டா நீ தனி ஆளு. உன்னை தேவதத்தன் நம்பூதிரியோட அப்பன் வந்தாலும் காப்பாத்த முடியாது. மரியாதையா விலகிடு'' என்றான் கோவிந்தன்.

ஸ்ரீகுமார் மெல்ல மெல்லப் பின்வாங்கித் தற்காப்புக்காக ஏதாவது கிடைக்குமா என்று தேடிக்கொண்டே பேச்சை வளர்த்தார்.

''இத பாரு கோவிந்தா! என் உயிரே போனாலும் அந்த நாகமாணிக்கத்தைத் தரமாட்டேன். உன்னையும் எஜமான ருங்களையும் மொத்தமா ஒழிச்சுட்டு, அதைக் கோயில்ல மறுபடியும் சேர்த்துடுவேன், ஸ்ரீதேவிக்கு உடம்பு இல்லாட்டி என்ன? அவளுக்கு தேவி சௌபர்ணிகாவோட ஆசி இருக்கு. அவளுக்கு ஒரேயொரு லட்சியம்தான். அந்த சந்துநாயர் சாகணும். அவ குடும்பத்த சீரழிச்ச அந்தப் பாவியும், அவனுக்கு துணையா நிக்கற ஜயந்தனும் ஒழியணும்.ரெண்டும் நடந்துட்டா அவ ஆத்மா சாந்தி அடைஞ்சிடும். உன்னை இந்த உடம்பு லேர்ந்து எப்படியும் விரட்டிடுவேன். அப்ப மறுபடியும் என் நண்பனுக்கு உடம்பு கிடைச்சிடும். தோக்கப் போறது நான் இல்ல; நீங்கதான்'' என்று உறுதியோடு பேசினார்.

இதைக்கேட்ட கோவிந்தன் ஆத்திரத்தோடு ஸ்ரீகுமார் மேல் பாய்ந்தான். ஸ்ரீகுமாரை பயம் கவ்வியது 'தான் இன்று பிழைக்கப் போவதில்லை' என்று தோன்றியது. கோவிந்தனிடம் தைரியமாகப் பேசினாலும், அவர் உள்ளுக்குள் நடுங்கிக் கொண்டுதான் இருந்தார். கோவிந்தன் ஆக்ரோஷமாகப் பல்லைக் கடித்துக்கொண்டு ஸ்ரீகுமாரைத் தாக்க தொடங்கிய போது, ''கோவிந்தா! நில்'' என்று ஒரு பெண் குரல் சத்தமாக ஒலித்தது. கோவிந்தன் ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்துப் போய் திரும்பிப் பார்த்தான். ஸ்ரீகுமாரும் ஆச்சரியத்தோடு வந்தவளைப் பார்த்தார். உள்ளே ஜெயலட்சுமி ஆவேசமாக நுழைந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் கோவிந்தன் சற்ற தயங்கினான். ஆனாலும் சுதாரித்துக்கொண்டு அவளை வீழ்த்துவதற்காகத் தாவினான்.

அப்போதுதான் அந்த விநோதம் நடந்தது. பார்ப்பதற்கு மெல்லியலாள் போல் தெரிந்த ஜெயலட்சுமி, கோவிந்தன் கையைப் பிடித்து தட்டாமாலை சுற்றுவது போல் சுழற்றினாள். அந்த வேகம் தாங்காமல் கோவிந்தன் அரற்றினான். அவனை கரகரவென்று சுழற்றிய ஜெயலட்சுமி வெளியே இருட்டில் விசையுடன் வீசினாள். அவன் விழுந்த இடம் எதுவென்றே தெரியவில்லை. சற்று நேரம் அந்தப் பிரதேசமே அமைதியாக இருந்தது.

ஸ்ரீகுமாருக்கு பிரமிப்பாக இருந்தது. 'இவள் எப்படி... இங்கே?' என்று யோசித்தபடி, ''ஜெயா! நீ எங்க வந்த? இதென்ன மாயம்?'' என்றார்.

ஜெயலட்சுமியிடமிருந்து கொஞ்ச நேரம் பதில் வரவில்லை. அவள் முகத்தில் வேர்வை மழை. கோவிந்தனைச் சுழற்றி எறிந்த வேகத்தில் இன்னும் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. தொடர்ந்து பெருமூச்சாக விட்டுக்கொண்டிருந்தாள். அது ஆயாசமா அல்லது கோபத்தின் விளைவா? என்று ஸ்ரீகுமாருக்குப் புரியவில்லை. அவளுடைய மூச்சுக்கு ஏற்றபடி அவளுடைய மார்புகள் விம்மித்



தாழ்ந்து கொண்டிருந்தன. அந்த இருட்டு வேளையில், காளி போல் நின்ற அவளுடைய உக்கிரமான தோற்றமும், அதையும் மீறி பிரகாசித்துக்கொண்டிருந்த அவளுடைய இளமையும் ஸ்ரீகுமாரை என்னவோ செய்தன. இன்னும்சொல்லப் போனால், அந்த இரவின் பயங்கரத்தையும் மீறி ஸ்ரீகுமாருக்குள் ஏதோ ஒரு பட்டாம்பூச்சி படபடத்தது. 'இந்தப் பெண் இத்தனை அழகாக இருப்பதை இதுவரை நான் கவனிக்கவில்லையே!' என்று அவருக்குத் தோன்றியது.

''நான் ஜெயலட்சுமி இல்ல... ஸ்ரீதேவி'' என்றாள் அவள். அந்தக் குரலைக் கேட்டதும் தான் ஸ்ரீகுமார் நனவுலகத்துக்கு வந்தார். அவருக்கே அவருடைய சிந்தனை வெட்கத்தைக் கொடுத்தது. எத்தனையோ நட்டநடு ராத்திரிகளில் ஸ்ரீதேவிக் குட்டியை பக்கத்தில் வைத்துக்கொண்டு பேசியிருக்கிறார். அப்போதெல்லாம் அவருடைய மனதில் சிறு சலனம்கூட வந்ததில்லை. 'இன்று ஜெயலட்சுமியின் இளமை பூரிப்புகள் தன்னை அலைக்கழித்து விட்டதே' என்று அவர் ரகசியமாக வெட்கப்பட்டார். அதைப் புரிந்துகொண்டவள் போல், ''இது ஜெயலட்சுமியோட உடல். நான் அவளோட உடம்புல ஆவேசிச்சு இங்க வந்தேன். நான் வந்த காரியம் நிறைவேறிட்டா இந்த உடம்பை மட்டுமில்ல, உங்களையும் விட்டு விலகிடுவேன் கவலைப்படாதீங்க'' என்றாள் அவள். இதைச் சொல்லும்போது அந்தக் கண்களில் ஏதோ ஒரு இனம்புரியாத சோகமிருப்பது ஸ்ரீகுமாருக்குப் புரிந்தது.

அப்போது, வெளியே ஏதோ சத்தம் கேட்டது. சட்டென்று சுதாரித்துக்கொண்ட ஸ்ரீதேவி என்கிற ஜெயலட்சுமி ஒரு பீரோவின் பின்னால் மறைந்தாள். ஸ்ரீகுமார், வாசலைப் பார்த்தார். அங்கே கல்லூரியின் காவல்காரர் பரபரப்பாக வந்து நின்றார். ''சாமி! என்னங்க, உள்ள ஏதோ கடாபுடான்னு சத்த மெல்லாம் கேட்டுதாமே? நான் கடைக்கு சாயா குடிக்கப் போயிருந்தேன். எதிர வந்த ஒரு ஆளு, 'உங்க காலேஜுக்குள்ள

ஏதோ சத்தம் கேட்குது'ன்னு சொல்லிட்டுப் போறான். என்ன ஆச்சுங்க?" என்றான்.

''அது ஒண்ணுமில்லை... ஒரு பெருச்சாளி வந்து இங்க இருக்கற சாமானையெல்லாம் உருட்டிக்கிட்டிருந்தது. அதை துரத்தி, ஒரே போடா போட்டு வெளில வீசிட்டேன். அதான்..." என்றார் ஸ்ரீகுமார்.

காவல்காரர் திருப்தியோடு திரும்பிப் போனார். அவர் போனதும் ஸ்ரீகுமார் மெதுவாக, ''ஜெயலட்சுமி, ஜெயலட்சுமி!" என்று குரல் கொடுத்தார். கொஞ்ச நேரம் பொறுத்து மறுபடியும் அழைத்தார். சட்டென்று அங்கே ஜெயலட்சுமியின் வடிவம் வெளிப்பட்டது ''நான் கூப்பிட்டேனே, கவனிக்கலையா?'' என்றார் ஸ்ரீகுமார்.

''கவனிச்சேன். ஆனா என் பேரு ஜெயலட்சுமி இல்ல; ஸ்ரீதேவி" என்றாள் அவள்.

இந்த முறை அவளுடைய பார்வையைச் சந்திப்பதை தவிர்த்தார் ஸ்ரீகுமார். ''வா போகலாம்" என்றார்.

''எங்கே" என்றாள் ஸ்ரீதேவி.

''கிராமத்துக்குத்தான்... ரொம்ப நாளைக்கு இப்படி அலைஞ்சுக்கிட்டிருக்க முடியாது. நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். உன்னோட லட்சியத்தை நிறைவேற்றத்தான் ராப் பகலா போராடுறேன். சந்துநாயருக்கு சமாதி வைக்காம உன் ஆத்மாவுக்கும் நிம்மதி இல்ல; எனக்கும் நிம்மதி இல்ல. அவங்க மந்திரவாதம் பண்றாங்களேன்னு, நானும் அதே முறையில் எதிர்க்க நினைக்கறதனாலே, கதைதான் வளர்ந்துக்கிட்டுப் போகுது. இதுக்கு ஒரு முடிவு கட்டிடலாம். வா, போகலாம். உடனே வா, அந்த சந்துநாயரையும், ஜயந்தனையும் வெட்டிச் சாய்ச்சுட்டு ஜெயிலுக்குப் போறதா இருந்தாலும் பரவாயில்லை. உனக்காக எந்தத் தியாகத்துக்கும் தயாரா இருக்கேன். வா!" என்று ஆவேசமாகப் பேசினார் ஸ்ரீகுமார்.



அங்கே தென்னந்தோப்பில் கோபத்தின் உச்சியில் இருந்தார் ஜயந்தன். ஆத்திரத்தில் அவருக்கு வார்த்தைகள் சரிவர வெளியாகவில்லை. கோவிந்தனை உக்ரமாக முறைத்தார். ''போடா போ! ஒவ்வொரு தடவையும் தோத்துட்டு வர்றதுக்கா, உனக்கு ஒரு உடம்பு கிடைக்க ஏற்பாடு பண்ணினேன்? நீ என்ன செய்வியோ தெரியாது. உனக்கு கடைசியா ஒரு சந்தர்ப்பம் தரேன். அந்த ஸ்ரீகுமாரை அழிச்சு நாகமாணிக்கத்தை எடுத்துக்கிட்டு வா. இல்லைன்னா உன்னோட உடம்பையே எரிச்சுப் பொசுக்கிடுவேன். ஏற்கெனவே அலைஞ்சிட்டிருக்கிற பிரபாகரனோட ஆத்மா உன்னை ஒருவழி பண்ணிடும். அங்கேயும் நிம்மதியில்லாம நீ திரியவேண்டியதுதான். இங்கிருந்து ஓடுடா" என்று கத்தினார்.

கோவிந்தன் 'அமைதியாகத் தோப்பை விட்டு வெளியேறினான். அவன் கண்களில், 'வாழ்வா சாவா?' என்ற பிரச்சினை பயங்கரமாக துருத்திக்கொண்டு நின்றது.

## 39

கிட்டத்தட்ட இரண்டு தரப்பிலுமே, 'வாழ்வா? சாவா? என்று பார்த்துவிடலாம்' என முடிவு கட்டிய ராத்திரியின் மறுநாள், கிராமத்துக்கு ஜெயலட்சுமியோடு வந்து சேர்ந்திருந்தார் ஸ்ரீகுமார். ஜெயாவின் உடலைவிட்டு ஸ்ரீதேவிக்குட்டி இன்னும் அகலவில்லை. எதிரிகளைப் பற்றிய தீவிர சிந்தனையில் இருந்தார் ஸ்ரீகுமார்.

''என்ன யோசனை திருமேனி?" என்றாள் ஸ்ரீதேவி.

''ஒண்ணுமில்லை. 'அவங்க கதைய எப்படி முடிக்கிறது? பிரபாகரனை எப்படி மீட்கிறது?'ன்னு யோசனை பண்ணிக்கிட்டிருக்கேன்" என்றார் அவர்.

''இன்னிக்கு ராத்திரி கதை முடிஞ்சுடும்'' என்று எங்கேயோ பார்த்தபடி கூறினாள் ஸ்ரீதேவி. அவள் கண்களில் இனம் புரியாத சோகம்.

ராத்திரி வந்தது. மாலை மங்கியதுமே பிரபாகரனின் உடம்பிலிருந்த கோவிந்தன் துடிப்போடு எழுந்தான். 'இன்னிக்கு கடைசி. நாளைக்கு காலைல ஒண்ணு அவங்க இருக்கணும்; இல்ல நான் இருக்கணும், என்று வெறியோடு சொல்லிக் கொண்டான் இருள் கவிந்தது.

வேகமாக ஸ்ரீகுமாரின் வீட்டை நோக்கி நடந்தான் அவன். அங்கே ஓரிடத்தில் சும்மா நிற்காமல் குறுக்கும் நெடுக்குமாக அலைந்துகொண்டிருந்தாள் ஜெயலட்சுமியின் உடலிலிருந்த ஸ்ரீதேவி. இந்த இரவில் என்னென்னவோ விபரீதங்கள் நடக்கப் போவதாக ஸ்ரீகுமாரின் உள் மனம் சொல்லியது. 'தேவதத்தன் நம்பூதிரியை அழைத்திருக்கலாமோ?' என்று ஒரு கணம் யோசித்தார்.

அதேநேரம் வெளி முற்றத்தில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. துணுக்குற்ற ஸ்ரீகுமார், ''யாரது?'' என்று உரக்கக் கத்தினார். பதிலில்லை. மறுபடியும் குரல் கொடுக்க நினைத்தவர், எதற்கும் இருக்கட்டுமென்று தற்காப்புக்காக ஆயுதம் தேடினார். அவரைத் தடுத்த ஸ்ரீதேவி, தரதரவென்று அவர் கையைப் பிடித்து வெளியே இழுத்து வந்தாள். பிறகு இருட்டிக் கிடந்த முற்றத்தைப் பார்த்து கத்தினாள். ''ஏ கோவிந்தா! வெளியில வா, ஜயந்தனோட வித்தைக் குரங்கே வெளில வா! சுயபுத்தி இல்லாத பிசாசே வா!'' என்று கோபமாகக் குரல் கொடுத்தாள்.

இருட்டில், துளசிமாடத்தின் மறைவில் நின்றிருந்த கோவிந்தன் வெளியே வந்தான். அவன் மூச்சுவிடும் ஓசை, வெறி கொண்ட நாய் உறுமுவது போலிருந்தது. அவனைப் பார்த்த ஸ்ரீகுமாருக்கு, ஒரு நிமிடம் பயத்தால் மயிர் கூச்செறிந்தது, ஆனால், அவருடைய கையை உடும்பு போலப் பிடித்திருந்த ஸ்ரீதேவி, கம்பீரமாக மலைபோல் நின்றிருந்தாள். அவள்



வெளியே வந்த கோவிந்தனைப் பார்த்து, ''மறுபடி, மறுபடி உதை வாங்கி ஓடினாக்கூட உனக்கு புத்தி வராதா? உன் ஜயந்தனும் அவனோட மந்திர சக்தியும் என்னை ஒண்ணும் பண்ணாது. பண்றதா இருந்தா இத்தனை நாள் உங்க நினைப்பு பலிச்சிருக்கணுமே. நேத்து ராத்திரியே உன்னைக் கொன்னு போட்டிருப்பேன். நீ சுமக்கிற உடம்பு, இவர் நண்பர் பிரபாகரனோடதுங்கறதுனால பொறுத்துப் போறேன். ஆனா என் பொறுமைக்கும் அளவு இருக்கு. நீ இருக்கற இடத்தை விட்டு ஒரு அங்குலம் நகர்ந்தா கூட உன்னைப் பொசுக்கிடுவேன். என்னோட அனுமதியில்லாம இவர் நிழலைக்கூட உன்னால தொடமுடியாது. இன்னிக்கு இந்த இடத்தை விட்டு நீ உடம்போட திரும்பிப் போறியான்னு பார்த்துடறேன். உன்னை சாம்பலாக்கி காத்துல பறக்கவிட்டாத்தான் எனக்கு நிம்மதி. பிரபாகரனோட ஆத்மா, உடம்பில்லாம திரிஞ்சாகூட பரவாயில்லை. அத சுகமா எப்படி, எங்க வாழ வைக்கணும்னு எனக்குத் தெரியும். ஏ சொல்புத்தி கேக்கற பைசாசமே! தொலைஞ்சு போ!'' என்று கத்திக்கொண்டே கோவிந்தனை நோக்கிப் பாய்ந்தாள் ஸ்ரீதேவி.

அவள் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன. அத்தனை நேரம் வெறியோடு நின்றிருந்த கோவிந்தன், ஸ்ரீதேவியின் உக்கிர வடிவத்தைப் பார்த்து அப்படியே காலில் விழுந்தான். ''அம்மே! ரட்சிக்கணும். பகவதி! என்னைக் காப்பாத்து. என்னை ஒண்ணும் பண்ணிடாத. அந்த ஜயந்தன்தான் இந்த உடம்பைக் கொடுத்தான். அதுக்கு விசுவாசமா இருக்கணும்தான் நான் பழியா அலையறேன். என்ன எரிச்சுடாத! என்னைக் கொன்னுடாத! என்ன ஒண்ணும் பண்ணிடாத!'' என்று கதறினான்.

ஸ்ரீதேவி அப்படியே கோபக் கனல் சிலையாக நின்றாள். ''டேய் எழுந்திரு! நேரா தோப்புக்குப் போ. அங்க இருக்கிற உன் எஜமானருங்கள தீர்த்துக்கட்டு. நீ தனியாளா செய்ய வேணாம்.

நானும் துணைக்கு வர்றேன். சந்துநாயருக்கு கொள்ளி வைக்கக் கூட ஒருத்தனும் மிஞ்சக்கூடாது. அவன் பரம்பரை மொத்தத் துக்கும் நாளைக்கு பால் ஊத்தணும். அவங்க கதை முடிஞ்சதும், நீ பிரபாகரனோட உடம்ப விட்டுட்டு ஓடிடணும். இல்ல..." என்று விரட்டினாள் ஸ்ரீதேவி.

''உடம்பு இல்லாம நான் என்ன பண்ணுவேன்?" என்று அரற்றினான் கோவிந்தன். ''உனக்கு நல்ல கதி கொடுக்கிறது என் பொறுப்பு. இது சத்தியம், இப்ப ஓடு!" என்றாள் ஸ்ரீ தேவி.

கோவிந்தன் ஓட ஆரம்பித்தான். நடப்பது எதுவும் சரிவரப் புரியாமல் ஸ்தம்பித்துப் போயிருந்தார் ஸ்ரீகுமார். அவரை அழைத்துக் கொண்டு புயலைப் போல் தென்னந்தோப்பை நோக்கிச் சென்றாள் ஸ்ரீதேவி.

**தோ**ப்புக்குள் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தனர் ஜயந்தனும் சந்து நாயரும். ''இன்னிக்கு எப்படியிருந்தாலும் அவங்க கதைய முடிச்சுடுவான் கோவிந்தன்." என்று சொல்லிச் சிரித்தார் சந்துநாயர். ''முடிக்காம நான் சும்மா விடுவேனா? அவன் உடம்பை பிடுங்கிட மாட்டேன்?" என்று ஆர்ப்பாட்டமாகச் சிரித்தார் ஜயந்தன். அப்போது ஆவேசமாக உள்ளே நுழைந்தான் கோவிந்தன். அவனைப் பார்த்ததும் ''என்ன கோவிந்தா? ஒழிஞ்சானா அந்த வாத்தியாரு?" என்றார் சந்துநாயர். கோவிந்தன் பதில் பேசாமல் அவர்களை முறைத்தபடி நின்றுகொண்டிருந்தான். சந்துநாயர் மறுபடியும் ஏதோ கேட்க ஆரம்பித்த போது, ஜயந்தன் அவரைத் தடுத்தார். ''நாயரே! கொஞ்சம் சும்மா இருங்க. நம்ம ஆளுகிட்ட ஏதோ மாற்றம் தெரியுது" என்று கிசுகிசுத்தார்.

அதைப் பார்த்த கோவிந்தன், ''என்னடா முணு முணுக்கற? நீ கொடுத்த உடம்பும் வேணாம்; நீயும் வேணாம். அந்தப் பொண்ணு என் கண்ணைத் தொறந்துடுச்சு. நீங்க ரெண்டு பேரும் மரியாதையா அவ கால்லவிழுந்து மன்னிப்புக்கேளுங்க. இல்லேன்னா நானே உங்க ரெண்டு பேரையும் பரலோகம் அனுப்பிடுவேன்" என்றான்.



சந்துநாயருக்கு தூக்கிவாரிப் போட்டது. 'நேற்றுவரை நாய் போல் கிடந்தவனுக்கு, எங்கிருந்து இத்தனை தைரியம் வந்தது?' என்று யோசித்தார். ஜயந்தனோ ஆத்திரத்தின் எல்லைக்கே போய்விட்டார். ''கோவிந்தா! நீ என்ன பேசற, யார்கிட்ட பேசறேன்னு தெரிஞ்சுதான் சொல்றியா? என்னை யாருன்னு நினைச்சுக்கிட்டிருக்க? அந்த ஸ்ரீதேவி மாதிரி நூறு பேரைச் சமாளிப்பேன். உனக்கு அவ்வளவு துணிச்சலா? அந்தப் பொட்டச்சி உன்னை மந்திரிச்சு அனுப்பினாளா?" என்று குரோதமாகக் கேட்டார்.

'' ஆமாம்... நான்தான் அவனை அனுப்பினேன். இப்ப என்ன பண்ணப்போற?" என்று கேட்டபடி உள்ளே நுழைந்தாள் ஸ்ரீதேவி. அவள் பின்னால் ஸ்ரீகுமார். ஜயந்தனுக்கு கோபம் கண்ணை மறைத்தது. பயங்கர சக்தியுடைய தன் ஜபமாலையைக் கழற்றி ஸ்ரீதேவியை பார்த்து வீசினார். கண்ணிமைக்கும் நேரத்தில் வாயைக்குவித்து பெருத்த ஓசையோடு அந்த மாலையைப் பார்த்து ஊதினாள் ஸ்ரீதேவி. அது எங்கேயோ மூலையில் பறந்து போய் விழுந்தது.

ஜயந்தனுக்கு உடல் நடுங்கியது. ஆனாலும் தளர்ந்து விடாமல் ஸ்ரீதேவியோடு மோதத் தயாரானார். சந்துநாயருக்கு ஒன்றும் பிடிபடவில்லை. பயத்தில் தன் பிள்ளைகளின் பேரைக் கூப்பிட்டுக் கத்தினார். தோப்பின் ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்த அவர்கள், என்னவோ ஏதோவென்று பதறியபடி ஓடி வந்தார்கள். அதற்குள் கமண்டலத்திலிருந்த தண்ணீ ரை எடுத்து ஏதோ ஜபிக்கத் தொடங்கினார் ஜயந்தன்.

நிலைமை தீவிரமாவதை உணர்ந்த கோவிந்தன் ஒரேயடியாகத் துள்ளி ஜயந்தனின் வயிற்றில் ஓர் உதை விட்டான். அந்த உதையின் வேகத்தில் ஜயந்தனின் கையிலிருந்த கமண்டலம்

எகிறி விழுந்தது. வயிற்றில் விழுந்த பலமான அடியால் அவரது வாயிலிருந்து ரத்தம் கசிந்தது. மூலையில் சுருண்டு விழுந்த ஜயந்தன், மறுபடியும் சில மந்திரங்களை அவசர, அவசரமாக உருவேற்றத் தொடங்கியபோது, அவருடைய தாடை பிளந்து போகும்படி ஒரு அறைவிட்டான் கோவிந்தன். அப்போது ஜயந்தன் அலறிய அலறலில் ஊரே நடுங்கியது. மரத்தில் தங்கியிருந்த பறவைகள் கோரமாகக் கத்திக்கொண்டு அங்கும் இங்குமாகப் பறந்தன. ஊரில் தூங்கிக்கொண்டிருந்தவர்களின் காதுகளிலெல்லாம் ஜயந்தனுடைய அலறல் கேட்டது. தூக்கம் கலைந்த ஜனங்கள், வீட்டை விட்டு வெளியே வந்து தென்னந்தோப்பு இருக்கும் திசையைப் பார்த்தனர்.

அதற்குள் ஸ்ரீகுமாரும் களத்தில் இறங்கியிருந்தார். சந்து நாயரும், அவர் பிள்ளைகளும் தப்பி ஓட முடியாதபடி சுழன்று, சுழன்று தாக்கினார். ஸ்ரீகுமார் விட்ட உதைகள் தாங்காமல், அவர்கள் எல்லோருமாகப் போட்ட சத்தத்தில், ஊர் மக்களெல்லாம் தென்னந்தோப்பை பார்த்து ஓடிவரத் தொடங்கினார்கள். அவர்கள் யாருமே நாயரின் தோப்புக்குள் நுழைந்தது கிடையாது. சந்துநாயரிடம் அவ்வளவு பயம். அங்கே ஏதோ நிழலான காரியங்கள் நடக்கின்றன என்ற அளவுக்குத்தான் அவர்களுக்கு விஷயம் தெரியும்.

ஊர் மக்களெல்லாம் தோப்புக்குள் தடி, அரிவாள் என்று கையில் கிடைத்த ஆயுதங்களோடு நுழைந்துகொண்டிருந்தனர். உள்ளே ஸ்ரீகுமாரும் கோவிந்தனும் சந்துநாயரையும் அவர் பிள்ளைகளையும், ஜயந்தனையும் கண்மண் தெரியாமல் அடித்து நொறுக்கிக்கொண்டிருந்தனர். அந்தக் காட்சியை படுபயங்கர, திருப்தியோடு பார்த்துக்கொண்டிருந்தாள் ஸ்ரீதேவி. பொது மக்கள் கொட்டகைக்கு உள்ளே நுழைய ஆரம்பித்தபோது, ''நிறுத்துங்க'' என்று கம்பீரமாகக் கட்டளையிட்டாள் அவள்.



எல்லோரும் ஒரு நிமிடம் அசையாமல் நின்றனர் . ''வாங்க போகலாம்'' என்று ஸ்ரீகுமாரையும், கோவிந்தனையும் பார்த்துச் சொன்னாள் ஸ்ரீதேவி.

''என்ன திருமேனி, நீங்க உள்ள வந்திருக்கீங்க? இது ஜெயலட்சுமிதானா? இங்க என்ன நடந்துச்சு? உங்க நண்பன் பிரபாகரனுக்கு ஏன் இத்தனை ஆத்திரம்?'' என்றான் ஒருவன். ஸ்ரீகுமார் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார். ஜெயலட்சுமியின் உடம்பிலிருந்த ஸ்ரீதேவி பேசினாள்.

''இந்த சந்துநாயரும், மந்திரவாதி ஜயந்தனும் என்னை ஒழிச்சுக்கட்டப் பார்த்தாங்க. என்னைக் கொன்னுட்டு என்னோட சொத்தையெல்லாம் அபகரிக்கத் திட்டம் போட்டாங்க. நான் இவங்ககிட்ட மாட்டிக்கிட்டேன். பகவதியோட ஆசியால, நல்ல நேரத்துல பிரபாகரனும், ஸ்ரீகுமாரும் என்னை வந்து காப்பாத்திட்டாங்க.'' என்றாள்.

ஊரிலேயே அடக்கமாக, பண்புள்ள பெண்களில் ஜெயலட்சுமியும் ஒருத்தி. 'அவளை நாசப்படுத்த ஜயந்தனும் சந்துநாயரும் திட்டம் போட்டார்கள்' என்ற செய்தியைக் கேட்ட ஊர்மக்கள் கொதித்தனர். அது ஏதோ திடீரென்று ஒரு நாளில் வந்த கோபமல்ல, எத்தனையோ நாளாக அடக்கி வைத்திருந்த ஆத்திரம்.

''அவங்களக் கொல்லுங்கடா'' என்றான் ஒருவன், ''இந்த மந்திரவாதியோட சேர்ந்துகிட்டு ஊருக்கே சூன்யம் வைச்சுட்டான் சந்துநாயர் என்று உறுமினான்'' இன்னொருவன்.

''சில வருஷங்களுக்கு முன்னால ஸ்ரீதேவிக்குட்டியோட குடும்பத்தையும் இப்படித்தான் அழிச்சான்'' என்று கத்தினார்கள் சிலர். ''இவனோட மருமகன் பிரபாகரனே, இவனுக்கு எதிரா இருக்கான்னா, நாயர் எவ்வளவு மோசமான ஆளா இருக்கணும்?'' என்றனர் சிலர். அந்தத் தோப்பு முழுவதும் இவர்கள் கூச்சலால்

களேபரமாகியது ஜனங்கள் ஆத்திரத்தோடு சந்துநாயர் கூட்டணியை நெருங்கினார்கள்.

''இனிமே நாம இங்க இருக்க வேணாம்'' என்று ஸ்ரீகுமாரின் காதருகே சொன்னாள் ஸ்ரீதேவி. அவர்கள் இருவரும் கோவிந்தனோடு அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தபோது ஊர்மக்கள் ஜயந்தனையும் நாயர் குடும்பத்தையும் வெளுத்துக்கட்ட தொடங்கியிருந்தனர்.

வானத்தில் நிலவு அழகாகப் பனிச்சென்று இருந்தது. ஸ்ரீதேவி முன்னால் நடந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால், சிந்தனையில் ஆழ்ந்தபடி ஸ்ரீகுமார். இன்னும் பயம் அகலாதவனாய் கோவிந்தன். ஸ்ரீதேவியின் நடையில் ஒரு துள்ளல் தெரிந்தது. ஒரு திருப்தி தெரிந்தது. அவள் எத்தனையோ காலமாகப் பொத்தி வைத்திருந்த லட்சியம் அன்று நிறைவேறியிருந்தது. அதன் வெளிப்பாடு அவளுடைய நடையில் தெரிந்தது. ஒரு நேரம் துள்ளியோடும் கன்றுக்குட்டி போல் ஓடினாள்; மறுநிமிடம் காற்றில் சலசலக்கும் பயிர்போல அசைந்து அசைந்து நடந்தாள். அவளுடைய உற்சாகத்தைப் பார்த்த ஸ்ரீகுமாருக்கும் சந்தோஷமாக இருந்தது.

''ஸ்ரீதேவி'' என்று அழைத்தார். அவள் திரும்பிப் பார்த்தாள். கலகலவென்று சிரித்தாள். ''உனக்குத் திருப்தி தானே?'' என்றார். அவள் பதில் சொல்லாமல் ஸ்ரீகுமாரையே கண் இமைக்காமல் பார்த்தாள். ''பகவதி, என் ஆசையை நிறைவேத்தி வைச்சுட்டா. என்னால உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்'' என்றாள்.

''ஒரு நல்ல ஆத்மா சாந்தியடைய என்னால முடிஞ்சதைப் பண்ணிட்டேன். அவ்வளவுதான்'' என்றார் ஸ்ரீகுமார்.

ஸ்ரீதேவி மௌனமாக நின்றாள். அவள் முகத்தில் எல்லையற்ற அமைதியும் நிம்மதியும் தெரிந்தன. அப்படியே



ஆடாமல் அசையாமல் நின்றாள். ஸ்ரீகுமாருக்கு கண் முன்வே தெய்வத்தைப் பார்ப்பது போன்ற உணர்வு எற்பட்டது. அப்படியே எத்தனை மணிநேரம் அவர்கள் நின்றார்களென்று தெரியவில்லை. ஸ்ரீதேவிதான் முதலில் அந்த நிசப்தத்தைக் கலைத்தாள்.

''இன்னும் கொஞ்ச நேரத்துல விடிஞ்சுடும். இதோ, இந்த ஜெயலட்சுமியோட உடம்பையும், ஆத்மாவையும் உங்ககிட்ட ஒப்படைச்சுட்டு நான் புறப்படறேன். எனக்கு இப்ப ஒரு சகோதரனும் கிடைச்சுட்டான். அவன் பேரு கோவிந்தன்'' என்றாள்.

இதைக் கேட்டதும் பிரபாகரனின் உடம்பில் இருந்த கோவிந்தன் குமுறி குமுறி அழுதான். அவன் வாய் 'அம்மே! அம்மே! என்று அரற்றியது, ஸ்ரீதேவி, அவனைப் பார்த்து, ''கோவிந்தா! பிரபாகரனோட உடம்பை உதறிட்டு என்னோட வா. நானும் ஜெயலட்சுமியை விட்டுட்டுப் புறப்படப்போறேன். நான் இருக்கிற பகவதி கோயில் வாசல்ல ஒரு எட்டி மரம் இருக்கு தெரியுமா? அங்க நீ தங்கிக்க'' என்றாள்.

பிறகு ஸ்ரீகுமாரை பார்த்து, ''கூடிய சீக்கிரமே தேவதத்தன் நம்பூதிரியை வெச்சு, கோவிந்தனோட ஆத்மா சாந்தியடைய ஹோமம் பண்ணுங்க. அவன் மிச்சமிருக்கிற காலத்துக்கு அந்த எட்டி மரத்துலயே இருப்பான். பகவதி சன்னிதியைப் பார்த்துக் கிட்டே இருப்பதால இனிமே, அவனால மத்தவங்களுக்கோ, மத்தவங்களால அவனுக்கோ எந்தத் தொந்தரவும் வராது'' என்றாள்.

ஸ்ரீதேவி தன்னை விட்டுப் பிரியப் போகிறாளென்ற நினைவை ஸ்ரீகுமாரால் தாங்க முடியவில்லை. ஒரு குழந்தையைப் போல் கேவிக் கேவி அழுதார். அவர் அருகே வந்த ஸ்ரீதேவி, ஆதரவாக அவருடைய கையைப் பற்றினாள். ''உங்களை,

என்னால மறக்க முடியாது. நான் இப்ப பிரிஞ்சு போனாலும், உங்களைப் பார்த்துக்கிட்டேதான் இருப்பேன். உங்களுக்கு எப்ப என்ன ஆபத்து வந்தாலும் உடனே ஓடி வருவேன். எனக்குத் தெரியும் ஜெயலட்சுமி மேல உங்களுக்கு ஆசை வந்திருக்கு. நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருக்கணும். அப்புறம் சொல்ல மறந்துட்டேன். அந்த நாகமாணிக்கத்தை நீங்க திருப்பித் தர வேணாம். ஸ்ரீகுமார் ஜெயலட்சுமி கல்யாணத்துக்கு ஸ்ரீதேவி கொடுக்கற பரிசு அது" என்றாள். பிறகு ஸ்ரீகுமாரின் கையில் பாசத்தோடு இதழ் பதித்து முத்தமிட்டாள்.

மேலே அஸ்தமிக்கப் போகும் நிலா, இந்த உருக்கமான காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தது. சில நிமிடங்களில் ஜெயலட்சுமியின் உடலைவிட்டு ஸ்ரீதேவியும், பிரபாகரனின் உடம்பை விட்டு கோவிந்தனும் வெளியேறினார்கள். மயங்கிக் கீழே விழுந்தன அந்த இரண்டு உடல்களும். சற்று நேரத்தில் கண்களைக் கசக்கியபடி பிரபாகரன் எழுந்தான்; கூடவே ஜெயலட்சுமியும். இருவருக்கும் என்ன நடந்ததென்றே புரியாத நிலை. வெகு தொலைவில் சந்துநாயருக்குச் சொந்தமான கொட்டகை திகுதிகுவென்று எரிந்துகொண்டிருந்தது.

அவர்கள் ஏதோ கேட்க ஆரம்பித்தபோது, ஸ்ரீகுமார் அவர்களை ஜாடையாலேயே பேசாமல் இருக்கும்படி சொன்னார். பிறகு இருவரின் தோள்களிலும் கைகளைப் போட்டுக்கொண்டு, வீட்டைப் பார்த்து நடக்கத்தொடங்கினார். அந்த மூவரும் வீட்டை நெருங்கியபோது வானம் வெளுக்கத் தொடங்கியிருந்தது.

மாவட்ட கிளை
35547
5305360